1017

...o. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 5

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 8

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ரபீஉல் ஆகிர்௴ 1934௵ ஆகஸ்டு௴

OFFICE OF THE REGISTRAR
23 AUG 1934

ஸித்தீகி மலர்

மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஷாஹ்
முகம்மது அப்துல் அலீம் சாஹிப்
ஸித்தீகி காதிரி அவர்கள்

சென்னையிலும் தேன் ஜில்லாக்களிலும் புரிந்துள்ள

அரும் உபன்னியாசங்கள்

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

விஷய அடக்க அட்டவணை

நெம்பர்					பக்கம்
1.	அல்குர்ஆன்	....	....	....	253
2.	அல்ஹதீது	....	....	....	254
3.	ஒற்றுமை	....	....	....	256

மௌலானா அஸ்ஸித்தீகி அவர்களின் உபன்னியாசம்.

4.	1-வது பிரசங்கம்	சென்னை மஸ்ஜித மஅமூர்	....	257
5.	2-வது பிரசங்கம்	சென்னை மண்ணடி யூனியன்	....	262
6.	3-வது பிரசங்கம்	சென்னை மஸ்ஜித மஅமூர்	....	269
7.	4-வது பிரசங்கம்	சென்னை லாலிஹால்	....	272
8.	5-வது பிரசங்கம்	சென்னை பெரியமெட்	....	274
9.	6-வது பிரசங்கம்	சென்னை ஜாம்பஜார்	....	279
10.	7-வது பிரசங்கம்	சென்னை லாலிஹால்	....	286
11.	8-வது பிரசங்கம்	பரங்கிப்பேட்டை	....	290
12.	9-வது பிரசங்கம்	பண்டாரவாடை	....	293
13.	10-வது பிரசங்கம்	அய்யம்பேட்டை	....	300
14.	11-வது பிரசங்கம்	கூத்தாநல்லூர்	....	302
15.	12-வது பிரசங்கம்	நாகூர்	....	307
16.	13-வது பிரசங்கம்	காரைக்கால்	....	313
17.	14-வது பிரசங்கம்	திருச்சி முன்ஸிபல்ஹால்	....	318
18.	15-வது பிரசங்கம்	திருச்சிநவ்வாப் மஸ்ஜித்....	....	320
19.	சித்தார்கோட்டை (ராமநாட்)	....	....	324

23 AUG 1934

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ரபீஉல் ஆகிர் மீ 1934 ளூ ஆகஸ்டு மீ	இதழ் 8

அல்குர்ஆன்

(அள்வற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறேன்.)

நிச்சயமாக அல்லாஹு தஆலாவாகிறவன் மூமினானவர்களுக்கு பெரிய உபகாரஞ் செய்திருக்கிறான்; மட்டற்ற தனது காருண்யங்களை சன்மானஞ் செய்திருக்கிறான். அதாவது, தனது திருவசனங்களை மானிடர்பால் ஓதிக்காண்பித்து அவர்களை தூய்மையாக்கிவைக்கக் கூடியவும், இன்னும் அவர்களுக்குத் தனது திருஷ்டாந்தங்களையும் வேதத்தையும் அறிவித்துக் கோடுக்கக் கூடியவுமான ஓர் நபியை அனுப்பியிருக்கிறான். (அல்குர் ஆன்)

உலகம் இருளடைந்து அந்தகாரமென்னும் அறியாமை நிறைந்திருந்த காலை, நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் சத்போதனையானது, அவ்வந்தகாரமென்னும் இருளை எவ்வாறு நீக்கியிருக்கிறதென்பதை மேலே கூறப்பட்டுள்ள சிறியவாக்கிய மூலம் அல்லாஹுதஆலா தக்கமுறையில் நமக்கு விளக்கிக் காண்பிக்கின்றான். எனவே, நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபாரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இப்பூவுலகில் ஜனிப்பதற்கு முன் மானிடர்களின் நிலைமை எவ்வாறிருந்ததென்பதை சரித்திரமே சான்று பகர்கின்றது. அதாவது, மானிடர் ஆழ்ந்தவழிகேட்டிலிருந்தனரென்பது திண்ணம். பெருமானார்(ஸல்) அவர்கள் காலத்துக்கு முன்புவானுலகிலிருந்து வேதங்கள் இறக்கப்பட்டிருந்த போதிலும் அவைகளில் பற்பலவாறான புரட்டலும் திரித்தலும் ஏற்பட்டு விட்டதன் பயனாக, அவைகள் தெய்வ வேதமென்னும் தன்மையினின்று வெகுதூரம் பின்னடைந்துவிட்டது. அக்காலத்திலுள்ள பாதிரிகள், அவைகளுக்குக் குதார்த்தங்கள் குருட்டு வியாக்கியானங்கள் செய்து அதன் மகிமைக்கு ஹானி ஏற்படும்படிசெய்து விட்டனர். எனவே அவ்வேதங்களினால் நேர்வழி உண்டாவதற்குப் பகரமாய் வழிகேடு அதிக்கரிக்க ஹேது வேற்பட்டுப்போயிற்று.

தண்ணீரை எடுத்துக்கொள்வோம்: அது மானிடர்களின் உபயோகத்திற்காக ஏற்பட்டு, மானிடன் அல்லாஹ்வை வணங்குவதற்கு அஃதொரு பொருட்டாக இருக்கும் நிலைமையில், அது கடவுளுடைய ஸ்தானத்தில் வணங்கப்பட்டு வந்தது. நெருப்பு மனிதனின் உபயோகத்திற்காகப் படைக்கப்பட்டிருக்கும் நிலைமையி[ல்] அதுவும் சங்கையோடு பூஜிக்கப்பட்டு வந்[தது].

இவ்வாறே மானிடர்களின் உபயோகத்திற்காகப் படைக்கப்பட்டுள்ள கல் மரம் உலோகம் போலொற்ற பல வஸ்துக்கள் அன்போடு பாராட்டப் படுவதற்கு தகுதியுடையனவாக இருந்ததென்பது வெளிப்படை. எனவே அல்லாஹ் தஆலாவை வணங்குவதற்காகவே ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களால் ஆரம்பமாகக் கட்டப் பட்ட முதன்மையான ஸ்தானமாகிய கஃபத்துல்லா ஷரீபில் மட்டும் 360 விக்கிரகங்கள் வைக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விக்கிரகம் வணங்கப்பட்டு வந்ததென்ருல், உலகின் நிலைமை எவ்வாறிருந்திருக்கு மென்பதை சொல்லவும் வேண்டுமோ? இதுவன்றி சில மக்கள் தங்களை நாயனென்று மதித்து இதரர்களைக் கொண்டாடுமாறும் செய்திருக்கின்ருர்கள். உதாஹரணமாக, பிர்அவ்ன், நம்ரூத் இவர்களின் சம்பவ நிகழ்ச்சிகளை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில் உண்மை நன்கு புலனுகும். அதாவது, ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்கள், பிர்அவ்னிடஞ் சென்று ஏகத்துவம் பொருந்திய தனித்த நாயனை வணங்குமாறு அழைத்ததற்கு, "யான் உங்களுடைய நாயனுக இருக்கும் நிலைமையில் என்னைத்தவிர வேறு எந்த நாயனை வணங்குவது?" எனப்பேராச்சரியத்தோடு வினவினன். நம்ரூதின் மனதில், நாயன் என்று கூறுவதின் கருத்தே அமையாது தடுமாறிப் போயிருந்தான். இஃதொரு பக்கல் கிடக்க, மற்ருெரு பக்கல் மானிடர்களுக் கிடையே ஏற்றம் தாழ்வு என்னும் பாகுபாடு ஏற்பட்டு சிலர் மனிதரல்லவென்றே மதிக்கப்பட்டு வந்தனர். உதாஹரணமாக, பெண்கள் கேவலமாகக் கருதப்பட்டு புருடன் மரணமானவுடன் அவனுடன் சேர்த்து எரிக்கப்பட்டு வந்தனர். ஒருவன் விரும்பினுல் எத்துணை பெண்களை வேண்டுமானுலும் மணந்து கொள்ளலாம். பெண் குழந்தை பிறந்தால் உயிருடன் புதைக்கப்படும் வழக்கமிருந்து வந்தது. இதுவன்றி அடிமைகள், ஆடுமாடு மிருகங்களைப் பார்க்கினும் கேவலமாக மதிக்கப்பட்டுவந்தனர். சுருங்கக் கூறுமிடத்து, ஒவ்வொரு வஸ்த்துவும் அது தன் ஸ்தானத்தை விட்டுக் கடந்து அப்பால் தகுதியற்ற முறையில் சென்று கொண்டிருந்த தெனலாம். இந் நிலைமையில் மானிடர்களின் தேவைகளைத் தக்க முறையில் அறிந்துகொள்வதற்காக அந்த இனத்திலிருந்தே பெருமானுர் (ஸல்.) அவர்களைத் தேர்ந்தனுப்பினுனையால் அவர்களின் நடை பாவனை செயல் முதலியவைகள் யாவும் நாம் பின்பற்றி நடப்பதற்கேற்றதாயமைந்திருகிறதென்பது வெளிப்படை.

நபிகள் திலகம் பெருமானுர் (ஸல்.) அவர்கள் இப்பூலகில் தோன்றி அல்லாஹ் தஆலாவால் தங்களுக்கு 'வஹீ' அறிவிக்கப்பட்டவைகளை கூடுதல் குறைவின்றி அப்படியே மானிடர்களுக்கு எத்திவைக்கிறவர்களா யிருந்தார்கள். எனவே நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், மனிதர்களின் ஹிருதயங்களைப் பற்றிக் கொண்டிருந்த மாசுக்களைப் போக்கி, துர்க்குணங்களை நீக்கி, கெட்ட நிர்ணங்களை அகற்றி, அதற்குப் பகரமாய் அல்லாஹ் தஆலாவின் அருளும் அவனது கிருபையும் ததும்பி நிற்கும் இடமாகச் செய்து விட்டார்கள்; மண் தண்ணீர் மரம் உலோகம் முதலியவைகள் இப்பூவுலகின் கண் படைக்கப்பட்டதின் இரகசியத்தை வெளிப்படுத்தி மானிடர்களில் காணப்படும் ஏற்றம், தாழ்வு, குலப்பெருமை, எஜமான் அடிமை என்னும் பாகுபாடு முதலிய சகலவற்றையும் அகற்றிக் களைந்தெறிந்துவிட்டார்கள். ஆகவே இதுகாலை முன்னேற்றத்தைக் கருதி நிற்கும் நண்பர்கள், எம்பெருமானுர் நபிகள் திலக (ஸல்) அவர்கள் நம்மவருக்கு அறிவித்துக் கொடுத்த செய்முறைகளை முன் மாதிரியாகக் கொண்டு—கண் முன்வைத்து அப்போதனையின் பிரகாரம் மனத் தூய்மையோடு அமல் செய்து வருவோமாகில் நிச்சயமாய் ஜெயம் பெறுவோமென்பது திண்ணம்.

அல்ஹதீது

ஒருநாளன்று ஒரு மனிதர் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் சமூகம் வந்து, அல்லாஹ்வின் ரசூலே! "யான் இரவு பகல் முழுதும் [illegible]க்கம் புரிகின்றேன்; ஒவ்வொரு நேரத்திலும் அல்லாஹ்வின் ஞாபகத்திலேயே பராக்காயிருக்கிறேன்" எனக்கூறினுர். அதற்குப் பெருமானுர் (ஸல்.) அவர்கள் அவரை நோக்கி, நீர் ஜீவனம் செய்யும் வழி யாதாகுமென வினவி

ஞர்கள். அதற்கு அம்மனிதர், "எனக்கோர் சகோதிரருண்டு; அவர் காலைமுதல் மாலை வரை பிரயாசையோடு கூலி வேலைசெய்து சம்பாத்தியஞ் செய்து வருகிறுர்; அந்த வரும்படியைக்கொண்டு எனக்கேற்படும் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுகிறேன்" என அறிவித்தார். உடனே நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள், உம்முடைய சோதிரர் உம்மைவிட மேலானவராகுமெனக் கூறிவிட்டு, யான் தொழுகிறேன்; துயிலும் புரிகின்றேன். நோன்பு வைக்கிறேன்; சிலகால் அதைவிட்டுமிருக்கிறேன். யான் பெண்களை மணர்ந்தும் கோள்கிறேன். எவன் என் நடத்தையைப் பின்பற்றவில்லையோ அவன் என்னைச் சேர்ந்தவனல்ல. எனக்கூறினுர்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மேன்மை பொருந்திய இஸ்லாம் மார்க்கமானது ஆத்மார்த்த முன்னேற்றத்தைத் தக்கமுறையில் கற்பித்துக் கொடுப்பதுடன் உலகமுன்னேற்றத்தின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே மூலைபிடித்து உட்கார்ந்துகொண்டு ஜீவனேபாயத்திற்கு இதரர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டாமென்றும், அல்லாஹ் தஆலாவால் இடப்பெற்றுள்ள கட்டளைகளை எதிரில் வைத்துக்கொண்டு முன்னேற்றமடைவதற்குள்ள வழியைத் தேட வேண்டுமென்றும் கூறியதுடன் ஜீவனேபாயத்தைத் தேடுவதற்குள்ள மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முயலாது உட்கார்ந்து கொண்டு இதரர்கள்மீது பளுவை சுமத்தாட்டி வைத்துவிடுவது பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் நடத்தைக்கு விரோதமாக இருக்குமென்றும் கூறியிருக்கிறுர்கள். இதனல் தான், அல்லாஹ் தஆலாவை அறிந்துகொள்ளுவதற்குள்ள பிரதான மார்க்கம் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்களின் நடத்தைகளைப் பின்பற்றுவதாக இருக்குமென ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ (ரஹ்.) அவர்கள் கூறியிருக்கிறுர்கள். ஆகவே நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் ஜீவனேபாயத்திற்காக வியாபாரஞ் செய்வதைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனக் கூறியிருக்க, இதற்குமாற்றமாய் சன்னியாசம் பூண்டு மூலைபிடித்து உட்கார்ந்து இதரரின் கையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவு தூரம் பொருத்தமுடையதாகு மென்பதை நேயர்களுணரக்கடவர். ஆகவே, அல்லாஹ்தஆலாவின் பாதையில் செல்ல விருப்பங்கொள்பவர்கள், ஆரம்பத்தில் தெண்டித்துப் பிரயாசையுடன் நடந்து கொள்வதுடன் ஜீவனேபாயத்தைத் தேடுவதற்குப் பெரும் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டு மென்பதும் அத்தியாவசியமாகும்.

ஒருநாளன்று நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் கற்றறிந்தோர், சீமான் இன்னேரின் கடமையாதாகுமென்னும் விஷயமாய் சொற்பெருக் காற்றிக் கொண்டிருக்குங்கால், உங்களிலுள்ள கற்றறிந்தோர் நல்லவர்களாயும், சீமான்கள்பேணுதலுடையவர்களாகவு மிருக்கும்வரை நீங்கள் பூமியில் வாசஞ்செய்வது மேலாகும்; இதற்கு மாற்றமாய் உங்களிலுள்ள கல்விமான்கள் கெட்டவர்களாயும் சீமான்கள் லுத்தர்களாயு மிருப்பார்களாயின் நீங்கள் பூமிக்குள் சென்றுவிடுவது மேலாகும் எனக்கூறினுர்.

ஹஸ்ரத் இமாம் ஷேக் அப்துஹூ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், எக்காலத்தில் மானிடர்கள் பூமிக்குள் சென்றுவிடுவது மேலாகுமென பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூறினுர்களோ அக்காலம் இது பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கும் காலமென்றும், நம்மிலுள்ள சீமான்களும் கல்விமான்களும் தங்கள் மீதுள்ள கடமையை மறந்திருப்பதை நாம்இது பொழுது காண்கிறுமென்றும், முன்னெருகாலத்தில் முஸ்லிம்களிலுள்ள கல்விமான்கள் தங்கள் கடமையையுணர்ந்து சதாவும் அல்லாஹ்தஆலாவின் பொருத்தத்தையே எதிர்பார்த்துக்கொண்டு அதற்குமுன்னிலையில் உலகத்தை அற்பமாக மதித்துவந்தார்களென்றும், அதனல் முஸ்லிம்களிலுள்ள கல்விமான்களின் பதவி உயர்ந்து மேம்பாடு அடைந்துவந்ததென்றும் கூறியிருக்கிறுர்கள். ஆனல் துர்அதிர்ஷ்டவசமாய் இக்காலை நாம் அவ்வாறுன பாக்கியங்களை அடையும்படியான காலம் நம்மீதேர்ப்பட்டிருக்கிறது; இக்காலை கல்விமான்களுக்கே உலகிலுள்ள ஆசாபாஸங்கள்மீது அதிகப்பிரீதி ஏற்பட்டிருக்கிறது. இதனல் அன்னேர் மனிதர்களின் பார்வையில் கேவலமாகக் காணப்பட்டு வருகின்றனர். ஆகவே நம்மிலுள்ள கல்விமான்களும் சீமான்களும் தங்கள்மீதுள்ளகடமையை தக்கவகையில் உணர்ந்து ஆவனசெய்ய முன்வருவார்களென்று பெரிதும் எதிர்பார்க்கிறுேம்.



ஒற்றுமை

அன்புற்ற நேயர்காள்!

மனத்தூய்மை சகோதர வாஞ்சை இவைகளுடன் வாழ்க்கை நடத்தி வருவது மானிடரின் பிரதானக் கடமையாகும். அதாவது, சமூக ஒற்றுமைக்கு கங்கணங்கட்டி அதிலீடுபட் டிருப்போமாகில் நாம் ஒருக்காலும் தாழ்மையாகக் கருதப்பட மாட்டோமென்பது திண்ணம். முற்காலத்தில் காணப்பட்ட எத்துணையோ வர்க்கத்தார் அவர்களுக்குள் ஒற்றுமை நிலைத்திருக்கும் வரை உன்னத நிலைமை அடைந்து வந்ததையும், அவர்களி லேற்பட்டிருந்த சகோதிர வாஞ்சை நீங்கி ஒருவருக்கொருவர் பகைவராய் விட்டபின் அன்னோரின் மானம் மரியாதைக்குப் பங்கமேற்பட்டு அன்னோர் தாழ்ந்த ஸ்திதியின் உச்சஸ்தானத்தை அடைந்து விபரீத நிலைமையில் மூழ்கி கஷ்டமடைந்ததையும் நாம்கண்ணுரக் கண்டிருக்கிறோம். எனவே, நம்மிடையே பகைமைத்தன மேற்பட்டுவிடுமாகில் நிச்சயமாய் நம்முடைய மரியாதையை இழக்கும்படி நேரிடுமென்பது திண்ணம்.

நம்மீது அல்லாஹ்வின் கிருபை ஏற்படுவதற்கு முன், நாம் பலவாறு விகற்பப்பட்டு சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் பெரும் பெரும் போர் நிகழ்த்திக்கொண்டிருந்தோம். அப்போர் அநேக மாதங்களென்ன வருடக் கணக்கிலும் துயர்ந்து நடந்து வந்தது. அதனால் நாம் கேவலமாக மதிக்கப்பட்டு வந்தோம். பின்னர் அல்லாஹ்தஆலாவின் கிருபை நம்மீதேற்பட்டதனால் நமக்குள் சகோதர வாஞ்சை யுண்டாகி, உலகில் நாம் சிரேஷ்டமானவர்களாய்க் கருதப்பட்டு வந்தோம். நமது நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்கள், நாம் ஒற்றுமையாக வாழவேண்டுமென எவ்வளவோ தூரம் நமக்கு உபதேசஞ் செய்திருக்கின்றார்கள். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாய் நாம் அவ்வொற்றுமை விஷயத்தில் சிறிதும் கவனஞ் செலுத்தாதிருந்து வருகிறோம். அதனால் உலகில் நமக்கு எவ்வித மதிப்பும் இல்லாது போய்விட்டது; அறிவுடைய எந்த வகுப்பாரும் நம்மை மதிக்கின்றார்களில்லை.

இக்காலை உலகின்போக்கை நாம் நன்குஆராய்ந்து பார்ப்போமாகில், இஸ்லாம்என்னும் காருண்யத்தைக்கொண்டு சிறப்பிக்கப்படாதவும், குர்ஆன் ஹதீதுகளின் கட்டளைகளைச் சிறமேற்றாங்கி நடக்காதவுமான வர்க்கத்தார் முன்னேற்றத்தின் பாதையில் விறைந்து சென்று அதன் உச்சஸ்தானத்தை அடைந்திருப்பதையும், நாம் முன்னேற்றத்தைவிட்டு வெகுதூரம் பின் சென்றிருப்பதையும் காண்கின்றோம். எவர்களை நாம் காட்டுமிராண்டிகளென்று கூறிக்கொண்டிருந்தோமோ அன்னோர் இதுகாலை உயர்ந்த சர்குணமென்னும் ஆபரணத்தைக் கொண்டு சிங்காரிக்கப்பட்டிருக்கின்றனர்; அன்னோரில் அபரிமித சகோதர வாஞ்சை சமத்துவ உணர்ச்சி முதலியவைகள் மிளிர்ந்து காணப்பட்டு வருகிறது. இவ்வித இழிய நிலைமைக்குக் காரணம் நாம் ஒற்றுமையை இழந்ததேயாகும். ஆகவே நாம், விகற்பம் செய்துகொள்வதின் பழக்கத்தை விட்டு ஒற்றுமையைக் கைகொள்ளும் காலமே சாலச் சிறந்த காலமாகுமென்பதை நம் முஸ்லிம் நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மௌலானு அஸ்ஸித்தீகி அவர்களின் உபன்னியாசம்

ஜனுப் மௌலானு மௌலவீ அல்ஹாஜ் ஹாபிஜ் காரீ ஷாஹ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள், நம் தென்னுட்டீக்கு விஜயஞ்செய்து சென்னையிலும் இதர இடங்களிலும் பல அரும்பெரும் சொற்பெருக் காற்றியிருப்பதனுல், நம்மவருக்கு அதனுலேற்பட்டுள்ள பிரயோசனம் அளவிடற்பாலதன்று. அவ்வரும் பிரசங்கங்கள் அப்போதைக்கப்போது நம் ஸை. இ. வாயிலாய் வெளிவந்திருந்தபோதிலும் அவைகளை ஒன்று திரட்டி புத்தக ரூபமாய் வெளியிடுவது கொண்டு பெரும் பிரயோசனமேற்படுமென பல நண்பர்கள் நம்மைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவைகளை ஒன்று திரட்டி வெளியிட முன்வந்துள்ளோமாகையால், அவைகளைக் கொண்டு அன்பர்கள் பிரயோசனமடைவார்களென்று எதிர்பார்க்கிருேம். கனம் மௌலானு அவர்களின் அரும் மொழிகளை அப்படியே மொழிபெயர்த்துக் கூற சாத்தியமில்லையாயினும் அதன் முக்கிய பாகத்தை வெளியிடுகிருேம்.

1 - வது பிரசங்கம்

சென்னை

(முத்தியால் பேட்டை மஸ்ஜித மஅமூர்)

மேன்மைதங்கிய உலமாக்களே! சபையின் கண் குழுமியிருக்கும் பெரியார்களே!! கனவான்களே!!! இந்தியாவுக்கு வெளியில் இஸ்லாமியப் பிரசாரம் புரியும் நோக்கத்துடன் புறப்பட்டிருக்கும் என்னை, இச்சென்னைக்கு வரும்படி செய்து, உங்களுக்கு "இஸ்லாத்தின் சிறப்பு" என்பது பற்றிப் பிரசங்கம் புரியச் சந்தர்ப்பம் அளித்த "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாருக்கும், என்னை அறிமுகம் செய்து வைத்த பஞ்சாபி மௌலவீ சாஹிபுக்கும் என் மனப்பூர்வமான நன்றியறிதலைச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். ஆனுல் பஞ்சாபி மௌலவீ சாஹிப் என்பாலுள்ள அன்பினுல் என்னைப்பற்றி விசேஷமாக எடுத்துக் கூறி இருக்கிருர். ஆனுல், "நான் யார் என்பதை யான் நன்கறிவேன்" என்ற பழமொழிக்கேற்ப, என்னுடைய நிலைமையை யான் நன்கறிவேன் என்பதை உங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறேன்.

மதராஸ் வாசிகளாகிய உங்கள் முன், உங்களுக்குத் தெரிந்த பாஷையில் யான் பிரசங்கம் செய்ய முடியாமலும், என்னுடைய தாய் பாஷையில் யான் கூறும் வார்த்தைகளை நீங்கள் சரிவர உணர்ந்துகொள்ள முடியாமலும் இருப்பதற்காக யான் வருந்துகிறேன். ஆயினும் உங்களுக்குப் புரியும் விதமாகப் பிரசங்கம் புரிய யான் என்னுலான வரை முயலுவேன்.

நாம் யாவரும் முஸ்லிம்களாகவும் யாவரும் ஒரே சகோதரர்களாகவுமிருக்கும் நிலைமையில், என்னுடைய நோக்கத்தை உங்களுக்கு உணர்த்தவும், உங்களுடைய அவாவை யான் தெரிந்துகொள்ளவும் ஹேதுவான பொதுப்பாஷையை நாம் அலட்சியஞ்செய்ததே இத்தகைய சங்கடங்களுக்குக் காரணமாகும். துருக்கியரும், அராபியரும், ஈரானியரும், காபுலியரும், இந்தியராகிய நாமும் ஒரே மத சகோதரர்களாக இருந்தும், இவ்வித அலட்சியப் புத்தியினுல்தான் இன்று அன்னியர்களைப்போ லிருக்கிருேம். ஆகவே மதராஸ் பாஷை, யூ-பி பாஷை, பஞ்சாபி பாஷை, துருக்கிப் பாஷை என்று பல்வேறு பாஷைகளுள வெனினும் எல்லோருக்கும் பொதுவானதோர் பாஷை நமக்கு அவசியமாக இருக்கிறது. இத்தகைய பொதுபாஷையை எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்கு ஏற்படுத்திச் சென்று விட்டார்கள். திருக்குர்ஆன் அந்தப் பாஷையிலேயே வெளியாகி இருக்கிறது. இறைவனும் "திருக் குர்ஆனிலிருந்து உங்களுக்கு இலேசானதை ஓதுங்கள்" என்று கட்டளையிட்டிருக்கிருன். தொழுகையில் நாம் யாவரும் அரபிப் பாஷையிலேயே குர்ஆன் ஓதக் கடமையாக்கப்பட்டிருக்கிருேம்; நாம் ஓதும் குர்ஆனின் கருத்தை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாகவு மிருக்கிருேம். நாம் இதனை உணராத்ததாலும், இவ்வாருன பொதுப்பாஷை யொன்று நமக்குள் இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கவனியாத்ததா

னும் நாம் அரபிப்பாஷை கற்றுக்கொள்வதை கைவிட்டுவிட்டோம். அறபிப் பாஷையைக் கற்றுக்கொள்ளாமல் கைவிட்டதை அலக்ஷ்ய மாகக் கருதி விடுவோமென்றால், திருகுர்ஆனை திருத்தமாக ஓதுவதுகூட இந்தக் காலத்தில் முடியாத காரியமாக வந்துவிட்டது. இது மட்டுமின்றி நமது சகோதரர்கள் இதை வெகு தூரத்துக்கு அசட்டை செய்து தொழுகையில் கிராஅத்தும், குத்பாவும் தாய்ப்பாஷையில் ஓதவேண்டும் என்று இப்பொழுது கிளர்ச்சி செய்துவருவதுதான் வருந்தத்தக்க விஷயமாகயிருக்கிறது. கேவலம் உலகாதய விஷயத்துக்காகப் பிரஞ்சுக் காரர்கள் 'நெப்போலியன் பொனபார்ட்' காலத்திலிருந்தே தங்களது பிரஞ்சுப் பாஷையைப் பொதுப்பாஷையாகவும், எல்லா இடங்களிலும் பேசக்கூடிய பாஷையாகவும் ஆக்க முயன்றுவருகின்றனர். நம்மிந்தியர்களும் நமது தாய்ப்பாஷையிலுள்ள புத்தகங்களையும் நூல்களையும் படிக்க முன்வராமல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் நன்குமதிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆங்கில நூல்களைப் படிக்கவும், ஆங்கிலம் பேசவும் முற்படுகின்றனர். உலக அரசாங்கத்தின் நன்மதிப்பை விரும்புபவர்களுக்கு இந்தப் பாஷையில் இவ்வளவு விருப்பமிருந்தால் இந்த அரசர்களுக்கெல்லாம் பெரிய அரசனும், சர்வஅண்டங்களைப் படைத்து போஷித்துக்காப்பாற்றி வருபவனுமான அவ்வல்லோனின் மாபெரும் அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெறுவதற்காக அரபிப் பாஷையை நாம் கற்றுக்கொள்வது இதைப்பார்க்கினும் எத்தனையோ மடங்கு அதிகமான விசேஷமன்றோ? இஸ்லாமிய ஒற்றுமை, "பான் இஸ்லாமிஸம்" என்று இக்காலத்தில் செய்யப்படும் முயற்சிக்கு அரபிப் பாஷையை எல்லா முஸ்லிம்களும் அறிந்திருப்பதா யிருந்தால் அதைப்பார்க்கினும் வேறு இஸ்லாமிஸம் வேண்டுமோ?

இஸ்லாம் மதமும், திருவேதமும் நமக்கிட்ட கட்டளைகளை நாம் இவ்வாறு அலட்சியஞ்செய்ததற்குக் காரணமில்லாதுபோக வில்லை. இலவசமாகக் கிடைத்த பொருள் மதிக்கப்படுவதில்லை. இது போலவே நாம் முஸ்லிம் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்களாதலின், இஸ்லாம் மதம் நமக்கு வாரிசு பாத்தியமாகக் கிடைத்திருக்கிறது. எவ்விதக் கஷ்டமும் சிரமமுமின்றி வாரிசு பாத்தியதையை அடைந்து அளவற்ற செல்வத்தை பெறும் ஒருவன், அதைக் காப்பாற்ற வகை தெரியாது—அதன் அருமையை உணராமல் பணத்தை அனாவசியமாக வீண்விரயஞ்செய்து அதனை இழந்து விடுவது போல் சிரமமில்லாமலும், சத்தியத்தை உணரவேண்டுமென்ற தாகவிடாய் இல்லாமலும் இலகுவில் இஸ்லாத்தை அடைந்து விட்டபடியால் நாம் அதனை அலக்ஷியம் செய்யத் தலைப்பட்டோம். இவ்விபரத்தை மேனாட்டு அறிஞரும் நௌமுஸ்லிமுமான டாக்டர் 'காலித் ஷெல்டிரேக்' தமது பிரசங்கத்தினிடை கூறியது இப்பொழுதும் என் முன் கூறியது போலிருக்கிறது. அந்தப் பிரசங்கத்தை யான் தான் மொழிபெயர்த்துக் கூறினேனாதலால் அவருரைத்த பொன்மொழிகள் என் சிந்தையில் நன்கு பதிந்து போயிருக்கிறது.

சத்தியத்தைத் தேடி அலையும் ஒரு ஆராய்ச்சியாளரை எடுத்துக்கொள்வோம்: சத்திய வேதம் எது? சத்திய ம;நம் எது? என்ற விஷயத்தில் அவர் ஆராய்ச்சி செய்ய முன் வருகிறார். உலகத்திலுள்ள மதங்களை எல்லாம் கவனிக்கின்றார். ஒரு மதக்காரர்கள் "எங்களிடத்தில் அனாதிக் காலந் தொடுத்து ஒரு புத்தகம் இருக்கிறது; அதை எழுதியவர் யார் என்பதையும் அது ஏற்பட்ட காலம் எதுவென்பதையும் நாங்களறியோம்; ஆனால் அதுதான் எங்களது வேதம்" என்று கூறுகின்றனர். இந்த சாக்ஷியத்தைக் கொண்டு அவ்வாராய்ச்சியாளர் அதை வேதம் என்று நம்புவாரா? ஒருக்காலும் நம்பமாட்டார்.

புத்தமதத்தை எடுத்துக்கொள்வோம்: மிகப் பெரிய மதமெனக்கருதி கோடிக்கணக்கானோர் அதைப் பின்பற்றி இருக்கின்றனர். அந்த மதத்தை ஸ்தாபித்தவர் கௌதம புத்தர் என்பதை நாம் அறிவோம். ஆனால் அவருடைய சரித்திர வரலாறு யாதாகுமென்பதை யாம் ஆராயப் புகுவோமாயின், அவர் ராஜீய பரிபாலனத்தைத் துறந்து வெளிவந்து ஒரு ஒரு மரத்தடியில் தபசு செய்து கொண்டிருக்கும் நிலைமையில் சில உபதேசங்கள் புரிந்தார் என்பது மட்டுந்தான் நமக்குத் தெரியவருகிறது. இதற்கு மேல் வேறொருவிபரமும் கிடைக்கவில்லை. அவ்வாறு அவர் செய்ததாகக் கூறப்படும் அந்த உபதேசங்களுக்கும் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களுமில்லை. இவ்வித நிலைமையில் அவ்வாராய்ச்சிக்காரர் அதை நம்புவாரா? ஒருபோதும் நம்பமாட்டார்.

இதுபோலவே சௌராஷ்டிரமதத்தை எடுத்துக்கொள்ளுவோம்: அதை ஸ்தாபித்தவர் ஜர்தஷ்த் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர் இயற்றியதாகத் தக்க சான்றுகளுடன் கூறப்படும் ஒரு புத்தகத்தை இன்றுவரை நாம் பார்க்க முடியவில்லை. அன்றியும் அவரது ஜீவியக் காலத்திலிருந்த பாரசீக பாஷையும் (டெட் லாங்குவெஜ்) செத்த பாஷைகளின் ஜாப்தாவில் சேர்ந்து விட்டது.

யூதர்களுடைப் மதத்தை ஆராய்ச்சி செய்கிறார். அந்த மதத்துக்குரியவர் ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் என்று கூறுகிறார்கள். அவர்கள் கொண்டுவந்த வேதம் "தவ்ராத்" என்று சொல்லிக்கொண்டு ஒரு நூலைக்காண்பிக்கிறார்கள். அந்த நூலின் சரித்திர வரலாற்றைப் பார்க்கும்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திற்குப் பின் வெகு சீக்கிரத்தில் அந்த தவ்ராத் வேதம் தவறி விட்டதாம். பின்னர் 350 வருஷங்களுக்குப் பின்னால் ஒரு மனிதர் ஒரு இடத்திலிருந்த ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்து இதுதான் மூஸா நபி அவர்களின் தவறிப்போன தவ்ராத் என்று கூறினாராம். அதைத்தான் அவர்கள் ஒப்புக்கொண்டு தவ்ராத் வேதம் என்று வைத்திருக்கிறார்களாம். இந்த விபரத்தை அந்த ஆராய்ச்சியாளர் தெரிந்து கொள்வாராகில் அவர் அதை ஒப்புக்கொள்ளுவாரா? ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டார் என்பது திண்ணம்.

கிறிஸ்துவர்களின் இன்ஜீலை கவனிப்போம். ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாக வந்ததும் அவர்களுக்கு இன்ஜீல் அருளப்பட்டது உண்மை. ஆனாலும் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களுக்கு அருளப்பட்ட வேதத்தின் பாஷை செத்தபாஷையின் ஜாப்தாவில் சேர்ந்து விட்டது. இற்றை நாளில் அந்தப் பாஷையிலுள்ள (ஒரிஜனல்) அசல் பிரதிகள் காணப்படாது அதன் மொழிபெயர்ப்புகள் தாமிருக்கின்றன. ஹஜ்ரத் ஈஸா நபியவர்கள் என்ன! அவர்களின் சிஷ்யர்களான யோவான், லூக்கா, மார்க் இவர்கள் எழுதிய நூல்களின் அசல்கூட அகப்படுவது கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது அவர்களின் பெயரால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற அவர்களின் வேத நூலாகிய பைபிளைப் பார்த்தால் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகவும் பேதமுள்ளனவாகவும் இருக்கின்றன. இதனை யுணர்ந்த அவ்வாராய்ச்சியாளர் தன்னுடைய சத்திய தாகத்தைத் தணித்துக்கொள்ளமுடியுமா?

பின்னர் இஸ்லாத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முற்பட்டு அதன் வேதமாகிய திருகுர்ஆனை ஆராய்ச்சி செய்கிறார். இதில் அவர் தேடிய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் தக்க சாக்ஷியுடன் ஆதாரம் கிடைக்கிறது. இந்நிலைமையில் அவர் இவ்வாறான வேதத்தையும், இம்மதத்தையும் எப்படி மதிப்பார் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்!

சகோதரர்காள்! இறைவன், திருகுர்ஆனில் "நிச்சயமாக நாம் தான் இந்த குர்ஆனை இறக்கினோம்; இதை நாம் காபபாற்றுவோம்" என்றுகூறி திருகுர்ஆன் பரிசுத்த வேதம் என்பதற்கு அவனே சாக்ஷியங் கூறுகிறான். ஆகவே இது வேதமல்ல வென்று சந்தேகங் கொள்ள இடமில்லையென்பதை சுட்டிக்காட்டி "இந்த கிரந்தத்தில் சந்தேகமே இல்லை; பயபக்தி யுடையவர்களுக்கு இது நேர்வழிகாட்டியாக இருக்கிறது" என்று அவனே கூறியிருக்கிறான்.

மேலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருகுர்ஆனை சுயமே கூறவில்லை என்பதை இறைவன் விளக்கி, 'அது அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹீயைத்தவிர வேறில்லை என்று கூறியுள்ளான். தவிரவும் திருகுர்ஆன் தெய்வீக வேதம் என்பதற்கு, அவ் வேதத்துக்குள் அமைந்துள்ள விஷயங்களில் அபிப்பிராய பேதங்களும், முன்னுக்குப் பின் முரண்பாடுகளும் இல்லாமலிருப்பது தக்கதோர் ஆதாரமாகும். இதை இறைவன் "அஃது அல்லாஹ்அல்லாதவர்களிட மிருந்துவந்துள்ளதாக இருக்குமாயின், அதில் ஏராளமான பேதங்களைக் காண்பர்" என்று கூறி, இது சத்திய வேதம் என்பதைப் பின்னும் பின்னும் வற்புறுத்துகிறான். ஒரு வேதம் உண்மை என்று ஏற்படவேண்டுமாயின், அந்த புத்தகமே சத்திய வேதம் என்பதை வற்புறுத்த வேண்டும். அன்பர்காள்!

நான் இவ்வளவு நேரமாக உங்களுக்கு எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் திரு குர்ஆன் சத்திய வேதம் என்பதை வற்புறுத்துகின்றன. இதற்கு அடுத்தபடியாக சரித்திர சம்பந்தமான சான்றுகள் வேண்டும். திருகுர்ஆன் வஹீ அறிவிக்கப்பட்டவுடன் ஜைதுப்னு

தாபித்(ரலி.) அவர்கள் அதனை எழுதிவைக்கும் பணியி லீடுபட்டிருந்தார்கள். இற்றைக்கும் அப்பெரியார் கைப்பட எழுதிய திருகுர்ஆன் மதீனா முனவ்வராவின் ரௌலா ஷரீபில் இருந்துவருவதைக் காணலாம். இப்பொழுது நம்மிடையே இருக்கிறதிருகுர்ஆன் அதன்சரியான நகல் என்பது நிதரிசனமாகின்றது. இஸ்லாத்தின் பரம விரோதியும், திருகுர்ஆனை ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்தவருமான ஜார்ஜ் ஸேல், ராட்வெல்துரை போன்ற மேனாட்டினருங்கூட, இது சத்திய வேதம்என்பதை மறைக்கமுடியாதவர்களாயிருக்கின்றார்கள். தவிரவும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஜீவிய சரித்திரமும், வாழ்க்கை விபரமும் தவறாமல் எழுதி வைக்கப் பட்டிருக்கும் நிலைமையில் அவர்கள் பொய்யுரைத்தார்கள் என்று கூற இஸ்லாத்தின் அந்த பரம விரோதிகளுக்குங்கூட தைரியமேற்படவில்லை. உதாரணமாக ஹஜ்ரத் அபூஸுப்யானைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்: ஆரம்பத்தில் நடந்த 'உஹத்' யுத்தம் அவரது முயற்சியால்தான் நடந்தது; அவர் பகைவர்களின் கக்ஷியில் சேர்ந்து முஸ்லிம்களுக்கு அதிகச் சேதத்தை விளைவித்திருந்தார். இவ்வாறான பகைமை ஏற்பட்டிருந்த காலத்தில் நபிகள் நாயகமவர்கள் உரோமச் சக்கரவர்த்தியான கைஸருக்கு, "அல்லாஹ்வுடைய தூதரான முகம்மது, ரோமத்தலைவர் கைஸருக்கு எழுதியது: இஸ்லாத்தைத் தழுவும்! நீர் சாந்தியடைவீர்" என்னும்கடுமொழிகள் அமைந்துள்ள நிருபம் விடுத்தார்கள்.

பல நாட் கணக்கில் வீட்டில் சமையல் செய்வதற் கில்லாது அடுப்பில் நெருப்பு மூட்டாத நிலைமையிலிருக்கிற ஒருமகான், பெரிய ஏகாதிபத்தியத்தை ஆளும் சக்கரவர்த்திக்கு இம்மாதிரியான கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தைக்கண்டு அவன் பிரமித்தான்; உண்மையை உணர அவாக்கொண்டான். நாயகமார்கள் யார்? எப்படிப்பட்டவர்? என்ற சமாச்சாரத்தைத் தெரிந்துகொள்ள விருப்பங்கொண்டு, மக்காவாசிகள் யாராவது இருக்கிறார்களா என்று தமது நகரில் ஆட்களை அனுப்பித் தேடிவரும்படி செய்தான். அரசனின் ஆட்கள் அபூசுப்யானை அழைத்துச் சென்றார்கள். அதுபொழுது கைஸருக்கும் அபூசுப்யானுக்கும் நடந்த சம்பாஷணை முழுவதையும் இவ்விடத்தில் கூறவேண்டியதில்லை. இந்த இடத்துக்கு வேண்டிய ஒரு விஷயத்தை மாத்திரம் விளக்குகிறேன்: கைஸர் சக்கரவர்த்தி கேட்ட கேள்விகளில் "முகம்மதுவானவர் (ஸல்.) எப்பொழுதேனும் பொய்யுரைத்திருக்கிறாரா?" என்னும் விஷயம் ஒன்றாகும். அபூசுப்யான், அக்காலத்தில் கொடும் விரோதியாக இருந்தும் அக்கேள்விக்கு, சத்தியத்தை மறைக்க மனமில்லாது "இல்லை" என்று பதில் கூறினார். அதற்கு அவ்வரசர் "மனிதர்கள் விஷயத்தில் பொய் சொல்லாதவர், கடவுள் விஷயத்தில் பொய் சொல்லமாட்டார்" என்று கூறி, நாயகமவர்களைப் போற்றினார். என்னே! நாயகமவர்களின் பெருமை! பகைவர்களுங்கூட நாயகமவர்களைப் பொய்யர் என்று கூறத் துணிந்தனரில்லை!

நம் பரிசுத்த குர்ஆன்ஷரீபே அது, ஆண்டவனது கட்டளையாகிய உண்மை வேதமென்று சாட்சி பகர்ந்துகொண்டிருப்பதையும், இதை அல்லாஹ்வின்புறத்தால் ஜனங்களுக்கு அறிவித்த நபிய்யகரீம் முஹம்மது (ஸல்.) அவர்கள் பொய் சொல்லாதவர்களாயும் உண்மை உரைப்பவர்களாயும் இருப்பதையும் நன்குணரும் ஆராய்ச்சியாளர், குர்ஆன்ஷரீபே அல்லாஹ்வின் உண்மைவேதமென்றும் அவ்வேதமே உண்மை மதமென்றும் அதனை அறிவித்த நபிய்யகரீம் (ஸல்.) அவர்களே உண்மை நபியென்றும் ஒப்புக்கொண்டுமனமகிழ்வ ரென்பதிலென்ன சந்தேகம்?

ஆனால் இக்காலத்திலுதித்த—தங்களை நபிகளென்று சொல்லிக்கொள்ளும் போலிகளோ அவர்களுடையபொய்க்கு எல்லையே கிடையாது; வரைதுரையே இல்லை. ஒருவர் தம் ஆரம்ப காலத்தில் 15 ரூபாய் சம்பளத்துக்கு ஊழியம் புரிந்துவந்தார். இவ்வருவாயைக் கொண்டு தமது குடும்பத்தை நடத்துவது கஷ்டமாதலால் வக்கீல் தொழில்புரியலாம் என்றெண்ணி சட்டம் கற்றுக்கொள்ள ஆரம்பித்து அந்த சட்டப்பரீக்ஷையில் தேர்ச்சிபெறாது தோல்வி அடைந்தார். பின்னர் மௌலவீ வேஷம் போட ஆரம்பித்தார். ஆனால் மௌலவீயாக இருப்பதற்கு அரபிப்படிப்பு வேண்டுமாதலால் அது அவரிடம் சூன்யமாக இருந்தது. அதனால் பீர்மஷாயிகாக நடித்தார். அவ்வேஷத்திலும் அநேகர் தோன்றி மிகுதமானோர் காணப்பட்டதால் தமது நாட்டம் நிறைவேறமாட்டாதென்பதைக்கண்ட அவர், தம்மை கவ்து, குத்பு என்று பறைசாற்ற முற்பட்டார். அதற்குறிய அம்ஸமும் அவரிடமில்லாததால் அதை

விட்டுத் திரும்பி தன்னை முஜத்தித் (சீர்திருத்த காரர்) என்று கூற ஆரம்பித்தார். அது பொழுது ஜனங்கள், அவர் முஜத்திதாக இருந்தால் இருக்கட்டும் எனக்கருதி அசட்டை செய்தனர். பிறகு மெள்ளமெள்ள தம்மை மஹ்தீ என்றும் மஸீஹ் என்றும் மர்யம், இப்னுமர்யம் என்றும் தாவாச் செய்து பணம் சம்பாதிப்பதற்கு முற்பட்டு இறுதியாக தாம் நபியாக இருப்பதாயும் வாது செய்தார். ஆனால் நபியாக இருந்தால் முஅஜிஸா (அற்புதச் செய்கை) வேண்டுமல்லவா? இதற்கு என்ன செய்வதென ஆழ்ந்து சிந்தனை செய்து முஅஜிஸாவை அடியோடு இல்லை என்றும் அவைகளெல்லாம் கட்டுக் கதைகளென்றும் மறுக்கத் துணிந்து தம்முடைய சில முன்னறிக்கைகளைக்கூற ஆரம்பித்தார். அதாவது, முகம்மதீ பேகம் என்ற சிறு பெண்ணுக்கும் தமக்கும் வானுலகில் விவாகமாய்விட்டதாயும் அப்பெண் தம் மனைவியாவாளென்றும் கூறினார். ஒன்பது வயது சிறுமியைக் கிழவனுக்கு விவாகம்செய்து கொடுப்பார்களா? செய்விக்க மாட்டார்களன்றோ? அதுபோல் அச்சிறுமியின் பெற்றோர்கள் இவர் கோரிக்கையை மறுத்து வேறொருவருக்கு விவாகஞ் செய்துகொடுத்துவிட்டார்கள். உடனே இவர் கோபங்கொண்டு மற்றொரு முன்னறிவிப்புச் செய்தார். அதாவது, முஹம்மதீ பேகத்தின் புருஷனும், தகப்பனும் $1\frac{1}{2}$ வருஷத்துக்குள் மரித்துவிடுவார்கள்; பின்னர் முஹம்மதீபேகம் தம் நிகாஹில் வருவாளென்றும் அதுவரை தாம் ஜீவித்திருக்கப் போவதாயும் தாவாச்செய்தார். இவ்வாறு கூறியவர் தான் காதியான் என்னும் கிராமத்திலுதித்த குலாம் அஹ்மதாகும். இவர் மரித்து இற்றைக்கு வெகுகாலமாயிற்று. ஆனால் முகம்மதீ பேகமும் அவளுடைய கணவனும் இதுவரை சுகமாய் வாழ்ந்து வருகின்றார்கள். என்னே பொய்யரின் பிதற்றல்! முன்னறிக்கையின் மூடத்தனம்!!

இதுமட்டுமா? தமது சிஷ்யர்களில் பிளேக் வியாதி வந்தணுகாது என்றார். ஆனால் அவர்களிற் சிலர் அன்னோயால் பீடிக்கப்படவே காதியான் நகரில் வசிப்பவர்களுக்கு பிளேக் வராது என்றார். அக்கிராமத்தில் வசிப்பவர்களிலனேகர் அன்னோயால் மரணமடைய ஆரம்பிக்கவே, தமது வீட்டின் காம்பவுண்டுக்குள் அடைக்கலம் புகுகிறவர்களுக்கு பிளேக் வராது என்றார். உடனே யாவரும் அவரது வீட்டின் காம்பவுண்டிற்குள் நுழைய ஆரம்பித்தனர். எல்லோருக்கும் அங்கு இடங்கிடைக்காதாகையால் அதனை விசாலப்படுத்தப் பணம் தேவைப்படுவதாகக்கூறி சந்தாக்கேள்க்க ஆரம்பித்தார். அவரது சிஷ்யர்கள் ஏராளமான பணத்தைக் கொடுத்தார்கள். இவ்வாறாக பற்பல சூழ்ச்சிகள் செய்து ஏராளமான பணங்களைத்திரட்டி அனேக லட்சக்கணக்கான ரூபாய்களை அவரது வாரிஸ்களுக்குவிட்டுச் சென்றார்.

ஆனால் உண்மை நபியாகிய எம்பிரான் முஹமதுற் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் இவ்வுலகை விட்டேகுங்கால் தங்கள் குடும்பத்தாருக்கு யாதொன்றையும்விட்டுச் செல்லவில்லை; மூன்று துணிகள் மாத்திரமிருந்தன. அதுவும் காலுக்குப் போர்த்தினால் தலைக்குப் போததாயும், தலைக்குப் போர்த்தினால் காலுக்குப் போதாததாயுமிருந்தது. இதுதான் அல்லாஹ்வின் உண்மைத் தூதாரின் நிலைமையாகும்.

சோதரர்காள்! இதுவரை கூறியுள்ளவைகள் யாவும் எனது பிரசங்கத்தின் முகவுரையாகும். இதுபொழுது விஷயத்தை கவனிப்போம். நேரமோ அதிகமாய்விட்டதால் விஷயத்தைச் சுருக்கிக் கூறுகின்றேன். இன்றைய பிரசங்கத்தின் முகவுரையாகிய "இஸ்லாத்தின் சிறப்பு" என்பதில் கொள்கைச் சிறப்பு, கிரியைச்சிறப்பு, அதன் அமைப்புச் சிறப்பு ஆகியவைகளைப் பற்றி இன்ஷாஅல்லாஹ் அடுத்துள்ள பிரசங்கங்களில் விவரிக்கலாமென்று கருதுகின்றேன்.

வானுலகில் நக்ஷத்திரங்கள் தோன்றி இலங்கிக்கொண்டிருக்கும்போது சந்திரன் வெளியானவுடன் அவைகள் மங்கி விடுகின்றன. பின்னர் சூரியோதயமானவுடன் சகல ஒளிகளும் மங்கி மறைந்துவிடுகின்றன. இத்தன்மைபோல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தோன்றியவுடன் ஏனைய மதங்களெல்லாம் மறைந்துவிட்டன. எனவே சுத்த சத்திய சன்மார்க்கமான நமது இஸ்லாமிய மதமும் அதன் வேதமும் சம்பூர்ண நிலைமைக்கு வந்திருக்கிறது. இதில் சகல மானிட வர்க்கமும் தங்களுக்கு வேண்டிய சகல விஷயங்களையும் பெற்றுக் கொள்ளலாம்; அவைகளை அடைய வேண்டிய வழிகளையும் கண்டு கொள்ளலாம். ஆதலால் நமக்கு இனி புதுநபியோ, புதியவேதமோ தேவையில்லை. இறைவனே தனது திருமறையில் "இன்றைய தினம் உங்களுடைய மதத்

தைப் பூர்த்திசெய்தேன். என் அனுக்கிரகத்தை சம்பூரணமாக்கினேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்'' எனக்கூறியுள்ளான். ஆகவே நாம் சத்திய திருமறையை நமக்கு வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும்; அதிலுள்ள அரும் விஷயங்களை நன்குணர வேண்டும். அதனை நாயகம் (ஸல்.) அவர்களே நமக்குக் கற்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். "பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களுக்கு தினசரி 10 ஆயத்துகளைக் கற்பிப்பார்கள்; அதில் அமைந்துள்ள கருத்துகளை அவர்கள் கிரகித்துக்கொண்ட பின் அடுத்த ஆயத்துகளைக் கற்பிப்பார்கள்'' என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅத்தாபியீன்கள், அதன்பின் இமாம்கள் நமக்கு மதத்தைக் கற்பித்து வந்துள்ளார்கள். இவ்வாறாக 1350 வருஷங்களாக நடைபெற்று வருகிறது; இன்ஷா அல்லா இறுதி நாள்வரை இவ்விதமாகவே நடைபெற்று வரும்'' "மார்க்கக் கல்வி பயிலக்கூடிய ஒரு கூட்டம் உங்களிலிருக்கட்டும்'' என்னும் தெய்வ கட்டளை நமக்கிருக்கின்றது. ஆனால் ஆங்கிலத்தில் தப்ஸீர் எழுதிய முகம்மது அலீ (லாகூர்பார்ட்டி) தமது நூலின் முகவுரையில் "இந்த தப்ஸீரில் யான் சிறப்பாக எழுதியிருப்பது முழுதும் என்னுடைய உஸ்தாது குலாம் அஹ்மது அவர்களிடமிருந்து யான் கற்றுக்கொண்டதேயாகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நண்பர்காள்! சற்று சிந்தித்துப் பாருங்கள்! உண்மை வேதத்தை அறிவித்த எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடமிருந்து குர்ஆனின் வியாக்கியானத்தைக் கற்றுக் கொள்வதா? அல்லது தம்மை நபி என்று தாவாச் செய்கிற ஒரு பொய்யரிடமிருந்து கற்றுக் கொள்ளுவதா என்பதை நீங்களே சிந்தித்து பாருங்கள்!

நமது திரு குர்ஆன், ஒரு புள்ளி (நுக்தா) கூட மாற்றப்படாமல் நாளிதுவரை அப்படியே பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது; அதனை அல்லாஹ்தஆலா தானே காப்பாறு வருவதாகக் கூறியுள்ளான்; அதற்கு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் விரித்துரை பகர்ந்துள்ளார்கள்; அவைகள் யாவும் எவ்வித மாறுதலுமின்றி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் நமது பரிசுத்த குர்ஆனுக்கு புதிய வியாக்கியானங்கள் தேவையில்லை. எனவே இதிலிருந்து இஸ்லாத்தின் சிறப்பையும் மகிமையையும் நன்குணரலாம் எனக் கூறிமுடித்தார்கள்.

2 வது பிரசங்கம்

(சென்னை மண்ணடி முஸ்லிம் யூனியன்)

மௌலானா அவர்கள், ஆண்டவனது கட்டளையை ஜனங்களுக்கு அறிவிப்பதற்காக ஆண்டவனுக்கும், ஜனங்களுக்கும் இடையே பொதுவாக நபிமார்கள் எதற்காக அனுப்பப்பட வேண்டுமென்பதைப் பற்றியும், குறிப்பாக 'நபிகள்பிரான் (ஸல்) அவர்கள் இப்பூவுலகின் கண் எதற்காக அனுப்பப்பட்டார்கள்?' என்பது பற்றியும் குர்ஆன், ஹதீது முதலிய ஆதாரங்களைக் கொண்டு மிக்க உருக்கமாகப் பிரசங்கம் புரிந்தார்கள். அப்பிரசங்கத்தின் முக்கிய பாகம் வருமாறு:—

சகோதரர்களே! "எழுதப் படிக்காதவர்களில், அவர்களில் நின்றுமே ஒரு தூதரை அவனுடைய வசனங்களை ஓதிக் காண்பிப்பதற்காகவும், அவர்களை (இணைவைத்தல் முதலிய துர்க்கிரியைகளை விட்டு) தூய்மைப் படுத்துவதற்காகவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிப்பதற்காகவும் அல்லாஹ்தஆலா அனுப்பினான்''

என்ற இத்திரு வசனமானது, நீங்கள் என் மீது சுமத்தியிருக்கும் கட்டளையை நிறைவேற்றிவைக்க முன்வந்து பிரசங்கம்புரியப் போவதின்பொருளை வற்புறுத்திக் கூறுகிறது. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது வேலையானது அல்லாஹு தஆலாவின் ஆயத்துக்களை ஜனங்களுக்கு ஓதிக் காண்பிப்பதும், துற்குண துற்கிரியைகளை விட்டு ஜனங்களைச் சுத்தப்படுத்துவதும், ஜனங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிப்பதுமாக இருந்தது. அல்லாஹுதஆலா தன்னுடைய கட்டளைகளை மக்களுக்கு நேராக அனுப்பி விடலாகாதா? அல்லது ஒரு இடத்தில் வேதத்தை வைத்து விட்டு நீங்கள் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் எழுதப்பட்டபுத்தகம் இன்ன இடத்திலிருக்கிறது; அதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று யாவருக்கும் அறிவித்து விடலாகாதா? என்னும் கேள்விகள் எழுகின்றன.

இவ்வாறு ஒருபோதும் முடியாதென்பதே அக்கேள்விக்குதக்க பதிலாகும். ஏனெனில், நாம் (மும்கினுல் வுஜூது) அநித்திய உள்ளமை யுடையவர்கள்; அல்லாஹு தஆலவோ (வாஜிபுல் வுஜூது) நித்திய உள்ளமை யுடையவன். ஆதலால் அவனிடமிருந்து வரக்கூடிய கட்டளையை—உத்தரவை-நாம் நேருக்கு நேராக —நபிகளின் துவாராவாக இல்லாமல்—கேட்டுத் தாங்கமுடியாது நாம் அழிந்து போவோம். எனவே, அல்லாஹ்வுக்கும் நமக்கும் மத்தியில் மூன்றாவதான ஒரு தத்துவம் இருக்கவேண்டிய தவசியமாகிறது. அத்தத்துவம்தான் நமக்கு அவ்வல்லோனின் கட்டளையை அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது. இதைத்தான் நாயகமவர்கள், "யான் பங்குவைப்பவனாக இருக்கிறேன். அல்லாஹு தஆலா கொடுக்கிறவனாக இருக்கிறான்" என்று கூறியிருக்கிறார்கள். அதாவது, மக்களுக்கு வேண்டிய விஷயங்கள் அல்லாஹு தஆலாவினிடமிருந்து நாயகமவர்களுக்கு வருகின்றன; அவற்றை நாயகமவர்கள் மக்களுக்கு அறிவித்துவிடுகிறார்கள். இத்தகைய நபிமார்கள் வாயால் மட்டும் விஷயத்தைச் சொல்லி விடுதல் போதாது. அவ்வாறு சொல்லிவிடுவதால்கோரிய பலனும் சித்தியாகாது. இதைத்தான் "அவர்களைச் சுத்தப்படுத்துவதற்காக" என்ற வார்த்தை வற்புறுத்துகிறது. ஆகவே அக்காரியங்களை கிரியாம்சையிலும் செய்து காட்டல் அத்தியாவசியமாகும். உதாஹரணமாக, இற்றைநாளிலும் இன்ஜினீரிங், மெக்கானிகல் முதலிய தொழில்களைப் பற்றிய புத்தகங்கள் எத்தனையோ இருக்கின்றன; அவைகளைப் படிப்பதனால் மாத்திரம் இயந்திர வேலைகளும், தொழில் பயிற்சியும் ஏற்படுமென்றிருந்தால், அதற்காக பயிற்சிச் சாலைகளும்போதகாசிரியர்களும் தேவையில்லை. எனவே, அவைகள் புத்தகங்களில் எழுதப்பட்டிருந்தாலும் அவைகளைக் கிரியாம்சையில் செய்து காண்பிக்கக் கூடிய உபாத்தியாயர் தேவையாக இருப்பதுபோல், பாரமார்த்திக வழியை அறிவிப்பதற்குத் தெய்வச் சட்டம் போதுமானதாக இருந்தாலும் அதனைக் கிரியாம்சையில் செய்து காட்டிப்பயிற்சி அளிக்கக் கூடிய நபிமார்கள் இன்றியமையாததாகும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட நபிமார்கள், ஒவ்வொரு வர்க்கத்தாருக்கெனப் பிரத்தியேகமாகத் தனித் தனியே அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆகவே அவர்கள் எந்தக் கூட்டத்தாருக்காக அனுப்பப்பட்டார்களோ அந்தக் கூட்டத்தாருக்கு அவர்கள் போதிக்கவேண்டிய விஷயம் எதுவோ அதைப்பற்றிய அம்சமே அவர்களிடம் அமைந்திருந்தது.

'ஹூத்' அலைஹிஸ்ஸலாமவர்களிடம் அவருடைய ஜனங்களுக்குத் தகுந்த லக்ஷணமும், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் அந்த ஜனங்களுக்குத் தகுந்த லக்ஷணமும், மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களிடம் அவருடைய கூட்டத்தாருக்குத் தகுந்த லக்ஷணமும், ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் அவரது வர்க்கத்தாருக்கு வேண்டிய லக்ஷணமும் மிளிர்ந்து விளங்கின. எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகத்திலுள்ள மக்கள் யாவருக்கும் நபியாக வந்தமையான், அவர்களிடம் எல்லாத்தன்மைகளும் ஒருங்கே அமைந்திருந்தன. இதைத்தான் அல்லாஹு தஆலா,

"நிச்சயமாக நாம் உம்மை ஜனங்கள் யாவருக்கும் நற்செய்தி சொல்லுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி இருக்கிறோம்"

எனக் கூறியுள்ளான். திரு குர்ஆன் மாத்திரம்தான் அவ்வாறு கூறுகிறது என்று எண்ணிக் கொள்ளவேண்டாம். நாயகமவர்கள் ஜனனமான காலத்தின் சரித்திரத்தைப் பார்ப்போமாகில் அரபி தேசம் மாத்திரம் தான் சீர்கேட்டிலிருந்தது என்பதில்லை; உலகம் முழுதுமே ஒரே நிலைமையில்தான் இருந்தது. எனவே அரப் நாட்டில் மட்டும் விக்கிரக ஆராதனைகளும், ஒருவருக்கு மாமனாகுவதைக் கேவலமாகவும், மருமகனாகுவதைப் பெருமையாகவும் கருதும் உணர்ச்சியும், தான் பெற்ற பெண் சிசுவை உயிருடன் புதைக்கும் வேலையும் மிகுந்திருந்தன; இன்னும் தகப்பனுடைய மனைவியர்களை வாரிசு பாத்தியமாக அடைந்து மாற்றாந் தாயை மனைவியாக்கிக் கொள்ளும் வழக்கமுமிருந்து வந்ததென்று கருதிவிட வேண்டாம். இந்தியாவில் விக்கிரக ஆராதனையின் உணர்ச்சி மேலிட்டு "லிங்க பூஜை" நடைபெற்றுக்கொண்டிருந்தது; சீனாவிலும் ஜப்பானிலும் புத்த மத உணர்ச்சி சிறந்து விளங்கிற்று; அவர்கள் கடவுள் ஒருவன் உண்டு என்ற கொள்கையே இல்லாதவர்களாக இருந்தனர்; ஜைனர்களும் அதே மாதிரி நாஸ்திகக் கொள்கைக் காரர்களாகவே இருந்தனர். ஐரோப்பாவைக்

கவனித்தால், அவர்கள் மனித உருவத்தில் வெளியான மிருகங்கள் என்று சொல்லப்படத் தக்க விதமாக காட்டு மிராண்டிகளின் அம்சம் அவ்வளவு தூரம் பொருந்தியவர்களாக இருந்து வந்தனர். எனவே, உலகம் முழுவதும் அஞகைரீகத்தில் ஒரே நிலைமையிலிருந்தது. இதனல் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகத்துக்கே பொது நபியாகவும், போதகராகவும், சீர்திருத்தக்காரராகவும் அனுப்பப்பட்டார்கள். எனவே நபிமார்கள் எந்த ஸ்திதியிலிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு உதாரணமாகக் கூறுகிறேன்.

"நிச்சயமாக நாம் எல்லா உயிருள்ள வஸ்துவையும் ஜலத்திலிருந்தே சிருஷ்டித்தோம்" என்று இறைவன் கூறி இருக்கிறான். புஷ்பம் காய்கனி முதலியவைகளும் ஜலத்திலிருந்தே உற்பத்தியானவை. இந்நிலைமையில் புஷ்பங்களின் மீது ஜலத்தை ஊற்றிவைத்தால் அவை கெட்டு அழுகிப் போய் விடுகிறது. அதே விதமாகக் காய்கனிகளையும் ஜலத்தில் போட்டுவைத்தால் கெட்டு நாசமாகி விடும். ஆனல் அவை பூத்துக் காய்த்துப் பழுக்கும் மரத்தின் வேரில் ஜலத்தை விட்டால் அந்த வேரானது ஜலத்தை வாங்கி பணர்களுக்கும், வாதுகளுக்கும், இலைகளுக்கும், புஷ்பங்களுக்கும், காய்களுக்கும், பழங்களுக்கும் அவைகளுக்குரியவாறு பங்கு வைத்துக் கொடுக்கிறது. அதுபோலவே நாயகம்(ஸல்.)அவர்கள் ஜீவ வர்க்கம் என்ற விருக்ஷத்துக்கு ஆணிவேராக இருக்கிறார்கள். எனவே மனிதர்கள் விருட்சத்தின் இலைகளைப்போலும், பூக்களைப் போலும், கனிகளைப்போலும் இருக்கின்றார்கள்; எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களோ அவ்விருட்சத்தின் ஆணி வேராக இருக்கிறார்கள். எவ்வாறு பூ, இலை, கனி ஆகியவைகள் ஜலத்தை நேர்முகமாகத் தாங்கமுடியாதோ அதுபோலவே ஆண்டவனது கட்டளைகளை மனிதர்கள் நேர்முகமாக தாங்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இக் காலத்தில் எந்த விஷயத்துக்கும் அத்தாட்சி கோரப்படுகிறது. அதனல் அத்தாட்சியற்றதை மனிதவர்க்கம் மறுதளிப்பது இயற்கையாக இருக்கிறது. ஆகவே, அன்பியா அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்களை அல்லாஹ்வின் தூதர் என்பதற்கும் ஆதாரம் காட்ட வேண்டியதாக இருக்கிறது. இதற்குத்தான் அன்பியாக்கள் அற்புதச் செய்கைகளைவெளியாக்கினர்கள். அதுவும் தங்களது சுயமாக அவர்கள் காட்டவில்லை. அல்லாஹு தஆலாவானவன் தன்னுடைய உண்மையை, தன்னுடைய சக்தியை, தன்னுடைய வல்லமையை அன்பியாக்கள் மூலமாக உலகத்தாருக்குக் காண்பிக்கிறான். ஆதலால் அவர்கள் காட்டிய அற்புதம் அவர்கள் சுயமேகாட்டியதல்ல. யான் இதை திருகுர்ஆனிலிருந்தே கூறுகிறேன்.

இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'நம்ரூத்' அரசனிடம் அனுப்பப்பட்டார்கள். ஹஸ்ரத்அவனிடம் சென்று அல்லாஹ் ஒருவன் உண்டென்று கூறினர்கள். அதற்கு அவன் உன்னுடைய நாயன் எப்படிப்பட்டவன் என்று கேட்டான். அதற்கு இப்ருஹீம் நபியவர்கள் "என்னுடைய றப்பு எல்லாரையும் ஜீவிக்கச் செய்பவன்,மரிக்கச் செய்பவன்" என்று கூறினர்கள். உடனே அவன்,"நானும் ஜீவிக்கச் செய்கிறேன், இன்னும் மரிக்கச் செய்கிறேன்" என்று கூறி, கொலைக்குற்றத்துக்காகத் தூக்குக்குச் செல்லுந் தறுவாயிலிருந்த ஒரு கைதியை விடுதலை செய்துவிட்டு, நிரபராதியான ஒருவனைப் பிடித்துக்கொன்றுவிட்டான். இதை இப்ராஹீம் நபி (அலை.) அவர்கள் பார்த்து, ஜீவிக்கச் செய்தல், மரிக்கச்செய்தல் என்பதன் அருத்தத்தையே உணர்ந்து கொள்ள முடியாத அவ்வளவு அடிமுட்டாளாக இவன் இருக்கின்றான் என்பதை உணர்ந்து தங்களது தாவாவை வேறு முறையில் எடுத்துக் கூறினர்கள். அதாவது "என்னுடைய நாயன் சூரியனைக் கிழக்குத் திசையிலிருந்து உதயமாகும்படி செய்கிறான். அதை நீ மேற்குத் திசையிலிருந்து உதயமாகும்படி செய்" என்று கூறினர்கள். இதில் அவன் தோல்வியுற்றான். பின்னர் ஹஸ்ரத் இப்ருஹீம் நபியவர்களை நெருப்புக் குன்றத்தில் போட்டான். ஆனல் அல்லாஹு தஆலா நெருப்பினுடைய இயற்கைத் தன்மையான கரிக்கும் குணத்தை மாற்றி அதைக் குளிர்ச்சியானதாகவும், சாந்தியுடையதாகவும் ஆகும்படி கட்டளை யிட்டுவிட்டான். அதனல் இப்ராஹீம் நபியவர்கள் நெருப்பில்தள்ளப்பட்டும் அதுபொழுது கரிந்து போகாமல் க்ஷேமமாகவே இருந்தார்கள். இவ்வற்புதம் ஹஸ்ரத் இப்ராஹீம் நபியவர்கள் மூலமாய் நடந்ததாக இருந்தாலும் அல்லாஹ்வின் வல்லமையை—அவனது அபாரசக்தியை உணர்த்துவதற்கு அவனலேயே செய்து காண்பிக்கப்பட்டதென்பதை எவரே மறுக்கமுடியும்? உலகத்திலுள்ள சகல வஸ்துக்களையும், அவைகளுக்குள்ள தன்மைகளையும், இயற்கையையும்.

சிருஷ்டித்த அல்லாஹ்வுக்கு அதனை மாற்றவும் அவைகளை தனது இஷ்டப்படி நடத்தவும் முடியாதா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

மூஸா நபி (அலை.) அவர்கள் பிர்அவ்னிடம் அனுப்பப்பட்டார்கள். ஹஸ்ரத் அவர்கள் அவனிடஞ் சென்று ஏகநாயனை வணங்க வேண்டுமென்றும், அவனுக்கே பயபக்தி செலுத்தவேண்டுமென்றும் கூறினார்கள். உடனே அவன், தனது தேசத்திலுள்ள மாந்திரீகர்களையெல்லாம் தருவித்து மூஸா நபியவர்களைத் தோற்கடிக்கச் செய்ய முயன்றான்; மாயப் பாம்புகளைக் காட்டி மருட்டினான். அது பொழுது அல்லாஹுதஆலா மூஸா நபியவர்களுக்கு, அவரது அஸாவைக் (கைத்தடியை) கீழே போடும்படி கட்டளையிட்டான். அவ்வாறே மூஸா நபி (அலை.) அவர்கள் தங்கள் அஸாவை கீழே போட்டார்கள். உடனே அந்த அஸாவானது பிர்அவ்னின் மாயப்பாம்புகளுக்கெல்லாம் பெரிய பாம்பாக மாறி, பிர்அவ்னுடைய பாம்புகளையெல்லாம் விழுங்கிவிட்டது. இதனால் அல்லாஹ்வின் சக்தி மிகப் பலமானது; அதை எதிர்க்கமுடியாது என்பது நன்கு ருஜுவாகிறது என்பதை அந்த மாந்திரீகர்கள் உணர்ந்துகொண்டு உடனே "மூஸாவுடையவும் ஹாரூனுடையவும் றப்பை நாங்கள் விஸ்வாசிக்கின்றோம்" என்று கூறி "தெய்வம் ஒன்றே" யுள்ளது என்பதை ஒப்புக் கொண்டனர்.

இவ்விடத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அதாவது, இக் காலத்தில் நாஸ்தீகர்கள் தலையெடுத்து வருகிறார்கள்; ருஷ்யாவிலிருக்கும் பொது உடமை என்னும் நாஸ்தீகக் கொள்கை இந்தியாவிலும் பரவுகிறது. இன்னோர் எல்லாம் இயற்கை என்று வற்புறுத்துகின்றனர். இது ஒரு வகையில், ஒவ்வொருவரும் தம்மைக் கடவுள் என்று தாவாச் செய்வதாகவே ஏற்படும். இதைப்பற்றிய விபரத்தை இனி ஒரு சமயம் கவனிப்போம். இப்பொழுது ஸைன்ஸு சட்டத்தைமட்டும் எடுத்துக்கொள்வோம்:

இதோ எனது கையிலிருக்கிற தடியை ஜலத்தில் போட்டு விடுகிறேன்; ஜலத்திலேயே இரண்டு மூன்று வருஷம் அது கிடக்கட்டும். ஜலத்தில் கிடக்குங் காலத்தில் அந்தத் தடியானது அழுகி உடைந்து துண்டு துண்டாகி அதனுடைய அணுக்கள் சிறுசிறு பூச்சிகளாக மாறுகின்றன. பின்னர் இந்தப் பூச்சிகள் வேறொன்றாக மாறுகின்றன. இறுதியாக 1000 வருஷங் கழித்து அவைகள் பாம்புகளாக மாறுகின்றன. ஸைன்ஸு சட்டப்படி தடியானது 1000 வருஷங்களுக்கு அப்பால் பாம்பாக மாறுவதற்கு நியாயமில்லாமற் போகவில்லை. இதை ஸைன்ஸும் மறுக்காது. இப்பொழுது என் கையிலுள்ள தடியானது 1000 வருஷங்களுக்கப்பால் பாம்பாய் மாறுவதானது, மூஸா நபி (அலை.) அவர்களிடம் ஒரு க்ஷணப் பொழுதில் மாறிற்று. ஆகவே கைத்தடி பாம்பாக மாறுவது ஸைன்ஸுக்கு விரோதமன்று. அதாவது:—மூஸா நபி (அலை.) அவர்களுடைய அஸா உடனே பாம்பாகி பின்னரும் தடியாகி விட்டது. இதனால், காலத்தில்தான் வித்தியாசம் காணப்படுகிறதேயன்றி விஷயத்தில்வித்தியாசமில்லாதிருக்கிறது என்பதை நன்கு தெரிந்து கொள்ளுகிறோம். முற்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள ஒருவர், இந்தியாவிலுள்ளவரிடம் பேச வேண்டுமாயின் குறைந்தது 2, 3 வருஷங்களேனும் செல்லும். இக்காலத்தில் ஆகாயவசனி மூலமாக உடனுக்குடன் இருந்த இடத்திலேயே பேசிக்கொள்கிறோம். அக்காலத்தில் இவ்வாறு பேசுவதாகக் கூறினால் "அது இயற்கைக்கு விரோதம்; பகுத்தறிவுக்கு எட்டவில்லை" என்று கூறுவர். இக்காலத்தில்இது சகஜமாக இருக்கிறது. ஆகவே அன்பியாக்களுக்கு நடைபெற்ற அற்புதங்கள் புத்திக்கு எட்டாத விஷயங்களுமன்று; நடக்கமுடியாத காரியமுமன்று.

ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் மரித்தவர்களை உயிர்ப்பித்ததாகவும், குஷ்டரோகிகளைக் குணப்படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. ஹஜ்ரத் ஈஸாநபியவகர்கள் தங்கள் சார்பாகத் தங்களது சமர்த்தால் இவைகளைச் செய்ததாகத் திருக் குர்ஆனில் சொல்லப்படவில்லை. ஆனால் அல்லாஹ்வின் கட்டளையினால் செய்ததாகவே சொல்லப்படுகிறது. மனிதன் யாதொன்றுமில்லாதிருக்கும் நிலைமையில் அவனைப் படைத்து உருவாக்கி உயிர்கொடுத்த றஹ்மானுக்குமறித்தவர்களை உயிர்ப்பிக்க சக்தி இல்லையா? நோயாளிகளை குணப்படுத்தச் சக்தி இல்லையா? என்பதை உணருங்கள். ஆனால் லாகூரிலுள்ள முஹம்மது அலி எம். ஏ., எல். எல். பி., என்பவர் எழுதிய ஆங்கில வியாக்கியானம், இந்த அற்புதங்களை எல்லாம் அடியோடு மறுக்கிறது. உதாரணமாக "இஃறிப்" என்ற பதத்துக்கு

"அடி" என்பதும்; "அஸா" என்ற பதத்துக்குத் "தடி" என்பதும், "ஹஜர்" என்ற பதத்துக்குக் "கல்" என்பதும் பொருள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. திருகுர்ஆனில் "உமது தடியால் கல்லை அடியும்" என்று மூஸாநபிக்கு அல்லாஹ் கட்டளையிட்டான். இதற்கு "உமது கூட்டத்தாரின் உதவியைக்கொண்டு மலையின் மீது செல்லும்" என்று கூறியதாக அந்த முஹம்மத்அலி வியாக்யானம் செய்திருக்கிறுர். மேலும் இவர் தமது ஆங்கிலத் தப்ஸீரின் முகவுரையில் "இந்தத் தப்ஸீரில் காணப்படும் சிறந்த விஷயங்களைத் தாம் தனது குருநாதரான குலாம் அஹ்மது என்பவரிடமிருந்து கற்றது" என்று கூறியிருக்கிறுர். இவரது குருநாதர் அரபியைச் சரிவரத்தெரிந்து கொள்ளாமலிருக்கும்போது தம்முடைய சுயநலத்தைக் கருதி இம்மாதிரி எல்லாம் செய்ததற்கு நூருத்தீன் என்பவர் ஆதரவு அளித்துக்கொண்டும், குதர்க்க வியாக்யானத்துக்கு வழி காட்டிக் கொண்டுமிருந்தார். வெளிப்பார்வைக்கு முஹம்மது அலிக்கும் நூருத்தீனுக்கும், குலாம் அஹ்மது குருவுபோல் தோன்றினும், உண்மையில் நூருத்தீன்தான் இவர்கள் யாவருக்கும் குருவாக இருந்துவந்தார். ஆதலால் அவரது செல்வாக்கு இவர்களிடை அதிகமாக இருந்தது. எனவே, குலாம்அஹ்மத் மரித்த பின்னர் அவரது சொத்துக்கு அவரது புதல்வர் வாரிசாகி லக்ஷாதிபதியாக இருந்தும் நூருத்தீனை எதிர்க்கமுடியாமல் மிர்ஸாவின் சீடர்கள் அவரைக் கலீபாவாக ஏற்படுத்திக்கொண்டனர். பின்னர், இவர் மரிக்கவே முஹம்மது அலி, காஜா கமாலுத்தீன் ஆகியவர்களுக்கு கலீபாப்பதவி அடையவேண்டுமென்ற ஆசையுண்டாயிற்று. ஆனுல் குலாம் அஹ்மதின் புதல்வர் தாம் கலீபாப் பதவி வகிக்கவேண்டுமென்று விரும்பியதால் அவர்களுக்குள் பிளவேற்பட்டு, முஹம்மது அலி காஜா கமாலுதீன் வகையறுக்கள் லாகூரில் தங்களது தலைமை ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறுர்கள். இதைத் தவிர அவர்களுக்கிடையில்வேறு வித்தியாசங் கிடையாது. குலாம் அஹ்மது தன்னை நபியென்று தாவாச்செய்ததை இந்த லாகூர் பார்ட்டியாரும் ஒப்புக் கொள்கின்றனர். ஆனுல்பஹிரங்கமாக அவர்சள் அதைக் கூறுவதில்லை. ஏனெனில், பணம் சம்பாதிப்பதும், பொருள் சேகரிப்பதும் இவர்கள் நோக்கமாக இருப்பதால் குலாம் அஹ்மதை நபியென்று பச்சை வெட்டாகக் கூறிக்கொண்டு முஸ்லிம்களிடம் பணம் கேட்டால் ஒருவரும் தனசகாயம் செய்ய முன்வர மாட்டார்கள் என்பதை எண்ணி வெளிக்குப் பசப்புவார்த்தைகளைக்கொண்டு நயவஞ்சகத் தனத்தைக் கையாண்டனர். எனவே, குலாம் அஹ்மதை "முஜத்தித்" என்று மட்டும் நம்புவதாக வெளியில் கூறிக்கொண்டு கிறிஸ்தவர்களை எதிர்ப்பதற்காக ஆங்கிலத்தில் தப்ஸீர் எழுதுவதாகப் பறைசாற்றினர். முஸ்லிம்கள் அதை மெய்யென நம்பி தப்ஸீருக்கு 52 ஆயிரம் ரூபாய்வரை நன்கொடையாகக் கொடுத்தனர். இதன்மூலம் அவர்கள் பணந் திரட்டினர். அவர்கள் இயற்றியுள்ள ஆங்கிலக் குர்ஆனின் இரண்டாம் பதிப்பின் 6-வது பக்கம் 920 நெ குறிப்பில்,

"நபிமார்களுக்கு அளிக்கப்படும் இந்த வஹீ—அனுக்கிரகமானது, அவர்களைப் பின்பற்றி நேரான வழியில் இருக்கிற யாவருக்கும் இன்னும் அளிக்கப்படுகிறது என்பதை இது காண்பிக்கிறது"

என்று வரைந்ததோடு நில்லாமல், "வஹீயுடைய வாசல் இன்றும் திறந்திருக்கிறது; இன்றும் வஹீ வரலாம்" என்பதை வற்புறுத்தி இருக்கிறுர்.

பின்னர் 28-வது ஜுஸ்உவிலுள்ள "ஸூரத்துல் ஜும்ஆ"விலுள்ள "இன்னும் அவர்களைச் சந்திக்காதவர்களான அவர்களிலுள்ள மற்றவர்களுக்கு" என்று கூறப்பட்டுள்ள வசனத்துக்கு, முஹமது அலி தமது ஆங்கிலத் தப்ஸீரின் 1076-வது பக்கத்தில் எழுதியுள்ள 2503-வது குறிப்பில், "குலாம் அஹ்மதையும், அவரது கோஷ்டியாரையும் இந்த ஆயத்து சுட்டிக்காட்டுவதாகவும் இவர்கள் இஸ்லாத்தின் ஜோதியை உலகமெங்கும் பரவச்செய்ய முயலுபவர்கள்" என்றும் சமிக்கையாக அறிவிக்கப்பட்டிருப்பதாக எழுதிவைத்திருக்கிறுர். மேலும் தமது இக்கூற்றை வற்புறுத்துவதற்காக ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்களின் ரிவாயத்து ஒன்றையும் இன்னும் சில ரிவாயத்துகளையும் தவறுனமுறையில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். ஆகவே ஒரு இடத்தில் வஹியை ஒப்புக்கொள்கிறுர்; இன்னெரு இடத்தில் நபித்துவத்தை ஒப்புக்கொள்கிறுர். இவ்விதமாகத் தங்களது தாவாவை வெவ்வேறுகப் பிரித்து பல்வேறு இடங்களில் கூறியிருக்கிறுர். இத்தகைய தப்ஸீரை

நம்மவரில் சிலர் சிறந்த தப்ஸீர் என நம்பி வாங்கிப் படிப்பதாகத் தெரிகிறது. இதைப் படித்தவுடன் காதியானியாகி விடுவோமாவென்றும் அவர்கள் கூறுகின்றார்களாம்? பாஷாணத்தை பந்தோபஸ்தில்லாமல் வீட்டில் வைத்திருப்போமானால் அதற்குப் பயப்படுவது அவசியமல்லவா? இன்று இவர்கள் எச்சரிக்கையாக இருக்கலாம். ஆனால், அதைப்படிக்கப்படிக்க நாளடைவில் அது தன்னுடைய வேலையைச் செய்யக் கூடும். முஹம்மது அலி என்பவர் முஸ்லிம் என்ற போர்வை போர்த்தியவராய் திருகுர்ஆனுக்கு வியாக்யானம் செய்வதாகக் கூறிக்கொண்டு இஸ்லாத்துக்கு விரோதமாகத்தனது யுக்திப்படி அநேக விஷயங்களை வரைந்திருக்கிறார். இவரது ஆங்கிலத் தப்ஸீரை பார்க்கினும் ஜார்ஜ் ஸேல், ராட்வெல் முதலியவர்கள் எழுதிய தப்ஸீரைப் படிப்பது நல்லது என்றுநான் கூறுவேன். ஏனென்றால், இவர்கள் இஸ்லாத்தின் விரோதிகள் என்பதையும், பிற மதத்தார் என்பதையும் கருதி இஸ்லாத்துக்கு விரோதமாக திருக்குர்ஆன் கருத்துக்கு மாறாக இவர்கள் எழுதி வைத்திருப்பதை நம்மவர் நம்பமாட்டார்கள். சோதரர்களே! இஸ்லாமியக் கொள்கைக்கு மாறாக காதியானியத்தைப் பரப்பிவரும் முஹம்மது அலியின் ஆங்கிலத் தப்ஸீர், இம்மாகாணத்தில் அரபி தெரியாத ஆங்கிலம் படித்த ஒருவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுவதாக நான் அறிந்து வருந்துகிறேன். மனிதனுக்கு தரித்திரம் வந்தால் அதற்காக எதையும் செய்யத் துணிவான். விஷயத்தை உணர்ந்தவர் ஒருவர் ஒன்றைச் செய்தால் அவருக்கு உண்மையை உணர்த்தித் தடைசெய்ய முடியும். அரபிப் படிப்பில்லாமல் திர்குர்ஆனிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளாத ஒருவர், சம்பாத்தியத்தின் நிமித்தமாகச் செய்யும் வேலையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதை உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இந்த காதியானிகளின் நூல்களை நம்மவர் வாங்கிப் படிப்பதற்கு நமது வாலிபர்களைமட்டும் குறைகூறமாட்டேன். நம்மீதும் சில குறைகளிருக்கின்றன. நமது வாலிபர்கள் அரபிக் கல்வியைக் கற்றுக்கொள்வதில் அசட்டைச் செய்கின்றனர்; நமது உலமாக்கள் ஆங்கிலங் கற்றுக்கொள்வதை அசட்டை செய்கின்றனர். இதன்பலனாக ஆங்கில பாஷையில் நம் உலமாக்கள் நூல்கள் எழுத முடியாமற்போகின்றது; ஆங்கிலத்தை ஆவலாய்ப் படிக்கும் வாலிபர்களுக்குக் காதியானிகளின் புத்தகங்கள் தான் கண்முன் நிற்கின்றன; அதை அவர்கள் படிக்கிறார்கள். ஆதலால், ஆங்கிலங் கற்கிற வாலிபர்கள் அரபியையும், அரபி கற்கும் ஆலிம்கள் ஆங்கிலத்தையும் கற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

நிற்க, இந்தக் காதியானிகள் ஐரோப்பாவிலும், அந்நிய மதத்தினரிடம், இஸ்லாத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வதாகவும், குறிப்பாக கிறிஸ்தவர்களிடம் மத விவாதம் செய்து அவர்களிடம் ஜெயம் பெற்றுவருவதாகவும் சொல்லிக்கொள்கின்றனர். இக்கூற்றை நம்மவரிற் பலரும் மெய்யென்று நம்புகின்றனர். ஆனால் இதன் அந்தரங்கத்தை யான் இங்கு கூறுவேனாகில் அதன்பின்னர் கிறிஸ்தவர்கள் ஜெயிக்கிறார்களா? காதியானிகள் ஜெயிக்கிறார்களா? என்பதை நீங்களே முடிவுசெய்யுங்கள்.

கிறிஸ்தவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அங்கீகரிப்பதில்லை. இது ஒன்று நீங்கலாக அவர்களுக்கும் நமக்குமிடையிலுள்ள வித்தியாசம் மூன்றுளது.

அதாவது: (1) ஹஜ்ரத் ஈஸா அலை ஹிஸ்ஸலாமவர்கள் தகப்பனின்றிப்பிறந்தார்கள். (2) அவர்கள்சிலுவையில் அறையப்படவில்லை. (3) பிதா, குமாரன், பரித்த ஆவி என்ற திரியேகத் தத்துவக் கொள்கை தவறு என்று முஸ்லிம்களாகிய நாம் கூறுகிறோம். இவைகளுக்கு மாற்றமாய் கிறிஸ்தவர் அவைகளை வற்புறுத்திக்கொண்டிருக்கின்றனர். குலாம் அஹ்மதும், அவரைச் சேர்ந்தவர்களும் ஹஜ்ரத் ஈஸா நபியவர்களுக்கு தகப்பனுண்டு என்று கூறுகிறார்கள். அவர்கள் சிலுவையில் அறையப்பட்டதாகவும், ஆனால் அதில் மரிக்காவிடினும் பின்னர் மரித்துவிட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர். திரியேக தத்துவத்தையும் மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகின்றனர். இப்பொழுது நீங்கள் யோசித்துப் பாருங்கள்! காதியானிகள் இஸ்லாத்தின் தாவாவை வற்புறுத்திக்கிறிஸ்துவர்களை அங்கீகரிக்கச் செய்திருக்கிறார்களா? அல்லது கிறிஸ்துவர்களின் தாவாவை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தின் கொள்கையைக் கைவிட்டிருக்கின்றனரா? என்பதைநீங்களே முடிவுசெய்யுங்கள். திரியேகத்துவத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தைக்கேட்டு நீங்கள் ஆச்சரியமடையலாம். குலாம் அஹ்மது எழுதிய “இஜாலத்

துல் அவ்ஹாம்'' என்ற புத்தகத்தின் 307-வது பக்கத்தைப் படித்துப் பாருங்கள். அதில்,

" எங்களிருவருக்கு மிடையில், (அதாவது, மஸீஹ், குலாம் அஹ்மது) ஆத்ம சக்தியில் ஒரே விசேஷமான சம்பந்தம் இருந்து வருகிறது. இத னுடைய தொடரில் ஒன்று கீழிலும், மற்றொன்று மேலிலும் செல்லுகிறது. இவ்விரண்டும் இடை யரூ அன்பின் காரணமாக சிருஷ்டிகர்த்தாவிலும் சிருஷ்டிப் பொருளிலுமிருந்து உண்டாகி ஆண் பெண் என்ற அந்தஸ்திலிருக்கின்றன. அல்லாஹ் வின்பால் வைக்கும் அன்பு என்னும் கொழுந்து விட்டெரியும்படியான அக்கினியின் காரணமாக வேறொரு வஸ்து உண்டாகிறது. அதற்குத்தான் பரிசுத்த ஆவி அதாவது "ரூஹுல் குதுஸ்'' என்று பெயர். இதற்குத்தான் திரியேகத்துவம் என்ற பரிசுத்த நாமம் சொல்லப்படுகிறது. எனவே, நாங்களிருவரும் இப்னுல்லா என்ற அந் தஸ்திலிருக்கிறோம் என்று சொல்ல முடியும். '' (இஜாலத்துல் அவ்ஹாம்:—307-வது பக்கம்)

"என்னுடைய வேலையானது இப்னிய்யத் என்ற வார்த்தையைக் கொண்டு அழைக்கப்படத் தகுந்ததாக இருக்கிறது.'' (தௌளீ ஹுல் மராம் பக்கம் 201.)

என்று எழுதி வைத்திருக்கிறார். தவிரவும் ஹஜ்ரத் ஈஸா நபியவர்களுக்குப் பல அற்புதங் கள் நிகழ்ந்திருக்க அவருடைய அந்தஸ்திலிருக் கிறதாகக் கூறிக்கொள்ளும் குலா அஹ்மதுக்கும் அற்புதங்கள் நிகழவேண்டுமாதலால் இச்சங் கடத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காக அற் புதச் செய்கையே இல்லை என்று அடியுடன் மறுத்து அவைகளுக்குத் தவறான அருத்தங் களைக் கூறி வருகின்றனர். நண்பர்களே! மேலேகூறியவைகளை ஆழ்ந்து சிந்தித்துப்பார்ப் பீர்களாயின், இவர்கள் ஐரோப்பாவில் இஸ்லாத் தைப் பரப்புகின்றனரா? அல்லது இஸ்லாம் என்று சொல்லிக்கொண்டு கிறிஸ்தவப் பிர சாரம் செய்கிறார்களா? என்பதைத் தெறிந்து கொள்ளுவீர்கள். ஆத்ம ஞானத்வையும் ஆத் மார்த்த விஷயங்களையும் அடியுடன் அறியாமல் இருந்து வரும் ஐரோப்பியரிடம் நபிமார்களின் ஆன்மசக்தியை யுணர்த்தி, அவர்களின் அற்புத நிகழ்ச்சிகளை அங்கீகரிக்கச்செய்து கிரிஸ்தவக் கொள்கைகளை நிராகரித்து இஸ்லாமியக் கொள் கைகளை நிலை நிறுத்துவதே இஸ்லாமியப் பிர சாரமாகும்.

இதுவரை யான்கூறியுள்ள விஷயம் இடையி லேற்பட்ட விஷயங்களாகும். இனி அசல் விஷயத்தைக் கவனிப்போம். அல்லாஹ்வின் வல்லலமையை அறிவித்து "அல்லாஹ் ஒருவன் உளன் '' என்பதை ருஜுப்பிக்கவே அன்பி யாக்கள் இப்பூலகினில் ஜனித்தார்கள். தற் காலமுள்ள ஸைன்ஸுக்காரர்கள் இயற்கை இயற்கை என்று கூறி வந்தாலும் தாங்கள் இயற்கை என்று கூறுவதிலேயே விஷயம் முடி வாய்விடவில்லை என்பதையும், அதற்கப்புற மும் ஏதோ ஒரு சக்தி இருந்துவேலைசெய்து வருகிறது என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கி றார்கள்.

"ஏ! நபியே! நிச்சயமாக நாம் உம்மை எல்லா ஜனங்களுக்கும் பஷீராகவும், (நல்மாரு யம் கூறுபவராகவும்) நதீராகவும் (அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும்) அனுப்பி இருக் கிறோம்.''

என்று இறைவன் கூறியிருக்கிறான். ஆகவே, நாயகமவர்கள் கியாமத்து நாள் வரை உற்பத்தி யாகிற எல்லா ஜனங்களுக்கும் நபியாக இருக் கிறார்கள். அன்றியும், இவர்கள் ஆதம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் உற்பத்தியாகுவதற்கு முன் னிருந்தே நபியாக இருக்கிறார்கள்.

"ஆதம் (அலை) மண்ணுக்கும், ஜலத்துக்கும் மத்தியிலிருக்கும்போதே நான் நபியாக இருந் தேன் ''

என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருப் பது இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. எனவே நாயகம் (ஸல்.) அவர்கள் தான் முதல் நபியாகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார்கள். நாயகமவர்களுக்குப் பின்னர் வேறு யாரும் நபியாக வரவேண்டியதில்லை. வரவும் முடி யாது.

"எனக்குப் பின்னால் 33 தஜ்ஜால்கள் போய் யர்கள் தோன்றுவார்கள். இவர்கள் ஒவ்வொரு வரும் தம்மை நபியெனக் கூறுவர். ஆனால் எனக்குப்பின் நபியே கிடையாது.''

என்ற ஹதீதும் நம்முன் இருக்கிறது. ஆனால் இந்த குலாம் அஹ்மது, தன்மீது முஸ் லிம்கள் செய்யும் ஆக்ஷேபனைகளுக்குப் பதில் கூறமுடியாது நபி என்ற வார்த்தைக்குப் பல வாறு பெயரிட்டு, " லில்லி நபி, புரூஜி நபி '' என்றெல்லாம்கூறி மழுப்பி வந்தார். இந்த இடத்தில என் கவனத்துக்குவரும் சிறிய சம் பவமொன்றை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் பலர் தங்களை நபியென்று தாவாச் செய்ததுபோல் ஒரு ஸ்திரீயும் தன்னை நபியென்று தாவாச்செய்தாள். "லா நபிய்யபஅதீ" நபிகள் நாயகமவர்களுக்குப்பின் வேறு நபி இல்லையே என்று நாயகமவர்கள் கூறிய ஹதீதை அவளிடம் படித்துக் காட்டியதற்கு, அந்த ஹதீதில் ஆண்பாலை அறிவிக்கும் 'நபி' என்னும் பதம்தான் உபயோகிக்கப் பட்டிருக்கிறது; பெண்பாலை அறிவிக்கக்கூடிய "நபிய்யா" என்ற பதம் உபயோகிக்கப் படவில்லை ஆதலின் யான் ஸ்திரீ நபியாக இருப்பதால் நாயகமவர்களின் ஹதீது என்னைக் கட்டுப்படுத்தாது என்று கூறினளாம். அதுபோல் இந்த போலிகள் தங்களை "லில்லி நபி" என்றும் "புருஜி நபி" யென்றும் புதுப்புது பெயரால் அழைத்து வருகின்றனர். தவிரவும்,

"என்னுடைய அஸ்ஹாபுகள் நக்ஷத்திரங்களைப் போலிருக்கிறார்கள். இவர்களில் எவரைப் பின்பற்றுவீர்களானாலும் நேர்வழிபெற்று விடுவீர்கள்."

என்று நாயகமவர்கள் கூறி யிருக்கிறார்கள். அந்த ஸஹாபிகள் திருகுர்ஆனை நாயகமவர்களிடமிருந்து கற்று அதனை நமக்குக்கற்பித்துக் கொடுத்திருக்கின்றனர். ஆகவே குர்ஆன்ஷரீபுக்கு வியாக்கியானஞ் செய்வதாயின் ஹதீதுகளைக்கொண்டே வியாக்கியானஞ்செய்யவேண்டும். அவ்வாறில்லாமல் தனது சுய அறிவை உபயோகப் படுத்தி மனதில் தோன்றியபடி வியாக்கியானம் செய்வது அனர்த்தமாக வந்து முடியும்.

"எவன் தன்னுடைய அறிவைக் கொண்டு திருகுர் ஆனுக்கு வியாக்கியானம் செய்கிறானோ அவன் தன்னுடைய இடத்தை நரகத்தில் எடுத்துக்கொள்வான்."

என்று நாயகமவர்கள் கூறியிருப்பதால் தங்கள் இஷ்டப்படி வியாக்யானஞ் செய்யும் இந்த காதியானிகளின் தப்ஸீர்களை நாம் விடுத்து, ஸஹீஹான ஹதீதுகளைக் கொண்டு வியாக்கியானம்செய்யப்பட்ட தப்ஸீர்களைப் பார்ப்போமாக.

3-வது பிரசங்கம்

(சென்னை முத்தியால் பேட்டை மஸ்ஜித மஅமூர்)

"நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தாம் இறுதி நபி, அவர்களுக்குப்பின் வேறு நபிமார் வரவேண்டிய அவசியமில்லை" என்னும்பொருள் பற்றி கனம்மௌலானா அவர்கள் சொற்பெருக்காற்றினார்கள். அதன் சாரம்வருமாறு:—

கனவான்களே!

"முகம்மதுவானவர் (ஸல்.) உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இல்லை. ஆயினும் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவுமிருக்கிறார். மேலும் அல்லாஹ் எல்லாவஸ்துவையும் நன்கு அறிபவன்"

என இறைவன் தனது திருவேதத்தில், நபித்துவம் முடிந்து விட்டது என்பதை அறிவித்திருக்கிறான். தவிர, "இன்றைத்தினம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைச்சம்பூரணமாக்கிவிட்டேன்; இன்னும் உங்களுக்கு இஸ்லாத்தை சன்மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன்" என்றும் கூறி இருக்கிறான்.

உலகத்தில் முன்னர் எத்தனையோ நபிமார்கள் வந்திருக்கிறார்கள்; பலவேதங்களும் அவர்களுக்கு அருளப்பட்டிருக்கின்றன; ஆனால் அவ்வேதங்களெதிலும் நபித்துவம் முடிந்து விட்டது எனக்கூறப்படவேயில்லை. ஆனால் வரப்போகிற நபியைப்பற்றிய முன் எச்சரிக்கைகளும், நற்செய்திகளும் அந்தவேதங்களில் கூறப்பட்டிருக்கின்றன. திருக் குர்ஆனிலோவெனின், முன்னுள்ள நபிமார்களை உண்மைப்படுத்துவதும், நபித்துவம் முடிந்துவிட்டதற்குரிய பல விஷயங்களும் பற்பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. தவிரவும், மக்களுக்கு வேண்டிய விஷயங்கள் யாவும் தவறாமல் அதில் கூறப்பட்டிருக்கிறது.

"சிறிய விஷயத்தையேனும் பெரிய விஷயத்தையேனும் திருகுர்ஆன் விடவில்லை"

என்று குர்ஆன் ஷரீபே சாக்ஷியங்கூறுகிறது.

இந்த மேற்கோள்களெல்லாம் நமதுமுஸ்லிம் சகோதரர் அங்கீகரிக்கத் தகுந்தவைகளாகும். இதைப் பிறமதத்தவர் ஒப்புக்கொள்ளமாட்டார்களாதலின் அவர்களுக்கு யுக்திப்படிக்கான காரணங்களை எடுத்துக்காட்டவேண்டும். இது சம்பந்தமாக எனக்கும் ஒரு அமெரிக்கருக்கும் நடந்த சம்பாஷணையை இவ்விடத்தில் சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஒருமுறை யான் ஜாவாவிலிருந்து இந்தியாவுக்குக்கப்பலில் வந்துகொண்டிருக்கும்போது, இத்

தகையபிரயாண காலத்திலுங்கூட இவ்வடியேனுக்கு இஸ்லாமியப்பிரசாரம்செய்ய இறைவன் என்றும் சந்தர்ப்பமளித்தே வருகிறான். நான் கப்பலில் செல்லும்போதெல்லாம் ஆங்குள்ளவர்களில் இரண்டொருவரை இஸ்லாத்தில் சேரும்படிசெய்ய அநேகம் முறை சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்தப் பிரயாணத்திலும் அம்மாதிரியே படித்த பல ஐரோப்பியருடன் சம்பாஷணை செய்யச் சந்தர்ப்பங் கிடைத்தது. அவர்களில் ஒருவர், "முந்திய வேதங்களை எல்லாம் அல்லாஹ்தஆலா அனுப்பிவிட்டு இறுதியாக திருகுர்ஆனை அனுப்பியதைப் பார்க்கிலும் திருகுர்ஆனையே ஆரம்பத்தில் இறைவன் வெளியாக்கி இருக்கலாமே!" என்றுகேட்டார். யான் அவரைநோக்கி, "நீங்கள் எந்த தேசம், எந்த இடத்துக்குச்செல்கிறீர்கள்? உங்களதுதொழில் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர், தாம் அமெரிக்கர் என்றும், கல்கத்தாவுக்குச் செல்லுவதாயும், வக்கீல் தொழில் புரிந்து வருவதாகவும் கூறினார். நான் அவரை நோக்கி, "முதல் முதலாக நீங்கள் பள்ளிக்கூடம் சென்றபோது ஏதேனும் ஆரம்பப் பாடப் புத்தகங்களைக் கிழித்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர், "அநேக புத்தகங்களைக் கிழித்திருக்கிறேன்" என்றார். பின்னர் 6, 7-வது வகுப்புகளில் படிக்கிற காலங்களில் புத்தகத்தைக் கிழித்தீர்களா? அல்லது அதில் வேறு எதுவும் செய்தீர்களா? என்று கேட்டேன். அதற்கவர், இல்லை; புத்தங்களைக் கிழித்ததில்லை; ஆனால் அதில் சில நோட்டுகள், ஞாபகக் குறிப்பாக எழுதிவைப்பது வழக்கம் என்றார். பின்னர் "நீங்கள் சட்டம் படித்துப் பட்டம் பெற்ற காலத்தில் சட்டப் புத்தகங்களை என்ன செய்தீர்கள்?" என்றேன். அதற்கவர், "அதைப் பத்திரப்படுத்தினேன்; அதிக ஜாக்கிரதையாக வைத்தேன்" என்றார். உடனே யான், நீங்கள் செய்த இந்தக் காரியம் உலகத்திலுள்ள எவரும் செய்கிற வேலைதான். சிறு பையன், முதல் முதலாக ஸ்கூலுக்கு அனுப்பப்பட்டால் ஒரு வருஷத்துக்குள் 20, 30 புத்தகங்களைக் கிழித்துவிடுவது வழக்கம். இது மனித இயற்கை. அதையே நீங்களும் செய்தீர்கள். இதைப்போலவே உலக நிலைமையு மிருந்து வருகிறது. மனித வர்க்கத்தின் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் நீங்கள் செய்தவேலையின் பிரதிபிம்பத்தைக் காண்பீர்கள். ஆரம்பகாலத்தில் ஹஜரத் ஆதம், ஷீத், நூஹ், இப்ருஹீம் (அலைஹிம்) முதலிய நபிமார்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதாகமத்தை மானிடர்கள் ஒழித்துப் போட்டார்கள்; அவை தவறி விட்டன. பின்னர் மூஸா, தாவூத், ஈஸா முதலிய நபிமார்களுக்குக்கொடுக்கப்பட்ட வேதங்களில், தங்களது யுக்திக்கும் மனப்பான்மைக்கும் எட்டிய விஷயங்களை எல்லாம் மக்கள் சேர்த்து அதைக் குழப்பிவிட்டார்கள். இறுதியாக நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வேதங் கொடுக்கப்பட்ட காலத்தில் மக்கள் நிலைமை பூர்த்தியாகிவிட்டது. ஆதலால் அவ்வேதம் மக்களால் காப்பாற்றப்பட்டுப் பத்திரப்படுத்தப்பட்டது என்று பதில் கூறியதுடன், இந்த வேதம் ஒன்றைத்தான் மக்கள் அப்படியே காப்பாற்ற முன்வந்தனர் என்பதல்ல உலகசரித்திரத்தைக்கூட இந்த 15 நூற்றாண்டுகளாகப் பேணிக்காத்து வருகின்றனர்; இதற்கு முன்னர் மக்களிடம் சரித்திரத்தைக் காப்பாற்றும் உணர்ச்சி இல்லை என்ற விஷயத்தையும் எடுத்துக்கூறினேன். இந்தப் பதிலை அவர் அங்கீகரித்துக் கொண்டார். நிற்க,

நான் நபிமார்களுக்கு முத்திரையானவன் எனக்குப் பின் நபி இல்லை என்றும், யான் பிந்தி வந்தவன்; பிந்தி வந்தவன் என்பது அவருக்குப் பின் நபி இல்லை என்பது பொருள் என்றும் நிச்சயமாக நுபுவத்தும் ரிஸாலத்தும் முற்றுப் பெற்று விட்டன; இனிமேல் நபியில்லை என்றும், நபிகள் நாயகமவர்கள் கூறியதாக அநேக ஹதீதுகள் அறிவிக்கின்றன. இவ்விதமாக நபித்துவம் முற்றுப்பெற்றது என்பதற்கு எத்தனையோ சாக்ஷியங்கள் இருக்கின்றன. விஷயம் இவ்வாறிருக்க, பாரசீகத்தில் பஹாவுல்லாவும், பாஞ்சாலத்தில் குலாம் அஹ்மதும் தங்களை நபியென்றும் புரூஜி நபியென்றும் வில்லி நபியென்றும், விதவிதமான வியாக்யானங்களைக்கூறி கலகப் படுத்தினர். இவர்கள் கூறுவதும் முன்னுக்குப்பின் முரணாகவும் இருக்கின்றன. மக்களுக்கு நேர்வழி காட்ட வந்த வேதத்துக்கு அகமியப் பொருள் கூறுவதாகச் சொல்லிக்கொண்டு தங்கள் மனம் போனவாறெல்லாம் வியாக்யானம் செய்யத் தலைப்பட்டவர்கள் இவர்கள் மாத்திரமன்று, ஹஜ்ரத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் காலத்திலிருந்தே தோன்றிவிட்டனர். இஸ்மாயீலி, இமாமீ என்ற வகுப்பாரின் சரித்திரத்தை நீங்கள் படித்துப் பார்ப்பீர்களானால், யான் கூறுவதற்குள்ள உண்மையான ஆதாரங்களைக்கண்டு கொள்ளுவீர்கள்.

மற்றொரு ஆச்சரியமென்னவென்றால், மிஸ்டர் குலாம் அஹ்மது என்பவர் தம்மை மஸீஹ் என்று தாவாச் செய்கிற இடத்தில் "இன்னீ முத்தவப்பீக" என்ற பதத்துக்கு "நிச்சயமாக நான் உமக்கு வாக்குத் தத்தத்தைப் பூரணமாக நிறைவேற்றுவேன்" என்று கூறியிருப்பதாகப் பொருள் செய்திருக்கின்றனர். இவ்விதப் பொருள் செய்திருப்பதை "பராஹீனெ அஹ்மதீ" என்ற புத்தகத்தில் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு அவர்களே அருத்தஞ் செய்துவிட்டுப் பின்னர் மற்றொரு இடத்தில் "இன்னீ முத்தவப்பீக" என்ற பதத்துக்கு "நிச்சயமாக நான் உம்மை மரிக்கச் செய்வேன்" என்று அருத்தஞ் செய்கின்றனர். பொய்யர்கள் முன்னுக்குப்பின் முரணாகவே பேசுவர் என்பதும், அவர்களுக்கு வெட்கமிருக்கமாட்டாது என்பதும் இதனால் நன்கு விளங்குகிறது.

ஆனால், நபிகள் நாயகமவர்களின் ஜீவிய சரித்திரங்களைப் பார்ப்பீர்களாயின் அதில் முன்னுக்குப்பின் முரண்பாடான விஷயங்களிருப்பதைக் காணமாட்டீர்கள். நாயகமவர்கள் பொய்யுரைத்ததாக அவர்களுடைய விரோதிகளுங்கூடக் கூறுவதில்லை. தவிரவும் நாயகமவர்கள் உலக வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்பதற்கு, அவர்களுக்குப் பரிபூரணமான குர்ஆன் அளிக்கப்பட்டு இன்றுவரை அது பேணிக் காக்கப்பட்டு வந்திருப்பதுடன் அவர்களின் ஜீவிய சரித்திரமும் ஆதிமுதற்கொண்டே பேணிக் காப்பாற்றப்பட்டு வந்திருப்பதே போதிய சான்றாக இருக்கிறது. இந்தக் காலத்தில் ஒருவருடைய போட்டோபடத்தை எடுக்கிறார்கள்; அது அவருடைய வெளிக் கோலத்தை மட்டும் காட்டக்கூடியதாக இருக்கிறது. அப்படத்தைக்கொண்டே உள் கோலத்தை அதாவது அவர்களின் தன்மையை அறிந்துகொள்ள முடியாது. ஆனால் நாயகமவர்களின் இரண்டுவிதக் கோலமும் பரிபூரணமாக நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது. சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள், அதில் உச்சி தொடுத்து உள்ளங்கால் வரை நாயகமவர்களின் அங்க அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹதீது கித்தாபுகளில் நாயகமவர்கள் உட்கார்ந்தது, நின்றது, பேசியது, உபதேசித்தது, நித்திரை செய்தது, தொழுதது, மனைவி மக்களுடன், உறவினருடன் கூடிப் பேசியது முதல் சகல விஷயங்களும் ஒன்றுகூடவிடாமல் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எழுதி வைக்கப்பட்டதும் மிகவும் முன் ஜாக்கிரதையாகச் செய்யப்பட்டிருக்கிறது. நாயகமவர்களைப்பற்றி ஒரு ஸஹாபி ஒரு விஷயத்தைக் கூறினால் அவர் ஸஹாபியாக இருந்தாரா? எந்த இடத்தில் நாயகமவர்கள் இதைக் கூறினார்கள்? அப்பொழுது வேறுயாரும் கூட இருந்தாரா? அவ்வாறு கூட இருந்தவர் இவ் விஷயத்தைப் பற்றி என்ன சொல்லுகிறார்? இந்த ரிவாயத்தைக் கூறியவரின் தன்மை என்ன? அவருடைய ஞாபகசக்தி எவ்வாறிருந்தது? என்பன போன்ற விஷயங்களெல்லாம் கவனிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸஹாபிக்கு மாத்திரமல்லாமல் தாபிஈ, தபஅத்தாபிஈன்கள் முதலிய சகலரிடத்திலும் கவனிக்கப்பட்டு வந்தது. இந்த இடத்தில் இமாம் முஹம்மது இஸ்மாயீல் புகாரீ (ரஹ்.) அவர்களின் சரித்திரத்திலிருந்து ஒரு உதாரணத்தைக் கூறுகிறேன்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஹதீதுகளை ஒன்று திரட்டி எழுதி வைத்தவர்களில் இந்த இமாம் அவர்கள் முக்கிய ஸ்தானத்திலிருக்கிறார்கள். நபிகள் நாயகமவர்களைப்பற்றி ஒருவர் ஒரு ஹதீதைக் கூறுவதாகக் கேள்விப்பட்ட இந்த இமாம் அவர்கள், அந்த ஹதீதை அவரிடமிருந்தே நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தால் பல நாட்கள்வரை கால்நடையாகக் காடுவனாந்தரங்களைக் கடந்துசென்று அவரிருக்கும் ஊருக்கு வந்தார்கள். வந்தவுடன் தாங்கள் கோரிவந்த விஷயத்தை நேரிலேயே அந்தமனிதரிடம் சொல்லாமல், வேறு மனிதரிடம் அவர் யார்? எங்கிருப்பவர்? என்ற விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டபின் அவரிடம் சென்றார்கள். அந்தச் சமயத்தில் அவர், கட்டவிழ்த்து காட்டில் மேய்ந்துகொண்டிருந்த தமது குதிரையை, அதற்கு கொள்ளுவைக்கிற ஒருபையை கையில் வைத்துக்கொண்டு கூப்பிட்டுக் கொண்டிருந்தார். இமாம்புகாரீ (றஹ்) அவர்களை இன்னார் என்று அவர் தெரிந்துகொள்ளாவிட்டாலும் தம்மை விசாரித்துக்கொண்டு தம்மிடம் வருவதை மாத்திரம் இவர் உணர்ந்திருந்தார். ஆனால் இமாம் அவர்கள் அவரிடம் சென்று அவர் கையிலிருந்த பையை உற்றுப் பார்த்தார்கள். அதில் கொள்ளு வகையறா எதுவுமில்லாமல் வெறும் பையாக இருப்பதைக் கண்டு உடனே அவ்விடத்தைவிட்டு அகன்று, வந்த

வழியே செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இதைப் பார்த்த அந்த மனிதர் இமாம் புகாரீ அவர்களைப் பின்தொடர்ந்து சென்று சலாம் சொல்லி நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? என்னை விசாரித்துக்கொண்டு வந்த நீங்கள் ஒன்றும்பேசாமல் திரும்பிவிட்டீர்களே அதற்குக் காரணம் என்ன? என்று விசாரித்தார். அதற்கு இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் "எனதுபெயர்" "முஹம்மது இஸ்மாயீல் புகாரீ" யாகும். நாயகமவர்களைப்பற்றி ஏதோ ஒரு ஹதீதைத் தாங்கள் ரிவாயத்துச் செய்வதாக யான் கேள்விப்பட்டு அதைத் தெரிந்துகொள்ளுவதற்குக் கால்நடையாகக் காடுவனந்திரங்களைக் கடந்துவந்தேன். தாங்கள் வாயில்லாப் பிராணியான குதிரையிடம் வெறும் பையைக் காட்டி ஏமாற்றுவதைப்பார்த்துப் வாயில்லாப் பிராணியை ஏமாற்றுபவர், அல்லாஹ் விஷயத்திலும், மனிதர் விஷயத்திலும் ஏமாற்றப் பின்வாங்கமாட்டார் எனக்கருதி தங்களிடமிருந்து நாயகமவர்கள் ஹதீதைக்கேட்க எனக்கு இஷ்டமில்லை யாகையால் நான் திரும்ப ஊருக்குச் செல்லுகிறேன்" என்று மறுமொழி கொடுத்துச் சென்றுவிட்டார்கள்.

என்னே நாயகமவர்களின் ஹதிதுகளை எழுதி வைத்த இமாம்களின்பேணுதல்? சகோதரர்களே! யான் இம்மாதிரியே எத்தனையோ விஷயங்களை ஆதாரமாக எடுத்துக்கூற முடியுமாயினும், என்னுடைய சுகவீனம் இதற்குமேலும் பேச அனுமதிக்கவில்லை யாதலால், என்னை மன்னியுங்கள்! என்று கூறித் தமது பிரசங்கத்தை இரவு $11\frac{1}{2}$ மணிக்கு முடித்துக்கொண்டார்கள்.

4-வது பிரசங்கம்

(சென்னை லாலி ஹால்)

கனம் மௌலானா அவர்கள், "அகில உலக மதம் யாது" என்னும் பொருள்பற்றி அரியதோர் பிரசங்கம் புரிந்தார்கள். அதன் சாரம் வருமாறு:—

சோதரர்காள்!

இன்றைக்கு மேனாடெங்கும் 'மெடீரியலிஸ்டிக்' கொள்கையே தலைசிறந்து நிற்கின்றது. மெடீரியலிஸ்டிக் பௌதீகக் கொள்கையென்பது செல்வம், தனம் இவையே கடவுள் என்பதாகவும், செல்வம், தனம் இவைகளைத் தவிர கடவுள் வேறுண்டு என்ற சிந்தையே இல்லாமல் நடக்கும் கொள்கையையே மெடீரியலிஸ்டிக் கொள்கையெனவும் அழைக்கப்படுகின்றது. இத்தகைய கொள்கையைப் பின்பற்றி நடப்போர் மார்க்கமென்றால் முழம் என்ன விலையென்று கேட்கிறார்கள். மார்க்கமென்பது இன்னதென்பதே இவர்களுக்குத் தெரியாதாகையால் தங்களுடைய வாழ்க்கையின் ஒரு நிமிஷ நேரமேனுங்கூட இவர்கள் மார்க்கத்தில் கவனஞ்செலுத்துவது கிடையாது.

உலகில் இன்று அன்டிரிலிஜனிஸ்டு (நாஸ்திகக்) கொள்கையே அதிகமாகப் பரவி நிற்பதால் இன்றைக்கு உலக மக்களிற் பலர் மார்க்கமென்னும் ஒரு விஷயம் கிடையாதெனவும், அது அவசியமில்லையென்றும் கூறுகிறார்கள். மேனாட்டிலோ இன்றைக்கு மதம்வேண்டாம், மார்க்கம் வேண்டாம், மனித வாழ்க்கை உலகில் நடத்துவதற்கு மதம் என்பது தேவையேயில்லை என்னும் அபிப்பிராயம் பலமாக இருந்து வருகிறது.

மற்றோர் பகுதியினரோ, தாங்கள் ஏதோ ஒரு மார்க்கத்தைச் சேர்ந்தவர்களென்று கூறிக்கொள்கின்றனர். ஆனால் இன்னோர் தங்கள் மூதாதையர்கள் பின்பற்றி நின்ற மார்க்கத்தைப் பின்பற்றி நிற்பது தவிர அம்மார்க்கத்தைக் குறித்து ஒரு நிமிஷங்கூட விசாரணை செய்வது கிடையாது. எனவே, ஏதோ பெயரளவில் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றியவர்களாக இருந்து வருகிறார்கள். ஆனால் தாங்கள் பின்பற்றும் மார்க்கத்தைக் குறித்து இதரர்கள் என்ன கூறுகிறார்கள்; அதனை இதரர்கள் எவ்விதம் தாக்குகிறார்கள்; எவ்வாறு இழிவுபடுத்துகிறார்கள் என்பதில் சற்றேனும் கவலை காட்டுவது கிடையாது. தங்கள் மூதாதையர்கள் ஏதோ ஒரு மார்க்கத்தைப் பின்பற்றினார்கள்; அவர்கள் சந்ததியார்களாகிய நாமும் அதைப் பின்பற்ற வேண்டுமென்பதாக எண்ணிக்கொண்டு எவ்வித விசாரணையுமின்றி கண்மூடித்தனமாகத் தங்கள் மூதாதையர்கள் பின்பற்றியிருந்த மதத்தில் இருந்துவருகிறார்கள்.

உலக மக்களின் தற்கால நிலைமையைக் காணுவோமாயின் மக்களை மூன்று பிரிவினர்களாக வகுக்கலாம்.

(1) உலகிலுள்ள எல்லாப் படைப்புகளும், எல்லா சிருஷ்டிகளும், உலகில் காணப்படும்

சகல பொருள்களும், மனிதன் அதினின்றும் பிரயோசனம் அனுபவித்துக் கொள்ளுவதற்காகப் படைக்கப்பட்டுள்ளனவென்று ஒரு கோஷ்டியார் கருதுகின்றனர். இன்னோர் மனிதன் உலகில் படைக்கப்பட்டதன் நோக்கமெதுவும் இருப்பதாக எண்ணுவதே கிடையாது. உண்டு உடுத்துவதும், உல்லாசமாகக் காலங் கழிப்பதுமே மனிதன் உலகில் படைக்கப்பட்டதன் நோக்கமென இவர்கள் எண்ணுகின்றனர்.

(2) மற்றோர் கூட்டத்தினரோ, உலகிலுள்ள யாவற்றும் அழியக்கூடியதா யிருப்பதால் அவைகளிலெதுவின் மீதும் பற்றுதல் வைக்கக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டு உலகை விட்டு தூரவிலகி நின்று தனியே மலைமீது உட்கார்ந்து ஜெபிக்க முற்பட்டனர். இன்னோர் மரங்களினடியில் உட்கார்ந்து தங்களுடல்மீது புத்து விளையும்படியாக ஜெபித்துக்கொண்டிருக்கின்றனர்; உண்ணாமலும் அருந்தாமலும் கானகத்திலும், மலைமீதும் தனியே உட்கார்ந்து தபம்புரிய ஆரம்பித்தனர். சுவாசம் வாங்குவதுகூட அழியக்கூடிய வஸ்துக்களை அனுபவிப்பதாகுமென இவர்களுக்குக் கூறப்பட்டதால் சுவாசம் வாங்குவதையுங்கூடவிட்டு மூக்கில் பஞ்சு வைத்து அடைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். சரீரம் அழிந்துபோகக்கூடியதுதானே, அதை ஏன் வளர்க்கிறீர்கள் எனக் கூறப்பட்டதன்மேல் அதையும் அழித்துவிடத் துணிந்து மலைமீது ஏறிக் கீழேவிழுந்து உடலை நாசமாக்கிக் கொண்டார்கள். வேறு சிலர் கடலில்விழுந்து இறந்தார்கள். இவர்களுடைய போக்கைப் பின்பற்றுவதாக உலகம் இன்று முடிவுசெய்யுமாயின் சில நூற்றாண்டுகளுக்குள் உலக முழுதும் அழிந்து நாசமாகிவிடும். ஆகவே, இவ்விருகூட்டத்தினரும் தங்கள்போக்கில் எல்லை கடந்தவர்களாக இருக்கிறார்கள்; தங்கள் கொள்கையில் ஹத்து மீறியவர்களாக இருக்கிறார்கள்.

இவ்விரு கூட்டத்தினர்களுக்குமிடையே இருக்கும் மூன்றாவது கூட்டத்தினர் உலகை வெறுக்காமல், உலகிலுள்ளவைகளைத் தங்களுக்காக உபயோகித்துக் கொள்கிறார்கள். இப்படி உபயோகித்துக்கொள்வதில் எல்லைமீறி செல்வது கிடையாது. இப்பொருள்களைத் தங்களுக்குக் கொடுத்துதவும் சக்தியை (ஆண்டவனை) இன்னோர் மறப்பதில்லை. இப்பொருள்களையெல்லாம்—உலகிலுள்ள சிருஷ்டிகளையெல்லாம் அல்லாஹுதஆலா தங்களுக்காக ஏன்படைத்து வைத்தான் என்பதை உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ளுகிறார்கள். இவர்கள் மேலே கூறப்பட்ட இரு கூட்டத்தினர்களுக்கு நடுவே நிற்கிறார்கள். இவர்களுடைய கொள்கை "படைத்தான் படைப்பை யெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னைவணங்க" என்பதாகும்.

உலகில் காணப்படும் பொருள்களைப் படைத்தவன் ஒருவன் இல்லையென எவரும் கூற முடியாது. ஏனெனில், ஒருவரும் இப்பொருள்களை இதுவரை சிருஷ்டி செய்துவைக்க முடியவில்லை. பிரபஞ்சத்தில் காணப்படும் பொருள்களையெல்லாம் படைப்பவன் ஒருவன் இல்லையென்று கூறப்படுமாயின், அதை ருசுப்பிக்க முடியாது. இவைகளைப் படைத்தவன் ஒருவன் இல்லையென்றுகூறிவிடுவது பெரும்பொறுப்பை ஏற்கும் விஷயமாகும். இத்தகைய தொல்லையைத் தவிர்த்து நிற்க விரும்புவோர் அப்பொருள்களைப் படைத்த சக்தி ஏதோ ஒன்றுளது, அதை நாம் உணர முடியவில்லையெனக் கூறுகின்றனர்.

இவர்கள் உணர முடியவில்லையென்று கூறுவதைத்தான் நாம் "அல்லாஹ்" வென்றழைக்கின்றோம்.

மனிதன் இன்றைக்கு என்னென்னமோ கண்டுபிடித்துள்ளதாக பெருமை பாராட்டிக் கொள்ளுகிறான். மனிதனுடைய அறிவும், சக்தியும் பூர்த்தியடைந்துள்ளதாகவோ அல்லது மனிதனுக்கு எல்லாம் தெரியுமென்றோ ஒருவரும் மார்தட்டிக் கூறமுடியாது. சந்திரமண்டலத்தில் இன்னதிருக்கிறதென்று கண்டுபிடிக்க இன்று எத்தனையோ முயற்சிகள் நடைபெறுகின்றன. வடதுருவம், தென்துருவம் இவைகளைக் கண்டுபிடிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. ஹிமாலயத்தின் சிகரத்தை அடைவதற்கு முயற்சிகள் நடந்துவருகின்றன. இந்நிலைமையில் மனிதனுடைய அறிவு பூர்த்தியடைந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை. மனிதனுடைய புத்திக்கு எட்டாதது பல இருப்பதை ஒப்புக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதுபோல், மனித புத்திக்கு எட்டாத நிலைமையில் அல்லாஹுதஆலா இருக்கிறான் என்பதை மனிதன் ஒப்புக்கொள்ள நிர்ப்பந்தமடைந்துள்ளான். மனிதனுடைய சக்திக்கு எட்டாத சக்தி ஒன்றுள்ளது என்பதை அதிக சிரமமில்லாமல் ரூபிக்கலாம். 'எலக்டிரான்ஸ்'

என்று அழைக்கப்படும் மின்சார சக்தி எவ்வாறு உண்டாகிறதென்பதை ஒருவரும் இன்று வரை விளக்க முடியவில்லை. மனிதன் மின்சார சக்தி ஏற்படும்படிச் செய்கிறான்; ஆனால் இச் சக்தி எப்படி ஏற்படுகிறதென்பதைத் தான் விளக்கமுடியவில்லை. இப்படி விளக்க முடியாமல் இருக்கும் சக்தியைத்தான் நாம் 'அல்லாஹ்' வெனக்கூறுகிறோம்.

கௌதமபுத்தர், கடவுள் இருப்பதாகக் ருஜூப்பிக்க முடியாததால் கடவுள் இருப்பதாகக் கூறமுடியாதெனச் சொன்னார். ஆனால் அவரும் தன்னை அறியாமலுள்ள ஏதோ ஒரு சக்தி இருக்கிறதென்றும், இச்சக்தி தனக்குக் கூறுவதைத் தான் உலகிற்குத்தாம் அறிவிப்பதாகவும் கூறியுள்ளார். ஆகவே புத்தர் தனக்குத் தெரியாமல் இருப்பதாக கூறிய சக்தியைத்தான் நாம் 'அல்லாஹ்' வென்று அழைக்கிறோம்.

ஜாரதுர்ஷ்டரும் இவ்வாறே தான் கூறியுள்ளார். அன்னோர் வேதங்கள்கூட மனிதனால் இயற்றப்பட்டவைகளல்லவென்றும், ஏதோ ஒரு சக்தி கூறியதைக்கொண்டு இயற்றப்பட்டதென்றும் கூறுகிறார்கள். இச்சக்தியைத் தான் நாம் 'அல்லாஹ்' வென்று கூறுகிறோம்.

ஞான உதிப்புப் பெறும் பெரியார்கள் பலர் இருந்தனர்; பலர் இருக்கின்றனர். ஆனால் வஹீபெறும் நபிமார்களோ அல்லது ரசூல்மார்களோ இப்போது கிடையாது; இனி வரப் போவது மில்லை.

இப்போது யாருக்கேனும் வஹீ வருவதாக யாரேனும் கூறத்துணிவானாயின், அவன் குற்றவாளி யாகிவிடுகிறான். பட்டம் பெறாத மனிதனொருவனை கான்பஹாதுர் பட்டத்துடனோ, அல்லது கே. ஸி. ஐ. ஈ. பட்டத்துடனோ அழைத்தால், அவ்வாறு அழைத்தவன் குற்றவாளி யாகின்றான். அதுபோலவே நபியல்லாத ஒருவரை நபியென அழைப்பதுகொண்டு நீங்கள் குற்றவாளி யாவீர்கள். அந்தந்தக் காலத்திற் கேற்றவாறு தலைவர்கள் ஏற்படக்கூடும். ஆனால் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் வேறுநபி கிடையாது. ஏன் கிடையாதெனில், நபிமார்களின் அவசியமில்லாது எல்லாம் நாயகம் (ஸல்.) அவர்களால் பூர்த்தியாக்கி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பூர்த்தியாக்கி வைக்கப்பட்டுள்ள மார்க்கந்தான் "இஸ்லாம்" மார்க்கமாகும். பூர்த்தியாக்கப்பட்ட மார்க்கமென்பதற்கு 3 விஷயங்கள் அவசியம். (1) தௌஹீத், (ஏகத்துவக்கொள்கை) (2) இல்ஹாமி கிதாப், (தேவ அருள்வேதம்) (3) நபி. இம் மூன்றும் இஸ்லாம் மார்க்கத்தில் அமைந்துள்ளன.

இன்றைக்கு உலகம் முழுவதும் இந்த பூர்த்தி யடைந்த மார்க்கத்தை அறிய ஆவல் கொண்டதாகக் காணப்படுகிறது; இஸ்லாமென்னும் அமிர்தத்தைப் பருக தாகவிடாய் கொண்டவர்களாகப் பலர் அலைகின்றனர்.

இஸ்லாத்தின் ஒளியைக் காண பலர் தேடித் திரிகின்றனர். ஆனால் தாகவிடாய் தீர்ப்பவர்களும், இருளில் அலைபவர்களுக்கு விளக்குப் பிரகாசம் காட்டி நேர்வழியில் செல்லச் செய்பவர்களுந்தான் தற்போது ஏராளமாகத் தேவை.

வழி காட்ட விரும்புகிறவர்கள், கல்வி நிறைந்தவர்களாகவும் நல்ல அமல் செய்பவர்களாகவும், பொறாமை, துவேஷம், விரோதம் முதலிய இழி குணங்களை ஒழித்தவர்களாகவும் இருக்க வேண்டும். இத்தகைய ஸாலிஹீன்கள் இஸ்லாமியப் பிரசாரத்திற்குப் புறப்பட்டால் வெகு சீக்கிரத்தில் உலகில் இஸ்லாம் தலைசிறந்து விளங்குவதைக் காணலாம்.

ஆகவே, நான் முன்னர் கூறிய மூன்று வகையினரில் இரு வகைக் கூட்டத்தினரின் கொள்கைகளும், நடை முறைகளும் பொதுவாக உலகத்தினர் யாவரும் பின்பற்றி நடக்க சாத்தியமானவைகளும் சாதகமானவைகளுமாகா. மூன்றாவதாகக் கூறிய மத்தியக் கூட்டத்தினரின் கொள்கையும், நடை முறையும் உலகினர் அனைவரும் அனுஷ்டிக்க சாத்தியமானவைகளும், சாதகமானவைகளுமாகும். அம்மத்தியக் கூட்டத்தினரின் கொள்கையே இஸ்லாமியக் கொள்கையாகும். அவர்களுடைய மதமே இஸ்லாமிய மதமாகும். அம்மதமே உலக பொதுமதமாக இருக்க சாத்தியமாகும். ஆகவே, இம்மூன்றும் வகுப்பாரின் கொள்கையே நீங்கள் பின்பற்றி நடக்க வேண்டும்.

5-வது பிரசங்கம்

(சென்னை பெரியமேட் மஸ்ஜித்)

மௌலானா அவர்கள், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதேன்? மனிதனின் கடமை யாது? என்னும் பொருள்பற்றி அரிய பிரசங்கம் செய்தார்கள். அதன் சாரம் வருமாறு:—

நேயர்காள் !

"மானிடன்மீது ஒருகாலம் நிச்சயமாக வந்திருந்தது. அந்தக் காலத்தில் அவன் பிரஸ்தாபிக்கப்படத்தக்க வஸ்துவாக இருக்கவில்லை. நிச்சயமாக நாம் மனிதனைக் குதிக்கும்படியான இந்திரியத் துளியிலிருந்து சிருஷ்டித்தோம். பின்னர் அவனை கேட்கக் கூடியவனாகவும் பார்க்கக் கூடியவனாகவும் ஆக்கினோம். நிச்சயமாக நாம் அவனுக்கு வழியைக் காண்பித்து விட்டோம். எனவே அவன் (நேரான வழியைப் பின்பற்றி) நன்றி யுள்ளவனாக ஆக்ட்டும் ! அல்லது நன்றி கெட்டவனாக ஆகட்டும்!"

மனிதன் தனக்கு அறிவுவந்தவுடன் எல்லாவற்றிற்கும் முதலில் தான் யார் ? எங்கிருந்து வந்தவன் ? எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டவன் ? தன்னுடைய அலுவல் யாது ? என்ற விஷயங்களைச் சிந்தித்துப் பார்க்க அவன் கடமைப்பட்டிருக்கிறான். இவ்வாறு உலகத்திலுள்ள சகல பொருள்களையும் பார்த்துச் சிந்திப்பதற்காகவே நேத்திரங்களையும், தொனிகளைக் கேட்பதற்காகச் செவிகளையும் இறைவன் அளித்துள்ளான். இவ்வாறு தெரிந்து கொள்ளும் விஷயத்தில் மானிடனைச் சோதிப்போம் என்று அல்லாஹுதஆலா கூறி இருப்பதற்கேற்ப, மனிதன் தன்னை அறிந்துகொள்வது, அவனுக்குப்பெரும் சோதனையாக இருக்கிறது. பெரியபெரிய தத்துவ சாஸ்திரிகளாகவும், விஞ்ஞான வல்லுனர்களாயும், அந்த சாஸ்திரங்களுக்கு அஸ்திவாரமிட்டவர்களாகவும் உள்ள மேதாவிகளும், அறிஞர்களுமான யூம், எக்ஸ்லே போன்றவர்களெல்லாம் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஒன்றும் இயலாதவர்களே ஆகிவிட்டனர். தவிரவும் கிரேக்க தத்துவவிற்பன்னரான "அரஸ்து" தம்முடைய மரணகாலத்தில் "மனித ! உன்னையே நீ உணர்ந்து பார்" என்று தம்முடைய வீட்டுச் சுவற்றில் எழுதி வைத்துச் சென்றார்.

மனிதனிடத்தில் இரண்டுவகைப் பொருள்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று அவனுடைய ஸ்தூல தேகம். மற்றொன்று அவனுடைய ஆத்மா. முதலாவது ஸ்தூல தேகத்தை கவனிப்போம். தற்காலத்திலுள்ள ஸர்ஜன்களும், டாக்டர்களும் மனித தேகத்தை ஆப்ரேஷன் செய்கின்றனர்; தங்கள் மூளைமுழுவதையும் செலவிட்டு ஒவ்வொரு அங்கம் அங்கமாக ஆராய்ந்து பார்க்கின்றனர். ஆனால் மனிதனுடைய பார்வை, கேள்வி, ஸ்பரிச உணர்ச்சி, ருசி அறியும் தன்மை, நடத்தல், பிடித்தல், சுகம், துக்கம் ஆகியவைகள் இருப்பதைத்தான் தெரிந்துகொள்ள முடிந்ததே அன்றி, அவை எவ்வாறு ? எதனால் ? எப்படி ? உண்டாகின்றன என்பனபற்றி இன்னும் யாரும் தெரிந்து கொள்ள முடியவில்லை. கண்களுக்குப் புலப்படக் கூடியதாக இருக்கிற ஸ்தூல விஷயரகசியமே சாஸ்திர நிபுணர்களுக்கு எட்டாமலிருக்கும் போது, ஐம்புலன்களுக்கும் எட்டாத ஆத்மாவைப் பற்றிச்சொல்லவும் வேண்டுமோ ? இவ்வித நிலைமையில் இவைகளை உணர்த்துவதற்கு ஒருவன் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவனும் மனிதனைச் சரியாக உணர்ந்தவனாக இருக்க வேண்டும். இப்போது நான் குறிப்பிடுகிற அந்த ஒருவன்தான் அல்லாஹ். அவன் தான் நம்மைச் சிருஷ்டித்தவன். சிருஷ்டித்தவனுக்குத் தான் சிருஷ்டிப்பொருளிலுள்ள உண்மையான-யதார்த்தமான தன்மை நன்கு தெரியும். ஆகவே நாம் அவன் கூறுவதிலிருந்து தான் நம்மை அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"வானம் பூமி ஆகியவைகளிலுள்ள எல்லா வஸ்துவையும் மனிதனுக்காக நாம் சிருஷ்டித்திருக்கிறோம்" என்று அவன் நமக்குக் கூறியுள்ளான். இதனால் படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக என்பதை உணர்ந்து கொள்ளுகிறோம். "மனிதனையும் ஜின்னையும் என்னை வணங்குவதற்காக அன்றி சிருஷ்டிக்கவில்லை" என்று இறைவனே கூறியிருக்கிறான். ஆகவே நாம் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பதையும், நம்மைச் சிருஷ்டித்தது அவனை வணங்குவதற்காகத்தான் என்பதையும், உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும் நமது உபயோகத்துக்குத் தான் என்பதையும் தெரிந்து கொள்ளுகிறோம். நம்முடைய உபயோகத்துக்குத்தான் உலகப் பொருள்கள் இருக்கின்றனவெனின், அவைகளை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதையும் அவ்விறைவனே நமக்கு வழி காட்டியுள்ளான். அதை அவன் வழி காட்டவில்லையாயின் அதையும் நாம் உணர்ந்து கொள்ளமுடியாது.

என்னுடைய சகோதரர் மத்திய ஆப்பிரிக்காவில் 'இஷாஅத்துல் இஸ்லாம்' செய்வதற்காகச் சென்றிருந்தார். யானும் அவருடன் சென்றிருந்தேன். நாங்கள் போகும்போது இஸ்லாமிய

உடைகளை நூற்றுக்கணக்காகத் தயாரித்து எங்களுடன் கொண்டு செல்வது வழக்கம். உடைகளை அணிந்துகொள்ள வழக்கமில்லாதவர்கள் அங்கு இஸ்லாத்தைத் தழுவினார்கள். நாங்கள் கொண்டு சென்ற உடைகளை இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு உடுத்திக்கொள்ளும்படி கொடுத்தோம். உடைகளை அணியும் வழக்கம் அவர்களில் கிடையாதாகையால் அவர்களில் சிலர் கால்சிராயை தலை வழியாகவும், சட்டைகளை கால் வழியாகவும் போட ஆரம்பித்தார்கள். உடனே நாங்கள் அவர்களுக்கு அவ்வுடைகளை அணிந்து கொள்ளும் விதத்தை காட்டிக்கொடுத்த பின்னரே அவர்கள், உடைகளை யணிவது இன்ன விதமென்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. மடகாஸ்கரிலுள்ளவர்கள் இன்னதுதான் சட்டையென்றும், வேஷ்டியென்றும், கால்சிராயென்றும் உணர மாட்டார்கள். கித்தானைப் போலுள்ள ஒருவகைத் துணியை சட்டை போல் உடலெங்கும் போர்த்திக்கொண்டு கை கால்களுக்கு அந்தந்த இடத்தில் துவாரம் செய்து விடுகிறார்கள். ஆகவே, ஆணென்றும் பெண்ணென்றும் வித்தியாசமில்லாது யாவருக்கும் சட்டையும், கால்சிராயும் ஒரேவிதமான உடையாக இருந்துவருகிறது. அவ்விதமாக நாகரீகமற்றிருக்கிறவர்களிடத்தில் "உன்னைப் படைத்தது யார்" என்று கேட்டால் அவர்களும் வானத்தின் பக்கமாக விரலை உயர்த்திக் காட்டி "போயா, போயா" என்று கூறுகின்றனர்.

ஹஜ்ரத் மூஸா நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் இஸ்ரவேலருக்கு நேர்வழி காட்டுவதற்காக தௌராத்வேதம் பெற்றுவந்த நபியாக இருந்தார்கள். இவர்கள் காலத்தில் கல்வி அறிவு என்பதே சிறிதும் இல்லாத ஆட்டிடையனொருவன் காட்டிலிருந்து கொண்டு, "என்னிடம் நீ வரப்படாதா? உனக்குப் பால் கறந்து தருவேனே! உன்னுடைய மேலை அமுக்கி விடுவேனே! உன் கூந்தலைச் சிக்கெடுத்து சீவி அலங்கரித்து விடுவேனே! நீ வியாதிப்பட்டிருப்பாயாகில் உன்னைப் பாதுகாத்து வைத்திய உதவி செய்வேனே" என்று புலம்பிக்கொண்டிருந்தனன். அவ்வழியே சென்ற மூஸா நபியவர்கள் அவன் புலம்புவதைக் கேட்டுக்கொண்டே யிருந்து, "மனித! நீ யாரிடம் இதையெல்லாம் கூறுகிறாய்; யாரிடம் சம்பாஷணை செய்கிறாய்?" என்று வினவினார்கள். அதற்கு அவன், "சகல வஸ்துக்களையும் படைத்தவனிடம் பேசுகிறேன்" என்று பதில்கூறினான். உடனே, மூஸா நபியவர்கள், "இம்மாதிரி கூறுவது குற்றம்; அவனுக்கு அன்னம் தண்ணீர் ஒன்றும் வேண்டியதில்லை; அவன் சர்வசக்தன்; அவனுக்கு அசதியோ, அலுப்போ, நோயோ வராது" என்றுகூறி அவனை எச்சரிக்கைசெய்தார்கள். இதைக் கேட்டவுடன் அவனுக்குப் பயமும் வருத்தமும் உண்டாகி அவனது மனம் சிதறுண்டு அந்த இடத்தைவிட்டு ஓடினான்; கானகம் புகுந்தான்; ஒரே நிலையில் சமாதி கொண்டான். உடனே இறைவன் மூஸா நபியவர்களுக்கு வஹீ மூலமாக,

"ஓ! மூஸாவே! என்னிடம் நெருங்கியிருந்த ஒரு அடியானை என்னை விட்டும் நீ துரத்தி விட்டனையே."

என்று அறிவுறுத்தினான். உடனே மூஸா நபியவர்கள் அவனைத் தேடிக்கொண்டு சென்று கானகம் புகுந்து அவனைக் கண்டுபிடித்து அழைத்தபோது அவனுக்குப் பேச்சு மூச்சு ஒன்றுமே இல்லாதிருந்தது.

ஆகவே, இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வதென்னவென்றால், தன்னையும் உலகத்தையும் பார்த்துத் தலைவனை உணர்ந்துகொள்ளுவதற்காக அவன் நேத்திரத்தையும் செவியையும் கொடுத்திருக்கிறான்; அதை அவ்விடையன் சரியாக உபயோகித்துப் படைத்தவனைத் தெரிந்து கொண்டிருந்தான்; இந்தக் காலத்தில் சாஸ்திரங்களைக் கற்று டிக்ரீ பெற்று தன்னைச் சிருஷ்டித்ததையும், சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வையும் உணர்ந்துகொள்ளாமலிருப்பவர்களைப் பார்க்கினும் அவ்விடையன் அறிவில் சிலாக்கியமானவனென்பதைநீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்; அவ்வாறு சிருஷ்டிப்பவன் அல்லாஹ் என்பதற்கு அல்லாஹ்வே உலகில் பல அத்தாட்சிகளையும் ஏற்படுத்திபிருக்கிறான் என்பதே, எனவே,

"ஒவ்வோரு வஸ்துவிலும் அவன் ஒருவன் தான் என்பதற்கு அத்தாட்சி இருக்கிறது" என்று சொல்லப்படுகிறது. இதையே இறைவன் "நிச்சயமாக பூமியையும் வானங்களையும் சிருஷ்டித் ததிலும் காற்றுக்களை வீசும்படி செய்வதிலும் புத்தியுள்ளவர்களுக்குத் திருஷ்டாந்தமிருக்கிறது" என்று கூறியுள்ளான். இதையே புத்தியுள்ளவர்கள் ஆராய்ந்து பார்த்து "எங்கள் றப்பே! உன்னை துதிக்கிறோம்

இதை நீ வீணுக்காகச் சிருஷ்டிக்கவில்லை. உன்னை நாங்கள் துதிக்கிறோம். எங்களை நெருப்பின் வேதனையை விட்டுக் காப்பா யாக!''

என்றுபிரார்த்திக்கிறார்கள். புத்தியுள்ளவர் கள் அதன்படிநடக்கிறார்கள். அவர்களே உண் மையில் புத்திமான்களாவர். ஆனால் விதண்டா வாதிகள் தங்களை நபியென்றும், அல்லாஹ் வென்றும், மஸீஹென்றும் பற்பலவாறு பிதற் றுகின்றனர். சொற்ப அறிவைப் பெற்றுக் கொண்டவுடன் நான் தான் கடவுள் என்றும் எல்லாம் இயற்கையிலே உண்டாகின்றன என் றும் கூறுகின்றனர். இதைக்கண்டித்து இறை வன் ''உன்னைப் படைத்து, உன்னைச் சரி யான அமைப்பில் வைத்த மகத்துவம் பொரு ந்திய உனது றப்பை விட்டும் உன்னை மறுட்டி விட்டது எது?

என்று கேட்கின்றான். ஆகவே, இறைவன் நமக்கு இஸ்லாம் மதத்தைத் தந்தருளி அதன் படி நடக்க நமக்கு வழியையும் காட்டியுள்ளா னுகையால் அதைவிட்டு வேறு வழியில் நாம் செல்லக்கூடாது. இதையே இறைவன்,

''எவன் இஸ்லாம் அல்லாததைத் தனக் குரிய மார்க்கமாக ஆக்கிக்கொள்ளுகிறானே அதை அவனிடமிருந்து ஒப்புக்கொள்ளப் படவே மாட்டாது.''

என்று கூறியிருக்கிறான். ஆகவே நமக்கு இஸ்லாம்தான் கதிமோக்ஷம் அளிக்கவல்லது. இதையல்லாமல் விதண்டாவாதிகளின் பேச்சுக் களை நாம் கேட்போமாயின் வழிதவறி விடு வோம். இவ்விதமான பேர்வழிகள் இப்பொ ழுது மட்டுமில்லை, முற்காலத்திலுமிருந்தார் கள்.

ஒருநாள் ஒரு யூதன், ''இன்றையதினம் நான் அலியை காபிராக்குவேன், அல்லது தொழுகைக்குப் போகவிடாமல் கெடுத்துவிடு வேன்'' என்று சபதமிட்டுக்கொண்டு அலி(ரலி) அவர்கள் தொழுகைக்கு வரும்போது குறுக்கே மரித்து, ''இறைவன் நமக்குப் பூரணமாகச் சுயேச்சை அளித்துவிட்டானா? அல்லது நம்மை முற்றிலும் கட்டுப்படுத்தி இருக்கிறானா?'' என்று ஒரு கேள்விகேட்டான். ''கலாகதர்'' உடைய மஸ்அலாவைக் கேட்கி றானென்பதை ஹஜ்ரத் அவர்கள் உணர்ந்து கொண்டு நல்லது சொல்லுகிறேன் என்றுகூறி,

''உன்னுடைய ஒரு காலை பூமியில் ஊன் றாமல் தூக்கு'' என்றார்கள். உடனே அவன் சுலபமாகத் தூக்கிக் கொண்டான். பின்னர், ''மற்றொரு காலையும் தூக்கு'' என்றார்கள். இது எப்படி முடியும் என்று கூறினான். உடனே ஹஜ்ரத் அவர்கள், இதுதான் உன் கேள் விக்கு விடை. அதாவது மனிதனுக்கு ஓரளவு சக்தியுண்டு; சக்தியில்லாத விஷயமுமுண்டு'' என்று கூறினார்கள். இந்த மஸ்அலாவில் அதிகமாகக் குற்றஞ் சுமத்தப்படுகிறவர்கள் சூபியாக்கள்தாம். இந்த சூபிகளில் முக்கிய மானவர்களும் ஷம்ஸுத் தப்ரேஸின் (ரஹ்.) சிஷ்யருமான மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள், அம்மஸ்அலாவைத் தங்கள் 'மத்னவீ' ஷரீபில் கதை ரூபமாக எவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

''ஒரு தோட்டத்தில் ஒரு திருடன் புகுந்து மரத்தின் மீதேறிக் கனிகளைப் பிடுங்கிப் புசித் துக்கொண்டும், தமது பையில் போட்டு மூட்டை கட்டிக்கொண்டுமிருந்தான். அந்தச் சமயத்தில் தோட்டக்காரர் வந்தார். அவர் நல்ல மனிதராக இருந்ததால் மரியாதையாக அத்திருடனிடம் நீ இம்மாதிரி கனிகளைப் பறிப்பது நியாயமல்லவே'' என்று கூறினார். அதற்கு அவன்,

''இது அல்லாஹ்வின் பூமி, இது அல்லாஹ் உற்பத்தி செய்த மரம், அது பழுத்திருக்கிறது. நான் அல்லாஹ்வின் அடிமை. ஆகவே, அல் லாஹ்வின் பூமியிலுள்ள மரத்தில் பழுத்த கனியை அல்லாஹ்வின் அடிமை பறித்துத் தின் பதைத் தடுக்க அதிகாரம் பெற்றவர் யார்?''

என்று அதட்டுதலாகக் கூறினான். உடனே அந்தத் தோட்டக்காரர் இவன் மௌட்டீகம் கொண்டவன்; இவனுக்குப் புத்தி புகட்டவேண் டும் என்று முடிவுசெய்து தோட்டத்துக் காவற் காரனைக் கூப்பிட்டார். கயிறு கொண்டுவந்து திருடனைப் பிடித்து அந்த மரத்திலேயே நன்று கக் கட்டிவைத்து ஒரு தடியால் நன்கு புடைத் தார். அவன் கதறினான். அப்பொழுது தோட் டத்துச் சொந்தக்காரர்,

''இது அல்லாஹ்வின் தடி; இது அல்லாஹ் வின் மரம், அல்லாஹ்வின் கயிறு, யான் அல் லாஹ்வின் அடிமை, நீ அல்லாஹ்வின் மற்றொரு அடிமை. அல்லாஹ்வின் கயிற்றால் அல்லாஹ் வின் மரத்தில் கட்டி, அல்லாஹ்வின் தடி கொண்டு அல்லாஹ்வின் ஒரு அடிமை மற்றொரு அடிமையை அடித்தால் அதைக் கேட்பதற்கு உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது?''

என்று பதில் கூறினார்.

இவ்வாறு விதண்டா வாதிகள் தங்களது குயுக்தியால் அறிவீனமாகக் கண்டதை எல்லாம் கூறுவர். ஆனால் அல்லாஹ் தன்னுடைய நேரான வழியை நமக்குக் காட்டி இருப்பதால் நாம் அதைத் தவிர்த்து வேறுவழியில் சென்றால் அதற்குரிய தண்டனையை அடைவோம். இதைத்தான் இறைவன்,

"நிச்சயமாக நாம் அவனுக்கு நேரான வழியைக் காண்பித்திருக்கிறோம். அவன் நன்றியுள்ளவனாகிறான்; அல்லது நன்றி கெட்டவனாகின்றான்"

"நிச்சயமாக நாம் காபிரானவர்களுக்கு நரகத்தைச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம்."

"சுவர்க்கத்தி லிருப்பவர்கள் நிச்சயமாக நல்லோர்கள் ஒரு பாத்திரத்திலிருந்து பருகுவார்கள். அது கற்பூரங் கலந்திருக்கும்."

என்று கூறியிருக்கிறான்.

"இன்றையதினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்குப் பரிபூரணமாக்கினேன். இன்னும் என்னுடைய அருட்கொடையை உங்களுக்குப் பூர்த்திசெய்தேன். இன்னும் உங்களுக்கு இஸ்லாத்தை மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்,"

என்று இறைவன் நமக்குக் கூறியிருக்கிறான். ஆகவே நம்மைப் படைத்த அந்த றப்புல் ஆலமீன் நம்மை நாம் உணர்ந்து கொள்வதற்கான வழியை அதாவது இஸ்லாம் மதத்தைக் காட்டியுள்ளான். ஆனால் நம்மையே அறிந்துகொள்ள முடியாமலிருக்கிற நாம், அந்த தேவ வசனத்தை நேருக்கு நேர் கேட்டுத் தெரிந்து கொள்ள நமக்குச் சக்தியில்லை. ஆதலால் அதை நமக்கு அறிவிப்பதற்காக அல்லாஹ் தன்னுடைய அடியார்களில் தனக்கு இஷ்டமானவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுகிறான். இத்தகைய அடியார்களைத்தான் நாம் நபிமார்கள் என்று கூறுகிறோம். செவியினால் கேட்பதற்காக வேதவசனத்தை அவர்கள் நமக்கு ஓதியும், நேத்திரங்களால் பார்த்துக் கொள்வதற்காகத் தங்களது செய்கைகளை நமக்கு நமூனாவாகச் செய்தும் காட்டியிருக்கிறார்கள்.

நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தினசரி 5 காலம் தொழுகை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டளையை நமக்கறிவித்தார்கள். ஆனால் அவர்களோ இரவு முழுதும் வணங்குவார்கள், கால்களில் ரத்த ஓட்டம் நின்று இருபாதங்களும் வீங்கிவிடும். இதைப் பார்த்த ஸஹாபிகள், "நாயகமே! தாங்கள் இவ்வளவு கஷ்டத்தை ஏன் எடுத்துக்கொள்ளுகிறீர்கள்" என்று கேட்பார்கள். அதற்கு நாயகமவர்கள் "நான் நன்றி செலுத்தும்படியான அடியானாக இருக்க வேண்டாமா?" உங்களைப்போல் நானும் மனிதனாக இருப்பதுடன், அல்லாஹ்வினுடைய திருவசனத்தைக் கேட்டு உங்களுக்கு அறிவிக்கும் நபியாகவுமிருக்கிறேன். இந்த இரண்டு அனுக்கிரகங்களுக்கும் நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்று கூறுவார்கள்.

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும்படி நமக்குக் கட்டளையிட்டார்கள். அக்கட்டளைக்கேற்ப நாம் பகல்பொழுதில்மாத்திரம் நோன்பு நோற்கவும், இராப்பொழுதில் வேண்டிய மட்டும் உண்ணவும், பருகவும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறோம். அதிலும் சூரியாஸ்தமனமானவுடன் தாமதிக்காமல் நோன்பு திறப்பதையும், ஸஹர்நேரத்தில் கடைசிதருணம்வரை சாப்பிட்டுக்கொள்ளவும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஆனால் நாயகமவர்களோவென்றால், ஒருநாள் நோன்பு நோற்றால் நோன்பு விடும் சமயத்திலும் ஒன்றும் புசிப்பதில்லை. அவ்விதமாகவே இராப்பொழுதைப் போக்கி ஸஹர் செய்வதுமில்லை; மறுநாள் பகலில் நோன்பு நோற்றுக்கொள்ளுவார்கள். இவ்விதமாக நாட் கணக்கில் நோன்புவைப்பார்கள். இதற்கு "ஸௌமே விஸால்" என்று பெயர். நாயகமவர்கள் செய்துவந்த இந்தக் காரியத்தைத் தெரிந்து ஸஹாபிகள் தாங்களும் அவ்விதமே நோன்பு நோற்க ஆரம்பித்தார்கள். உடனே நாயகமவர்கள் ஸஹாபிகளை அழைத்து, என்னைப் பார்த்து நீங்களும் தொடர்ச்சியாக நோன்பு நோற்கக்கூடாது. ஏனென்றால், என்னைப்போல் நீங்கள் இல்லை? யான் இவ்வுலக உணவை உட்கொள்ளாவிடினும் என்னுடைய றப்பு எனக்கு ஆத்மார்த்த உணவளிக்கிறான்; எனக்குத் தாகசாந்தி அளிக்கிறான் என்று கூறினார்கள்.

'ஜக்காத்' சம்மந்தமான விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள்: நம்முடைய வருவாயில் செலவுபோக ஒரு வருஷம்வரை நம்மிடம்மேல் மிச்சமாகத் தங்கி இருக்கிற பொருளில் 40-ல் ஒரு பாகத்தை ஜக்காத்தாகக் கொடுக்கவேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். ஆனால் தாங்களோ தங்களிடம் இருக்கும் பொருள் முழுவ

தையும் அன்றுடம் தர்மஞ் செய்துவிடுவார்கள். இவ்விதமாக ஒருநாள் தங்கள் வீட்டில் ஒரு தங்கநாணயம் தங்கி இருக்கும் நிலைமையில் இஷாவிற்கு பாங்கு சொல்லி இகாமத்து மாய்விட்டது; தொழுகைக்காக ஸஹாபி களும் ஸப்பில் நின்றுவிட்டார்கள். நாயக மவர்கள் இமாமத்துக்காக முன் சென் ருர்கள் ஆயினும் தொழுகையை நடத் தாமல் தங்கள் வீட்டுக்குத் திரும்பச் சென்று அந்த ஒரு தங்கக் காசையும் எடுத்து தரு மம் செய்துவிட்டுப் போய் தொழுக வைத்தார் கள். பின்னர், இவ்வளவு அவசரமாகத் தாங் கள் வீட்டுக்குச் சென்றதற்குக் காரணம் என்னவென்று ஸஹாபிகள் விசாரித்தபோது,

"என்னுடைய வீட்டில் ஒரு தங்கக் காசு இருந்தது. நான் தொழுகவைத்து விட்டேச்குச் செல்லுவதற்குள் நேரமாகி விடலாம். அதை அடைய உரிமையுடையவர்கள் நித்திரைக் குச் சென்றுவிடக்கூடும். அப்பொழுது அந்தக் காசு எனது வீட்டில் தங்கிவிடலாம். என் னிடம் ஒரு இரவு கழியும் நேரம் தங்கக்காசு மிச்சப்பட்டிருப்பது கூடாது. ஆதலால் உரிய வர்களுக்கு அதைக் கோடுத்துவிட்டு வந் தேன்"

என்று கூறினர்கள். தவிரவும்,

"நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயபக்தி செலுத்துங்கள். இன்னும் கற்பாசயத்தில் சம்பந்தப்பட்டவர்களே, அதாவது ரத்தக் கலப்புள்ள பந்துக்களைப் பேணிக் கொள்ளுங் கள்."

என்னும் திருவேத வசனத்தைப் போதித் தார்கள். ஆனல் நாயகமவர்களோ கற்பத்தி லிருக்கும்போது தந்தையை இழந்தார்கள்; சிறு குழந்தையாக இருக்கும்போது தாயை இழந்தார்கள்; சகோதர சகோதரிகள் இல்லை. இவ்வித நிலைமையில் தங்களுக்குப் பால்கொடு த்தசெவிலித்தாய் வந்தால் தங்கள் துப்பட்டியை எடுத்து விரித்து அதில் அமரும்படி உபசரிப் பார்கள். இவை உண்மை நபிமார்களின் லக்ஷ ணங்களாகும். உண்மை நபிமார்கள் இவ்வித மாகத்தான் நமக்கு நேரான வழியைக் கிரியாம் சையில் செய்துகாட்டினர்கள். ஆனல் ஒரு போலியான—தம்மை நபியென்று பொய்யாகக் கூறிக்கொண்டிருந்த குலாம் அஹ்மது தமது ஜீவித காலத்தில் உலக சுகபோகங்களைத் தம் இஷ்டம்போல் அனுபவித்து உல்லாசமாகக் காலங்கடத்தி வந்ததோடு தம்முடைய மர ணத்துக்குப்பின் தமது புதல்வருக்காக லக்ஷக் கணக்கான சொத்துக்களையும் வாரிசு பாத்திய மாகவிட்டுச் சென்ருர். அதை அவர் புதல்வர் இப்பொழுதும் அனுபவித்துக்கொண்டிருக்கி ருர். அந்தப் புதல்வரான பஷீர் அஹ்மதிடம், "நபிமார்கள் சொத்துக்களைப் பிதுர்ராஜித மாக வாரிஸ்களுக்கு விட்டுச் செல்வதில்லையே, அவர்கள் விட்டுச்செல்வது அவருடைய உம் மத்துகள் யாவருக்கும் பொதுவானதாச்சுதே. ஆகவே உங்கள் தந்தையார் விட்டுச்சென்றதை நீங்கள் மாத்திரம் எவ்வாறு அடைய முடியும்? அது அஹ்மதியர்கள் அனைவருக்கும் பொது வானதாயிற்றே!" என்று குலாம் அஹ்மதின் கோஷ்டியார் கேட்டால், அதற்கு நாளதுவரை பஷீர் அஹ்மத் பதில் கூறுவதே கிடையாது, இதிலிருந்து உண்மை நபி, நபியென்று கூறும் போலி இவர்களுக்கிடையிலுள்ள தாரதம் மியத்தை நீங்களே சிந்தித்துக்கொள்ளுங்கள்.

"ஏனைய முஸ்லிம்கள் எவனுடைய கை யாலும் வாயாலும் ஸலாமத்துப் பெற்றிருக்கி ருர்களோ அத்தகையவர்தான் உண்மை முஸ்லிம்"

என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கி ருர்கள். ஆனல் இந்த காதியானிகளால் எத் தனைபேர் வசைக்காளாகிருர்கள்; திட்டப்படுகி ருர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். தம்மைப் பின்பற்ருதவர்களெல்லாம் காபிர்கள் என்று கூறி உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம் களையும் காபிராக்கிவிட்டிருக்கிருர்கள். இதை உற்றுணருங்கள்.

வமா அலைன இல்லல்பலாக் (விஷயத்தை அறிவிப்பதைத் தவிர எங்கள் மீது வேறு கடமையில்லை.)

6-வது பிரசங்கம்

(சென்னை ஜாம்பஜார்)

மௌலானு அவர்கள் காருண்ய நபி முகம் மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் ஸீரத் பிரசங் கம் நிகழ்த்தியதின் சாராம்சம் வருமாறு:— அன்பர்காள்!

இன்றைய தினம் நமக்குப் புனிததினமாகும். இந்த இடமும் புனித இடமாகும். இந்தச் சபையும் புனிதச் சபையாகும். ஏனெனில், இந்த மாதம் ரபீஉல் அவ்வல் மாதமாகும்.

இந்த இரவு அந்த மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமை இரவாகும். "லைலத்துல் கத்ரைப் பார்க்கினும் வெள்ளிக்கிழமை இரவு என்னிடத்தில் அதிக மகத்துவம் பொருந்தியதாக இருக்கிறது" என்று இமாம் அஹ்மதுப்னுஹம்பல் (ரஹ்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இமாம் அஹ்மதுப்னுஹம்பல் (ரஹ்.) அவர்கள் நான்கு பெரிய இமாம்களில் ஒருவராவார்கள்; ஒரு மத்ஹபின் ஸ்தாபகராருமாவார்கள். ஆதலால் அவர்களுடைய சொல் மதிக்கப்படத் தகுந்ததாகும். தவிரவும் இந்தச் சபையில் நாயகம் (ஸல்.) அவர்களின் ஸீரத்தைப் பற்றிக் கூறப்போவதால் இந்தச் சபையும் புனிதச் சபையாகும்.

"உங்களுடைய இனத்திலிருந்து ஒருதூதர் உங்களிடம் நிச்சயமாக வந்திருக்கிறார்! நீங்கள் கஷ்டப்படுவேது அவருக்கு வருத்தமாக இருக்கிறது. உங்கள் மீது அவர் அதிக ஆசை கொண்டவராக இருக்கிறார். விசுவாசிகள் பால் இறக்கமும், கருணையும் கொண்டவர். ஆகவே, (ஜனங்களே! இஸ்லாத்தைத் தழுவாமல்) நீங்கள்பின்வாங்குவீர்களாயின் எனக்கு அல்லாஹ் போதுமானவன். அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை. அவன் மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். இன்னும் அவன் மிகைத்தவன். விவேகமுள்ளவன்"

சகோதரர்களே! நமக்கு ஒருவர் ஒரு விஷயத்தைக் கூறினால் அதை நாம் உடனே நம்புவதில்லை. நமக்குச் சொல்லுபவர் யார்? நம்மீது நல்ல எண்ணம் உள்ளவரா? என்ற விஷயங்களைச் சிந்திக்கிறோம். நமக்குக் கூறுபவர் நம்மீது நல்ல எண்ணமுள்ளவராகவும், நம்மைச் சேர்ந்தவராகவும் இருந்தால்தான் நாம் அவரது சொல்லைக் கேட்போம். இல்லாவிடில் அதை மறுத்துவிடுவோம். இது உலக இயற்கை. எனவே, இவ்விஷயத்தைத்தான் இறைவன், நான் மேலே கூறிய வசனத்தின் மூலம் உங்களுக்கறிவித்து, "உங்களுடைய இனத்திலிருந்து" என்று சுட்டிக்காட்டி இருக்கிறான். இந்த இடத்தில் "உங்கள்" என்ற முன்னிலைப் பதம் அறபிகளுக்கு என்றில்லாமல் மனித வர்கம் அனைத்துக்குமே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால்தான் இறைவன் தனது திருமறையில் நபிகள் நாயகமவர்களை நோக்கி "நிச்சயமாக நாம் உம்மை ஜனங்கள் யாவரிடத்திலும் அனுப்பியிருக்கிறோம்." என்று கூறி இருக்கிறான். எனவே, நம்முடைய இனத்திலிருந்தே மனிதவர்க்கமாகிய நம்மிடம் நபிகள் நாயகமவர்கள் அல்லாஹ்வின் தூதராக வந்திருக்கிறார்கள். இந்த றஸூலுடைய தன்மை எவ்வாறிருக்கிறதென்றால் "நமக்குக் கஷ்டமேற்படுவேது அவருக்கு கஷ்டமாக இருக்கிறது." அதாவது நமக்கும் நமது ஜடலத்துக்கும் ஒரு சம்பந்தமிருக்கிறது; அந்தச் சம்பந்தத்தை நாம் உயிர் என்றழைக்கிறோம். அந்த ஒரு சம்பந்தமிருப்பதால் தாம் நமது திரேகத்தின் ஒரு அவயவத்தில் ஒருமுள் தைத்துவிட்டால் நமது திரேகம் முழுதிலும் நோவுண்டாகிறது. இதுபோல் நமக்கு ஒரு கஷ்டமேற்பட்டால் நாயகமவர்களுக்கு சகிக்கமுடிகிறதில்லை. ஆதலால்தான், மனிதவர்க்கம் என்ற உடலுக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் உயிர் என்ற அந்தஸ்திலிருக்கிறார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் மனித உருவத்தில் நம்மிடம் வந்திருந்தார்கள் என்பதைத்தவிர அவர்களின் அந்தஸ்து பூராவையும் நாம் உணர்ந்துகொள்ள முடியாது. அவர்களின் அலுவல் மனித வர்க்கத்துக்கு இதம் செய்வதைத் தவிர வேறொன்றுமிருக்கவில்லை. உலகில் இன்றுவரை நாயகமவர்களுக்கு நிகரானவர் உதிக்கவே இல்லை. எவ்வாறென்றால், எழுத்து வாசனையையே அறியாதவர்களும், கல்வி என்ற வாடையையே உணராதவர்களும் நாகரீகம் என்பதையே காதால் கேட்காதவர்களுமான ஒரு சமூகத்தில் நாயகம் (ஸல்.) அவர்கள் ஜனித்தார்கள்; அதுவும் தாயின் வயிற்றில் சிசுவாக இருந்தபோது தந்தையை இழந்துவிட்டார்கள்; சிறு வயதுப் பாலகராக இருக்கும்போது தாயை இழந்து அனாதையாக வளர்ந்தார்கள். ஒரு வாத்தியாரிடத்திலேனும் சென்று கல்வி பயின்றார்களில்லை. மேலும் உலகில் மனிதனாகப் பிறந்தவர் எவரும் நாயகமவர்களுக்கு உபாத்தியாயராக இல்லை. எந்தவிதமான தத்துவத்தையும் யாரிடமிருந்துங் கற்றார்களில்லை. அவ்வாறிருந்தும் நாயகமவர்களின் சிஷ்யர்களாகும் பாக்கியத்தைப் பெற்ற ஸஹாபிகள், உலகநாகரீகத்துக் கர்த்தாக்களாகவும், கலைகளுக்கும் சாஸ்திரங்களுக்கும் அஸ்திவாரமிட்ட அறிஞர்களுக்கு ஆசிரியர்களாகவுமிருந்தார்கள்; ஞானவான்களாகவும் ஆகிவிட்டார்கள். இத்தகைய சிறப்புடன்கூடிய வேறுஒருவர் உலகில் பிறக்கவும் இல்லை; இனிப்பிறக்கப்

போவதுமில்லை. நாயகமவர்களின் அந்தஸ்தை உள்ளபடி உணர்ந்தவர்கள் இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. ஆனால் சில அறிவற்றவர்கள், ஞானமற்றவர்கள், விவேகமற்றவர்கள் நாயகமவர்கள் நம்மைப்போல் ஒரு மனிதர் தான் என்று நினைக்கலாம்; அவ்வாறு கூறவும் செய்யலாம். நாம் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்து வளர்ந்ததுபோல், உண்டு உறங்கியதுபோல், நாயகமவர்களும் பிறந்தார்கள், வளர்ந்தார்கள், உண்டு உறங்கினார்கள் என்றும் கூறலாம். ஆனால் நாம் அவ்வாறு கருதுவது கூடாது. நாம் நித்திரை செய்வோமாயின் நம்முடைய "உலு" முறிந்து விடுகிறது; நம்முடைய உணர்வை நாம் இழந்துவிடுகிறோம். நாயகமவர்கள் நித்திரை செய்தால் அவர்களுக்கு "உலு" முறியாது; அவர்களுடைய நேத்திரங்கள் நித்திரை செய்வதாக வெளித்தோற்றத்தில் காணப்படினும் அவர்களுடைய அகக் கண் நித்திரை செய்வதில்லை; அவர்களுடைய மனோநிலை இறைவனின் ஞாபகத்தை விட்டு மாறுவதே இல்லை. முற்காலத்தில் தோன்றிய நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் தங்கள் சமூகத்தாரிடம் வந்தபோது, மக்கள் அவர்களின் தன்மையை உணர்ந்துகொள்ளாது **"என்ன! இந்த மனிதர் நம்மைப்போல் உணவருந்துகிறாரே! கடைத்தெருவில் நடக்கிறாரே!"** என்றுகூறினர். நபிகள் நாயகமவர்களோ அந்த நபிமார்களுக்கெல்லாம் நபியாகவும், றஸூல்மார்களுக்கெல்லாம் றஸூலாகவும் வந்தவர்கள். **"எனக்கு அல்லாஹ்வுடன் ஒரு நேரம் ஏற்படும். அந்தச் சமயத்தில் முகர்ரபான மலக்கும் முர்ஸலான நபியும் என் அந்தஸ்துக்கு அடுக்கமாட்டார்கள்"** என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். நாயகமவர்களின் அந்தஸ்தையும், இதர நபிமார்களின் தாரதம்மியத்தையும் இரண்டொரு சம்பவங்களைக்கூறி உங்களுக்கு விளக்குகிறேன். இதனால் நபிமார்களை இழித்துக்கூறுவதாக நீங்கள் கருதலாகாது. அவ்வாறு கூறுவது எனது வழக்கமுமல்ல. எல்லா நபிமார்களையும் சமமாகக் கௌரவிக்க வேண்டுமென்பது நமது மார்க்கக் கட்டளையாகும். ஆனால் ஒரு நபிக்கு இன்னொரு நபியைப் பார்க்கிலும் மேன்மை இருக்கிறதென்பதை எடுத்துக்கூறுவது குற்றமல்ல.

"இந்த றசூல்மார்களில் சிலரைப் பார்க்கினும் சிலரை மேன்மைப்படுத்தி வைத்திருக்கிறோம்"

என ஆண்டவனே தன் திருமறையில் கூறியுள்ளான்.

ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் பிர்அவ்னை விட்டுவிட்டுத் தங்கள் இஸ்ரவேலர்களை அழைத்துக்கொண்டு சமுத்திரத்தைக் கடந்துவிட்டார்கள். பிர்அவ்னோ ஹஸ்ரத் மூஸா நபியவர்களின் பரிவாரங்களைத் துரத்திக்கொண்டு பின்தொடர்ந்து வரும்போது நீல நதியின் மத்தியில் அவன் ஜலத்தில் மூழ்கினான். தன்னைக் கடவுள் என்று நினைத்துக்கொண்டிருந்த கர்வமுள்ள பிர்அவ்ன் அந்தத் தருணத்தில் **"மூஸா ஹாரூனின் றப்பை விஸ்வாஸித்தேன்"** என்றுகூறி, மூஸா நபியினிடம் அபயம் வேண்டினான். ஆனால் அகம்பாவங் கொண்ட அந்த பிர்அவ்ன் உலகில் இருக்கலாகாதென்பதைக் கருதிய மூஸா நபியவர்கள், அவனைச் சாக விடாமல் காப்பாற்ற முன்வரவில்லை. இது அவர்களின் ஜலாலியத்தை அறிவிக்கிறது. ஆனால் றஹ்மத்துன்லில் ஆலமீனாகிய நமது நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களோவெனின், பிர்அவ்னின் மேற்கண்ட சம்பவத்தைப்பற்றி,

"அந்தச் சமயத்தில் யானிருந்திருப்பின், பிர்அவ்னின் வேண்டுகோளுக்கிணங்கியிருப்பேன்" எனக் கூறியுள்ளார்கள்.

இது வெறும் வாய்ப்பேச்சாக மட்டுமில்லை; கிரியாம்சையிலும் செய்துகாட்டினார்கள். அதாவது,

நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்து மதீனாவை நோக்கிச் சென்றபோது நடைபெற்ற சம்பவத்தை நீங்கள் அறிவீர்கள். மக்கத்துக் குறைஷித் தலைவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து "முஹம்மதின் (ஸல்.) தலையைக் கொண்டுவருவோருக்கு, அல்லது அவரை உயிருடன் பிடித்துக்கொண்டுவந்து ஒப்புவிப்போருக்கு 100 சிவப்பு ஒட்டகம் இனாமளிக்கப்படு"மென பறைசாற்றினர். மக்கா வாசிகளுக்கு முக்கியமான சொத்து ஒட்டகந்தான். அதிலும் சிவப்பு நிறமுள்ள ஒட்டகத்துக்கு அதிக மதிப்புண்டு. விலையும் அதிகம். இவ்வாறான ஒட்டகம் ஒரே முறையில் 100 உருப்படி ஒரு சிறு காரியத்துக்குப் பதிலாக கிடைப்பதென்றால் அதில் யாருக்குத்தான் விருப்பமிருக்கமாட்டாது. அதனால் பலரும் பல திசையை நோக்கி நாயகமவர்களைத் தேடிப்புறப்பட்டனர். குரைஷியர்களின் பகைமையின் வேகத்தை யுணர்ந்தவர்களும், நாயகமவர்களுடன்

ஹிஜ்ரத்துச் செய்யும் பாக்கியம் கிடைக்கப் பெற்றவர்களுமான "யாரேகார்" ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள், நாயகமவர்களைப் பிடிப்பதற்கென யாரும் பின்றொடர்ந்து வருகிறார்களாவென்று மேற்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலுமாகத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு நாயகமவர்களின் ஒட்டகத்திற்குப் பின்னர் தங்களது ஒட்டகத்தை நடத்திக்கொண்டே சென்றார்கள். ஆனால், நாயகமவர்களோ முழு நிம்மதியாக எவ்விதக் கலவரமும், மனக் கிலேசமுமின்றிச் சென்று கொண்டிருந்தார்கள். இவ்வித நிலைமையில் 'ஸுராக்கா' என்றவன் குதிரையின்மீது வீற்று நாயகமவர்களை நோக்கி மாவேகம் மர வேகமாக வருவதை ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் கண்டு மனம் வருந்தினார்கள்; நாயகமவர்களை அழைத்து, "**அல்லாஹ்வின் தூதரே! ஸுராக்கா வருகிறான்**" என்றார்கள். நாயகமவர்கள் திரும்பிப் பார்க்கவே ஸுராக்கா தமது அம்பைக் குறிவைத்து நாயகமவர்களைத் தாக்க எத்தனித்தான். அச்சமயம் நாயகம்(ஸல்.) அவர்கள் "**பூமியே! ஸுராக்காவைப்பிடித்துக்கோள்**" என்று பூமிக்குக் கட்டளையிட்டார்கள், உடனே பூமி ஸுராக்காவைப் பிடித்துத் தன்னுள் அழுத்திக்கொண்டது. அப்பொழுது அவன் நாயகமவர்களிடம் அபயந்தேடினான். உடனே நாயகமவர்கள் பூமியை நோக்கி, "**பூமியே ஸுராக்காவை விட்டுவிடு**" என்று கட்டளைப் பிறப்பித்தார்கள். மறுபடியும் நாயகமவர்களைத் தாக்க முயன்றான். இவனது துர்எண்ணத்தையும் வீண் முயற்சியையுங் கண்ட ஸித்தீக் (ரலி.) அவர்கள், 'நாயகமே! ஸுராக்காவைப் பாருங்கள்' என்றார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். சுராக்காவின் போர்க்கோலத்தைக் கண்டு பூமியை நோக்கி "**பூமியே ஸுராக்காவைப் பிடித்துக்கோள்**" என்று கூறினார்கள். அதுபொழுதும் ஸுராக்காவை பூமி பிடித்துக்கொண்டது. மறுபடியும் அவன் பயந்து கதறி நாயகமவர்களிடம் அபயம் தேடினான். உடனே நாயகமவர்கள் மன்னித்து அவனை விட்டு விடும்படி பூமிக்கு கட்டளையிட்டார்கள். பின்னரும் அவன் நாயகமவர்களை வேறுவழியில் தாக்குவதற்காக வந்தான். ஹஜ்ரத் ஸித்தீக் (ரலி.) அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். ஸுராக்காவின் கோலத்தைக்கண்டு "**நாயகமே! சுராக்கா வந்துவிட்டான்**" என்று கூறினார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அவன் தங்கள் சிரசைக் கொண்டுபோகும் எண்ணத்துடன் நிற்பதை பெருமானவர்கள் பார்த்து பூமியை நோக்கி '**பூமியே! ஸுராக்காவைப் பிடித்துக்கோள்!**" என்று மீண்டும் கட்டளையிட்டார்கள். மறுபடியும் பூமியில் ஸுராக்கா அகப்பட்டுக்கொண்டான். பின்னும் நாயகமவர்களிடம் அபயங் கேட்டான். நாயகமவர்களும் அபயமளித்து அவனை விட்டுவிடும்படி பூமிக்குக் கட்டளை யிட்டார்கள். இறுதியாக ஸுராக்காவுக்குப் புத்திவந்து நாயகம் (ஸல்.) அவர்களின் தயாள குணத்தை யுணர்ந்து கொண்டு அடிபணிந்து "**நாயகமே! தாங்கள் உண்மைநபி யென்பதை உணர்ந்து கோண்டேன். யான் பொருளாசையால் வந்தேனே தவிர வேறொன்றுமில்லை. தாங்கள் இனிமேல் மக்காவுக்கு ஜயசீலராக வரும்போது தங்கள் சிஷ்யர்கள் என்னைக் கோல்லாமலிருப்பதற்கு உரிமைச்சீட்டு அளியுங்கள்.**"

என்று கேட்டுக்கொண்டான். உடனே நாயகம் (ஸல்.) அவர்கள் அவனுக்கு உரிமைச் சீட்டு அளித்தார்கள். இதுமட்டுமா?

நாயகமவர்களிடம் இனமும் கோரினான்.

"**அக்காலத்தில் பிரசித்தி பெற்ற பெரிய ஏகாதிபத்தியத்தின் சக்கிரவர்த்தியான 'நௌஷேர்வான்' அணிந்திருந்த காப்புகளை உமக்கு அளித்தோம்**"

என்று நாயகமவர்கள் கூறினார்கள்.

பிர்அவ்ன் விஷயத்தில் நாயகமவர்கள் கூறிய வாக்கை, அவர்கள் இவ்விடத்தில் பிரத்தியக்ஷமாக நிறைவேற்றியதைப் பாருங்கள். தங்கள் தலையைக்கொண்டுபோய்ப் பரிசுபெற இரத்த வேட்கையுடன் வந்த ஒருவனை, ஒருமுறை இருமுறையல்ல, மூன்று முறை மன்னித்தார்கள். அது மட்டுமா? இறுதியாக அவனது வேண்டுகோளுக்கிணங்க அவனுக்கு அபயச்சீட்டும் கொடுத்தார்கள். இம்மட்டுடன் விட்டு விடாமல் நௌஷேர்வானின் காப்புகளையும் கொடுத்திருப்பதாகக் கூறினார்கள். இதிலுள்ள விசேஷமென்னவென்றால், வீடு வாசலைத் துறந்து எவ்விதச் சாமானையும் தங்களுடன் எடுத்துக் கொள்ளாமல் மதீனா செல்லும் நாயகம் (ஸல்.) அவர்கள், இடைவழியில் தங்களுயிருக்கு அபேக்ஷையாகவந்த பகைவனுக்கு பாரசீக சக்கிரவர்த்தியின் காப்புகளைத் தானம்செய்ததும், பூமியை தங்களுடைய சிறு அடிமையைப்போல்

பாவித்துக் கட்டளையிட்டதும், பூமி பெருமான வர்களின் கட்டளையை உடனே நிறைவேற்றி வைத்ததுமேயாகும். இந்தச் சம்பவத்தை நன்கு ஆலோசித்துப் பார்ப்போமாகில், நாயகம் (ஸல்.) அவர்கள் மனிதத் தோற்றத்தில் வெளியாயிருந்தபோதிலும் நம்மைப் போன்ற மனிதராக இருக்கவில்லை என்பது நன்கு புலனாகும்.

நபிகள் நாயகமவர்களுக்கு ஏற்பட்டுள்ள விரோதிகளில் மிகவும் கடினசித்தமுள்ளவன் அபூஜஹ்லாகும். இவன் மூஸா அலைஹிஸ்ஸலாத்துக்கு ஏற்பட்ட பகைவனான பிர்அவ்னினும் பெரிய கர்வங்கொண்டவன். "என்னுடைய உம்மத்துக்கு அபூஜஹ்லு பிர்அவ்னாக இருக்கிறான்" என்று நாயகமவர்களே நவின்றிருக்கிறார்கள். இவன் பத்ருச் சண்டையில் கொல்லப்பட்டு சாகுந்தறுவாயிலும் தன்னுடைய அகம்பாவத்தை விட்டுவிடவில்லை. தனது தலையை வெட்டுகையில் கழுத்தில் நீளம் விட்டு வெட்டும்படி வேண்டினான். ஏனெனின், இவன் குறைஷிகளுக்குத் தலைவனாக இருந்ததால், கொல்லப்பட்டவர்களின் தலைகளை நாயகமவர்களின் சமூகத்தில் வைக்கப்படும்பொழுது, அங்குவைக்கப்படும் தலைகளுக்கெல்லாம் தனது தலைமேலாக—உயரமாக இருக்கவேண்டும் என்று விரும்பினான். அதுவுமன்றித் தான் சாகப்போகும் தருவாயில், தன் வர்க்கத்தார் ஜயித்தார்களா? நாயகமவர்களின் வர்க்கத்தார் ஜயித்தார்களா? என்பதையும் விசாரித்தான்.

இத்துணை அகம்பாவங் கொண்ட மூர்க்கன் அபூஜஹ்லு நாயகமவர்களைப் பார்த்து, "முஹம்மதே! ஹாஷிம் கிளையில் உம்மைப் பார்க்கினும் அவலக்ஷணமானவர்களை நான் பார்க்கவில்லை" என்று கூறினான். உடனே நாயகமவர்கள் ஆம் மெய்தான்!" என்று கூறினார்கள். இவ்வளவு பெரிய அவமரியாதையான வார்த்தைகளை ஸஹாபிகளால் பொறுத்துக் கொள்ள முடியாது யாவரும் துடித்தனர்; பதை பதைத்தனர். ஆனால் நாயகமவர்களே அவனது பிதற்றுதலுக்கு பதில் கூறி விட்டதால் அதை மறுத்துக் கூறுவது கூடாதெனக் கருதினர்; அவ்வாறு கூறுவது நாயகமவர்களுக்கு மரியாதைக் குறைவு செய்வதாகுமென மதித்து மௌனவிரதம் பூண்டிருந்தனர். இந்நிலைமையில் ஸித்தீக் (ரலி) அவர்கள் இதனை சகித்துக்கொள்ள மனம் இடங்கொடுக்காதவர்களாய் உடனே எழுந்து நின்று "அல்லாஹ்வுடைய றசூலே! கிழக்கிலும் மேற்கிலும் தோன்றுகிற சூரிய சந்திரங்களைப் பார்க்கினும் தாங்கள் அழகாக இருக்கிறீர்கள்; தாங்கள் பிரகாசத்துக்கு முன் அவைகளெல்லாம் ஒன்றுமில்லை" என்று கூறினார்கள். அதையும் நாயகமவர்கள் "ஆம் மெய்தான்" என்று கூறினார்கள். அதுபொழுது ஸஹாபிகள்,

"நாயகமே! அபூஜஹ்லோ தங்கள் விரோதி, ஸித்தீக் (ரலி) அவர்களோ தங்கள் பிரிய நேசர், இவ்விருவரும் தங்களைப்பற்றி முரண்பாடான இரண்டு விஷயங்களைக் கூறியிருக்க, தாங்கள் இரண்டையும் "ஆம் மெய்தான்" என்று ஒப்புக்கொண்டீர்களே இதன் கருத்து எங்களுக்கு விளங்கவில்லை" என்று கேட்டார்கள். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள்,

"நான் தெளிவான முகக்கண்ணாடியாவேன்; என்னைப் பார்க்கிற எவருக்கும் அவரவர் தன்மை புலப்படும்; அபூஜஹ்லு அவலக்ஷணமுடையவனானதால் அவனது தன்மை அவனுக்குப் புலப்பட்டது; அதை அவன் கூறினான். அபூபக்ர் ஸித்தீக் நல்லவர்; அவரது தன்மை அவருக்குப் புலப்பட்டது; அதை அவர் கூறினார். இருவரும் கூறியது சரிதான் உண்மையைத்தான் கூறினர்."

எனப் பகர்ந்தார்கள். நாயகமவர்களின் லக்ஷணங்களைக்குறித்து ஹஜ்ரத் ஆயிஷா நாயகி அவர்கள் சொல்வதைக்கேளுங்கள். ஜுலைகாவின் யூசுபைப் பார்த்து எகிப்துப் பெண்கள் கையை அறுத்துக்கொண்டார்கள்; என்னுடைய யூசுபை அவர்கள்பார்ப்பார்களாயின் தங்களது உயிரையே மடித்துக்கொள்ளுவார்கள்."

ஹஜ்ரத் ஜாபிருப்னு அப்துல்லாஹ் (ரலி.) அவர்களின் சொல்லைக் கேளுங்கள்: ஒருநாள் பூரணச் சந்திரன் தன்னுடைய வெண் கலையை வீசிப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். நாயகமவர்களும் அந்நிலா வெளிச்சத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் நாயகமவர்களின் முகத்தை ஒருமுறையும், சந்திரனை ஒரு முறையுமாகப் பார்த்தேன்.

"நாயகமவர்களின் தாமரை போன்ற முகத்திற்கு முன் சந்திரன் அழகாகத் தோன்றவில்லை."

நாயகமவர்களின் குலாம்களாக இருந்த ஸஹாபிகளின் நிலைமை அவ்வாறிருந்தது. நாமும் நாயகமவர்களின் குலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனால் முஸ்லிமல்லா

தாரும், முஸ்லிம் வேஷத்திலுள்ளவர்களும் நாயகமவர்களைப்பற்றி மிக மிகக் கேவலமாகப் பேசுகிறார்கள். அவர்களிடம்தான் நாம் கை கோர்த்துக் கொண்டு திரிகிறோம். இதைத் தாராளக் கொள்கை என்றும் கூறுகிறோம். நாயகமவர்கள்பால் நமக்குள்ள அன்பு பக்திக் குறைவை இது காட்டுகிறதா? அல்லது தாராள சிந்தையைக் காட்டுகிறதா? என்பதை நீங்களே நிதானியுங்கள்.

ஒரு முறை குலாம் அஹ்மது காதியானி, நாயகமவர்களைப்பற்றி அதாவது சந்திரன் பிளந்த அற்புதத்தைப்பற்றி "முகம்மதுவுக்கு ஒருமுறை சந்திரகிரஹணம் ஏற்பட்டது; எனக்கோ சந்திர கிரஹணமும் சூரிய கிரஹணமும் ஏற்பட்டது" என்று கூறினார். நாயகமவர்களைப் பார்க்கினும் தாம் சிறந்தவர் என்பதை மெய்ப்பிப்பதற்காகச் சந்திரன் பிளந்ததைச் சந்திரக்கிரஹணம் என்று வியாக்யானம் செய்து மேற்கண்டவாறு கூறினர் போலும். (நஊது பில்லாஹிமின்ஹா) இப்படிப்பட்ட மனிதரைப் பெரியவரென்று நம்பி அவரைப் போற்றுவது மாபெரும் வருந்தத்தக்க விஷயமல்லவா?

சகோதரர்களே! நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களை எடுத்துக்கொள்ளுவோம். 900 வருஷ காலம் ஜீவித்திருந்தார்கள். 600 வருஷகாலம் தங்கள் ஜனங்களுக்கு உபதேசம் செய்தார்கள். இதற்கிடையே வெகு சிலரைத் தவிர ஏனையர் இஸ்லாத்தைத் தழுவவில்லை. இறுதியாக நூஹு நபியவர்களுக்கு ஜலாலியத்து வந்துவிட்டது உடனே இறைவனிடம்,

"என்னுடைய றப்பே! பூமியில் எந்த காபிரானவர்களின் வீட்டையும் விட்டு வைக்காதே"

என்று பிரார்த்தித்தார்கள். இறைவன் அந்தப் பிரார்த்தனையை அங்கீகரித்து காபிர்களை அழிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தான். அதுபொழுது நூஹு நபியவர்கள், தங்களுடன் இருந்த சிலரைத் தவிர மக்கள் யாவரும்மடிந்து போவதைப்பார்த்து மனங் கலங்கவில்லை. ஆனல் தங்கள் மைந்தர் தண்ணீரில் அகப்படுவதைப்பார்த்து மனந் தாளாமல் **"என்புதல்வ! எங்களுடன் கப்பலில் ஏறிக்கோள்"** அதாவது இஸ்லாத்தைத்தழுவி எங்களுடன் சேர்ந்துகொள் என்று பரிதாபமாகக்கூறினர்கள். ஆனல் அதற்கு அவன் "மலையில் நான் ஏறிக்கோள்வேன்" என்று கூறிவிட்டான். இறைவனும் நூஹு நபியவர்களுக்கு அவரது மைந்தனைப்பற்றி **"அவன் உமது குடும்பனல்லன். ஏனெனில், அவன் நல்ல செய்கைகளை யுள்ளவனல்லன்"** என்று கூறிவிட்டான். ஆனல் நமது உலக ரட்சகர் நாயகம் (ஸல்.) அவர்களின் நிலைமையைப் பாருங்கள்:

நாயகமவர்கள் இஸ்லாம் மதத்தைப் போதிக்கிறார்கள் என்பதை மக்கத்துக்குரைஷியர்கள் பெருங் குற்றமாகப் பாவித்து, நாயகமவர்களின் குலத்தைச்சேர்ந்த ஹாஷிம் கிளைஞரையே "ஷஅப் அபூதாலிப்" (பள்ளத்தாக்கில்) மூன்று வருஷகாலம்வரை பந்தோபஸ்தில் வைத்தனர்; அன்னம், தண்ணீர் முதலிய எத்தகைய உதவியுஞ் செய்யலாகாது என்று பந்துக்கட்டும் செய்தனர்; நாயகமவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது ஒட்டகத்தின் உதப்பியைப் போட்டனர்; ரஸ்தாவில் முட்டுகளைப் போட்டு வைத்தனர்; சொல்லொணுத் துன்பங்களை இழைத்தனர். பெருமானர் (ஸல்.) அவர்களோ மக்காவாசிகளின் இச்செய்கையைக்கண்டு இனி 'தாயிப்' நகர் சென்றேனும் அங்குள்ளவர்களுக்கு இஸ்லாத்தைப்பற்றிக் கூறலாம் என்று நினைத்து அங்கு சென்றார்கள். ஆனல் மக்கத்துக்குறைஷியர் தாயிப் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி "முஹம்மதுக்கு இடங்கொடுத்தால் எங்களது வாளுக்கு நீங்கள் இரையாகவேண்டியிருக்கும்" என்றறிவித்தார்கள். தாயிபிலுள்ளவர்கள் அல்லாஹ்வின் வாளுக்கு அஞ்சுவதைவிடுத்து மக்கத்துக் குறைஷியரின் வாளுக்குப் பயந்துவிட்டதால், நாயகமவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. மக்காவில் செய்யப்பட்ட துன்பங்களெல்லாம் இங்கும் செய்யப்பட்டன. பெருமானர் அன்னந் தண்ணீரில்லாமல் மூன்று இரவும் பகலும் முயற்சி செய்தும் ஒன்றும் முடியாமல் மக்கா திரும்பினார்கள். வரும்வழியின் இரு புறத்திலும் உயர்ந்த மலைச்சரிவுகளிருந்ததால் அதன் மத்தியில்தான் நாயகமவர்கள் மக்காவைநோக்கி வந்தார்கள். ஆனல் அவ்விரு மலைச் சரிவுகளிலும் தாயிப் வாசிகள் குட்டியும் குழந்தைகளுமாக நின்றுகொண்டு கல்லை உருட்டிவிட்டும் கல்லாலெறிந்தும் பலவாறு துன்புறுத்தினர்கள். இதனல் நாயகமவர்களின் முபாரக்கான பாதகமலத்தில் ரத்தம் பீரிட்டோட ஆரம்பித்துவிட்டது; பாதரக்ஷைகள் ரத்தத்தால்

தோய்ந்துவிட்டன. பூமியில் நபிமார்களின் ரத்தம் சிந்தினால் பூமி வெடித்துப்போகுமே என்ற எண்ணத்தால் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது அங்கியைக் கிழித்து அந்த ரத்தம் கீழே விழாமல் துடைத்தார்கள். இந்தச் சமயத்தில் ஹஜ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நாயகமவர்களின் முன்னிலையில் வந்து, "நபியே! இதோ மலக்குகளிருக்கிறார்கள்; பூமி, மலை, கற்பாறை, தண்ணீர் இவைகளெல்லாம் உங்கள் உத்தரவை எதிர்பார்க்கின்றன; இந்த மலையைப் பிடுங்கி, இவைகளையெல்லாம் கவிழ்த்து அழிக்கும்படி கூறினால் அதை உடனே நிறைவேற்றுவதற்காக இதோ மலக்குகள் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். என்று கூறினார்கள். அது போழ்து நாயகமவர்கள்,

"அல்லாஹ்வே! என்னுடைய கூட்டத்தாருக்கு நேர்வழி காட்டுவாயாக! ஏனெனில், அவர்கள் உணராதவர்களாயிருக்கின்றனர்."

என்று பிரார்த்தனை புரிந்தார்கள். இது மட்டுமா?

உஹதுச் சண்டையைக் கவனியுங்கள்! பகைவர்களின் பலமான தாக்குதல்களால் நாயகமவர்கள் 'பல்' ஷஹீதாகிவிட்டது. அதனால் நாயகமவர்கள் ஒரு பள்ளத்தில் விழுந்துவிட்டார்கள். ஹஜ்ரத், அபூபக்ர், உமர், உதுமான் அலி (ரலிம்.) முதலிய பக்தர்கள் நாயகமவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். பகைவர்களின் பலமான தாக்குதலையும், நாயகமவர்களையே குறிவைத்து அவர்கள் யுத்தம் செய்வதையும் கண்ட இளகிய மனத்தையுடைய ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) நாயகமவர்களைப் பார்த்து, "அல்லாவின் ரசூலே! தூதரே! இவர்கள்மீது 'பத்துஆ'ச்செய்ய (சாபமிட)லாகாதா?" என்று கூறினார்கள். அப்பொழுது நாயகமவர்கள் தங்களது முபாரக்கான இருகரங்களையும் வானத்தின் பக்கல் உயர்த்தி, "அல்லாஹ்வே! என்னுடைய கூட்டத்தாருக்கு நேர்வழி காட்டுவாயாக! நிச்சயமாக அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள்"

என்று பிரார்த்தித்து, நான் ஜனங்களைச் சபிப்பதற்காக அனுப்பப்படவில்லை. "உம்மை யாம் அகிலத்தாருக்குக் கருணையாக அனுப்பியிருக்கிறோம்" என்று இறைவன் கூறியிருப்பதை எடுத்துக் காட்டியதுடன், யான் வானத்தின்பால் கையை உயர்த்தியதற்குக் காரணம் என்னவென்றால், அபூபக்ர் (ரலி.) அல்லாஹ்வின் உண்மை அடியாராக இருப்பதால் அவருடைய வருத்தத்தை உத்தேசித்து அல்லாஹ்வின் கோபம் எங்கு வந்துவிடுகிறதோ? அவ்வாறு வந்தால் அது ஜனங்களுக்கு ஏற்படாமல் தடுத்துக்கொள்ளலாம் என்பதே யாகுமெனக் கூறினார்கள்.

இன்னமும் கேளுங்கள்! நபிகள் நாயகமவர்கள் ஹிஜ்ரத்துச் செய்யும் தருணத்திலும்கூட அந்த ஜனங்கள்மாட்டுள்ள அன்பின் காரணமாக இறைவனைவிளித்து "அவர்களை நீ வேதனை செய்தால் அவர்கள் உன்னுடைய அடியார்கள் தாம் (ஆதலால் உன்னிடம் ஆக்ஷேபிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை) ஆனால் அவர்களை நீ மன்னித்தால் நிச்சயமாக நீதான்மிகைத்தவன்" என்று பிரார்த்தனை செய்தவண்ணமாக இருந்தார்கள். நாயகமவர்களின் மனதைத் திருப்தி செய்ய இறைவனும் "நீர் அவர்களில் இருக்கையில் அல்லாஹ் அவர்களை வேதனை செய்வதாக இல்லை" என்று கூறியுள்ளான். இவை யாவும் நாயகமவர்கள் தங்களது சொந்த நன்மையைக் கருதியதனலல்ல. இவ்விஷயத்தையும் திருவேதம் செம்மையாகக் கூறுகிறது. "என்னுடைய கூலியானது அகிலத்தாரின் ரப்பாகிய அல்லாஹுதஆலாவினிடத்திலல்லாது வேறில்லை" என்று நபிகள்நாயகமவர்கள் கூறியதாக திருவேதம் அறிவிக்கிறது. இது நாயகமவர்கள், எல்லா ஜனங்களிடமும்கொண்ட வாஞ்சையாகும். ஆனால் இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம்களிடம் எவ்வாறிருந்தார்கள் என்பதை "விசுவாசிகள்பால் கருணையும் இரக்கமுமுள்ளவர்" என்று இறைவனே கூறியிருக்கிறான். இதற்கு ஆதாரமான சம்பவமொன்றை இவ்விடத்தில் கூறுகிறேன். ஒரு ஸஹாபி நாயகமவர்கள் காலத்தில் நோய்வாய்ப்பட்டு மரிக்குந்தறுவாயிலிருந்தார். நாயகமவர்கள் அந்த ஸஹாபியிடம் சென்று அவருக்குத் திருக்கலிமாச் சொல்லிக் கொடுத்தார்கள். அவரது 'நா' எழவில்லை. இதன் அந்தரங்கத்தை நாயகமவர்கள் உணர்ந்து அவருடைய தாயாரை அழைத்து உமது பிள்ளையின்பால் உமக்கேதேனும் வருத்தமுண்டா? என்றார்கள். அதற்கு அவ்வம்மையார் ஆம் என்றார். நாயகமவர்கள், மனவருத்தத்தை மறந்து, குற்றத்தை மன்னித்து விடுமாறு கூறினார்கள். அதற்கவ்வம்மையார் இணங்கவில்லை. நாயகமவர்களும் திரும்பத் திரும்பக் கூறியும் அவ்வம்மையார் இணங்காததைக் கண்டு மற்ற சஹாபிகளை அழைத்து,

"அக்கினிக்குண்டம் வளர்த்து இப்பொழுதே என் முன்னிலையில் இவரை உயிருடன் எரித்து விடுங்கள்" என்றூர்கள். இதைக் கேட்டவுடன் அவ்வம்மையார் தனது புதல்வரை அம்மாதிரி செய்யவேண்டாம் என்று மன்றாடினர். அப்பொழுது நாயகமவர்கள் அவ்வம்மையாரை நோக்கி, "உனது வயிற்றில்பிறந்த ஒரு காரணத்துக்காக அந்த மனிதனை இந்த உலக நெருப்பில் போடுவதைக் கண்டு சகிக்க முடியவில்லையென்றால், நாளைக்கு நரக நெருப்பில் அவனைப் போடுவதை நான் எவ்வாறு சகித்துக்கொண்டிருக்க முடியும்?" என்றார்கள்.

சகோதரர்காள்! நான் இதுவரை கூறியவைகள், நாயகமவர்களின் தன்மையைப் பொருத்த விஷயமாகும். ஆனால், அந்த நாயகமவர்களின் தொண்டுக்காகத் தங்களை 'குலாம்'களாக ஆக்கிக்கொண்ட ஸஹாபிகளின் நிலைமையைக் கவனியுங்கள். ஹஜ்ரத் "துல்கர்னைன்" (ரஹ்.) அவர்கள் 'யமன்' தேசத்திலிருந்தார்கள். நாயகமவர்களின் காலத்திலிருந்தார்களாயினும் அவர்களை முகமுகமாய்க்கண்டு களிக்கவில்லை. ஆயினும், 'உஹத்' யுத்தத்தில் நாயகமவர்களுக்கு ஒரு 'பல்' ஷஹீதானதைக் கேள்விப்பட்டு இருலோகத்துக்கும் ரக்ஷகரான நாயகமவர்களின் முன் பல் ஷஹீதாகி இருக்க, அவர்களின் குலாமின் (இந்த துல்கர்னைனின்) பல்லை வைத்துக் கொண்டிருப்பதா என்று ஒரு கல்லை எடுத்துத் தங்களது 32 பற்களையும் தட்டி எறிந்துவிட்டார்கள்.

நாயகமவர்களின் ஸஹாபிகள் என்ன! அவர்களது ஸ்திரீ ரத்தினங்களான 'ஸஹாபியாத்'துக்களும் உஹத் யுத்தத்தில் நாயகமவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற பிரஸ்தாபத்தைக் கேட்டு, மதீனாவிலிருந்து யுத்தகளத்துக்கு ஓடோடியும் வந்தனர். அதிலும் ஒரு ஸ்திரீயானவர் நாயகமவர்களின் முன்னிலையில்வந்து நின்றுகொண்டு பகைவர்களின் அம்புகள் நாயகமவர்கள்மீது படவிடாமல் தமது திரேகத்தால் தடுத்தார். அவ்வம்மையை ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் விலகும்படி எவ்வளவோ கூறியும் அந்த ஸஹாபிய்யா (ரலி.) அவர்கள் கேட்கவில்லை. மற்றொரு ஸஹாபிய்யா தமது தகப்பனார், மைந்தர், கணவன் ஆகியவர்களை ஏககாலத்தில் உஹதுச் சண்டையில் பறிகொடுத்தும் அவைகளையெல்லாம் கவனியாமல் நாயகமவர்களைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்ற அவாவினால் போர்க்களம்சென்றார். இவ்வாறான அருமையும் பெருமையும் உள்ள நாயகமவர்கள் நபியாக இருந்ததுபோல், 'பஹாஉல்லா'வும் 'குலாம் அஹ்மதும்' தங்களை நபியென்று தாவாச்செய்ததால் அதை நாம் இந்தச் சரித்திரத்துடன் ஒப்பிட்டுச் சுண்டிப் பார்க்கவேண்டியிருக்கிறது. நாயகமவர்கள் எதைச் சொன்னாலும் 'வஹி' அறிவிக்கப்பட்டே அல்லாமல் தங்கள் சுயேச்சையாகப் பேசமாட்டார்கள். இஸ்லாத்தின் நிமித்தமாகச் சகலத்தையும்துறந்தார்கள். குலாம் அஹ்மதுவோ தமது சிஷ்யர்களின் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கூறினர். இதிலிருந்து நீங்கள் விஷயத்தை நன்கு ஆலோசனை செய்து தெரிந்துகொள்ளுவீர்களாக.

7-வது பிரசங்கம்

(சென்னை லாலிஹால்)

மௌலானா அவர்கள், "பஹாயீ, காதியானி மதங்களின் அந்தரங்கம்" என்னும் விஷயமாய் அரியதோர் பிரசங்கம் நிகழ்த்தினர்கள். அதன் சாராம்ஸம் வருமாறு:—

நண்பர்காள்!

பஹாயீ, காதியானி மத்ஹபுகளின் அந்தரங்கம் என்பதுபற்றி இன்று பிரசங்கம் புரிவதாக விளம்பரம் செய்யப் பட்டிருக்கிறது. காதியானி மத்ஹபைப்பற்றி நீங்கள் ஓரளவு தெரிந்திருப்பீர்கள். ஆனால் பஹாயீ மத்ஹபைப்பற்றி நீங்கள் அதிகம் தெரிந்திருக்கமுடியாது. ஏனெனில், இவ்வியக்கம் இந்தியாவுக்கப்பாலுள்ள பாரசீகதேசத்தில் தோன்றி அங்கேயே அது முடிவும் பெற்றுவிட்டது. அவ்வியக்க கர்த்தா இந்தியாவிற்கு வரமுடியாமற் போய்விட்டதெனினும், வட இந்தியாவில் ஒருவாறு அவ்வியக்கம் தலைகாட்டிற்று. ஆதலின் அவ்வியக்கம் இன்னதெனத்தெரிந்துகொள்ளாதிருக்கும் உங்களுக்கு அதனை எடுத்துக் கூறவேண்டியது அவசியமே. ஏனெனில், நீங்கள் அவைகளைத் தெரிந்துகொண்டால் உங்கள் நாட்டில் தலைகாட்டி இருக்கும்படியான காதியானி இயக்கஸ்தாபகரான குலாம் அஹ்மத்காதியானி, பஹாயீ மத இயக்கத்தைப் பின்பற்றி ஒரு சில மாறுதலோடு அதை நடத்திவருகிறாரென்பதை நீங்கள் தெரிந்துகொள்ள ஹேதுவாயிருக்கும். ஆகவே முதலாவதாக "பஹாயீ" மத அந்தரங்

கத்தையும், அவர்கள் கொள்கையையும் விளக்கிக்கூற விரும்புகிறேன்.

மேலும் காதியானி மதத்தைப்பற்றியும், அதன் ஸ்தாபகரைப்பற்றியும், அவரது கொள்கையைப்பற்றியும், அவரது பிரசாரத்தைப் பற்றியும் நான் விளக்கும்போது காதியானி கொள்கைக்கும் பஹாயீ கொள்கைக்கும் இருக்கிற நெருங்கிய சம்பந்தம் உங்களுக்கு நன்கு விளங்கும்.

"பஹாயீ" மதம்

பஹாயீ மதஸ்தாபகரின் பெயர், மிர்ஜா அலி முஹம்மது என்பதாகும். இவரது தந்தையின் பெயர் மிர்ஜா ரிஜாபஜார். இவரது தாயின் பெயர் கதீஜா. இவர் 1819-வது வருஷம் அக்டோபர் மாதம் 3-ந்தேதி ஷீராஸில் பிறந்தார். இளம்பிராயத்திலேயே தந்தையை இழந்துவிட்டாராதலின் மிர்ஜா ஸெய்யித் அலி என்னும் அவருடைய தாய் மாமனல் போஷிக்கப்பட்டு அரபிக் கல்வியில் போதிய பாண்டித்துவமும் பெற்றுர்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "அன மதீனத்துல் இல்மி, வஅலிய்யுன் பாபுஹா" (அதாவது நான் கல்வி என்ற நகரமாக இருக்கிறேன். அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அந்த நகரத்தின் தலைவாசலாக இருக்கிறுர்கள்) என்று கூறிய ஹதீதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இந்த ஹதீதில் கூறப்பட்ட அலி தாம்தான் என்றுகூறினர். பின்னர் இவர் தன்னை "பாப்" என்றும் கூறிக்கொண்டார். இமாம் முஹம்மது இப்னு ஹஸன் அஸ்கரீ (ரஹ்.) அவர்கள் உலகத்தில் மறைந்திருப்பதாகவும், கியாமத்து நாளின் சமீபத்தில் "மஹ்தீ"யாக வெளியாவார் என்றும் ஷீஆக்கள் நம்பிக்கொண்டிருப்பதால், ஷீஆ வகுப்பைச்சேர்ந்த அநேகர், தம்மை மறைவாக இருக்கிற 'மஹ்தீ'யின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்வது வழக்கம். இதற்கேற்ப 1743-ம் வருஷத்தில் ஷெய்கு அஹ்மதுபின் ஷெய்குஜைனுல் அஷாயி என்பவர் தம்மை மறைந்திருக்கிற இமாம் மஹ்தீ என்று தாவாச் செய்தார். இதன்பேரில் பிரத்தியேகமாக ஒரு கூட்டமும் ஏற்பட்டது. இக்கூட்டத்துக்கு 'ஷெய்கிய்யா'க் கூட்டம் என்று பெயர். இவர் 1826-ல் மரணமடையவே ஹாஜி ஸெய்யிது காஜிம் சிஷ்தீ என்பவர் இவருக்குப்பின் கலீபாவானர். நான் மேலே கூறிய மிர்ஜா அலி முஹம்மது என்பவர் இந்த காஜிமிடம் கல்வி பயின்றவராதலின் இவருக்கும் இவ்வுணர்ச்சி தோன்றி மேற்கண்டவாறு தாவாச் செய்தார். பின்னர் தம்மையே மஹ்தீ என்றும் கூறினர். ஆயினும் அந்த நாட்டு அரசாங்கம் ஷீஆ மத்ஹபைப் பின்பற்றியிருந்தாலும், ஷீஆ மத்ஹபிலுள்ள உலமாக்களான முஜ்தஹிதுகள் இவரது தாவாவைப் பலமாக எதிர்ப்பார்களென்று பயந்ததாலும் இவர் தமது கொள்கையை வெகு இரகசியமாகப் பிரசாரம் செய்துவந்தார். அக்காலத்தில் வாலிபர்களிடையே புதிதாகத் தோன்றியுள்ள சுதந்திர உணர்ச்சியானது பாரசீகத்தில் தலைகாட்ட ஆரம்பித்தது. உடனே அவர், இவ்வாலிபர்களுடன் சேர்ந்தால் தமக்கு அதிக பலம் கிடைக்குமென்று நினைத்து அவர்களிடம் சேர்ந்துகொண்டார். தமக்குச் சிஷ்யர்கள் பெருகுவதைப் பார்த்து 'தப்ரேஸ்தான்' சென்று தம்முடைய பிரசாரத்தை மும்மரமாக ஆரம்பித்தார். அரசாங்கத்துக்கு விரோதமான கிளர்ச்சியும், இவரது இயக்கமும் ஒன்று சேர்ந்ததால் அரசாங்கத்துடையவும் ஷீஆ உலமாக்களுடையவும் கோபத்துக்காளாகி ஹிஜ்ரி 1266 ஷஅபான்மாதம் 20-ந்தேதி அரசாங்கத்தாரால் தூக்கிலிடப்பட்டார்.

'அலிமுகம்மதுபாபி' மரித்துப் போவதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னர், அதாவது ஹிஜ்ரி 1265-வது வருஷத்தில் 'மிர்ஜா யஹ்யா ஸுப்ஹுஅஜல்' என்பவரைத் தமது கலீபாவாக நியமித்தார். இந்த கலீபா 19 வயதுள்ளவராக இருந்ததால் இவருடைய சகோதரர் 'மிர்ஜா அக்பர் ஹுஸைன்' என்பவர் தமது இளைய சகோதரரை ஏமாற்றிக் கலீபாப் பதவியை யடைய விரும்பினர். அதாவது, அரசாங்கம் இவ்வியக்கத்துக்கு விரோதமாக இருப்பதைத் தமது இளைய சகோதரரிடம் கூறி, அவர் பின்னிருந்து வேலை செய்ய வேண்டுமென்றும், தாம் முன்னின்று வெளிப்படையாக வேலை செய்வதாகவும் கூறி ஏமாற்றினர். ஆனல் மிர்ஜா யஹ்யாவுக்கு அவ்வியக்கத்தாரின் பழக்கமும், சிநேகமும் கிடைத்துப் பலமும்ஏற்பட்டுப் போனதால் அவர் தம்மையே பாபுல்லாவின் கலீபா என்று தாவாச் செய்யலானர். இதனல் மிர்ஜா யஹ்யாவுக்கும் மிர்ஜா அக்பர் ஹுஸேனுக்கும் போட்டி ஏற்பட்டு இரண்டு கக்ஷியாகப் பிரிந்தனர். மிர்ஜா யஹ்யா என்பவருக்கு ஸுப்ஹு அஜல் என்ற பெயரும் இருந்ததால் அவர் பார்ட்டிக்காரருக்கு 'பாபிஅஜல்' என்றும்,

மிர்ஜா அக்பர் ஹுஸைனுக்கு பஹாவுல்லா என்ற பெயர் இருந்ததால் அவர் பார்ட்டிக்காரருக்கு 'பாபிபஹாயி' என்றும் பெயர்வந்தது. எனவே இந்த பஹாவுல்லாவும் கலீபா என்றும், மஹ்தீ என்றும் தாவாச்செய்து தமக்குக் கிடைத்த ஆதரவுக்குத்தக்கவாறு தன்னை நபி என்றும், ரஸூல் என்றும், அல்லாஹ் என்றும் கூடதாவாச்செய்தார்.

அவருடைய மதக்கட்டளைகள்

ஒவ்வொரு ஆயிரம் வருஷத்துக்குப் பின்னரும் ஷரீஅத்து மாற்றப்பட்டுப்போவதால், நபிகள் நாயகமவர்களின் ஷரீஅத்தும், திருக்குர்ஆனும் மாற்றப்பட்டுவிட்டது என்றும், தமக்கு "அல்பயான்" என்னும் புதிய வேதமொன்று கிடைத்திருப்பதாகவும் கூறினர். பின்னர் அந்த அல்பயான் என்னும் வேதத்திலுள்ள சட்டதிட்டங்களை ஒப்புக்கொள்ளாதவர்களெல்லோரும் காபிர்களென்றும் கூறினர்.

தவிர, வட்டி வாங்குவது ஹலாலாகும்; ஏனைய எல்லா வர்த்தகத் தொழில்முறையைப் போல் அதுவும் ஒரு தொழில்தானென்றார்.

விபசாரம் செய்வதற்கு இஸ்லாம் விதித்த தண்டனை சரியாக இல்லை; ஆனல் விபசாரம் செய்தவர்கள் அபராதம் கொடுத்துவிட்டால் போதுமானது என்று கூறி அபராதத்தொகையைத் தம்மிடம் கொடுத்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

பின்னர் தொழுவதற்கு கஅபாவைக் கிப்லாவாக வைத்திருப்பதை மாற்றி "அக்தஸ்" என்ற ஊரின் பக்கமாகத் திரும்பித் தொழ வேண்டும் என்று கட்டளையிட்டார்.

றமலான் மாதத்தில் நோன்பு நோற்பதை மாற்றி, வசதியான காலத்தில் 19 நோன்புகள் நோற்பது போதுமென்று கட்டளையிட்டார்.

ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்காவுக்குப்போக வேண்டியதில்லை யென்றும், எல்லோரும் ஷீராஜுக்கு வரவேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

"அரபாத்" மைதானத்துக்குச் செல்லுவதற்குபதிலாகத் தம்மை வைத்திருந்த ஜெயில் இருக்குமிடத்துக்குச் செல்லுவது போதுமென்று கட்டளையிட்டார்.

100 'மித்கால்' தங்கமுள்ளவர்கள் 19 மித்கால் தங்கத்தை ஜக்காத்தாக தன்னிடம் கொடுக்க வேண்டுமென்று திட்டம் செய்தார்.

இவ்விதமான புதுஇயக்கம் தோன்றியசிறிது காலத்துக்குப் பின்னர், பஞ்சாபில் குலாம் அஹ்மது தோன்றி இதே பஹாவுல்லாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்து தம்மை முஜத்திதென்றும், பின்னர் மஹ்தீ என்றும், மஸீஹென்றும், நபியென்றும் தாவாச்செய்து, தன்னை இவ்வுலகத்தையும் மானிட வர்க்கத்தையும் படைத்தவன் என்றும் படிப்படியாகக்கூறி வாதாடினர். தனக்கு வஹீ மூலம் வேதம் இறங்குவதாகவும் அவ்வேதத்துக்கு "பராஹீனே அஹ்மதீ" என்பதுபெயராகுமென்றும் கூறினர்.

காதியானி மதம்

பாஞ்சால நாட்டில், குர்தாஸ்பூர் ஜில்லா காதியான் என்னும் கிராமத்திலுள்ளதோர் குடும்பத்தில் மிர்ஜாகுலாம் அஹ்மத் பிறந்தவர். இவரது பிதாவின்பெயர் மிர்ஜா குலாம் முர்த்துஜா. குலாம் அஹ்மத் ஆங்கிலம், உர்தூ, பார்ஸி பாஷைகளை ஓரளவு கற்றவர். அவர் ஜீவனோபாயத்திற்காக ஏதாகிலுமொரு தொழிலிலமரவேண்டுமென வேலை தேடிச்சென்று மாதம் ரூ. 15 சம்பளத்தில் ஸியால்கோட்டில் ஜூனியர் கிளர்க்கு வேலையில் அமர்ந்தார். இச்சொற்ப வரும்படி இவர் குடும்பச் செலவிற்குப் போதுமானதாக இல்லாமையால்வேறு உயர் உத்தியோகம் தேட முயற்சித்தார். அவர் பரீட்சையில் தேர்ச்சியடைந்தவரல்லவாதலால் அவருக்கு உயர் பதவி உத்தியோகம் கிடைக்காமல் போய்விட்டது.

பின்னர் 3-வது கிரேட் வக்கீல் பரீட்சைக்குச் சென்றார். அதிலும் தேர்ச்சிபெறவில்லை. அதன்பின் தர்க்கம் செய்யும் துறையில் பிரயாசை எடுத்துக்கொண்டார். அதிலும் இவர் பலனடையவில்லை. பிறகு தமது ஊருக்கே திரும்பி வந்து மார்க்கக் கல்விகற்பதிலும் மார்க்க நூற்களை ஆராய்வதிலும் கவனம் செலுத்தினர். அதன்மூலம் அரபி பாஷையை ஓரளவு கற்றுக்கொண்டார்.

கிறிஸ்துவர்களுடனும், ஆரிய ஸமாஜிகளுடனும் மத தர்க்கவாதம் செய்யவும், கிரிஸ்துவ மதக் கண்டன நூல்கள், ஆரியமதக் கண்டன நூல்கள் எழுதவும் தாம் ஏற்பாடு செய்திருப்பதாகப் பிரபலப் படுத்திக்கொண்டு இவ்வேலைக்குப் பணவுதவி தேவையென்றும் விண்ணப்பம் செய்தார்.

அதுபொழுது ஸர். சையித் அஹ்மதுடைய விளக்கங்களைத் தம் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டலானர்; பஹாவுல்லாவின் போத

னைகளில் பலவற்றை தம் போதனைக ளெனக் கூறலானார். விஷயமறியாத பலர் அவ ரது சூழ்ச்சி வலைக்குள் சிக்கி இவருக்கு உதவி புரிய ஆரம்பிக்கவே, நாளுக்குநாள் இவருக்கு பலமும் செல்வாக்கும் அதிகரித்தன; இவ ருக்கு சன்மானங்களும், நன்கொடைகளும் கிடைக்கலாயின. இதிலிருந்து, எவ்வித தவ றான கொள்கையை ஜனங்களிடையே அவர் கூறினாலும் அவைகளை ஆதரிக்க பலர் முன் வருவார்களென்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட் டது.

இதற்குப் பின்பு தாம் தான்'முஜத்தித்'என் றும்,'மஸீஹ்'என்றும், 'மஹ்தீ'யென்றும், இறு தியாகத் தாம் ஒரு'நபி'யென்றும் தாவாச்செய்த தோடு, அதற்கு ஆதாரமாக பல நூற்களையும் பிரசுரித்தார். நபியென்ற தாவாவுக்கு, மற்ற ஏனைய நபிமார்களைப்போல் முஅஜிஸாத் (அற்பு தச் செய்கைகள்) காட்டும்படியாக ஜனங்கள் கேட்பார்களென்பதை உணர்ந்து, முன்ஜாக்கிர தையாக நபிமார்களின் முஅஜிஸாத்துகளெல் லாம்வீண் கட்டுக்கதைகளென்றும், பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாதவைகளென்றும் கூற ஆரம் பித்தார்.

எனவே, எம்பெருமானார் நபிகள்நாயகம் (ஸல்.)அர்வகளுடையஎச்சரிக்கைப்படிசந்திரன் பிளந்ததாகக் கூறப்படும் முஅஜிஸாவுக்கு குயுக் தியானதப்பர்த்தம்செய்து, நபிகள்நாயகம்(ஸல்.) அவர்களுக்கு ஏற்பட்ட முஅஜிஸாவானது சந்தி ரக்கிரஹணமேயாகுமென்றும், அவ்வித முஅ ஜிஸா தமக்கும் ஏற்பட்டிருப்பதாகவும், இது மட்டுமின்றி அம் முஅஜிஸாவைப் பார்க்கினும் மேலான முஅஜிஸா தமக்குண்டானதாகவும், எம்பெருமானார் நபிகள்நாயகமவர்களுக்குசந்திர கிரஹணம் மட்டும் ஏற்பட்டதென்றும், தமக்கு சூரிய சந்திரன் இரு கிரஹணங்களும் ஏற்பட் டிருக்கிறதென்றும் தாவா செய்தார்.

மேலும் பல தீர்க்கதரிசனம் (முன்னறிவிப்பு) கூற ஆரம்பித்தார். ஆனால் இவருடைய தீர்க்க தரிசனங்களெல்லாம் பொய்யாகவே முடிந்தன; இவர் கிறிஸ்துவர்களுடன் செய்த மத தர்க்க வாதங்களில் இவரே தோல்வியடைந்தார். எப் படியெனில், கிறிஸ்துவர்களின் திரியேகக் கொள்கை அதாவது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உண்மை என்பதும், ஹஜ்ரத் ஈஸா நபிக்கு (அலை) தகப்பன் உண்டென்பதும், ஜனங்களின் பாவநிவர்த்திக்காக இயேசு சிலுவையில் அறை யப்பட்டுப்போனாரென்பதும்கிறிஸ்துவர்களின் கொள்கைகளாகும். இஸ்லாம் மதக் கொள்கை களோவெனில், இவைகட்கு நேர்மாற்றமான வைகளாகும். அதாவது ஏகத்துவம், ஈஸா நபியவர்கட்கு தகப்பனாரில்லாமை, ஈஸா நபி அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை யென்பன சுன்னத் ஜமாஅத் முஸ்லிம்களின் கொள்கைகளாகும்.

மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியின் கொள்கைகள் கிறிஸ்துமதக் கொள்கைகளே யாகுமென்பதற்கு அவருடைய நூற்களே சான்று பகருகின்றன. காதியானிகள் திரி யேகத்துவத்தையும், ஈஸா (அலை.) அவர் களுக்கு தகப்பன் உண்டென்பதையும், அவர் கள் சிலுவையில் அறையப்பட்டார்களென் பதையும் ஒப்புக்கொண்டு அதற்கேற்றவாறு நூற்களும் இயற்றியுள்ளனர். இதிலிருந்து, காதியானிகள், கிறிஸ்துவர்களுடன் மததர்க்க வாதம் செய்தபொழுது கிறிஸ்துவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டு காதியானிகள் தோல்வி யடைந்ததாகவே ஏற்படுகின்றது.

தீர்க்க தரிசனத்தின் கதி

குலாம்அஹ்மத் தம்முடைய பந்துக்களி லுள்ள'முஹம்மதீபேகம்'என்னும்9வயதுச்சிறு மியை விவாகம்செய்துகொள்ள ஆசைகொண்டு தமக்கும் இச்சிறுமிக்கும் 'ஆலமெமலக்கூத்' தில் விவாகமாகி விட்டதால், அப்பெண்ணை தமக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி அப்பெண் ணின் பெற்றோரை வேண்டி படாதபாடுபட் டார்; அப்பெண்ணை எவ்வாற்றாலும் அடைய லாமென்னும் எண்ணங்கொண்டு பல சூழ்ச்சி கள் செய்தார். முஹம்மதீ பேகம் இவரது மருமகளுக்கு பந்துவானபடியால், முஹம்மதீ பேகத்தைத் தமக்கு விவாகம் செய்துவைக்கா விடில் தம் மகன்மூலம் மருமகளுக்கு தலாக் கொடுக்கும்படி செய்வதாகவும் பயமுறுத்தினர். ஆனால் அந்தபயமுறுத்தல் யாதொரு பயனை யும் தரவில்லை.

மிர்ஜா வயது முதிர்ந்தவராக இருந்ததால் அப் பெண்ணை இவருக்கு விவாகம் செய்து கொடுக்க முகம்மதீ பேகத்தின் பெற்றோர் மறுத்து, வேறு ஒரு வாலிபனுக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டார்கள். அதன்பேரில் மிர்ஜா சாஹிப் கோபாவேசங்கொண்டு பல சாபங்களிட்டு முஹம்மதீ பேகத்தின் புருஷ னும், பெற்றோர்களும் இரண்டு வருஷத்தில் இறந்துவிடுவார்களென்றும், அதன்பின் அம்

முஹம்மதிபேகம் தன் நிக்காஹ்விலேயே வருவாளெனவும் தீர்க்கதரிசனம் கூறினர். ஆனால் அவரது தீர்க்கதரிசனம் பொய்யாயிற்று. மிர்ஜாவே இறந்து போனர். முஹம்மதிபேகம் தமது புருஷருடனும், குழந்தை குட்டிகளுடனும் சுகமே வாழ்ந்து வருகிருள்.

இவ்வாறே இவரது முன்னறிவிப்புகளெல்லாம் பொய்யாயினவென்று ருசுப்பிக்க பல அத்தாட்சிகள் உள.

பஞ்சாபில் பிளேக் நோய் பரவிய சமயம், காதியானுக்கு பிளேக் நோய் அண்டாதெனக் கூறினர். காதியானில் பிளேக்நோய் ஏற்படவே, தம் வீட்டின் காம்பவுண்டிற்குள் அண்டினவர்களுக்கு அந்நோய் வராதெனச் சொன்னர். எல்லோரும் தம் வீட்டுக்குள் நுழைந்து தங்க இடமில்லாதபொழுது, தம் வீட்டை விசாலப்படுத்திப்பெரிதாக்கசந்தா வசூலித்து வீட்டைப் பெரிதாக்கிக் கொண்டார். கடைசியில் இவர் வீட்டிற்குள்ளேயே இவரது சிஷ்யனுக்குப் பிளேக் நோய் ஏற்பட்டது. இதிலிருந்து இவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் பொய்யாக முடிந்தது புலனுகவில்லையா?

வோகிங் மிஷனும் மிர்ஜாவின் கோஷ்டியைச் சேர்ந்ததேயாகும். இம்மிஷனை யுடையோர் தாங்கள் தனிக்கட்சி என்று சொல்லிக்கொண்டாலும் இவர்கள் யாவரும் ஒரே கொள்கையையுடையவர்கள்தான். ஆனல் மிர்ஜா குலாம் அஹ்மதை இன்னேர் நபியென்பதாகக் கூறுவிடினும் அவரை 'முஜத்தித்' யென்றும், தங்களுக்கு வழிகாட்டியென்றும், அவருடைய உபதேசத்தைப் பின்பற்றியே தாங்கள் நடப்பதாகவும் காஜா கமாலுத்தீன், மிஸ்டர் முஹம்மத் அலி, நண்பர் சத்ருத்தீன் முதலானேர் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

பஹாயி மத்ஹபைப்பின்பற்றிய கலீபாக்கள் பிரிந்ததுபோலவே, மிர்ஜாவின் சீடர்களும் கலீபா விஷயத்தில், லாகூர் பார்ட்டி என்றும், மிர்ஜாயி பார்ட்டி என்றும் இருபிரிவுகளாகப் பிரிந்துள்ளார்கள். பஹாயிகள் தங்கள் மதஸ்தாபகரின்கொள்கைகளைப் பின்பற்றி நடந்து வந்ததுபோலவே, மிர்ஜாவுடைய கலீபாக்களும், அவரது கோஷ்டியினரும் மிர்ஜாவின் கொள்கைகளைப் பின்பற்றி நடந்துவருகின்றனர். ஆகையால் வெளித் தோற்றத்தில் மிர்ஜாயிகள் இரு பிரிவாகக் காணப்படினும் உண்மையில் எல்லோரும் ஒரே கொள்கையையுடையவர்களேயாவர். இவ்விரு கோஷ்டியினர்களுக்கிடையே நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதென்பது எழுத்துமூலமாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

முஹம்மத் அலி ஆங்கிலத்தில் எழுதியுள்ள இங்கிலீஷ் ஹோலி குர்ஆனை அரபி, உருது, பார்ஸி இவைகள் அறவே தெரியாத பி. ஏ. ஒருவர் இங்கு தமிழில் மொழிபெயர்ப்பதாகக் கேள்வியுற்று வருந்துகிறேன். நீங்களெல்லோரும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

நான் மேலே கூறியுள்ள "பஹாயி" மதக் கொள்கைகளும், "காதியானி" மதக்கொள்கைகளும், அவர்களுடைய தாவாக்களும், அவர்களுடைய நடை முறைகளும், அவர்களால்இயற்றப்பட்ட நூற்களில் கூறப்பட்டவைகளேயாகும். அந்நூற்களை இப்பொழுதும் என் இருப்பிடத்தில் தயாராக வைத்துக்கொண்டிருக்கின்றேன். அதைப் பார்க்க விரும்புவோர்கள் என் இருப்பிடத்திற்குவந்து தாராளமாகப் பார்த்துக் கொள்ளலாம். மிர்ஜாவையும், அவரது கோஷ்டியினரையும் காபிர்களென்று உலமாக்கள் பத்வா அளித்திருக்கிருர்களெனினும், நான் என் வாயால் அவர்களை காபிர்களென்று என் புறத்தால் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில், மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியினுடைய முன்னுக்குப்பின் முரண்பட்ட சொற்களே அவரையும் அவரது கோஷ்டியினரையும் காபிர்களென்று நிரூபிக்கின்றன. இதற்கும் அவருடைய நூற்களிலிருந்தே ஆதாரம் காட்ட நான் தயாராக இருக்கிறேன். ஆகையால் இவர்களின் தவருன கொள்கைகளைவிட்டு சாமான்ய ஜனங்களைப் பாதுகாக்கவேண்டியது அத்தியாவசிமாகும்.

வழிகெட்டவர்களின் சூழ்ச்சிகளில் நாம் அகப்படாமல் நம் அனைவோரையும் ஆண்டவன் காப்பானுக!

8-வது பிரசங்கம்

(பரங்கிப்பேட்டை)

சகோதர சகோதரிகாள்!

கடுமையான வெய்யிலில் என்னை வரவேற்று உபசரித்து என் உபந்நியாசத்தைக் கேட்பதற்கு பல பாகங்களிலிருந்தும் கூட்டம் கூட்டமாக நீங்கள் இவண் வந்து குழுமியிருப்பதற்கு நான் நன்றிபாராட்டுகிறேன். சரித்திர சம்பந்தமான இந்த ஊரை கண்ணுறவும், பெரியார்

களை ஜியாரத்துச் செய்யவும் எனக்கு சந்தர்ப்பமளித்ததற்கு வந்தனமளிக்கிறேன். அப்பெரியார்களின் ஆத்மார்த்த ஈர்புதான் என்னை இவ்விடம் கொணர்ந்திருக்கிறதென்றே நினைக்கிறேன். அவர்களுடைய ஆதிகால சரித்திரத்தைப் பார்ப்பீர்களானால், இந்த குப்ரிஸ்தானத்தில் தன்னந்தனியே வந்து நின்று இஸ்லாத்தைப் பிரசாரஞ் செய்திருக்கிறார்களென்பதைக் கண்டுகொள்வீர்கள். அவர்கள் மூலமாய்த்தான் இவ்வருமையான இஸ்லாம் நமக்கு வெகு சுலபமாகக் கிடைத்துள்ளது. அதற்காக நம்முடைய சகல ஆஸ்திகளையும் அவர்களுக்காக அர்ப்பணம் செய்துவிட்டால்அது மிகைப்பட்டதாகாது.

சகோதரர்களே! நான் இதுபொழுது என்னுடைய உபன்னியாசத்தை ஆரம்பிப்பதால் அதனை கவனமாய்க் கேட்பீர்களாக! பெரியவர்களுக்கும் மேன்பட்ட வஸ்துக்களுக்கும், சிறுவர்களும் தாழ்ந்த வஸ்துக்களும்அடிபணிவது இயற்கைச் சட்டமாகும். இதனை ஜனங்கள் எவ்வளவு தூரம் அமுல் நடத்துகிறார்கள் என்பதை கவனிக்கவேண்டும். 1350 வருஷங்களுக்கு முன் மானிடனுடைய தன் மதிப்பென்ன? எதற்காக அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான்? என்பதைக்கூட அகாலத்திலுள்ளோர் அறியாதிருந்தார்கள். மேன்மை பொருந்திய மானிடன், அவனது உபயோகத்துக்கென்றுபடைக்கப்பட்ட கல்லுகளையும் மரங்களையும் விலங்கினங்களையும் பூஜிக்கிறவனாகயிருந்தான். நாகரீகம் மிகைத்த இக்காலத்திலுங்கூட இவ்வழிய தொழிலை செய்கிறார்களென்றால் முற்கால விஷயத்தைச் செப்பவும் வேண்டுமோ?

எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தோன்றிய பின் மானிடனின் அந்தஸ்தையும் மானிடன் மேன்மையான கருத்துக்காகப் படைக்கப்பட்டிருக்கிறானென்பதையும் நமக்கு விளக்கிக் காட்டினார்கள்; ஏகத்துவத்தை சகல விபரங்களுடன் துலக்கினார்கள்.

இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் அவர்களுடைய போதனையை கவனியுங்கள். "நிச்சயமாய் என்னுடைய முகத்தைக் கோளம் பூகோளங்களைப் படைத்தவன் பக்கல் திருப்பிவிட்டேன். நான் நேர்வழிஉடையவனாவேன். இணைவைக்கக்கூடியவனல்லேன். நான் உயிர் வாழ்வதும் இறப்பதும் அல்லாஹ்வுக்காகவேயிருக்கும். (அல்குர் ஆன்)

ஆண்டவனுக்காகவே உயிர் வாழவேண்டும்; அவனுக்காகவே மரிக்கவேண்டும் என்னும் கருத்தைத் துலக்க முன்வந்து இது சம்பந்தமான சம்பவமொன்றை விவரிக்கிறேன் கேளுங்கள்!

ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு நாள் அலி (ரலி) அவர்கள் மடியில் படுத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். அதுபொழுது பிதாவிடத்தில் அடியிற்கண்ட விஷயத்தை வினவினார்கள்.

ஹஸன் (ரலி):—தங்களுக்கு என் மீது பிரியம் உண்டா? என் தமயனார் ஹுசைன் அவர்கள் மீதும் பிரியம் உண்டா?

அலி (ரலி):—ஆம்.

ஹஸன்(ரலி):—அதேபோல் எங்கள் தாயார் பாத்திமாமீதும் பிரியம் உண்டா?

ஹஸன் (ரலி):—அப்படியானால், எங்கள் பாட்டனாரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் பிரியம் உண்டா?

அலி (ரலி):—ஆம்.

ஹஸன் (ரலி):—அப்படியானால், உங்களுக்கு ஹிருதயம் ஒன்றா? இரண்டா? அலி (ரலி):—அருமை மகனே! இப்பொழுது தான் உன்னுடைய கருத்தை உணர்ந்தேன். ஹிருதயம் மனிதனிடத்தில் ஒன்றுதான். அதனுடைய பிரீதி என்பதும் ஒன்றுதான். மனிதன் அல்லாஹ்வைத்தான் "முஹப்பத்" வைக்கவேண்டியது. மற்றப் பிரியங்களடங்கலும் அதற்கு உள் புகுந்ததாகும். அல்லாஹுத்தஆலா பிள்ளைகளையும் சம்சாரங்களையும் நபிமார்களையும் பெரியோர்களையும் முஹப்பத் வைக்கும்படி நமக்கேவியுள்ளான். அதற்காகவே நாம் இவைகளை நேசிக்கிறோம். எனவே, முஹப்பத் அடங்கலும் அல்லாஹ்வைப் பொருத்துத்தான் இருக்கிறதென்பதை உணர்வாயாக எனக் கூறினார்கள்

இஃது முஹப்பத்தின் நமூனாவாகும். கோபத்தைக் குறித்துள்ள ஓர் சம்பவத்தையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

செய்யிதுனா அலி (ரலி.) அவர்கள் ஓர் போரில் எதிரியுடன் மல்லாட நேர்ந்தது. அதுபொழுது அவனைக் கீழே தள்ளி நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்து வாளாயுதத்தையும் அவன் கழுத்தின்மீது வைத்து விட்டார்கள். அவன் ஹஜ்ரத் அவர்களின் முகத்தில் காரித்துப்பிவிட்டான். இந்தமுக்கியமான சந்தர்ப்பத்தைக் கைவிட்டு அவன் மீதிருந்து கீழிறங்கி நின்று விட்டார்கள். அவன் இதைக்கண்டு

திகைத்து எழுந்து நின்று தன்னை விட்டுவிட்ட காரணத்தை ஹஜ்ரத் அவர்களின் சமுகத்தில் வினவினான். "ஏ என்னுடைய எதிரியே! அல்லாஹ்வுக்காகப் போர்புரிந்து உன்னையும் தோல்வியுறச்செய்தேன். கடைசி சந்தர்ப்பத்தில் என் முகத்தில் உமிழ்ந்துவிட்டாய். எனக்குக் கோபம் எழுந்துவிட்டது. இப்பொழுது உன்மீது வாட்பிரயோகம் செய்வேனாகில் அது அல்லாஹ்வுக்காகவல்லாது என் கோபாவேசத்துக்காகவென்று ஏற்படும். அதனால் உன்னை விட்டுவிட்டேன்" என்று விடை அளித்தார்கள். இதைக்கேட்ட அந்த எதிரி இஸ்லாத்தின் உன்னதத்தையும், கலப்பற்ற தன்மையையும் தெரிந்து உடனே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். இஃதென்ன! மற்றும் சில சந்தர்ப்பத்தில் இவ்வாறான நேர்மையுள்ள நடப்புகளினால் சேனாதிபதியும், சேனைகளும் இஸ்லாத்தைத் தழுவி யிருக்கிறார்கள். இதிலிருந்து, அல்லாவுக்காகவே வாழ்க்கையை நடத்தவேண்டும்; அவனுக்காகவே மரணிக்க வேண்டும் என்னும் கருத்து புலனாகிவிட்டது.

மேனாட்டினரின் லௌகிக முன்னேற்றத்தைக்கண்டு நீங்கள் மலைக்கின்றீர்கள். அவர்கள் வைதீகமுன்னேற்றத்தைக் கிஞ்சித்தும் கவனிக்கிறார்களில்லை. அதனால் அவர்களுடைய முன்னேற்றம் பிரதானமானவையென்று கருதிவிட வேண்டாம். நம்மில் சிலர் இவ்வாறே இருக்கிறார்கள். ஏனப்பா! தொழவில்லை என்றால், "துன்யாவின் காரியாதிகள் என்னை விடுகிறதில்லை" என்கின்றனர். இவர்களுடைய மஅபூத் (வணக்கத்திற்குரியவை) இப்பொருள்களா? அல்லாஹ்வா! என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஈதென்ன? நான் வட இந்தியாவில் சமீபத்தில்சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அதுபொழுது ஒரு பீர்சாஹிப் ரூ. 1—3—0 நஸர் (காணிக்கை) வாங்கிக்கொண்டு பொது ஜனங்களுக்கு "முரீது" கொடுப்பதைக் கண்டேன். அதன்பின் அவர், முரீதுகள் தொழுகை, மற்ற எந்தக் கடமையும் செய்யவேண்டியதில்லையென்றும் சொன்னாராம். அவர் எவ்வாறான திருடர் என்பதை கவனியுங்கள்? இவர் திரவியத்தை ஆண்டவனாக மதித்துவிட்டார்போலும். இதனால்தான் அல்லாஹுதஆலா தனது திருமறையில்,

"தன்னுடைய இச்சையை தன் ஆண்டவனாக மதித்துக் கொண்டவனை நீர் பார்க்கவில்லையா?" எனக் கூறுகிறான்.

பௌதீகசரீரத்துடனும், அருவருக்கத்தக்க குணங்களுடனும் மானிடன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் போதனை மானிடனை அல்லாஹ்வுடன் சேரக்கூடியவனாகச் செய்துவிட்டது. பாலைவனத்தில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்த வகுப்பினர் கைஸர், கிஸ்ராவுடைய கோட்டைகளையெல்லாம் ஜெயித்து ஜெய சீலர்களாகத் திகழும்படி ஆகிவிட்டது. அன்னார் பெருமானவர்களின் போதனையால் அக்காலை இலௌகிகச் செல்வம் பெற்றிருந்ததோடு வைதீகத்திலும் சிறப்புற்று விளங்கினார்கள். என்னே! உலகரட்சகர் நபிகட் பெருமான் (ஸல்.) அவர்களின் போதனையின் மகத்துவம்?

நேரம் அதிகமாய் விட்டதால், மேனாட்டுக் கலைபயிலும் வாலிப நண்பர்களுக்கு சில விஷயம் கூற விரும்புகிறேன். காதியானிக் கொள்கையைப்பற்றியும் சிறிது கூறவிரும்புகிறேன். மிர்ஜா குலாம் அஹ்மது 15 ரூ. சம்பளத்திலிருந்து அதைவிட்டு நீங்கியபின், தன்னை நபி என்றும், மஹ்தீ என்றும், மஸீஹ் என்றும், தாவாச்செய்து இலட்சக் கணக்கான தொகைகளைச் சேமித்து வைத்து விட்டுப் போந்தார். உண்மை நபியின் போக்குக்கும், இவரது போக்குக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்துப் பாருங்கள். இவருடைய சீடர்களில் லாகூர் பார்ட்டியார், இவருடைய நுபுவ்வத்தை ஒப்புக் கொள்ளவில்லை யெனக் கூறி ஜனங்களை ஏமாற்றுகின்றனர். இதுமட்டுமா? மிஸ்டர் முகம்மத் அலி குர்ஆனுக்கு எழுதிய ஆங்கில தர்ஜுமாவில் "வஹியின் வாசல் அடைபடவில்லை" என்றும், அதே புத்தகம் "ஜும்ஆ" அத்தியாயத்தில் மிர்ஜாவுடைய மஸீஹிய்யத்தை ஒப்புக் கொண்டும் எழுதியுள்ளார். மற்றொரு ஆச்சரியமென்ன வெனின், அந்த தர்ஜுமாவில் காதியானிக் கொள்கைகள் அனைத்தையும் நிரப்பி வைத்திருக்கும் நிலைமையில், அப் புத்தகத்திற்கு குர்ஆனின் தர்ஜுமா வென்று பெரியரிட்டிருப்பதே யாகும். அவர் அந்த ஆங்கிலிய நூலுக்கு அவ்வாறு பெயரிடுவதைப் பார்க்கினும் தனியே ஒரு நூல் இயற்றியுள்ளதாகக் கூறிக்கொள்வது உசிதமாகும்.

காஜா கமாலுத்தீன் ஒரு தடவை மிஸ்ரில் தங்கியிருந்தபோது அவரிடம் வோக்கிங் மிஷனைப் பற்றிக் கேள்வி கேட்கப்பட்டது. அவர் வோக்கிங்குக்கும் மிர்ஜாவுக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை யென்று சொல்லி விட்டார்.

அதே சமயத்தில் வெளியான லாகூர் "இஷா அத்துல் இஸ்லாம்" மாசிகையில் வோக்கிங் மிஷனைப்பற்றி "இஸ்லாத்தின் மீது யான் ஆர்வங்கொண்டு வோக்கிங்கில் யான் தொண்டு செய்வதற்கு எனக்கேற்பட்ட பைத்தியமானது மிர்ஜா சாஹிப் என் தலையில் ஊதியதனாலேற் பட்டதாகும்" என்று வரைந்திருக்கிறார். இது இவர்களின் மக்கரும், மோசமுமாகும். ஆகவே இவர்களின் கொள்கையில் முஸ்லிம்கள் சிக்கக்கூடாதென எச்சரிக்கிறேன்.

பின்னர் மவ்லானா அவர்கள் மஹ்மூது பந்தர் வாசிகள்செய்த உபசாரத்திற்கு நன்றி செலுத்தி பிரசங்கத்தை முடித்தார்கள்.

9-வது பிரசங்கம்

(பண்டாரவாடை.)

மௌலானா அவர்கள் 'அல்லாஹ் அக்பர்' என்னும் தொனி முழக்கத்தினிடையே எழுந்து முகவுரையாக குத்பா ஓதியபின் 'உண்மை மூமினின்லட்சணம்' யாதாகுமென்பது பற்றிசொற் பெருக்காற்றியதின் சாராம்ஸம் வருமாறு:—

சகோதரர்களே!

(உண்மை) மூமினேன்போரிடம் "அல்லாஹ்" எனக்கூறப்படுமோயின், அன்னவரின் ஹிருதயங்கள் ஆடிவிடும்; மேலும் அவர்களுக்கு அவனின் (அல்லாஹ்வின்) திருஷ்டாந்தங்களை ஓதிக் காண்பிக்கப்படுமோயின் அவர்களின் விசுவாசம் மிகைப்பட்டு அவர்களின் றப்பின்பால் (அவர்கள் சகல) பொறுப்பையும் சாட்டி விடுவார்கள்; அவர்களே உண்மை விசுவாசிகளாவார்கள்; அவர்களுக்கு அவர்கள் றப்பிடம் பதவியும், பாப மன்னிப்பும்; அரிய பிரதிபலனும் உண்டு.

உங்கள் நாட்டுப் பாஷையை யான் அறிந்து கொள்ளாமைக்கு வருந்துவதோடு இந்திய பாஷையான உர்தூவை உங்களில் மிகுதம் பேர் கற்காமலிருப்பதைக் கண்டு யான் சஞ்சலமடையாமலிருக்க முடியவில்லை. நான் உங்கள் தமிழ் பாஷையையும் கற்கலாமாயினும், மனிதரென்றால் யாருக்குச் சொல்வதென்பதையும், மனித வகுப்பார் படைக்கப்பட்ட காரணமென்னவென்பதையும் அறியாத உலக ஜனங்களின் பாஷையைக் கற்பதுதான் இது சமயம் மிக்க அத்யாவசியமென நான் கருதுகிறேன்.

மேனாட்டுப் பாதிரிமார்கள் தங்கள் கிறிஸ்துவப் பிரசார மிஷினைக் கீழ் நாட்டில் ஏற்படுத்தி தமிழ் பாஷையையுங் கற்றுக்கொண்டு "தாழ்த்தப்பட்டோரை ரட்சிக்கும் மதம் கிறிஸ்து மதமே யாகும்; கிறிஸ்து நாதர் சிலுவையில் அறையப்பட்ட தன் காரணத்தால் நீங்கள் மன்னிக்கப்பட்டு விடுகிறீர்கள்." என்பதாக பிரசாரஞ் செய்து வருகிறார்கள். அவர்களைப் போலவே நானும் தாழ்த்தப் பட்டோரிடம் உண்மை மார்க்கத்தைப் போதிக்க வேண்டும். அவர்களும் செய்யிதினா ஆதம் (அலை.) அவர்களின் புத்திரர்களே யாவர். ஆதலின் நாயனின் முன் தலை சாய்க்கவேண்டிய அவசியத்தையும், மனுக்கள் படைக்கப் பட்ட காரணத்தையும் நானும் அவர்களுக்குப் போதிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அக்குழாத்தினர் தாழ்ந்த ஸ்திதியையடைந்து தாழ்த்தப்பட்டவர்களென நாமம் சூட்டிக் கொண்டதற்குக் காரணம், அன்னோர் தங்கள் நிலையையும் தங்களைப் படைத்த தன்நோக்கங்களையும்பிரயத்தனப்பட்டு அறிந்து கொள்ளாத குற்றமாகுமேயன்றி, கருப்பு சிவப்புநிறத்தை அனுசரித்தன்று. அங்ஙனம் உலகிலுள்ள மாந்தர்கள் தங்கள் நிலையையும், தங்கள் நாயனையும் பூரணமாய் அறிந்து கொள்வாராகில் தாரதம்மியமின்றி உலகிலுள்ள தாழ்ந்த உயர்ந்த சகல வகுப்பாரும் ஒருமைப்பட்டு தோளோடு தோள் வைத்துத் தொழ நேர்ந்துவிடும். அங்ஙனம் ஏற்பட முயற்சிப்பது ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

தீண்டாமை விலக்கு இயக்கம்

காந்திஜீயின் "தீண்டாமை ஒழித்தல்" என்ற இயக்கம் தாழ்த்தப்பட்டோர்மீது அநுதாபங் காட்டி ஆண்டவனுக்காக ஆரம்பிக்கப்பட்டதெனக் கருதிவிட வேண்டாம். காந்திஜீயின் அபார "பொலிட்டிக்கல்" சூழ்ச்சியால் "கம்யூனல் அவார்டு" என்னும் வகுப்புவாதப் பிரசினை ஆரம்பித்த பின்பு தான் ஹிந்து வகுப்பாரின் மெஜாரிட்டியைக் கருதி அவர் இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்கின்றார். காந்திஜீயின் இக்கொள்கை உண்மையில் ஆண்டவனின் அடியாருக்கு சேவைசெய்து அவர்களை உயர்நிலையிலாக்கி விட வேண்டுமென்றிருக்குமாயின், இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னரே அவர் இவ்வியக்கத்தை ஆரம்பித்திருப்பார்.

கிறிஸ்துவப் பிரசாரம்

இதுபோலவே கிறிஸ்தவப் பாதிரிமார்களின் பிரசாரமும். அது, தங்கள் மதத்தினரை அதிகப்படுத்தி உலகோருக்குக் காண்பிக்க வேண்டு

மென்ற நோக்கத்துடன் நடைபெறுகிறது. அவர்களின் தாரதம்மிய அநுஷ்டான முறைகளைக் கவனிக்குமிடத்து இதுவிஷயம் நன்கு விளங்கும். அவர்களில் கறுப்பு, வெள்ளை யென தாரதம்மியமிட்டு அவ்விரு குழாத்தினர்களுக்கும் வெவ்வேருகக் கோவில்களையும் பிரித்து வணக்கம் புரிந்து வருகின்றனர். இவர்களும் தங்கள் மதத்தின் உண்மைத் தத்துவங்களை உலகோருக்கு எடுத்தோதி அதன் துவாராவாக உலக மக்கள் பயனடையவேண்டுமென்னுங் கருத்துக்கொண்டு இப்பிரசாரச் சேவையை சுயக்கருத்தன்றி ஆண்டவனுக்காகச் செய்வார்களாகில், தெய்வவணக்கம் புரிகிருர்களெனச் சொல்லப்படும் மாதா கோவில்களில் இங்ஙனம் நிற வித்தியாசம் பாராட்டி பிரித்தமைத்திருக்கமாட்டார்கள். ஆதலால் இவர்களின் பிரசாரமும் தெய்வப்பற்றுக்கொண்டதன்று.

இஸ்லாம்

ஆனல் நமது பரிசுத்த இஸ்லாம் மதத்தின் உயரிய போதனைகளானது, மாந்தர்களின் நிலையையும், அவர்கள் உன்னதமாக சிருஷ்டிக்கப்பட்ட தன்மையையும் விளக்கி, மாந்தர்களுக்குள் சமத்துவ, சகோதரத்துவ வாஞ்சைகளை வளர்த்து அவர்களை உச்ச ஸ்திதியிலேற்றி விடும் தெய்வப் பற்றுக்கொண்டொழுகுமாறு செய்யக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய உத்தம சத்தியபோதனைகளையும் உயரிய கோட்பாடுகளையுமுடைய மதமாக இஸ்லாம் விளங்குவதினலேயே இது சத்தியமதமென்றும், இதர மதங்கள் அசத்திய மதங்களென்றும் ஊர்ஜிதமாகி விடுகிறது.

நண்பர்காள்! உங்கள் தென்னுட்டில் அசத்திய மதஸ்தர்களான பிரசாரக் கோஷ்டியார், பாமர மக்களை ஏமாற்றி அவர்களைப் படுகுழியில் தள்ளிவிடும் நோக்கத்துடன் புரிந்து வரும் வழிகெட்ட பிரசாரத்திற்கு எதிரிடைப் பிரசாரம்புரிய தென்னிந்திய உலமாக்கள் கட்டாயம் முன்வரல் வேண்டும். இன்றேல், இந்நாட்டு பாமர மக்கள் அம்மோசக்கார பிரசாரகர்களின் வலையில்சிக்கி அந்தகாரத்திலாழ்ந்து விடும் குற்றம் உலமாக்கள் தலைகள்மீதே மறுமைநாளில் சுமத்தப்பட்டு, நாயகமவர்கள் நட்பையும் ஷபாஅத்தையும் அடைவதைவிட்டும் ஆதரவிழந்தவர்களாகும்படி நேரிடும். உஷார்! மோசக்காரக்கோஷ்டியார் ஓநாய்களை போன்று திரிந்துவருகின்றனர். ஆகவே, நீங்கள் ஆழிய தூக்கத்தைவிட்டு அல்லாஹ்வுக்காக எழுங்கள்! "நீங்கள் (இதர) உம்மத்துகளை விட உத்தமர்கள்" என்னும் தெய்வ வாக்கை யுன்னியாவது ஒவ்வொரு மௌலவிசளும், பிரதி முஸ்லிம்களும் கச்சைக் கட்டிக்கொண்டு வெளியில் வரவேண்டும்.

இதர மதஸ்தர்களைப்போல் நமது மதஸ்தர்களில், மதப் பிரசார சொஸைட்டிகள் தென்னுட்டில் அறவேஇல்லாததது பெரிதும் வருந்தற்குரியதே. இத்தென்னுட்டில் இஸ்லாமியப் பிரசாரஞ்செய்ய எமக்கு வெகு ஆவலுண்டு. இதுபோல் உங்களில் ஒவ்வொருவருக்கும் இக்கடமை உண்டு என்பதை நீங்கள் நன்குணர வேண்டும்.

முற்காலத்தில், உலகில் இஸ்லாமிய மிஷனரிகள் பூச்சியமென்பதற்கு சரித்திரமே சான்று பகருகின்றது. அந்நிலைமையில் உலகில் இஸ்லாத்தைப் பரவச் செய்தவர்கள் இரு குழாத்தினரேயாவர்.

1-வது குழாத்தினர்

இஸ்லாத்தைப் பரவச்செய்த முதல்கோஷ்டியினர் ஸூபிகளும், துறவிகளுமேயாவர். அவர்கள் மானுஷீக இச்சைகளையும் சுகபோகங்களையும் துறந்தே இஸ்லாத்தைப் பரவச்செய்தனர். அவர்களிடம் மனிதர்கள் வந்து துஆ இறக்க வேண்டிக்கொண்டக்கால், அன்னவர்கள் பால் அமைந்திருந்த தெய்வ அருள் சக்திகளையும், நல்லொழுக்கங்களையும், மெய் அனுஷ்டானங்களையும் கண்டு, அன்னவர்களை அணுகி சத்திய போதனைகளைக் கற்று இஸ்லாத்தைத் தழுவி வந்தனர். அவ்வாறு மக்களை அத்துறவிகளின் பக்கல் இழுத்துச் சென்றதானது, அவர்கள் கையாண்டு வந்த பேரன்பு என்னும் ஒரே வஸ்துவேயாகும்.

2-வது கோஷ்டியார் வியாபாரிகள்

முஸ்லிம் வியாபாரிகள் வியாபாரத்தின் நிமித்தம் பல நாடுகளுக்கும் சென்று வர்த்தகத் தொழில் செய்துவரும் நாட்களில் தொழுகை நேரங்களில் தவருமல் மஸ்ஜித்களுக்குச்சென்று வணக்கம் புரிந்து வந்ததோடு மனிதர்களிடை வியாபாரஞ் செய்ய முன்வந்து சதி மோசடியற்ற வர்த்தகத்தையும், முகமலர்ந்த வார்த்தைகளையும், சத் கிரிகைகளையும், நெறி தவருு நடவடிக்கைகளையும் அனுஷ்டித்து வந்தனர். மேலும் அவர்கள், நல்வணக்கம் புரிந்து ஆண்

டவனின் கட்டளைகளை சிரமேற்கொண்டு ஆண்டவனின் அன்பைப் பெற்றுக்கொண்டதோடு, மானுஷீக ஒழுக்கத்தையும், நீதிநெறியையும் கடைப்பிடித்து நடந்து மக்களின் மனங்களைக் கவர்ந்து, அவர்களின் அன்புகளையும் அடைந்து கொண்டனர். இவ்வரும் பெரும் புனிதமத சீலர்களைக்கண்டு இவர்கள் மதமே உண்மை மதமாக இருத்தல் வேண்டுமென மக்கள் எண்ணி "அவர்கள் அல்லாஹ்வின் மதத்தில் கூட்டங் கூட்டமாகவந்து புகுந்து விடுவோர்கள்" என்னும் திருமறை வாக்குக்கொப்ப இஸ்லாம் மதத்திலாகி முஸ்லிம்களாகத் திகழுகின்றனர். அதுபோல் பண்டாரவாடை முஸ்லிம்களான நீங்கள், பினங்கு, சிங்கை, மற்றும் உங்கள் வர்த்தகம் நடைபெறும் மலாய்நாடுகளில் தொழில்புரியும் காலங்களில், நீங்கள் அல்லாஹ்வுடையவும் அவனது றசூலுடையவும் கட்டளைப்படி நடந்து சத்தொழுக்கங்களையும், நற்குணங்களையும் கடைப்பிடித்து நீதிநெறி வழுவாது நடந்து வருவீர்களாகில், முற்காலப் பெரியார்களைக்கண்டு இதரர்கள் இஸ்லாத்தில் கூட்டம் கூட்டமாக வந்ததுபோல், இக்காலை உங்களைக் காணும் இதரர்களும் நந்தீனுல் இஸ்லாத்தில் கூட்டம்கூட்டமாகவந்து இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு முஸ்லிம்களாகத் திகழ்வார்கள். இங்ஙனம் உங்கள் அனுஷ்டானங்களைச் சீராக்கிக்கொண்டால் முன் போலவே இஸ்லாமிய ஜோதிச்சுடர் உலகெங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

1915-ம் வருடத்தில் யான் பர்மா தேசத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது சைனாவின் எல்லைப்புறம் சென்றிருந்தேன். அதுபொழுது சைனாவின் ஓர் ஸய்யிதானவர் தம்தேச கஸ்தூரியை பர்மாவில் விற்பனைசெய்வதற்காக தமது இளங் குமாரரோடு அங்கு வந்துக்கொண்டிருந்தார். நான்அவர்களை சந்தித்த மாத்திரத்தில், "ஒவ்வொரு இளவாலிபனும் ஒரு சைனியரை முஸ்லிமாக ஆக்காதவரை அவ்வாலிபனுக்கு எவரும் பெண் கொடுப்பதில்லை" என்னும் சைனாதேசவழக்கம் என் ஞாபகத்திற்கு வந்ததால் அவ்விள வாலிபனை நோக்கி "உமக்கு விவாகமாகிவிட்டதா?" வெனக் கேட்டேன். அவ்வாலிபர் வெட்கத்தால் நாணி சிரசைத் தாழ்த்தி "இல்லை" யென பதிலுரைத்தார். "இல்லாவிட்டால் விவாகம் நடைபெறுவதற்குரிய காரியத்தையாவது செய்தீரா" வெனக் கேட்டேன். அந்நாட்டுவழமையை யான் தெரிந்துகொண்டிருக்கிறேனென்பதை அறிந்த அந்த வாலிபர் "எங்கள் தெருவில் எமதுவீட்டிற்குச் சமீபமாயுள்ள வீட்டில் ஓர் சைனா சக வாலிபனிருக்கிறான்; அவனைப் பாதி முஸ்லிமாக ஆக்கி இருக்கிறேன்" என பதிலுரைத்தார்.

ஜவா நாட்டிலும் இங்ஙனமே, திருமக்கா சென்று ஹஜ்ஜு செய்து வராதவரை, வாலிபர்களுக்குப் பெண்கொடுக்கமாட்டார்களாம். இக்காரணத்தினால் ஜாவாவிலுள்ள இள வாலிபர்கள் ஹஜ்ஜுக்குப் போவதற்குறிய பொருள் சேர்ப்பதோடு ஹஜ்ஜின் கிரியைகளைக் கற்றுக் கொள்வான் வேண்டி மதக் கல்வியையும்கற்றுக் கொள்கின்றனர். அத்தேச வழமையினிமித்தம் அந்நாட்டு வாலிபர்கள், இருவகைப் பிரயோஜனத்தையு மடைந்துவிடுகின்றனர்.

சகோதரர்காள்! வருமைப் பிணியால் வாடி நிற்கும் அவ்விரு நாட்டு வாலிபர்களும் இஸ்லாத்தின் சேவையை எம்முறையில் செய்து தங்கள் கடனாற்றி வருகின்றனர் என்பதை கவனியுங்கள்! 'தங்கக் குருவி' என விளங்கி வரும் நம்மிந்திய நாட்டு முஸ்லிம் வாலிபர்களாகிய நீங்கள், செல்வந்தர்களாக இருந்து இஸ்லாத்திற்குறிய பிரசார வேலையை மேற்கொள்ளாமலிருக்கும் குறையைப்பற்றிக் கூறஎனக்கே வெட்கமாயிருக்கிறது. ஆகவே, நந்தென்னிந்திய வாலிபர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஹிந்துவை இஸ்லாத்தில் சேர்க்க முயற்சி எடுத்துக் கொள்வார்களாகில், காந்திஜீயும், கிறிஸ்துவப் பாதிரிகளும் செய்து வெற்றிபெற இயலாத அபரிமித வெற்றியை அவ்வாலிபர்கள் வெகு சீக்கிரத்தில் மிக எளிதில் அடைந்துவிடுவார்களென்பது திண்ணம்.

நண்பர்காள்!

மதத் தியாகத்தையும், மானிடர்பால் அன்பையும் நீங்கள் நித்தியக் கிரியையாக அனுஷ்டித்து வராமையால் தான் உலகோரால் நிந்திக்கப் படுகிறீர்கள்.

ஹிந்து ஸ்வாமிஜீக்களும், கிருஸ்துவப்பாதிரிமார்களும் "இஸ்லாம் வாளால் பரத்தப் பட்டதெனக் கூறுகிறார்கள்." அது வாஸ்தவமே. ஆனால் அது இரும்பு வாளாயுதமல்ல. நக்ஷபந்தீ தரீக்காவின் பிரதம பீரும், எனது ஜானெ ஜானுமான குரு நாதரவர்கள் கூறிய உர்தூ கவியொன்று இதுபொழுது என் ஞாபகத்திற்கு வருகிறது.

"இரும்பு வாளானது ஓர் வஸ்துவை இரு துண்டுகளாகச் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். ஆனல் அன்பென்னும் வாளானது இரு மனிதரை ஒன்ருக்கி விடுகின்றது"

எனவே, உலகில் இஸ்லாம் பரவியதெல்லாம் இஸ்லாமியர் கையாண்டு வந்த அன்பென்னும் வாளாயுதமேயல்லாது இரும்பு வாளன்று.

இஸ்லாமிய நந்நெறியைக் கடைப்பிடித்தொழுகி வருவோர் அல்லாஹ்வால் உவக்கப்பட்டவர்களாகவும், நல்லொழுக்கம், நட்பு ஆகியவைகளை ஆடையாக அணிந்து வருவோர் மானிடர்களின் அன்புக்கு பாத்திரர்களாகவும் ஆகிவிடுகிருர்கள். இன்னேர் இவ்வாறு தீனுல் இஸ்லாத்தின் சட்டப்படி நடப்பதால் இருவித பாக்கியங்களையும் பெற்றுக் கொள்கிருர்கள்.

நாயகமவர்கள், "உங்கள் பால் அவா உள்ளவர்கள்" என்ற திருமறை வாக்குப் பிரகாரம் நீங்கள் நரகம்போகாது தடுக்க, பெருமானரவர்கள் உங்கள்மீது பேரவாக்கொண்டு உங்களுக்கு வேண்டிய பிரயத்தனம் செய்திருக்கிருர்கள். இந்த அவா, அன்பு என்னும் ஆயுதத்தை நீங்கள் கடைபிடித்தொழுகுவீர்களேல் வெற்றி பெற்று ஆனந்த மடைவீர்கள். மக்கள் நரகில் வேதனையடைவார்களே யென்று துயர்கொள்ளும் நீங்கள், அன்பென்னும் கயிறை அவர்களுக்குக் கொடுத்து அவர்களைக் கரை சேர்த்து விடலாம்.

சகோதரர்காள்! அன்பு மயமான இஸ்லாத்தின் தாசர்களது அன்பை பிறதமஸ்தரான எதிரிகளும் போற்றுகின்றனர். உதாரணமாக, நமது நாயகமவர்கள் ஜீவிய சரித்திரத்தைத் திரித்து எழுதியிருக்கும் வாஷிங்டன் ஆர்வி, கார்லைல் ஆகிய இரு நூலாசிரியர்களில் வாஷிங்டன் எழுதுவதாவது: இதர எந்த ரிபார்மர்—நபிமார்களும் வருடக்கணக்காகச் செய்யமுடியாத சீர்திருத்தத்தை, முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் 20 வருடத்தில் அன்பைப் புகட்டிய காரணத்தால் உலகோரை சீர்திருத்தஞ்செய்து உண்மை மனிதர்களாக ஆக்கிவிட்டார்கள். கார்லைல் கூறுவதாவது: "ஏசுநாதர் தமது "ஹவாரிய்யூன்"களான ஒரு சிறு எண்ணிக்கை கொண்டோரை அன்பு மயமாக்க முடியவில்லை. ஆனல் இஸ்லாம் சில வருடங்களில் எத்தனையோ மனுக்களை அன்பு மயமாக்கி விட்டது வியக்தமேயாகும்."

இதுபோலவே செண்ட் ஜார்ஜ், சென்குபால் போன்ற அநேக ஈஸாயி நூற்பிரசாரர்களும் எழுதியிருப்பதாவது:—"ஏசுநாதரின் ஸஹாபாக்களான நாங்கள், அவர் சிலுவையில் அறைபடும்போது அவரைச் சேர்ந்தவர்களல்லவென விலகிக் கொண்டு அவரையே காட்டிக்கொடுத்துவிட்டோம். ஆனல் முஹம்மது நபியை ஒருதரம் பார்த்த முஸ்லிமான ஆண்பெண் சகலரும் தங்களைத் தங்கள் நபிக்காக அர்ப்பணஞ்செய்து விடுகின்றனர்.

நண்பர்காள்! இதே அன்பை ஸஹாபாக்கள், தாபியீன்களிடத்தும் கண்கூடாகக் காணலாம் என்பதே. உதாரணமாக, கருநிறமுடைய ஓர் அடிமை, மக்கமாநகரின் தெருவழியே சென்று கொண்டிருந்தபோது நாயகமவர்கள் உபதேசஞ் செய்து கொண்டிருக்கும் இடத்திற்குச்சென்று அங்கு கூறப்பட்ட இனியமொழிகளைக் கேட்ட மாத்திரத்திலே, இந்த வாக்கியங்கள் யாருடையதென வினவினர். ஏகநாயனை அல்லாஹ்உடையதென அவருக்குக் கூறப்பட்டது. உடனே அவர், "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என மொழிந்து மூமினுகி இஸ்லாத்தின் கோட்டைக்குள் புகுந்துவிட்டார். அவர் மூமினுனதற்குக் காரணம், அல்லாஹ்வின் திருவாக்கியங்களின் காண்டும் நாயகமவர்களின் இனிய வசனத்தின் அன்பும் அவரைத் தாக்கியதேயாகும். அவர் மேனியில் கருநிறமாக இருந்தாலும் அவரின் ஹிருதயமானது தூயவெண்மையாக இருந்தது. இவரே ஹஜ்ரத் பிலால் (ரலி.) அவர்களாவர். இங்ஙனம் இவர் முஸ்லிமான செய்தி இவர் எஜமானனுக்குத் தெரிந்தவுடன், பிலாலை இரும்புச் சங்கிலிகளால் பிணைத்துச் சுடுகிற கல்லில் போட்டு கொரடாவால் அடிக்கும்படி ஆக்ஞாபித்தான்.

ஹஜ்ரத் பிலால் (ரலி.) அவர்களை அவ்வாறு சுடுமணலில் கட்டிப்போட்டு அடித்துத் துன்பப்படுத்துங்கால், அவர்களின் திருவாக்கிலிருந்துவந்த வார்த்தைகளைக் கவனியுங்கள். "அஹதா! முஹம்மதா!" (நாயன்) "ஒருவனே! (அவனின் தூதர்) முஹம்மதே!" என்னும் சப்தத்தைத் தவிர வேறு வார்த்தை ஹஜ்ரத் பிலால் (ரலி.) அவர்களின் நாவிலிருந்து வரவில்லை. அதுபொழுது அந்தவழியே சென்று கொண்டிருந்த ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் பிலாலை நோக்கி, "நீர் என்ன குற்றஞ் செய்ததற்காக இங்ஙனம் சித்திரவதை செய்யப்படுகிறீர்?" எனக் கேட்க, "யான் இஸ்லாத்தைத் தழுவிய குற்றத்திற்கா

கவே இவ்வாறு ஹம்ஸிக்கப்படுகிறேன்'' என பிலால் (ரலி.) அவர்கள் பதில் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் அவர்கள் அவரை நோக்கி, “நீர் முஸ்லிமாக இருப்பதை பிரஸ்தாபிக்காமல் இரும்'' எனக் கூறிச்சென்றார்கள். ஆனால், மறுநாள் ஸித்தீக் (ரலி.) அவர்கள் அதே பாதையில் சென்றபோதும் முன்தினம் போலவே ஹஜ்ரத் பிலால் (ரலி.) அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதைக் கண்டார்கள். அதுபொழுதும் பிலாலை நோக்கி நீர் பிரஸ்தாபமின்றி மௌனமாக இருக்கமுடியாத காரணமென்னவெனக் கேட்க, அதற்கு பிலால் (ரலி.) “நான் நாயகமவர்களிடம் விற்கப்பட்டுப் போய் விட்டதால் அந்த அன்பை அடக்கிக்கொண்டு மௌனமாக இருக்க அறவே சாலாதென'' பதிலுரைத்துவிட்டார்கள்.

எனவே, அன்பானது இஸ்லாமியர்களிடத்து மிக்க அபரிமிதமாக இருக்கிறதென்பது உலகோர் அறிந்தவிஷயம். வீடு, பிள்ளை, பொருள், ஆவி முதலிய சகலவற்றையும் துறந்துவிட்டாலும் நாயகமவர்கள்மீதுள்ள அன்புமட்டிலும் முஸ்லிம்களின் இருதயங்களை விட்டு ஒரு போதும்நீங்காது. “கபாபிப்னு கதப்'' என்னும் ஸஹாபியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் ஒருநாள் ஸஹாபாக்களுடன் இருக்கும்போது தமது இடுப்பைத் திறந்து காண்பித்தார். இடுப்பில் வெண்நிறமாக வெண்குட்டம் போல் காணப்பட்டதைக் கண்ட ஸஹாபிகள் இதுஎன்னவென வினவ, அதற்கு “கபாப்'' என்னும் ஸஹாபி பின்வருமாறு பதிலுரைத்தார் :—

அதாவது, நான் இஸ்லாத்தைத் தழுவியதால் மதீனாவின் காபிரீன்கள் என்னைக் கட்டி சுடு கல்லில் போட்டுக் கொரடாவினால் அடித்தும், இரும்புத் துண்டுகளைக் காய்ச்சி இடுப்பில் வைத்தும் வதை செய்ததால் இடுப்பு பூராவும் புண்பட்டு வெண்மையாகி விட்டது. இந்த இடுப்பானது இங்ஙனம் வெண்மையாயிருப்பதற்கு நாயகமவர்களின்மீது நான் கொண்டுள்ள அன்பே காரணமாகும் என்பதே.

மேலும் “அன்பில்லாதவனுக்கு ஈமான் (விசுவாசம்) இல்லை'' என்றும், “தனது பிள்ளைகள், தந்தை, தாய் ஆன்மா இவைகளைவிட என்மீது அன்பு கொள்ளாதவர் மூமின்களாக மாட்டார்'' என்றும் நாயகமவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு, “மூமின் (விசுவாசி)களின் உடல், பொருள், ஆவி முதலிய வஸ்துக்களை வாங்கிக்கொண்டு அவைகட்குப் பகரமாய் சுவனபதியை அவர்களுக்கு அளித்துவிட்டேன்'' என்னும் வேத வாக்கும் போதிய சான்றாக நிற்கின்றது.

“தன்னைப் பிரியம் வைக்காதவர் உண்மை மூமினாகமாட்டார்.'' என நாயகமவர்கள் திருவுளமாகியிருந்தும், தற்காலத்தில் சிலர் தொழுவதற்கு மஸ்ஜித்சென்றுவிட்டால் கடையில் சரக்கு வாங்கவரும் ஆசாமிகள் போய்விடுவார்கள் என்று எண்ணுகின்றனர். அந்தோ! வஸ்துத்துக்களின் மீது அன்பும், தமக்கு ரட்சகனால் இறனமளிக்கப் படுமென்பதில் சந்தேகமும் கொண்ட மக்கள் உண்மை முஸ்லிம்களாவார்களா ? இதற்குத் தானா உயிர், பொருள், ஆவியை அல்லாஹ்விடம் விற்கப்பட்டு விட்டதெனக் கூறுவது ? என்னே ! உலகின் மாறுதலும் மக்களின் போக்கும் !!

சோதரீர்! உலகில் யாராகிலும் தமது காதலியின் நாமத்தைச்சொல்லிவிடுவார்களானால், காதலன் எங்ஙனம் துளும்பிவிடுகிறானோ அதுபோலவே அல்லாஹ்வின்பால் பேரன்புகொண்ட உத்தமர்களிடம் ‘அல்லாஹ்' எனக் கூறப்படுமாயின் “அவர்களின் ஹிருதயங்கள் ஆடிவிடும்'' (இந்த இஸ்லாம் மதம்) உங்கள் தந்தையரான இப்ராஹீம் (அலை.) அவர்களின் மதமாகும். உங்களுக்கு முஸ்லிம்களென அவரே நாமஞ் சூட்டினார்'' அந்த தந்தையான இப்றாஹீம் (அலை.) நெருப்பில் போடப்பட்டார்கள். அச்சமயத்திலும் அவர்கள் தங்களது நாயனின் ஞாபகத்தை மறவாது அவன்மீது பேரன்பு கொண்டிருந்ததால், அவர்களுக்கு அவ்வக்கினிக் குண்டமானது பூங்காவனமாக மாறிவிட்டது.

ஒரு நேரத்தில் ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் பசியாகஇருக்கும்போது இரு அழகிய இளவாலிபர்கள் “ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, ஸுப்ஹானல்லாஹில்அலீம்'' எனச் சொல்லிக்கொண்டு ஹஸ்ரத் முன் வந்தனர். இப்ராஹீம் நபி அவர்கள் அவ்வரிய மொழிகளைக் கேட்டவுடன் ஒரு துளும்பு துளும்பி நடுநடுங்கிவிட்டார்கள். இதுவே (மூமினானவர்களிடம் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறப்படுமாயின்) “அவர்களின் ஹிருதயம் நடுங்கிவிடும்'' என்பதின் அடையாளமாகும். இங்ஙனம் துளும்பும் பக்தர்களின் நிலையைப் பார்ப்பதுகொண்டு உணர்ச்சி ஏற்படுமே யல்லாது காதால் கேட்பதுகொண்டு ஏற்படாது. தங்களது அன்பனின் திருநாமங்களைக்கேட்டு அக

மகிழ்ந்து பூலோகத்தையே மறந்து நிற்கும் ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள், அவ் வாலிபர்களை நோக்கி மீண்டுமொரு முறை அவ் விதம் சொல்லுமாறு தயவாய்க் கேட்டுக்கொண் டார்கள். அதற்கு அவ் வாலிபர்கள், "முன் நாங்களாக எங்கள் இஷ்டப்படி கூறினேம்; அதை மறுபடியும் சொல்வதென்றால், இது பொழுது என்ன கொடுப்பீர்க" ளெனக் கேட்டார்கள். அதற்காக "எனது பொருள் பூராவையும் கொடுத்து வீட்டையும் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன்" என இப்ருஹீம் (அலை.) அவர்கள் கூறினார்கள். அதன்பின் அவ்விருவரும் மீண்டு மொருமுறை முன் போலவே ஓதினர்கள். "காதலியின் பெய ரைக்கேட்டால் இருதயங்கள் துண்டுதுண்டாகி விடும்" என்று உருது கவியில் கூறப்பட் டிருப்பதற்கேற்ப இப்ருஹீம் (அலை.) அவர்கள் அப்படியே மயங்கி தன்னிலைமாறி பேரானந் தத்திலாழ்ந்து விட்டார்கள்.

மறுபடியும் அத்திருநாமங்களைச் சொல்லுங்க ளென அவ்வாலிபர்களை நோக்கி ஹஜ்ரத் இப் ராஹீம் (அலைஹி.) அவர்கள் கேட்க, மூன்று வது தடவையாக அவ்வாலிபர்கள், இப்போது கொடுப்பதற்கு உம்மிடம் என்ன இருக்கிற தெனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அவர் கள் தம்மை அடிமையாக்கி விடுவதாகக்கூறினர் கள். அவ்வாலிபர்கள் மீண்டுமொருமுறை அன் னமங்களை ஓதினர்கள். அதனைச்செவியுற்ற ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்கள், பேரா னந்தத்தில் மூழ்கியவர்களாய் அவ்வாலிபர் களை நோக்கி "எனது உயிரையும், பொருளை யும் உங்களுக்குக் கொடுத்துவிட்டேனகை யால் எம்மை நீங்கள் கூட்டிச் செல்லுங்கள்" எனச் சொல்ல, அவ்விரு வாலிபர்களும், நாங் கள் அமரர்களாகும்; (கலீல்) அல்லாஹ்வின் அன்பர் ஒருவர் இக லோகத்தில் இருக்கிரு ரென்பதை யாங்கள் எண்பிப்பான் வேண்டியே இங்கு வந்தோமெனக் கூறிவிட்டு சலாம் சொல்லிக்கொண்டே அவ்விருவரும் சென்று விட்டார்கள்.

எனவே, உலகக்காதலியின் பெயரைக் கேட் கும்போது ஏற்படுகிற நிலை, பரலோகக் காதல னை அல்லாஹ்வின் திருநாமத்தை பாங்கு சொல்லும்போது கேட்பதுகொண்டு ஏற்படு கிறதா என்று பார்த்தல் வேண்டும். எவரின் நிலை அச்சமயம் மாறுகிறதோ அவரே உண்மை மூமினெனப்படுவார்.

"திக்ரா" என்னும் அரபிப் பதத்திற்கு கூறு தல், மொழிதல் என்றொரு பொருளுண்டு. அப்பதத்திற்கு "அறிவூட்டல், பிரஸ்தாபித் தல்" என இரண்டாவது பொருளுமுண்டு. திருமறை வாக்குப்படி உங்களில் "நப்ஸெ லவ் வாமா" வையும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவே உங்களைப் பாபச் செயல்கள் புரியா வண்ணம் அச்சமூட்டி தடுத்து வைத்துக் கொள்ளுகிறது. அந்நப்ஸு லவ்வாமாவின் அரிய போதனைகளினலேயே மனிதன் உணர்ச்சிப் பெற்று பாபஞ் செய்கிறதில்லை.

"பிறக்குங் குழந்தைகளின் ஹிருதயங்கள் முற்றிலும் தூய்மையாகவே இருக்கிறது. ஆனல் பாபக் கிருத்தியம் செய்யச் செய்ய ஹிரு தயத்தில் கருப்புப்புள்ளிகள் ஏற்பட்டு அவ் ஹிருதயத்தின் ஜோதியை மறைத்துதுரு உண் டாயிருக்கும் சமயத்தில் "லாயிலாஹ இல்லல் லாஹு" என்னும் உலையில் அதைக் காய்ச்சி "முஹம்மதுர் ரஸூலுல்லலாஹ்" என்னும் சமுத்திரத்தில் அதைக் கழுகி, "அல்லாஹு" என்னுஞ் சம்மட்டியால் அதை அடித்தால், துருவெல்லாம் நீங்கி சுத்தமாகி விடும். இங்ங னம் ஒவ்வொருவரும் கழுகிச் சுத்தஞ் செய்து கொள்ளவேண்டும்.

ஆகவே, மனிதர்களுக்கு உணர்ச்சியூட்டி, நேர்வழி காட்டியான "நப்ஸ லவ்வாமா"வே நம்மனைவருக்கும் வழிகாட்டியாக இருந்துவர வேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

இங்ஙனம் அவர்களின் ஹிருதயங்கள் தூய் மையாகிப் பிரகாசித்துக் கொண்டிருப்பவர்கள் விஷயத்தில், "அவர்களுக்கு நமது திருஷ்டாந் தங்கள் ஓதிக் காண்பிக்கப்படுமோயின், அவர் களில் விசுவாசம் மேலிட்டு அவர்கள் றப்பிடம் பரஞ்சாட்டி இருப்பார்கள். மேலும் (அவர்கள்) தொழுகையைக் கடை பிடிப்பார்கள். ஸக்காத் தைக் கொடுப்பார்கள். அவர்களே உண்மை மூமினவர். அவர்களுக்கு அவர்கள் றப்பிடம் பதவியும் பாபமன்னிப்பும் பெரியஊதியமு முண்டு" என அல்லாஹ்த ஆலா கூறியுள்ளான்.

"ஒன்றைத் தவிர இதர வஸ்துக்களைக் கரித்து விடுவதற்கே அன்பெனப்படும்." எமது கருத் தெல்லாம் நமக்குள் அன்பு ஏற்பட வேண்டு மென்பதேயாகும். நான் ஓர் அரசராகவோ அல்லது பெரிய தனவந்தவராகவோ இல்லா திருந்தும், நான் அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டவன் என்பதே நீங்கள் என்மீதுபிரீதி

கொள்வதற்கு காரணமாகும். அந்த அன்பைமி கைப்படுத்துவதே எனது நோக்கம்.

நாங்களும் அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டவர்களென்று வாயால்மட்டும் கூறிக் கொண்டிருப்பது வழிப்படாமைக்கு அறிகுறி யாகும். அல்லாவிற்கு வழிப்பட்டு நடப்ப தற்கே அன்பெனச் சொல்லப்படும். ஆகவே அல்லாவின்மீது மெய்யன்புகொண்டு வழிப் பட்டு நடக்கும் கூட்டத்தில் நம்மனைவரையும் சேர்ப்பானாக! ஆமீன்.

ஆங்கிலப் பிரசங்கம்

பின்னர் மௌலானா அஸ்ஸித்தீக்கி அவர்கள் ஆங்கிலத்தில் சிறிது நேரம் பேசினார்கள்.

சகோதரர்களே!

இதுவரை உர்தூவில் பேசிய என்னை ஆங் கிலத்தில் பேச தாங்கள் எல்லோரும் விரும்பும் காரணம் எனக்குத்தெரியவில்லை. ஆனாலும் நண் பர்கள் மனதை திருப்திசெய்வதற்காக எனக் குத் தெரிந்தவரை ஆங்கிலப் பாஷையிலும் பேசுகிறேன்.

ஆங்கிலம் கற்ற நண்பர்காள்! நாம் இக்காலை ஆங்கிலம் கற்பதில் மோகங்கொண்டவர்களாக இருக்கிறோம். ஆங்கிலத்தைக் கற்க கவனஞ் செலுத்துவதில் நூற்றிலொருபங்குகூட அரபி பாஷை கற்பதில் கவனம் செலுத்துவதில்லை. நாம் அரபி நூற்களை எல்லாம் ஆங்கில ரூபத் திலே படிக்க வெண்டுமென விரும்புகிறோம். உங்களின் இவ்வெண்ணம் நிறைவேற வெகு நாட்கள் செல்லும். மேலும் ஆங்கிலம் கற்கும் மாணவர்கள் இஸ்லாமிய நாகரீகத்தை விட்டு ஆங்கில நாகரீகத்தைக் கைகொண்டு விடுகிறார் கள். இதில் அவர்கள் காணும் உற்சாகந்தா னென்னே! ஆங்கிலம் கற்கும் சிலரில் ஆங்கில மயம் மிகைத்து, மத ஞானம் பூச்சியமாகி கிறி ஸ்தவ மத நூற்களைக் கற்று கிறிஸ்தவர்களாகி விடுவதும் கண்கூடு.

ஆகையால், ஆங்கிலம் கற்கும் வித்தியார்த்தி கள் ஒரு சிறிது நேரத்தையாவது ஒதுக்கி வைத்து அதில் அரபி கற்றுவருமாறு வேண்டு கிறேன். அரபிப்பாஷை இனியபாஷையாகும். அதைக்கற்பது இஸ்லாமிய உலகில் ஓர் பொது ஒற்றுமையை ஏற்படுத்தி விடுகிறது.

என்னில் நிகழ்ந்த சம்பவமொன்றை நான் இங்கு கூற விரும்புகிறேன். யான் ஹைதரா பாத் சென்றிருந்தபோது நிஜாம் மன்னர் தமது மாளிகைக்கு வரும்படி என்னை அழைத்திருந் தார். நான் அல்லாஹ்வின் தயவைத்தவிர்த்து அரசர், பிரபு போன்றோர் தயவை விரும்பாதவ னாகயிருந்தும் முஸ்லிம் மன்னரின் அழைப்பை மறுப்பது முறையாகாதென எண்ணி அரசர் மாளிகையை யடைந்தேன். அவர் குதூகல மாய் வரவேற்றுப் பேசிக்கொண்டிருக்கும் போது என்னை நோக்கி "நீங்கள் ஆங்கிலம் கற் றிருந்தும் அராபிய ஆடையையே ஸ்திரமாய் அணிந்திருப்பது வியப்பே" எனக் கேட்க, அதற்கு நான், ஆங்கில பாஷையை அரபி பாஷைக்குக் கொண்டுவர வேண்டுமெனவும், ஆங்கிலம் கற்றவன்தான் அரபிமயத்தை ஆங்கில மயமாக்கவல்லவனெனவும் பதிலு ரைத்தேன். "ஆங்கிலத்தை எப்படி அர பியாக ஆக்கமுடியு"மென நிஜாம் மன்னர் கேட்டார். யான், பாரசீகப் பாஷையை அரபி பாஷாமயமாக ஆக்கவில்லையா என பதிலளித்தேன். பின்னர், அரபி ஆங்கிலம் இவ்விரண்டுக்கு மிடையேயுள்ள சம்பந்தத்தை மீண்டும் விசாரித்தார். அதற்கு வேண்டிய விபரங்களை எடுத்துச்சொன்னேன். ஆகவே, ஆங்கிலம் கற்கும் மாணவர்கள் அத்துடன் அர பியும் கற்க வேண்டுமென நான் வற்புறுத்து கிறேன். ஆங்கிலம் கற்பதால் மட்டும் பய னடையலாமென எண்ணுவது பகற்கனவாகும். ஆங்கிலத்தோடு அரபியும் கற்றால் நமதுவாழ்வு க்ஷேமமாய்க் கழிவதோடு நாம் கதிமோட்சம் பெறவும் ஓரளவு நம்பிக்கையுண்டு. மௌலவி மார்களும் லௌகீக ஞானங்களைக்கற்றுக்கொள் வது அத்யாவசியமெனவும் கூறுகிறேன். அங் ஙனம் அரபி கற்காதவர்கள் குர்ஆன் ஷரீபி லுள்ள உன்னத உயரிய நோக்கங்களைத் தெரி ந்து கொள்ளமுடியாத் ததிநிமித்தம் காதியானி களின் ஒழுக்கமற்ற தர்ஜுமாவை வாசிக்கும் படி நேரிடுகிறது. அரபி பாஷை கற்றிருந் தால் அந்த காதியானி தப்ஸீரில் உள்ள தவறு களைப் பாகுபாடுபடுத்தித் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே அரபி கல்லாதிருப்பது துர் பலமேயாகும்.

நண்பர்காள்! ஆங்கிலம் கற்றோர் காதியானி களின் கொள்கையில் சிக்கிக்கொள்ள வேண் டாம். அவர்கள் இஸ்லாத்தின் போர்வையைப் போர்க்குக்கொண்டு இஸ்லாத்தின் கொள்கை க்கு மாறாகப் பிரசாரஞ்செய்து வருகின்றனர். அவர்களின் மூலக் கொள்கைகளை மேனாட்டில் வெளியிடுவார்களாகில், அவர்களை உலகில் எவ ருமே ஆதரிக்கமாட்டார்கள். இக்காரணத்தினா

லேயே அவர்கள் இஸ்லாத்தின் போர்வையைப் போற்றிக் கொண்டு திரிகிறார்கள். எனவே, பஹாயி, மிர்ஜாயி கொள்கைகள் இந்தியாவில் பரவ விடாது அவைகளைக் கிள்ளி விடுவது ஒவ்வொருவர் மீது முள்ள முக்கியக்கடமையாகும்.

முஹம்மது மார்மாடியூக் பிக்தால் ஹைதராபாத்தில் எழுதி வரும் ஆங்கிலத் தப்ஸீரிலும் சில தவறுகள் உண்டு. அந்தத் தவறுகளை அரபி தெரிந்த சிறுவர்களும் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

காதியானிகளின் தர்ஜுமா எனச் சொல்லிக் கொள்ளப் படும் கிரந்தத்தில் உண்மையைத் தவிர்த்து மற்றதெல்லாம் உண்டு. அதன் ஆசிரியர் அந்த தப்ஸீரின் முகவுரையில், தாம் அநேக விஷயங்களை மிர்ஜா குலாம் அஹ்மதின் நூற்களிலிருந்தே காப்பி செய்திருப்பதாகவும், வஹியின் வாசல் இன்னும் அடைபடவில்லை என்றும் கூறுகிறார். இதிலிருந்து அவர் கொள்கை இன்னதென நன்கு தெரிந்து கொள்ளலாம்.

குர்ஆன் ஷரீபின் மொழிகளுக்குத் தக்க தர்ஜுமாச் செய்ய எப்பாஷையிலும் எவராலும் இயலாதென்பது உலகப் பிரசித்தம். ஆனால் பிக்தாலானவர் ரொம்பப் பிரயாசைப்பட்டு அநேக பதங்களுக்கு ஒற்றுமையாக அர்த்தங்களைக் கொடுக்க முயற்சி செய்திருக்கிறாராதலின், தற்காலத்திலுள்ள ஆங்கிலத் தப்ஸீர்களில் அதைச் சிறந்ததென்றே கூறலாம். மிஸர் தேச மைனரிட்டி உலமாக்களும் அதை ஆதரித்திருக்கின்றார்கள். எனக்கூறி முடித்தார்கள்.

10-வது பிரசங்கம்

அய்யம்பேட்டை

எனது அன்பான மகாஜனங்களே! நீங்கள் என்னை வெகு குதூகலமாக வரவேற்றீர்கள். யானோ ஓர் மன்னனுமல்ல; ஓர் கோடீஸ்வரனுமல்ல; ஓர் பிரபல வியாபாரியுமல்ல. ஆயினும் நீங்கள் என்னை இவ்வாறு வரவேற்றதற்குக் காரணம்தான் யாதாகுமெனக் கேட்டால், இக் காரணத்தை நான் எளிதில் விளக்குகின்றேன். எந்த ரசூல கரீம் (ஸல்.) அவர்கள்பேரில் நீங்கள் அன்பு வைக்கின்றீர்களோ, எந்த ஆண்டவன்பேரில் நீங்கள் பக்தி வைக்கின்றீர்களோ அவ்விருவர்களால் ஆக்ஞையிடப்பட்ட ஓர் செயலை இவ்வடியான் மேற்கொண்டிருப்பதாகக் கருதியே நீங்கள் என்னை இவ்வாறு சிறப்பிக்கின்றீர்கள். இதிலிருந்து உங்கள் மார்க்க பக்தி உண்மையில் நன்கு விளங்குகின்றது. உண்மையில் நீங்கள்செய்த இவ்வளவு கண்ணியமும் அந்த அல்லாஹ் ஜல்லஷானஹுவதஆலாவுக்கும் அவனது இரசூலே கரீம் (ஸல்.) அவர்களுக்கும் உரித்தாகும்.

இங்கு கூடியிருக்கும் பல மதஸ்தர்களை யான் காணும்போது, ஆண்டவனின் பக்தனொருவன் வருகிறானென்னும் நோக்கத்தைக் கொண்டு அவர்கள் இங்கு வந்திருக்கிறதாக எண்ணுகின்றேன். எல்லோரும் நம்மைப்படைத்த ஆண்டவனை வணங்கவேண்டுமென்பதே உன் உபதேசமாகும். மனிதர்களில் பலர், எதேச்சையாக நடந்துகொள்கின்றனர். அரசர்கள் எல்லாவற்றிலும் எதேச்சை பெற்றவர்களாக இருக்கின்றனர். அன்னோர் தங்கள் மனம் இடும் உத்திரவுப்படிதான் நடக்க வேண்டுமென்றும், தங்கள் மனது விரும்பாதவைகளைச் செய்யக் கூடாதென்றும் எண்ணித் திரிகின்றனர். ஆனால் நாம் அம்மனதால் நிர்மாணிக்கப்பட்டு இன்னும் நன்கு தீர்க்காலோசிக்கப்பட்டு முடிவிற்கு வரும் ஓர் விஷயத்தை நல்லதென்று கருதி அவைகளை மனமகிழ்ச்சியுடன் செய்ய ஆரம்பிக்கின்றோம். சில சமயங்களில் அச்செயல் மூடத்தனமாகவும் பிரயோஜனமற்றதாகவும் இருப்பதை அதே மனதின்வாயிலாக நாம் அறிகின்றோம். அதனால் நமது மனம் அதன் வேலையைத் தவறுதலாகச் செய்கின்றது என்றும் அறிகிறோம். ஆனதுபற்றி ஒவ்வொருவரும் தங்கள் மனப்போக்கின்படியே தங்கள் நடத்தையை திருப்பிக்கொள்வாராயின் உலகம் அலங்கோலம் கொண்டு கவலைக்கிடமான ஸ்திதியை அடையும்; அதனால் நாம் நமது மனதை நம்பமுடியாது என்று தெரிகிறது. இரண்டாவதாக மனிதன் செய்வது யாதெனில், அவனது சுயநலமாகும். எனவே, அவன் தனக்கே சௌகரியம் செய்துகொள்ள நாடுகின்றான்; நண்பனை மறந்துவிடுகின்றான்; அது கடைசியாக அவனுக்கே தீங்கை விளைவித்து சுயநலம் என்னும் அரக்கனுக்கு அவனை அடிமைப்படுத்தி அவனை துன்பக்கடலில் ஆழ்த்துகின்றது. இதனால் இறுதியில் நாம் உலகில் எதேச்சாதிகாரம் புரியவில்லை என எண்ணவேண்டும். ஆதலால் நமக்கு ஓர் சட்டம் இருக்கவேண்டும். அதைப் பின்பற்றினால் தான் நமக்கு நல்வழி உதயமாகும். ஆனால் அக்கட்டளை யாரால் செய்விக்கப்பட்டது என்.

பதைக் கவனித்தால், மனிதனுலா? அன்று. அஃது ஓர் நிகரற்ற பரமனின் கட்டளையாகும். அது மக்களிடையே ஓர் உயர்ந்த சமாதானத்தை உண்டாக்கவல்லது; அதுவே லோகத்தைப் பலப்படுத்துவதற்குள்ள ஆண்டவனின் கட்டளையாகும். கடைசியாக இது சம்பந்தமாய் உங்கள் மனதிற்கிசைந்தவாறுள்ள ஓர் உதாரணம் கூறுகின்றேன். மோட்டார் செய்பவனொருவன் ஓர் மோட்டாரைச்செய்து முடித்து அதை எவ்வாறு ஓட்டினுல் நன்கு ஓடும் என்று அறிந்து அதன்பிரகாரம் ஓட்டி வெற்றிபெறுகிறுன். ஆனுல் அதன் சூட்சுமத்தை அறியாத ஒருவன் அதை ஓட்ட ஆரம்பித்தால் அதன் முடிவு என்னவாகும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். இங்ஙனமேதான் ஆண்டவனின் கட்டளைகளை அறியாது நடப்பவனின் முடிவுமாகும். சிங்கப்பூர் ஜனுப் டாக்டர் முன்ஷி அவர்கள் ஓர் பௌண்டன் பேனுவை எமக்கு போஸ்டில் அனுப்பியிருந்தார். அதை நான் பிரித்துப் பார்க்கும்போது அதனுள் ஓர் சிறிய காகிதத் துண்டைக் கண்டேன். அதில், அதை உபயோகிக்க வேண்டிய முறைகளும், அவை நீடூழி உழைக்கவேண்டிய விதமும் எழுதப்பட்டிருந்தன. மகாஜனங்களே! பேனுவை உபயோகிக்க வேண்டிய முறையை உங்களிலனேகர் அறிவீர்கள். அப்படியாயின் அதில் ஏன் அவ்வழிகள் எழுதியிருக்க வேண்டும்? ஆனுல் அதில் எழுதியிருக்கும் முறைப்படி மை இடுவது, எழுதுவது முதலிய வகைகளின் பிரகாரம் நாம் செய்வோமானுல் அது நீடூழி உழைக்குமென்பதில் சந்தேகமில்லை. இதே பிரகாரம் அல்லாஹ் (ஜல்) தனது அடியார்களுக்கு, அவர்கள் தங்கள் வாழ்நாட்களை நடத்த வேண்டி சட்டதிட்டங்களை விளக்கி லோக மக்கள் எல்லோரையும் ஒரே வமிசத்தார்களாக எண்ணும்படி அறிவித்துள்ளான். ஒவ்வொரு மனிதனையும் நடத்தவேண்டிய வழிகளையும் அவ்விறைவன் நமக்கு அறிவித்துள்ளான். ஆனுல் மனிதன் அவன் விருப்பத்திற்கு மாறுக நடக்கின்றுன். ஆண்டவன் தன் பக்தனை ஓர் உயர்தர நிலையில் வைத்திருக்கின்றுன்; மானிடன் ஓர் குற்றம் செய்துவிடின் அதற்காகத் தந்தையைப்போன்று வருந்துகின்றுன். அவன் திக்கற்றவனெனக்கண்டு தாயைப்போல் பரிதாபப்பட்டு கருணை கூறுகின்றுன். மனிதர்களை நல்ல வழியில் நடக்க உபதேசிக்கும்படி அவன் நபிமார்களை அனுப்பியிருக்கிறுன். அவர்கள்தான் நமக்கு உண்மை வழிகாட்டிகள். அவர்கள் பலர் முன்காலத்தில்வந்து மனிதர்களைச் சீர்திருத்தினுர்கள். அவர்களை முற்காலத்து மனிதர்கள் அசட்டையால் மறந்துவிட்டனர். கடைசியாக அதன் பின்னர் நமது லோக தயாளர் காத்தமுன்னபிய்யீன் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் உலகிற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள்கொண்டு வந்த குர்ஆன் ஷரீபானது சம்பூரணமானது; அது முற்காலத்திற்கு ஏற்றதாய் இருந்தது; இனி பிற்காலத்திற்கும் ஏற்றதாய் இருக்கும். அதில் சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியமேதுவும்கிடையாது. அது அன்று இருந்தது போல்தான் இன்றும் இருக்கின்றது. இனியென்றும் அப்படியேதான் இருக்கும். அக்குர்ஆனை நமது ரசூலே கரீம் (ஸல்.) அவர்களால்தான் மொழிபெயர்க்கமுடியும். ஆனுல் நாம் அதன் கருத்தை விபரிக்கலாமேயொழிய அதை முற்றும் மொழிபெயர்க்க முடியாதென்பது திண்ணம். காதியானி முஹம்மத் அலி போன்ற சிலர், குர்ஆனுக்குத் தர்ஜுமாசெய்வதிலீடுபட்டு தட்டுக் கெட்டுத் தடுமாறி குப்பிற விழுந்திருப்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

பீர்மார்கள், அவ்லியாக்கள், உலமாக்கள், மௌலவிகள் முதலியவர்களைவிட நபிமார்கள் உயர்ந்த பதவியை வகிக்கின்றுர்கள். நபிமார்களின் பதவியை சாதாரண மனிதன் அடைய முடியாது. ஆனுல் ஆச்சரியமான ஓர் சம்பவத்தை உங்களுக்குக் கூறவிரும்புகின்றேன்.

அதாவது வட இந்தியாவில் "திம்மாபூர்" என்னுமொரு ஊர் உளது. அங்குள்ள ஓர் மனிதன், தான் நபி எனக் கூறினுல், சீக்கிரம் பாமர மக்களிடமிருந்து பணம் திரட்டலாம் என்று எண்ணி தனக்கு "வஹீ" வருவதாகச் சொல்லி முதலில் "யா அய்யுஹன்னபிய்யு திம்மாபூர்மே ரஹீயோ" என்று வஹீ வந்ததாகக் கூறிக்கொண்டான். இவனின் பேதமைதான் என்னே! இவன் மாத்திரமா? இவ்வேலைக்கு ஆசைப்பட்ட இன்னமொருவரு மிருக்கிறுர். அவர்தான் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி என்பவர். ஆனுல் இவர், இவரது பொய்ப்பிரசாரத்தால் ஜனங்களில் சிலரை ஏமாற்றிப்பணம்சேகரித்தார். ஓர் வியாபாரி தனது தரகர்களைக்கொண்டு வியாபாரத்தை அதிகரித்துக்கொள்வதுபோல், காஜா கமாலுத்தீன் முகமத்அலி எம். ஏ., எல். எல். பி. முதலானேர் அவருக்கு அகப்பட்டார்கள்,

அவர்கள் அவ்வலையை லண்டனில் கொண்டு போய் வீசினர். என மௌலானா அவர்கள் கூறி முடித்தார்கள்.

11-வது பிரசங்கம்

கூத்தாநல்லூர்

மௌலானா அவர்கள் அரபியில் குத்பா ஓதி சபையோருக்கும் உலமாக்களுக்கும் வந்தன மளித்துவிட்டு பின்வருமாறு பேசினார்கள்.

சகோதரர்களே! என்னை நீங்கள் புகழ்ந்திருக்கும் அத்துணை அந்தஸ்தையும் எனக்கு ஆண்டவன் அருளவேண்டுமென்று ஆதரவு வைக்கிறேன். உங்கள் உள்ளன்பின் காரணத்தால் என்னை உலமாக்கள் கோஷ்டியில் சேர்த்திருக்கிறீர்கள். யான் விஸுவாசமுள்ள ஸாலிஹீன்களை விரும்புகிறேன்.

இவ்வூரிலுள்ள அநேக சபைகளில், உலமாக்கள் முன்னின்று உழைத்து உதவிபுரிந்து வருவது பாராட்டத்தக்கதாகும். இதுபோல் மதசித்தாந்தங்களிலும் நீங்களெல்லோரும் ஓர்மித்திருத்தல் வேண்டுமென்பது எனது கோரிக்கை. "உலமாக்களின் ஒற்றுமையே ஓர் ஊரை எளிச்சியுறச்செய்யும்". நான் இவ்வூருக்கு வருகையில் என்னை வெகு விமரிசையாக வரவேற்ற தொண்டர் சபையாருக்கும், அதன் தலைவரான கத்தீப்ஹாஜீ முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களுக்கும் நன்றிசெலுத்துகிறேன். இத்தொண்டர் சபை வளம்பெற அல்லாஹ் அருள் புரிவானாக. "நன்மையைச் செய்யத் தூண்டல் நன்மை செய்வதாகும்" என்னும் ஹதீதுப்படி இவ்வூரில் சபைகள் வளம்பெற்றிருப்பது பாராட்டத்தக்கதாகும். 'முஸ்லிம் பெஸ்டிவெல் சுஸைட்டி'யின் உபசாரத்திற்கு எங்ஙனம் நன்றி செலுத்துவதென்பதை யானறியேன். இந்த சொசைட்டி இஸ்லாமிய திருத்தினங்களைக் கொண்டாடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சுஸைட்டி யெனப்படும். தென்னாட்டிலும் இவ்வூரிலும் எத்தனையோ சுஸைட்டிகளிருந்தும், "சாந்திப் பிரகடனசபை"யாரின் பொறுப்பு மிக்க கிரேஷ்டமானதாகும். அச்சபையின் முயற்சியால் "குர்ஆன் ஷரீப்" தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அது கூடிய சீக்கிரம் வெளிவரலாம். அதனால் தென்னாட்டிலுள்ள லட்சக்கணக்கான மாந்தர்களின் தாகமும் தீர்ந்து, திருகுர்ஆனின் அரிய தத்துவங்களை அறிய ஹேதுவுண்டு. இதற்கு உலமாக்களின் சேவை பிரதாரமாகுமென்பதையும், அதில் சேவைபுரிந்துவரும் உலமாக்களின் ஸ்திதியையும் யானறிவேனாகையால், அம்மொழிபெயர்ப்பு மிக்க உன்னதமாகவே இருக்கும். இவை வெளிவந்ததும் காதியானிகளின் தர்ஜுமா திரஸ்கரிக்கப்படுமென்பது திண்ணம். இம் மொழிபெயர்ப்பு வேலையில் எமக்கு ஆனந்தமும், ஆசீர்வாதமுமிருப்பதோடு ஆண்டவன்பால் நன்றியும் செலுத்துகிறேன்.

இற்றைய புனிததினம், உலகிற்கு அருள் புருடராய் அவதாரம் புரிந்த நபிகள் நாதரின் ஜனன மாதத்திய தினமாகும். பதிமூன்று நூற்றாண்டுகளுக்குமுன் ஸஹாபாக்கள் துன்பமனுபவித்தும் கஷ்டப்பட்டும் வளர்த்துவந்த இஸ்லாமானது, இற்றைக்கு மிக்க இல்லலில் மாட்டிக்கொண்டு ஆதரவற்றிருக்கிறது. இதன் ஸ்திதியைக்கண்டு முஸ்லிம்கள் ரத்தக் கண்ணீர் வடித்தல் வேண்டும். இஃதோர் நுண்ணிய சமையமாகும்.

உலகிலுள்ள இதரமதஸ்தர்கள் இஸ்லாத்தை ஸ்தம்பிக்கச் செய்து விடுவதென மனோராஜ்யம் செய்துவருகின்றார்கள். மேலும் உலகிலே மிக்க பெரியதொகுதியோராய கிறிஸ்தவமதஸ்தர்களின் கோவில்கள், பிரசாரங்கள், பிரசுரங்கள் இவைகளின் கருத்தும் அவர்களின் நோக்கமு மெல்லாம் இஸ்லாத்தை அழித்து விடுவதென்றே இருக்கிறது. (நஊதுபில்லாஹிமின்ஹா) இதைக் கேட்டு நீங்கள் துக்கிக்கலாம். ஆனால் இதை உங்களிடம் சொல்லாது வேறு யாரிடம்சொல்லுவேன்.

லண்டன்மா நகரின் 'பிஷப் ஆப் கான்டர்பரி' யென்னும்பெரிய கிருஸ்தவப் பாதிரிக்கு மாதா கோவிலில் உபசார மளிக்கும் போது அம் மாதா கோவிலின் பிளேட்பாரத்தில் அவர் நின்றுகொண்டு "நாம் தீவிரப் பிரசாரத்தால் முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரங்களான ஹிஜாஸ் நாட்டில் நமது கொடியை நாட்டுவதற்கு இதுவே தக்க சமயமாதலால் நாம் தீவிரப் பிரசாரஞ்செய்ய வேண்டுமெ"னக் கூக்குரலிட்டார். உடனே அவ்வுபசார மேடையின் மீதே லட்சக் கணக்கான பவுன்கள் வந்து குவிந்தன.

இதுபோல் ரோமாபுரியின் பெரிய பாதிரியான இட்டாலிய போப்பின் சொத்துக்கள் தமக்கு மீண்டும் கிடைத்தவுடன் சிலுவை யுத்தத்தின் பகரத்தை இக்காலை வாங்குவான்வேண்டி இஸ்லாமிய நாடுகளில் சென்று பிரசாரம்

புரிவதற்கு தனது பூராச் சொத்துக்களை யும் கொடுத்துவிடுவதாகச் சொல்லி இஸ் லாமிய நாடுகளுக்குத் தங்கள் பிரசாரகர்களை அனுப்பிவந்தார்.

இவ்விஷயங்களுக்கு ஆதாரமாக, நான்மதீனா ஷரீபிலிருக்கும்போது பல நாட்டு முஸ்லிம்க ளைக்கண்டு சம்பாஷிக்க நேர்ந்தபோது பார்பரி, தூனிஸ், முரோக்கோ, அல்ஜீரியா முதலிய ஊர்களில்மட்டும் 5000 மிஷனரிகள் இருந்து வருவதாக தகவல் கிடைத்தது. அவ்வூர்களில் இஸ்லாமிய ஞான போதனைகளற்ற பாமர முஸ்லிம்கள் அம்மிஷனரியார் கைகளில் சிக்கி மதம் மாறியும் வருகிறார்களாம்.

மேலும் அமெரிக்காவின் பெரிய தனவந்த ரான டாக்டர் ஸேமர் என்பாரின் மதப்பிரசார மிஷினும் இஸ்லாத்தை ஒழிக்கும் கருத்துக் கொண்டு நிறுவப்பட்டதேயாகும்.

இந்தியாவிலும் ஸ்வாமி தயானந்தர் என ஒரு வர் சில ஆண்டுகளுக்குமுன் தோன்றி தமது முயற்சியால் சுத்தி இயக்கத்தை ஆரம்பித்து பாமர முஸ்லிம்களையும் தாழ்த்தப்பட்டோரை யும்சுத்திகரித்து வந்தார். தற்போது உலகமுழு தும் "சுத்தி மிஷின்"கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வியக்கத்தை வெகு மும்முரமாக நடத்தி வந்து, "காஜி அப்துர் ரஷீத்" என்பவரால் கொல்லப்பட்ட ஸ்வாமி சிரத்தானந்தர் தமது 'தேஜ்' பத்திரிகையில் (அல்லாஹ் காத்தல் வேண்டும்) கஃபத்துல்லாவின் சுவற்றின்மீது நமது கொடியை நாட்டிவிட வேண்டுமென" எழுதியிருந்தார். இங்ஙனமெல்லாம் எழுதுவ தற்கும் கூறுவதற்கும் காரணம் நமது நிலையே யாகும். திரிகால ஞானமுடைய நாயகம் (ஸல்.) அவர்கள் ஒருபோது தங்கள் ஸஹாபாக்களை நோக்கி, "நீங்கள் விழித்துக்கொண்டிருக்கும் போதே உங்களைப் புசித்துவிடுவோர்கள்" என திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட ஸஹா பாக்கள் பீதிகொண்டு 'முஸ்லிம்கள் குறைந்து விடுவார்களா என்ன?' என்பதாக நாயகமவர்க ளிடம் வினவ, நாயகமவர்கள், "இல்லை; அதி கரித்து மிகைத்துக்கொண்டே போகும், மிகைத்துமிருக்கும். ஆனால், வெள்ளத்தின் செத்தைபோலும். செக்கெண்ணெயில் ஒதுங் கும் சக்கை போலுமே முஸ்லிம்களின் நிலைமை யிருக்கும். இங்ஙனம் கேவல ஸ்திதியை அடைவதற்கு முஸ்லிம்களின் நிலை மாறி, அசூயை, அச்சம், அசட்டை, மரணபீதி, ஐயம், இஸ்லாமில் உறுதியற்றல் போன்ற தீய மனோநிலையே காரணங்களாகும்" என இயம்ப, "அசட்டை" என்பது என்னவென ஸஹாபாக் கள் மீண்டும் வினவியதற்கு பொருள்சேர்க்கும் அவா, மரண பீதி இவைகளேயாகும்; இதனால் முஸ்லிம்கள் அன்னிய மதஸ்தரின் கைகளில் சிக்கிக்கொண்டு க்ஷீணமுறுவார்கள் என்றார் கள்.

மற்றொரு வேத ஆதாரம்:—"சர்வ மதங்க ளிலும் வெற்றிபெற்ற தீனாகும்" என்ற குர் ஆன் பிரமாணத்தை இதர மதவாதிகள்பார்த்து மிரட்சிகொண்டு உண்மை மத ஆக்கை மீது அழுக்காறு மேலீட்டால் அம்மதம் மிகைக்க விடாது தடுக்க சகல முஸ்தீப்புகளையும்செய்து வருகின்றனர். உவமையில் கல்கத்தா 'ஸ்டேட் மென்' பத்திரிகையின் அமெரிக்க ரிப்போர்ட்ட ரானவர் தமது ஓர் பிரசங்கத்தை ரேடியோ வால் பிரசங்கிப்பதற்கு ஒன்றரை லட்சம் டாலர் செலவிட்டார். இது கோவில் பொரு ளல்ல. தமக்குச் சன்மானமாக கிடைத்த தமது பொருளாகும். இத்தனை பொருளும் தமது ஒரே பிரசங்கத்தை பல பாஷைப் பத்திரிகை களில் விளம்பரப்படுத்துவதற்கு செலவிட்டா ரென்றால், அதனை இங்கு முஸ்லிம்கள் கவனிக்க வேண்டிய விஷயமாகும். இது யான்சொல்லு வதல்ல; இதர மதஸ்தரே கூறுகிறார்கள்.

நான் ஜாவாவிலிருக்கும்போது அந்த நாட்டு மிஷின் பிரஸிடென்டான "டாக்டர் கிரேமர்" இடம் வார்த்தையாட நேர்ந்தபோது அவர்கள் மிஷினின் அந்தரங்கத்தை அறிய விரும்பி னேன். அதுபொழுது அவர், அமெரிக்க டாக்ட ரான "ஸுவீமர்" ஜாவா வந்து கோடிக்கணக் கான பவுன்களைச் செலவிடுகிறதாகச் சொன் னார். எனவே மிஷினரிகள் லண்டன்மா நகரி லிருந்து ஏராளமான பவுன்களைக் கொண்டு வந்து இந்தியா, ஜாவா முதலிய நாடுகளில் செலவிடுவதற்கு மௌலவிகளே காரணமாகும். இதர நாட்டு மௌலவிகள் அமெரிக்க பாதரிமார் களுக்குப் பதில்கொடுத்து தற்காப்பாளர்களாக யிருக்கின்றார்கள். நமது இந்திய உலமாக்கள் மட்டும் அப்படியில்ல. இவ்வித நிலைமையில் இவர்களுக்கு மேனாட்டார்எதிர்ப்பும் உள்நாட்டு எதிர்ப்பும்ஆகிய இரு எதிர்ப்புகள் ஏற்பட்டிருக் கின்றன. ஆகவே இவர்கள் இவ்விரு எதிர்ப்பு களையும் சமாளிக்கத் தயாராக இருந்து கொள் ளல் வேண்டும்.

உள்நாட்டு எதிர்ப்பானது, இந்த ஆலிம் சாஹிப் தப்பானவர் அந்த ஆலிம் தவறானவர்

என்பதாகும். இத்தகைய உள் எதிர்ப்பு இந்தியாவில் மலிந்து கிடக்கின்றது. உவமையில் உலமாக்கள் ஓர் இடையருக்கொத்த அந்தஸ்திலாவர். ஆட்டு மந்தைகளில் ஓநாய் புகுந்து ஆடுகளை நோக்கி, "உங்கள் எஜமானராகிய இடையர் உங்களிடம் பால் கறக்கிறார்; கடைசியில் உங்கள் மாம்சங்களேயும் புசித்துவிடுவார்" எனக்கூறி இடையர் மீது ஆடுகளுக்குப் பகைமையை உண்டாக்கி விட்டால், இஃது ஆடுகளுக்கு அழிவையே தருமென்பது வெளிப்படை. இங்ஙனமே உலமாக்கள் மீது பகைமை கொள்ளுமாறு பாமர மக்களைத் தூண்டிவிடும் ஓர் விஷமக் கூட்டத்தார் உலகிலிருக்கிறார்கள். இந்தியாவில் "மிர்ஜா குலாம் அஹ்மது", ஈரானில் "பாபுல்லா" இவ்விருவரும் தங்கள் ஊரில் நபித்துவத்தைப் பிரஸ்தாபிக்க வழியில்லாதபோது, உலமாக்களை தூஷித்தால் தான் காரியம் சித்திபெறுமெனக் கருதி உலமாக்களை எதிர்க்க முனைந்து நின்றார்கள். இங்ஙனமே அவர்களின் கூட்டத்தினரும் அதை முன்மாதிரியாகக் கொண்டே உலமாக்களை தூஷிக்க பாமர மக்களை தூண்டி வருகிறார்கள். இது பாமர மக்களை ஏமாற்றி அவர்களுக்குத் தீங்கிழைப்பதேயாகும். இதற்கொப்ப, "எமது உம்மத்தின் ஓர் கூட்டம் உண்மையில் மிகைத்தே இருப்பார்கள்; அவர்களை அழிக்க எந்த சக்தியாலும் முடியாது" என நாயகமவர்கள் அருளியிருக்கிறார்கள். இவ்வாறே பாய்களில் படுத்துறங்கும் உலமாக்களை அழிப்பதென்பது ஒருபோதும் முடியாது. இன்னும், "பாமரர்களைப் பின்பற்றிய மற்றொரு கூட்டமுமுண்டு; அப் பாமரர்களில் சில அறிஞர்களு மிருப்பார்கள். உங்கள் மூதாதைகளும் அறியாத நூதன விஷயங்களேயும் அவர்கள் எடுத்துரைப்பார்கள்; அவர்களே வேஷதாரிகளாகும்" என நாயகமவர்கள் மொழிந்தபோது, "அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளப் பரிகாரமென்ன?" வென ஸஹாபாக்கள் கேட்க, நீங்கள் "பத்திரம், பத்திரம்" அவர்கள் "பத்வாக்களும்" (மார்க்கத் தீர்ப்புகளும்) கொடுப்பார்கள். பத்திரம் ஏமாறவேண்டாம். (மிஷ்காத் ஷரீப்) அவர்கள் எத்தனை நூதன விஷயங்களைக்கூறினாலும், செய்து காண்பித்தாலும் நீங்கள் அவர்களிடம் கலந்துறவாடவேண்டாம்" எனக்கூறினார்கள். மேலும் நாயகமவர்கள் (அன்னவர்பால் அர்ப்பணம்) "எனக்குப்பின் நபியே கிடையாத போது முப்பத்திமூன்று பேர்கள் எனக்குப் பின் பொய்நபிகளாகப் பிதற்றுவார்கள். அவர்களே தஜ்ஜலாகும்" எனவும் திருவுள்முற்றிருக்கிறார்கள்.

கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமாவது:— "ஷீஆ, ராபிஸீ," இவர்களில் பல அபிப்பிராயபேதங்களிருந்தாலும் இவர்கள் எல்லோரும் நாயகத்திற்குப்பின் நபி வருவது கிடையாதென்று ஏகமாய் சித்தாந்தங் கொண்டிருக்கின்றனர்.

"வோக்கிங் மிஷினரி"களாலும், காஜா கமாலுத்தீனாலும் எழுதப்பட்ட குர்ஆன் மொழிபெயர்ப்பென்னும் ஆங்கில நூலில் "வஹ்யெ இலாஹியின்வாயல் இன்றும் திறந்திருக்கிறதென்றும், நுபுவ்வத்தின் பாக்கியம் இன்னும் இருக்கிறதெனவும், இது இஸ்லாமியரின் கொள்கை யெனவும்" கூறியிருக்கின்றனர். இந்த தர்ஜுமாவில் சிலதை "மத்ராஸிலுள்ள அரபி ஞானமற்ற ஆங்கில டிகிரி பெற்ற ஒருவர், தமிழில் தர்ஜுமாச் செய்து தாமும் தப்ஸீர் எழுதியிருப்பதாகப் பறைசாற்றி வருகிறாராம்? என்னே இன்னவரின் அறியாமை! அரபி பாஷா ஞானம் அறவே தெரியாத ஒருவர், தாமும் தப்ஸீர்தர்ஜுமாச் செய்திருக்கிறேனென பறைசாற்றி நிற்பது விந்தையிலும் விந்தையே. உலகில் இது முதற் சம்பவமுமாகும்.

இங்ஙனம் ஓர் நூதனக் குழாத்தினர் கிளம்பி பாமர முஸ்லிம் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

சகோதரர்களே! உஷார்! இவர்கள் உங்களை ஆட்டு மந்தைகளென்றெண்ணி தின்ண விரும்பும் ஓநாய்கள் என்றுணருங்கள்!!

மேலும் 1350 வருடங்களாக 73 கூட்டத்தினரில் நல்லவர், புல்லர் எல்லோருமாக ஈஸா (அலை.) அவர்கள் அல்லாஹ்வால் உயர்த்தப்பட்டார்களென சித்தாந்தங் கொண்டிருக்குங்கால், இந்த ஓநாய் குழாத்தினர்களான அஹ்மதியர்களின் "பராஹீனெ அஹ்மதி" என்னும் நூலில் "திடனாக யான் உம்மை பிரக்ஞை யறச் செய்து உம்மை யான் உயர்த்திக் கொண்டேன்" என்னும் ஆயத்திலுள்ள "உம்மையான் உயர்த்திக்கொண்டேன்" என்னும் பதத்திற்கு "உமக்கு பரிபூரண நிஅமத்து அளித்தோம்" என உரை எழுதிவிட்டு ஈஸா மரித்துவிட்டார்; அவரின் கப்ர் காஷ்மீரிலிருக்கிறதெனத் தனக்கு வஹீ வந்திருப்பதாக

எழுதியிருக்கிறார். இங்ஙனம் விநோத விஷயங்களைக் கூறும் இவர்களும் தங்களை முஸ்லிம்களெனச் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்கள் முஸ்லிம் குழாத்தினரின் ஓநாய்களே யாகும்.

இதுவரை பேசியும் அசல் கருத்து வரவில்லை. ஆதலால் இன்னுமோர் வார்த்தை சொல்லி விஷயத்தை நிறுத்திக் கொள்கிறேன்.

அக்குழாத்தினர்களின் தப்ஸீரை யான் என்னென்று சொல்வது?

“ஸுரயே யூஸுபில்” வப்யள்ளத் ஐனாஹு” என்ற பதத்திற்கு “கண்ணீர் ஒலித்து நிறம் பிற்று” என அருத்தமிட்டு யஃகூப் (அலை.) அவர்கள் தமது புதல்வரான “யூசுப்” (அலை.) அவர்களின் பிரிவாற்றாமையை எண்ணி அழுததால் அவர்களுக்குக் கண்ணீர் ஒலித்து நிரம்பியது எனக் கருத்துக்கொண்டு அஹ்மதியர்கள் உரை எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் “பியாள்” என்னும் அரபிப்பதத்திற்கு “வெண்மை” என அர்த்தம் வாங்கி பிரிவாற்றாமையால் யஃகூப்(அலை.) அவர்கள் சதா அழுது கொண்டிருந்த காரணத்தால் அவர்களின் நேத்திரங்கள் வெண்மையாகி பார்வையற்றுகபோதியாகி விட்டார்களென்பது ஸுன்னத்துஜமாஅத்தாரின் உரையாகும். இப்பதத்தின் அர்த்தத்தை அரபி பாஷையை ஆரம்பமாய்ஓதும்சிறுவர்களும் வெகு எளிதில் நன்கு அறிந்துகொள்ளக்கூடியதா யிருக்கும்பொழுது, இங்ஙனம் அர்த்தஞ் செய்திருந்தால், இதர விஷயங்களில் எங்ஙனம் தப்பர்த்தஞ் செய்திருப்பார்களென்பதை நீங்களே உணரவேண்டும்.

இவ்வாறு இருபுற தாக்குதலிலும் மாட்டியிருக்கும் நமது ஸ்திதியை எப்படிக் கூறுவது சாலும்? இஃதொரு பக்கலிருக்க, முஸ்லிம்களை ஒருபுறம் வறுமையும் தாக்கிவருகிறது. பிற மதஸ்தர் பொருளாலும் பிரசாரத்தாலும் வலுக்கொண்டிருக்கும் இந்நாட்களில் நமது மதஸ்தர் மட்டிலும் பலவகையிலும் க்ஷீணிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கதாகும்.

காதியானிகளும் இஸ்லாத்தைத் தானே பிரசாரஞ் செய்துவருகிறார்களென்று நீங்கள்கேட்கலாம். அதற்கு, உண்மை மதமான இஸ்லாத்தின் பெயரைக்கொண்டே உலகை ஏமாற்ற முடியுமென்பதை அவர்கள் நன்குணர்ந்து அங்ஙனம் புலித்தோலைப் போற்றி வருகிறார்களென பதில் கூறுவோம். எனவே, காதியானிகள் உண்மை முஸ்லிம்களுமல்ல; அவர்களின் பிரசாரம் உண்மை இஸ்லாமியப் பிரசாரமுல்ல; அவர்கள் பக்கா வேஷதாரிகளேயாவர்.

இஸ்லாமியக் கோள்கையின் நலன்கள்

இஸ்லாத்தின் மூலாதாரக் கொள்கை, “வணக்கத்திற்குரியோன் அல்லாஹ்வே” என்பதாக இருக்கிறது. ஆனால் இந்தியாவிலுள்ள 21 கோடி ஹிந்துக்களுக்கும் 32 தேவதைகளுண்டு. இதன் பாகுபாட்டை உணர்ந்து, இஸ்லாமியக் கொள்கையே மேலானதெனக் கண்டு (ஸ்வாமி) தயானந்தர் விக்ரஹத் தொழும்பை அகற்றி ‘ஏகதெய்வத்தை’ விசுவாசிக்க நேர்ந்தது. அவர் ஹிந்துவாக இருந்தாலும், “வணக்கத்திற்குரியோன் அல்லாஹ்வே” என்னும் இஸ்லாத்தின் உண்மைக் கொள்கையை அனுஷ்டித்து அதையே தமது சிஷ்யர்களுக்கும் போதித்து வந்தார்.

கிறிஸ்துவர்கள்,முக்கடவுளான திரியேகத்துவத்தை விசுவாசித்திருந்தும் இஸ்லாமியக் கொள்கையைக் கண்டபின் அதைப்போலவே ஈஸா(அலை.) அவர்கள் அல்லாஹ்வின் மகனல்லவென இக்காலை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இஸ்லாத்தின் இருநலவுகள்

ஒன்று ஹக்கனளவில் முஸ்லிம்களை உயர் பதவியிலாக்குவது. மற்றொன்று மனிதர்களிடை உண்மைகளை வெளியாக்கி மெய்வாஞ்சையைப் புகட்டுவது.

தொழுகை

இஸ்லாத்தில் பிரதான பிரயோசனமான வஸ்து தொழுகையாகும். இது “தீனின் தூணாகும்.” ஓர் கட்டடத்தின் தூண் விழுந்துவிட்டால் எவ்விதம் கட்டடம் இடிந்துவிடுமோ அதுபோல் தொழுகை என்னும் தூணை நிலைநிறுத்தாது போனால் “தீன்” என்னும் கட்டடமும் இடிந்துவிடும். ஆகையால் நீங்கள் தொழுகையை பூணிப்போடு கடைப்பிடித்தொழுகுங்கள்.

தொழுகையின் தத்துவம்

தொழுகையின் தத்துவம் ஹிருதயத்தைப் பரிசுத்தமாக்கும். “பக்தி பூண்டு தொழுத மூமின்கள் வெற்றி பெற்றவராவார்கள்” என்னும் திருமறை வாக்கியப்படி இதயம் ஓர்மைப்படாவண்ணம் தொழுகும் தொழுகை பூரணமாகாது. எனவே, தொழுகையானது அல்லாஹ்வின்பால் மிகுந்து முடுகச்செய்து விடுகிறது.

இஸ்லாத்தின் தொழுகைக்கும், இதர மதத்தின் ஜபங்களுக்கும் வித்தியாசத்தைக் கவனியுங்கள்.

கிறிஸ்துவ மத ஜபம்

இன்ஜீல் மந்திரமாவது, "என் தகப்பனே! இன்று ரொட்டி கொடு" எனக் கோவிலில் ஜெபிக்கிறார்கள்.

ஹிந்து மத ஜபம்

ஹிந்து மதத்தின் மந்திரமாவது, "தான்யங் கொடு, சொர்ணங் கொடு, வஸ்திரங் கொடு" என்பதாகும். இதையே ஹிந்துக்கள் ஜெபித்து வருகிறார்கள்.

இஸ்லாமத ஓதல்

முஸ்லிமானவன் அல்லாஹ்வின் சன்னிதியில் நின்றுகொண்டு, "இஹ்தின ஸ்ஸிராத்தல் முஸ்தகீம்" (எங்களுக்கு நேர்வழியைக் காண்பி) என்னும் குர்ஆன் ஆயத்தை ஓதுகின்றான். இது சாதாரண அர்த்தமானாலும் இதில் மற்றொரு தத்துவம் பொருந்திய அர்த்தமும் விளங்குகிறது. அதாவது:—

பூகோள சாஸ்திரப்படி இருபுள்ளிகளுக்கு மத்தியில்—நடுவில் ஓர் கோடு போன்ற பிரிவு உண்டு. அப்பிரிவின்றி இருபுள்ளிகளும் சேர்ந்துவிடுவதற்கு (முஸ்தக்கீம்) நேராகல் எனச் சொல்லப்படுவதுபோல், ஆண்டவன் அடியான் என்னும் இரு புள்ளிகளையும் ஒன்று சேர்த்து "ஆண்டவனே! என்னை உன்னில் சேர்த்துக் கொள்" என்பதுதான் இதன் சிறந்த தத்துவார்த்தமாகும்.

"இன்று உங்களின் மதத்தை பூரணமாக்கி எனது நிஅமத்தையும் உங்களுக்கு பூர்த்தியுறச் செய்து உங்கள் மதம் இஸ்லாமெனவும் நான் பொருந்திக் கொண்டேன்" என்று குர்ஆனில் தெய்வ வாக்குவந்த காரணங்களிலொன்று, ஆண்டவன் அடியாரிடம் சேருதலாகும். மற்றொன்று இகலோகத்தில் எவ்விஷயமும் பூரணமடைவதாகும். இங்ஙனம் இருபுற கருத்துகளும் நிறைவேறும் விதத்திலேயே நமது உண்மை நபியின் மதப்பிரசாரமிருந்தது.

மற்றொரு ஆயத்தில் "ஆண்டவனையும் நெருங்கிய குடல்வாதி ஜனங்களையும் பயப்படுங்கள்; அவர்களை ஆதரியுங்கள்! ஆண்டவனை வணங்குங்கள்! இஸ்லாத்தின் தத்துவத்தை கவனியுங்கள்!" எனவும் ஆண்டவன் கட்டளையிடுகிறான்.

வேறொரு ஆயத்தில், தொழுகையைப் பராமுகஞ் செய்வோர்கள் "வைல்" என்னும் கொடிய வீழ்கதியையே அடைவர்" என்றும் ஆஞ்ஞையிடப்பட்டிருக்கிறது.

மேலும் தெருக்களில் சுற்றிப் பார்த்து, "தொழுகாதவர்களை அவர்களின் வீடுகளைநெருப்பிட்டுக் கொளுத்தி எரித்துவிடுவதும் தகும். ஆனால் அவ்வீட்டுப் பெண்களை, பிள்ளைகளைக் கருதி அங்ஙனஞ்செய்வதைநான்விரும்பவில்லை" என நபிகட்பிரான் அவர்கள் நவின்றிருக்கிறார்கள்.

"உமது தாய் தந்தையை கண்ணியப்படுத்து; அவர்களை ஹிம்ஸிக்காதே" என மற்றொர் திருமறை ஆயத்து நவில்கின்றது.

"தாயின் முகத்தைப் பிரியமாய் ஒருதரம் பார்ப்பவனுக்கு ஒரு நபிலான ஹஜ்ஜு செய்த தவாபு கிடைக்கும். மேலும் எத்தனை தரம் பார்த்தாலும் அத்தனை நபில்ஹஜ்ஜுசெய்த தவாபு கிடைக்கு"மென நாயகமவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பெண்கள் பதவி

புருஷன் இறந்த பின் உடன் கட்டை ஏற வேண்டுமென்பது ஹிந்துமதபோதனையாகும். இஸ்லாம் மதத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சகலபாத்தியதைகளும் உள" என்று நந்திருகுர்ஆன் கூறுகின்றது.

ஆண், பெண் இரு பாலாருக்கும் அவரவர்களைத் தக்கபடி நடத்தாவிடில் கேள்வியுண்டு. அவரில் எப்பாலாருக்கேனும் தீங்கிழைத்து, அவர் மன்னிக்காவிடில் நாயன் மன்னிக்க மாட்டான். புருடனுக்கு ஒரு இரவிலும்இணங்காத பெண்ணை நாயன் மன்னிக்க மாட்டான்.

நீதி போதனை

இஸ்லாத்தின் போதனையானது, உலக முழுதிற்கும் ஒன்றுபோலே தான் நீதத்தையும் நன்றியையும் மேற் கொள்ளுமாறு கூறுகின்றது. ஆகவே வியாபாரத்தில் நீதியை கடைப்பிடித் தொழுகல் வேண்டும்.

வியாபாரம்

வர்த்தகம் உயரியதொழிலாகும். அது சம்பந்தமான வரலாறு ஒன்றை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். "ஓர் ஸஹாபி நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து யானும், எம் வீட்டாரும் பசிப்பிணியால் வாடுகிறோமென்க, அதற்கு நபி பெருமானார் (ஸல்) அவர்

கள் உம்மிடம் என்ன இருக்கிறதெனக் கேட்டார்கள். உருக்குச்சட்டை யொன்றிருப்பதாகக் கூற, அதை உதுமான் (ரலி) அவர்களை வாங்கும்படி கட்டளையிட்டு, அதன் பாதித் தொகைக்கு வஜீபனமும், பாதித் தொகைக்கு கோடாரி யொன்றும் வாங்கி விரகு வெட்டி காலக்ஷேபம் நடத்தும்படியும், அவ்விரகினால் கிடைக்கும் ஊதியத்தில் பாதியை மீதப்படுத்தி வைக்கும்படியும் நாயகம் (ஸல்) கூறியதைக் கேட்டு, அவர் அவ்வாறே அமுல் நடத்தியதில், சிறிது காலத்திற்கெல்லாம் அவ்வுருக்குச் சட்டையை மீட்டுக்கொண்டு சாமான்கள் சுமப்பதற்கு கழுதையொன்றும் வாங்கிக்கொண்டார். இந்த ஸஹாபி தக்க சமயமான ஹுனைன் யுத்தத்தின்போது மிக்க உதவினர் என்றும் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இஸ்லாத்தில் நெறிதவறி நடப்பதால் உண்டாகும் கேடுகள்

இஸ்லாத்தின் போதனையை முஸ்லிம்கள் விட்டுப் பொய், சதி, சூது, வட்டி, புரட்டு இவைகள் மக்களிடை தாண்டவமாடி வருவது வெறுக்கத் தக்கதாகும். உவமையில் மதுரமானபாலை சுத்தமான கிளாஸில் ஊற்றிக் கொடுப்பதற்குப் பதிலாய் அப்பாலை துருப் பிடித்த அருசையான பாத்திரத்தில் ஊற்றிக் கொடுத்தால், குடிப்பவன் அதை வெறுப்பது போல் இஸ்லாமென்னும் அமிர்தத்தைப்பொய் யென்னும் படிக்கத்தில் ஊற்றினால் அது வெறுக்கத் தக்கதாகும். இஸ்லாத்தின் போதனைப்படி முஸ்லிம்கள் நடந்தால் உலகில் நம்மைவிட மேலானோர் இராரென்பது துணிபு. இங்ஙனம் முன்னோர் நடந்து வந்ததால்தான் அன்னோர் மேன்மை யடைந்து விளங்கலாயினர்.

நான் ஒரு தடவை கப்பல் யாத்திரையின் போது ஆங்கிலமறிந்த ஜப்பானிய லாயருடன் சம்பாஷிக்க நேர்ந்த சமயம் இஸ்லாம் சம்பந்தமான பேச்சு நிகழ்ந்தது. அது பொழுது இஸ்லாத்தின் உண்மை அசல் போதனைகளை அவரிடம் எடுத்து போதித்தேன். அந்த ஜப்பானியர் ஆண்டவனை மறுக்கும் இயற்கை வாதியானதால் அவருக்கு ஏகத்துவத்தையும், நபியின் அத்தியாவசியத்தையும், தெய்வ மிருக்கிறதென்பதையும், வஹியின்மெய்யையும்மிகுதம் எடுத்துபோதித்தேன். அவர் எனது வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியங் கொண்டு ஒரு இரவு யோசிப்பதாக லீவுகேட்டார். அவ்வாறு அனுமதிக்கப்பட்டு இரவில் அவர் யோசனை செய்துபார்த்தார். அவர் இரவெல்லா தூங்கவில்லையாம். கடைசியில் "இத்தகைய கொள்கைகளையுடைய மாந்தர்கள் உலக முழுதும் ஆளும் அரசஸ்தியை யடைந்து இகபரங்களில் இன்பமாய்த் திகழலாம்'' என்னும் முடிவிற்கு வந்ததாய் அவர் கூறி, ஆச்சர்யமுற்று, "இக்காலை முஸ்லிம்கள் க்ஷீணமுற்றிருக்கும் காரணம் யாதாகுமென'' வினவினர். இக்கேள்விக்குப் பதில் என்னிடம் இல்லாவிட்டாலும் யான் ஓர் இஸ்லாமியப்பிரசாரகரென்ற ஹோதாவில் விடைபகராமலிருப்பது தகாததன்றோ? ஆகவே, முற்காலத்தில் இஸ்லாமிய போதனைப்படி நடந்த முஸ்லிம்களைக் கவனித்துப் பாருங்கள்; அன்னோர் எத்தகைய உச்சஸ்தானத்திலிருந்தார்கள்; அவ்வாறே இதுகாலையும் முஸ்லிம்கள் நடந்துவரின் இத்தகைய க்ஷீணதிசையை எந்த முஸ்லிமும் அடையமாட்டார்'' எனப் பதில் கூறினேன்.

சகோதரர்களே! இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்றி நடக்கில், நாம் உன்னத நிலைமையை அடையலாம். ஆனால் வழி தவறுவோர் க்ஷீண திசை யடைவரென்பது திண்ணம்.

எனவே, இஸ்லாத்தின் சத்திய போதனைகளை மேற்கொண்ட இகபர பாக்கியவான்களாகத் திகழ நம்மனோருக்கும் ஆண்டவன் நல்லருள் பாலிப்பானாக.

12-வது பிரசங்கம்

நாகூர்

மௌலானா அவர்கள் தர்காஷரீபின் ஸஹனில் குழுமியிருந்த மாபெருந் திரளான ஜனங்களிடையே அமர்ந்து, புரிந்த அரிய உயரிய பிரசங்கத்தின் முக்கிய பாகம் பின்வருமாறு:—

ஹஜ்ரத்தவர்களை ஜியாரத்து செய்யும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்ததைப் பற்றி பெரிதும் சந்தோஷமடைகிறேன். பைத்துகள் ஓதி என்னை வெகுதூரத்திலிருந்து ஊர்வலமாகக் கூட்டிவந்து கௌரவித்த உங்களுக்கும், என்னை அன்பாய் வரவேற்ற தர்காவின் கனம் டிரஸ்டிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

ஒரு காலத்தில் மதீனாமுனவ்வரா வாசிகள் எனது வருகையை யறிந்து ஜனத் திரளாக வந்து இங்ஙனம் பைத்துகள் ஓதி அழைத்துச்

சென்றபோது எனக்கேற்பட்ட ஆனந்தத்தைப் போல், இன்று பைத்துள் ஒதிக்கொண்டு தாங்க ளெல்லீரும் என்னை ஊர்வலமாக அழைத்து வரும்போது எனகோர் ஆனந்தமேற்படுகிறது. அங்கு மதீனவில் ஏற்பட்ட ஆனந்தம், என்னை பெரிய ஜனத்திரள் வந்து அழைத்துச் செல்லு கிருர்களென்பதற்கன்று. இரு ஜஹானுக்கும் வள்ளலான நபிகள் நாதரிடத்தில் எனது சேவை ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதென் பதையுன்னி ஏற்பட்ட சந்தோஷமேயாகும். அஃதேபோன்று, இன்று எனக்கு நீங்களளித்த மரியாதையால், நான் 'குத்துபெ நாகூரீ' நாயக மவர்களிடமும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டே னென்பதை அறிந்து சந்தோஷ மடைகிறேன்.

மரணத்திற்குப் பின்

உலகினர், இறந்துபோன மனிதர்களின் ஆத் மாக்கள் சம்பந்தமாக பலவாறு அபிப்பிராயப் படுகிருர்கள். மரணித்த பின் மானிடர்களின் ஆன்மாக்கள் எத்தகைய நிலையிலிருக்கின்றன வென்பதுபற்றி இயம்புதற்பாலன்று.

ஜீவியம், மரணம் இவை இரண்டிற்கும் சம் பந்தமான வஸ்து ஆன்மா எனப்படும். மரண, ஜீவிய விஷய சம்பந்தமாயுள்ள இந்த ஆன்மா வையே இன்னதென உலகின் தத்துவசாஸ்திரி களுங்கூட அறிந்துகொள்ள முடியவில்லை.

மேனுட்டின் கீர்த்திபெற்ற பலாஸிபரும் (தத்துவ ஞானியும்) முஃஜிஸாவை மறுப்போர் களுமான மிஸ்டர் யூம், எக்ஸ்லே என்பவர்கள் ஆன்மாவைத் தங்களுடைய புத்திக்கெட்டிய வரைவிசாரணை புரிந்து பார்த்துவிட்டு, பொது வாக ஆன்மா வென்று ஒரு வஸ்த்து உண்டென் றும், அஃது இன்னதுதானெனச் சொல்ல முடி யாதென்றும் கூறி விட்டார்கள்.

பலாஸிபரும் அறிந்துகொள்ள முடியாத பொருளைப்பற்றி ரூஹானி சக்தியின் அறிஞர் களான நபிமார்களிடம் கேட்கப்பட்டபோது "ஆன்மா என்பது எனது றப்பின் கருமம் (பரமரகசியம்) என இயம்பும்" என்னும் பரம தேவ வசனம் அறிவிக்கப் பட்டது. ஆன்ம ஞானத்தையே விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள சக்தியில்லாதபோது, ரூஹானியை (அந்தரான்மாவை) இவர்கள் எங்ஙனம் அறிதல் சாலும்? ஆன்மசரீரத்திரயத்திலொன்ருன சூட்சும சரீர நிலையின் வல்லபத்தை நபி மார்களே யறிவர்.

அதால சிருஷ்டியான ஆன்மாவை, தூல சிருஷ்டிப் பொருள்களால் எங்ஙனம் அறிதற் சாலாதோ அதைவிட பன்மடங்கு உயரிய சூட் சும சரீரமான அந்தரான்ம நிலையை (ரூஹா னியை) எங்ஙனம் அறிதல் சாலும்?

ஆன்மாவை இயல்பற்ற பொருளெனவும், "அம்ர்" என்னும் விஷயமாயும் வியாக்கி யானஞ் செய்தல் விரியுமாதலால் அதை யான் விட்டுவிடுகிறேன். ஆனல் இயற்கைவாதி களின் இயற்கை சக்தியின் ஒவ்வோர் ஞானத் தையும் யானும் அறிந்திருக்கிறேனுபினும் அதை இங்கு விபரித்து பதிலளிக்க நேரம் போதாதென்றே விடப்படுகிறது.

ஆன்மாவென்பது மூலசத்தைச் சார்ந்த தாகும். அதை அறிய வேண்டுமானல் ஆன் மீக சக்தியால் அறியலாமே யொழிய கலை ஞானத்தால் அறிய முடியாது. உங்கள் ஆன்மாவை அறியவே நீங்கள் கஷ்டப்படும் போது அந்த மூலசத்தை நீங்கள் எங்ஙனம் அறியப்போகிறீர்கள்?

உங்கள் ஆன்மாவை நீங்கள் அறிந்துகொள் வீர்களானல் அது சம்பந்தமான சகல விஷ யங்களும் உங்களுக்கு தெற்றென விளங்கும். அவ்வாறு ஆன்மாவை அறிவதற்கு முக்கியமாக ஆன்ம உணவு தேவை. அவை 'அல்லாஹ்வின் ஸ்மரணையால் ஹிருதயம் சாந்தியடைகிறது" என்பதுபோன்ற அல்லாஹ்வை தியானித்த லாகும்.

ஸ்தூல உணவின்றி பசிப்பிணியை நீக்கமுடி யாததுபோல், ஆன்ம உணவின்றி ஆன்மாவை அறிந்துகொள்ள முடியாது.

மானிடன் மூன்று நேரம் சாப்பிடுவதால் இரத்தாசயங்களில் உதிரம் ஓடி அவன் சரீ ரம் வளர்கின்றது. இன்றேல், அவனது சரீர வளர்ச்சிக்கு தடையேற்படும். இவ்வாறே தான் மானிடனின் ஆன்மவளர்ச்சிக்கும் மானி டன் ஆன்மீக உணவளிக்க வேண்டும். இன் றேல் ஆன்ம வளர்ச்சிக்குத் தடையேற்படும்.

ஆன்ம உணவானது ஐங்காலத் தொழுகை யாகும். இங்ஙனம் தொழுது ஆண்டவனை சதா தியானித்திருப்பீர்களாகில், உங்கள் ஆன்ம சக்தி வளர்ந்து அதனல் சகலவற்றை யும் நீங்கள் அறிந்துகொண்டு அதன்பொருட்டு உயர்நிலையை எய்யலாம்.

'ரூஹானி' ஆன்மீக உணவாளிகளான அவ்லி யாக்கள் ஆண்டவனின் திக்ரைவிட்டு ஒரு மூச் சையும் வீணுக்குவதில்லை, இவர்களில் அபார

ஆன்ம சக்திக்காரர் என்போர் சதா 'திக்ரு' செய்பவரேயாவர்.

உதாரணமாக, பயில்வான்கள் உலகை வசப் படுத்துவதற்காக நன்கு சாப்பிட்டு தேகப் பயிற்சிசெய்வது அத்தியாவசியமாவதுபோல் ஆத்மீகப் பயில்வான்களும் திக்ரை (அல்லாஹ்வை தியானித்தலை)க்கொண்டு ஆத்மீகப்பயிற்சி செய்து பக்குவப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அதுகாலை நமது ஆன்மாவானது பயில்வானாகிவிடும்.

பயில்வான்கள் தங்கள் சரீரத்தை வளர்த்துப் பக்குவப்படுத்தி பிறரைத் தோல்வியுறச் செய்து உலகில் புகழ்பெற்று விளங்குவது போல், ஆத்மீகப் பயில்வான்கள் உலகினரின் ஆத்மாக்களைத் தோல்வியுறச் செய்து புகழ் பெற்று விளங்குகின்றனர்.

உலகப் பயில்வான்கள் இவ்வுலகை சம்பாதிக்கின்றார்கள்; ஆத்மீகப் பயில்வான்களோவெனின், எல்லோரின் ஹிருதயங்களையும் வயப் படுத்திக்கொள்ளுகிறார்கள்.

உலகப் பயில்வான்கள் எல்லாப் பயில்வான்கள்மீதும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவதுபோல ஆத்மீக அரசர்கள் எல்லா ஆத்மாக்களையும் அடக்கி அதிகாரஞ் செலுத்தி வருகிறார்கள்.

இயல்பு சரீரத்தையுடைய விஞ்ஞானியர்கள் இக்காலை உலகில் காணப்படும் அபூர்வ விஷயங்களான ஆகாயத்தந்தி, ஆகாயவசனி, தூரதிருஷ்டிக் கண்ணாடி போன்றவைகளின் உதவியைக்கொண்டு தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவும் கேட்கவும் சக்திபெற்றிருக்கும்போது, ஆத்மீகச் சக்தி வாய்ந்த மனிதர்கள் என்னென்ன செய்ய முடியுமென்பதை நீங்களே யூகித்துப் பாருங்கள்!

ஆத்மீக விஞ்ஞானிகள் உலகிலிருந்து கொண்டு இகபர லோகங்களின் காட்சிகளையும் காண்கின்றனர். இவர்கள் "அர்ஷை"யும் பார்க்கின்றார்கள்.

சுருதி ஆதாரம்

நண்பர்காள்!

யுக்தி ஆதாரங் காண்பித்தபின் சுருதி மேற்கோள் கூறுகிறேன். "வலிமார்கள் எமது பரிவட்டத்தின் கீழிருக்கிறார்கள்; அன்னவர்களை எம்மைத் தவிர யாரும் அறியமாட்டார்கள்." (ஹதீதுகுதுஸி)

மிதமிஞ்சிய "நபில் தொழுகையால் அடியான் அல்லாஹ்வின் சமூகம் ரொம்ப முடுகி விடுகிறான். ஐந்துநேரத் தொழுகையானது, நேரச் சாப்பாட்டிற்குச் சமமாகும். "நபில்" அப்படியல்ல; சதா தொழுகலாம். உதாரணமாக,

"மூமினன அடியான் நபிலான வணக்கங்களைக் கொண்டு என்னிடம் நெருங்குகின்றான். அப்பொழுது நான் அவனின் கேட்கும் காதாகவும், பார்க்கும் கண்ணாகவும், பிடிக்கும் கையாகவும் ஆகிவிடுகிறேன்" என ஆண்டவன் ஹதீது குத்ஸியில் திருவுளமாகிறான்.

இவ்வித சக்தி ஏற்பட்டவுடன் அவர்கள் உலக சராசரங்களை யெல்லாம் பார்க்கிறார்கள். இவர்களுக்கு இதர வஸ்துக்களைப் பார்க்கவும் அறியவும் 'நான் செய்விக்கிறேன்' என்பதே அல்லாஹ்வின் திருவாக்கு. அகக்கண், அகக் காது, அகக்கை இவைகளெல்லாம் ஆண்டவனால் அருளப்பட்டவைகளே யாகும். இவைகள் அருளப்பட்டவர்களுக்கே ஆண்டவனின் சொந்த அடியார்களெனப்படும்.

இவ்வித நிலை அடியானுக்கு ஆண்டவனால் அருளப்பட்டால், அடியானை நாம் ஆண்டவனெனக் கூறலாமா? என்னும் சந்தேகம் நண்பர்களுக்கு ஏற்படலாம். இவ்வித நிலைமை யருளப்பட்டதற்காக அடியானை ஆண்டவனெனக் கூறிவிடலாகாது. இதில் வித்தியாசம் என்னவென்றால், அல்லாஹ்வின் சக்தியானது இயற்கையாகும்; மானிடனின் சக்தி அல்லாஹ்வினால் கொடுக்கப்பட்டதாகும்; வலிமார்கள் அல்லாஹ்வின் அன்பில் மையலான காரணத்தினாலேயே அவர்களுக்கு இந்த சக்தி பாக்கியமானது.

'வலி' என்னும் பதமானது 'வலா' என்னுந் தாதுவிலிருந்து பிரிந்ததாகும். அப்பதத்திற்கு சாமீபம், சாயுட்சியம் எனப் பொருள் படும்.

"எமதுநிலையை நீங்கள் யாரும் அறியமாட்டீர்கள். நான் உங்களைக்காண உச்சப்பதவியை அடைந்திருக்கிறேன்" என்று கவ்து நாயகம் (ரலி) அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

"நான் உங்களின் யுக்திக்குப் புறம்பானவனாகும். என்னை இதரர்கள் போல் நீங்கள் யூகிக்க வேண்டாம்" என்று கௌது நாயகம் அவர்கள் கூறி,

"எமக்கு ஆண்டவனால் அருளப்பட்ட அகக் கண்ணைக் கொண்டு இவ்வுலகத்தைக் கைகடுகு போல் பார்க்கிறேன்" எனத்தெரிவித்தார்கள்.

இன்னும் அதே பக்தாதிய அரசர், நான் அஸ்தகிரியிலும் எனது சிஷ்யர் உதயகிரிலும் இருந்தாலும் அவரை ஓநாய் கடிப்பது எமக்குத் தெரியும்; அதை விட்டும் அவரைக் காப்பாற்றுவேன்; அத்தகைய கையும் எனக்கு ஆண்டவனால் அருளப்பட்டதேயாகும்'' எனக் கூறியிருக்கிறார்கள்.

அவ்லியாக்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று மனிதர்கள் சொல்லுகிறார்கள். விஷயம் அப்படியல்ல. இதற்கும், யுக்தி சுருதிகள் ஆதாரங்களுக்கும் சம்பந்தமில்லை.

இதுவரை மூமின்களான அவ்லியாக்களின் ஆன்ம சக்திகளையும் அதன் உச்சஸ்தானத்தையும் விபரித்தோம். இப்போது விக்ரஹத் தொழும்பர்களின் ஆத்மாக்களைக் கவனிப்போம்.

விக்ரஹ ஆராதனைக்காரரின் ஆத்மாக்கள் மிக்க பலஹீனமானவைகளாகும்.

மரணித்தவர் ஜீவிப்போரின் வார்த்தைகளைக் கேட்குதல்

பத்ரு யுத்தத்தில் மரணித்த குப்பார்களின் பிரேதங்கள் சேமிக்கப்பட்டிருந்த இடத்திற்கு, யுத்தம் ஓய்ந்தபின் நாயகமவர்கள் சென்று ஆங்கு நின்றுகொண்டு அம்மரித்த பிரேதங்களை நோக்கி, "எங்கள் நாயன் கூறிய வாக்குறுதியை நாங்கள் உண்மையாகப் பெற்றுக் கொண்டோம்; உங்கள் நாயன் கூறிய வாக்குறுதியை நீங்கள் உண்மையாகப் பெற்றுக் கொண்டீர்களா?'' எனக் கேட்டபோது, பெருமானவர்களுடனிருந்த ஹஜ்ரத் ஸித்தீக் அக்பர் (ரலி.) அவர்கள், "யாறசூலல்லாஹ்! மரணமடைந்தோர் எங்ஙனம் தங்கள் வார்த்தைகளைக் கேட்பார்கள்?'' எனக்கேட்க, நபி பெருமானார் (ஸல்.) அவர்கள், "உங்களைவிட அவர்கள் நன்றாகக் கேட்பார்கள்; உங்களுக்கு வெளிக்காதுண்டு; அவர்களுக்கு ஆன்மார்த்த செவியுண்டு; அதனால் அவர்கள் எல்லாவற்றையும் கேட்கிறார்கள்'' எனப் பகர்ந்தார்கள்.

ஆதாரமான ஹதீதில்,—"மைய்யித்தானது உனது பாதரட்சையின் சப்தத்தையும் கேட்கின்றது'' என வந்திருக்கிறது.

புகாரி ஷரீபில்:—(கபரஸ்தானில் நீங்கள் செல்வீர்களாகில்) "மூமினானோர்களாகிய ஸ்தலத்தார்களே! உங்கள் மீது ஈடேற்றமுண்டாக! நாங்களும் உங்களில் சேருபவர்கள் தாம்'' எனச் சொல்லுங்கள் என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய ஆதாரங்களால் மரணமடைந்தோர் கட்டாயம் நமது வார்த்தைகளைக் கேட்கிறார்களென்பதும், அதற்கு மறுமொழி பகர்கின்றார்களென்பதும் நன்கு புலனாகின்றது. ஆனால் மரணமடைந்தவர்கள் கூறும் மறுமொழியின் சப்தத்தை மனு, ஜின் இருவர்க்கத்தாரைத்தவிரயுள்ள இதர வஸ்துக்களெல்லாம் கேட்கின்றன.

ஷெய்கு அப்துல் ஹக் தெஹ்லவீ அவர்கள் மேற் கூறப்பட்ட ஹதீதை உறுதிப்படுத்திப் பேசி வரும்போது, "மரணமடைந்தபின் ஆத்மாவானது முற்றுஞ் சுதந்தர மடைந்து விடுகிறதோடு அவை அதிக சக்தி வாய்ந்ததாகவும் ஆகிவிடுகிறது; உலகத்தில் அவை உடம்புக் கூட்டில் அடைபட்டுக் கைதியாயிருக்கும்போதே இத்துணை ஆட்டபாட்ட ஓட்டத்திலிருக்கும்போது, மரித்தபின் சுதந்தர உலகான 'ஆலமெபர்ஸகி'ல் (மத்திய உலகில்) முழுஉரிமை அடைகின்றதென்பதில் சந்தேகமில்லை'' எனக் கூறியிருக்கிறார்கள்.

"ஜியாரத்து" ஆகும் என்பதற்கு ஆதாரம்.

"உஹத்'' யுத்தத்தில் ஷஹீதான ஸய்யிதுனா ஹம்ஜா (ரலி.) அவர்களை ஜியாரத்துச் செய்வதற்காக நமது நாயகம் (ஸல்.) அவர்கள், உஹதிற்குச் சென்று அவர்களது கப்றடியில் நின்றுகொண்டு ஸலாம் சொல்லுவார்கள். இவ்வாறு பிரதி புதவாரமன்றும் சென்று ஜியாரத்துச் செய்துவருவது பெருமானவர்களின் வழமையாக இருந்தது.

இங்ஙனம் நாயகமவர்கள் கப்றை ஜியாரத்துச் செய்துவந்ததால், நாமும் கப்றுகளை ஜியாரத்துச் செய்வது ஸுன்னத்தாகும். அதற்கொப்பவே நாம், தற்போது பெரிய மகானை ஹஜ்ரத் நாகூரியின் கப்றில் வந்து தரிசித்து நிற்கிறோம். இஃது ஸுன்னத்தாகும். மரணமடைந்தவர்கள் சகலவற்றையும் கேட்கிறார்கள்.

ஜியாரத்தின் முறைகள்

நமது அருமை நன்னபி (ஸல்.) அவர்கள் வபாத்தானபின், ஹஜ்ரத் ஆயிஷா நாயகி அவர்கள் வீட்டிலேயே தபன் செய்யப்பட்டார்கள். எனவே, ஆயிஷா நாயகி அவர்கள், நாயகமவர்கள் தபனுற்றிருக்கும் அறைக்குச் சென்று முகந்திறந்தவண்ணமே ஸலாம் சொல்லிவிட்டு வெளியே வருவார்கள். அதன்பின் ஸய்யிதுனா அபூபக்ர் (ரலி.) அவர்கள் வபாத்தான பின் ஆயிஷா

ஸித்திக்கா (ரலி.) அவர்கள் அங்ஙனமே முகந் திறந்து நின்று சலாம் சொல்லிவந்தார்கள். பின்னர் ஸய்யிதுனா உமர் கத்தாப் (ரலி.) அவர்கள் வபாத்தானபின் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்கள், முகத்தை மூடிக்கொண்டு அறையினுள் சென்று "ஸலாம்" சொல்லிவந்தார்கள். இது சம்பந்தமாக ஆயிஷா நாயகியிடம் வினவியபோது, நாயகமவர்கள் முன்பாகவும், எனது தந்தை முன்பாகவும் யான் முகந்திறந்து நிற்பது ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. ஆனல் ஹஜ்ரத் உமரிப்னு கத்தாப் (ரலி.) அவர்கள் முன் நான் முகந்திறந்து நிற்பது நமது மார்க்கத்தில் விலக்கப்பட்டிருப்பதால், யான் முகத்தை மூடிநின்றேனெனப்பதிலுரைத்தார்கள். (பெண்களுக்கு பர்தா அவசியமில்லை என்று கூறும் வேஷதாரிகள் இதை கவனித்தல் வேண்டும்.)

ஜியாரத்தின் ஒழுக்கங்கள்

சோதரீர்! நமது நாயகம் (ஸல்.) அவர்கள் ஜியாரத்தை ஆகுமாக்கி வைத்தார்கள்; அதன் முறைகளை ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்கள் கற்றுக்கொடுத்தார்கள்.

ஓர் உத்தமர், பிறர் மர்மஸ்தானங்களைக்கண்டு நாணமுறுவதுபோல் முகந்திறந்து ஜியாரத்துக்குச் செய்யும் பெண்மணிகளைக் கண்டு வலிமார்கள் வெட்கிக்கின்றனர். இதுகாரணம்பற்றியே ஹஜ்ரத் ஆயிஷா ஸித்திகா (ரலி.) அவர்கள் ஜியாரத்தின் ஒழுக்கங்களை நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஜியாரத்துச் செய்யுங்கால் ஷரீஅத்தில் ஆகுமாக்கப்படாத எந்த விஷயமும் நிகழ்த்தக் கூடாததோடு பெண்கள் முகந்திறந்து ஜியாரத்துச் செய்வதும் கூடாது. இதனல் ஜீவிய மனிதர்களின் முன் நடந்துகொள்வது போன்று மரணமடைந்தோர் முன்பும் நடந்துகொள்ள வேண்டுமென்பது நன்கு விளங்குகிறது.

வலிமார்களின் கப்றுகளை ஜியாரத்துச் செய்வதற்குப் பெண்கள்சென்றால், ஆண்கள் சந்திப்பின்றி அதபுடன் செல்லல்வேண்டும். ஜியாரத்துக்குரிய ஸ்தலங்களில் பாடல்கள், மேளதாளங்கள் நிகழ்த்தப்படலாகாது. ஷரீஅத்திற்கு மாற்றமான காரியங்கள் நடப்பதைக் கண்டு வலிமார்களின் ஆத்மாக்கள் மிக்க சஞ்சலமடைகின்றன. இந்த நிலமையில் அவர்களிடம் நீங்கள் தேடும் 'சிபாரிஷ்' பிரயோசனமளிப்பதாகாது.

உதாரணமாக, இதுபொழுது நான் உங்கள் முன் பிரசங்கித்துக் கொண்டிருக்குங்கால் நீங்கள் கூச்சல்போட்டுக்கொண்டிருப்பீர்களாகில், எனக்கு கோபமும் ஆத்திரமுமேற்படுவதுடன் எனது பிரசங்கத்தால் நீங்கள் ஒன்றும் பயனடையமாட்டீர்களல்லவா? இவ்வாறே உள்ளந் திறந்த ஹக்கனின் வலிமார்களது தர்காக்களுக்குச்சென்று 'கப்ர்' முன்நின்று நீங்கள் கூச்சல்போட்டால் அவர்கள் வருந்துகிறார்கள். ஆகவே அவர்கள் முன் ஒழுக்கமாய் ஸலாம் சொல்லி, பாத்திஹா ஓதி பக்தியோடு நின்று தரிசித்து வரவேண்டும்.

கப்றை முத்தமிடல்

ஜியாரத்துச் செய்யச் செல்வோரில் சிலர், கப்றை முத்தமிடுகின்றனர். இது ஆகாத கருமமாகும். அங்ஙனம் செய்வோர்களை முஷ்ரிகின்களென சிலர் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அங்ஙனம் சொல்லமாட்டேன். ஏனெனில், அவர்கள் கப்றண்டை நின்றுகொண்டு முத்தமிடும் போதும் தவ்ஹீதுடைய கலிமாக்களை உபயோகித்து வருகிறார்கள். தவ்ஹீதுடையோரை குப்ரால் நிர்ணயிப்பது அதர்மமாகும். "ஒருவர் கப்றை முத்தமிடும் போது பார்ப்போர்களுக்கு கப்றை பூஜிப்பதாகத் தோன்றுவதால் சந்தேகாஸ்பதங்களி நின்று தவிர்ந்து கொள்ளுங்கள்" என நாயக வாக்குக் கூறுகிறது. ஆதலால் பிறருக்கு சந்தேகமேற்படாவண்ணம் நமது நடத்தையை யமைத்துக்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு முத்தமிடுவோர், கப்றடியில் நின்று கொண்டு பாத்திஹா ஓதி **"நாயனே! உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்"** என்று அல்லாஹ்விடம் உதவி தேடுவதால் ஹிந்துக்களைப்போல் பூஜிப்பவர்களெனக் கருதி அவர்களை காபிர்களென இயம்புவது தவறாகும்.

ஆனாலும் முஸ்லிம் சகோதரர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுளது. பனைமரத்தடியில் **பால் குடிப்போனும், கள் குடிப்போனும் தூரத்திலிருந்து பார்ப்போருக்கு தோற்றத்தில் ஒன்றே.**" ஆனதுபற்றி நம்மை குப்பார்கள் கண்டு "நாங்கள் செய்வது போலவே தான் நீங்களும் செய்கிறீர்கள்" எனக்கூற விடமில்லாது நடந்து கொள்ளல் வேண்டும். இனி நாம் 'வஸீலா' விஷயமாகப் பேசுவோம்:

வஸீலா (சிபாரிஷ்)

நபிமார்கள் வலிமார்களிடம் சிபாரிஷ்தேடும் விதமாவது:—ஒரு சமயம் நபிகள் நாயகம்

(ஸல்.) அவர்களிடம் கபோதி ஒருவர் வந்து தமது நேத்திரத்தைப் பார்வைக்குரியதாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கோரி நின்றபோது, பெருமானார் (ஸல்.) அவர்கள் அக் குருடரை நோக்கி, "நீர் இரு ரக்கஅத்துகள் நபில் தொழுது அல்லாஹ் இடத்தில் துஆக் கேளும்" எனக் கூறியபடி அவ் அந்தகர் தொழுது துஆக் கேட்டபின், தங்கள் திருக்கரங்களால் அவர்முகத்தின் மீது பெருமானவர்கள் தடவ, அவரின் அந்தகம் நீங்கி நேத்திர ஜோதி பெற்றேகினார்.

எனவே, நாயகமவர்கள் இதனை நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சிபாரிஸை வஹாபிய நஜ்தியர், பாபுல்லாக்களான பாரசீகர், காதியானிகளான இந்தியர் ஆட்சேபிக்கின்றார்கள்.

(ஹதீத் அபீ தாவூத்) "நாயனே! உன்னிடத்திலே கேள்க்கிறேன். உனது அருள் நபியை (வஸீலாவை)க் கொண்டு உன்னையேநோக்கி நிற்கின்றேன். முஹம்மதே! (நபியே) நான் உங்களை (சிபாரிஸை)க்கொண்டு எனது தேவைகளை நிறைவேற்றும்படி எனது றப்பின் சன்னதியில் நிற்கின்றேன். ஓ! அல்லாஹ்! அவரை எனக்காக மன்றாடுபவராகச் செய்" எனக் கேட்கும்படி நாயகம் திருவுளமுற்றிருக்கிறார்கள்.

மற்றொரு சம்பவத்தைக் கேளுங்கள்! ஸய்யிதுனா உதுமான் (ரலி.) அவர்களின் கிலாபத் காலத்தில் ஒருவர் உதுமானென்னும் பெயருடைய சஹாபியினிடம் சென்று "நான் வறுமையுற்றிருக்கிறேனாதலால் எமது புதல்வியை விவாகஞ் செய்விக்க எம்மிடம் பணமில்லை ஆதலால் தாங்கள் கலீபா உதுமான் (ரலி.) அவர்களிடம் என் விஷயத்தைச் சொல்லி தன சகாயஞ் செய்ய ஏற்பாடுசெய்யுங்கள்!" எனக் கூறியபோது, உதுமானென்னும் சஹாபி, "நீங்கள் நாயகத்தின் 'றவ்லா' ஷரீபிற்போய், நபில் தொழுது நாயகத்தின் வஸீலாவைக் கொண்டு, துஆக் கேட்பீர்களாகில் அங்ஙனமே சகாயமிட நாயன் உதவி புரிவான்" என பதில் கூறினார். அதன் பிரகாரம் அந்த ஸஹாபி செய்து துஆக் கேட்டுச் சென்ற சில தினங்களில், செய்யிதினா உதுமானிப்னு அப்பான் (ரலி.) அவர்கள் ஷெ ஸஹாபியைத் தெருவில் இயற்கையாகச் சந்தித்து க்ஷேமலாபங்களை விசாரித்து, அவரின் கேவல ஸ்திதியைக்கண்டு அவருக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துதவினார்கள்.

நமது நாயகம் "ஹயாத்துன்னபீ" என்பதற்கு அவர்களின் திருவாக்கே சான்றாக நிற்கின்றது. "எவன் ஹஜ்ஜுச்செய்து என்னை ஜியாரத்துச் செய்யவில்லையோ திடனாகஅவன் எனக்கு தீது செய்தவனாகும்." இந்த ஹதீதில் "லம் எஜுர்கப்ரீ" "எவன் என் கப்றை ஜியாரத்துச் செய்யவில்லையோ" என்று கூறாமல், லம் யஜுர்னீ" "என்னை ஜியாரத்துச் செய்யவில்லையோ" யென நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

வலிமார்களின் கப்றுகளுக்குச் சென்றால் "ஏ! ஆண்டவா! இந்த வலியைக்கொண்டு உனது ஸ்தானத்தில் உதவிதேடுகிறேன்" எனக் கேட்கவேண்டும். கேட்கும் விஷயங்களும் உலக சம்மந்தமான விஷயங்களாக இராது, அல்லாஹு தஆலாவின் முஹப்பத்தையும் ஆகிரத்தில் நற்பதவியடைவதையும் கேட்பது உத்தமமாகும். எனது காலில் விழுவோரை யான் தடுப்பதுபோல் வலிமார்களும் தங்கள் கப்றை முத்தமிடுதலை விரும்புவதில்லை.

உலகில் அவ்லியாக்கள் கப்றை ஜியராத்துச் செய்ய நாடிப்போவோர், முத்துக்களும் பூக்களும்,போர்வைகளும் கொண்டுசென்று போற்றுகிறார்கள். குப்ரை சம்ஹரித்து உள்ளந்துறந்த ஹஜ்ரத்து நாகூரீ அவர்களின் சன்னிதானத்தை மனப்பூர்வமாக நான் ஜியாரத்துச் செய்ய இங்குவந்த இதுபொழுது, நான் குர்ஆன் ஹதீதுகளென்னும் முத்துக்களையும் புஷ்பங்களையும் சாற்றி, வஅஜ் மஜ்லிஸ் என்னும் போர்வையை போற்றவந்தேன்.

இவர்களின் அரிய சேவையின் பொருட்டாலேயே இக் குப்ரிஸ்தானத்தில் இஸ்லாத்தின் ஜோதி பிரகாசிக்கலாயிற்று. இஸ்லாத்தின் கொடியைநாட்டிப் பிரகாசிக்கச் செய்த இஸ்லாத்தின்ஜோதியில் இன்று நீங்கள் இலங்க, இவர்களும் இவர்களைப்போன்ற நாதாக்களுமே காரணமாகும். ஜப்பான் தேசம் போவதற்கு ஹஜ்ரத்தவர்கனின் ஜியாரத்து முக்கியமாகும். ஹஜ்ரத்தவர்கள் செய்த அரிய வேலையைப்போன்று யானும் செய்ய ஜப்பானிய குப்ரிஸ்தானுக்குப் போகுங்காரணத்தால், இங்கு குத்துபவர்கள் சன்னிதியில் துஆ கேட்டுப்போகும் கருத்துக் கொண்டே யான் இங்குவந்தேன். இது தான் எமது தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்தின் முக்கியநோக்கமேயல்லாது உபதேசஞ் செய்து. போக வேண்டுமென்பதல்ல.

ஹஜ்ரத்தவர்கள் இக்குபுரிஸ்தானத்தில் வெற்றி பெற்றதுபோல், யானும் வெற்றிபெற ஹஜ்ரத்தவர்களின் ஆசீர்வாதத்தை வேண்டுகிறேன்.

உலகில் வஹ்ஹாபிகள், காதியானிகள் என்னும் நரப்பூண்டு குழாத்தினர் முளைத்து கப்ரை ஜியாரத்துச் செய்வோர்களை "கப்ர் வணங்கிகள்" என எள்ளி நகையாடுகின்றனர். இவர்களின் கொள்கையும், கூற்றும், முற்றும் வெறுக்கத்தக்கதும், பாதாளத்தில் சேர்ப்பதுமாகும்.

இவர்கள் சுயநலங் கருதி, பாமர வாலிப குழாத்தினரில் ஒரு சிலரைத் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொண்டு, ஓலமிட்டுத் திரிந்து வருகின்றனர். இவர்கள் கொள்கையும் அனுஷ்டானமும், குர்ஆன் கட்டளைக்கும் நாயக திருவாக்கியங்களுக்கும் முற்றும் முரணுனதாகும். இவர்கள் கொள்கையைப் பின்பற்றி நடப்போர் வீழ்கதியடைவர். மிர்ஸாயிகள் ஆங்கிலம் படித்தோர்களை ஏமாற்றுகிருர்கள். மிர்ஸா நபியாம்! அவருக்கு வஹீ வந்ததாம்! மற்றும் இதுபோலொற்ற இஸ்லாத்திற்கு முரணுன கொள்கைகளை நூதனமாகப் பரப்பி வருவது கண்டு ஆங்கிலப் பாஷா ஞானமுள்ள கனவான்கள் ஏமாற வேண்டாம்! எனக் கூறி முடித்த பின் துஆ ஓதப்பட்டு சபை கலைந்ததும் எல்லோரும் மக்ரிப் தொழுகைக்குச் சென்ருர்கள்.

13-வது பிரசங்கம்.

காரைக்கால்

மௌலானு அவர்கள் முதன்முதலில், வஅஜ் மேடைக்கு எதிரிலுள்ள தர்காவில் நல்லடக்கஞ் செய்யப்பட்டிருக்கும் 'வலி' அவர்களின் பெயரால் பாத்திஹா ஓதிவிட்டு,

"திடஞக அல்லாஹ், ரஸூலில்மீது விசுவாசங்கொண்டு நற்கிரியைகள் புரிந்தவர்களுக்கு "பிர்தௌஸ்" என்னும் சுவனம் அவர்களின் விடுதியாகும். அவர்கள் சதா அதில் வீற்றிருப்பார்கள்; அதைவிட்டும் அவர்கள் அப்புறப்பட விரும்பமாட்டார்கள்"

என்னும் பதங்களுடைய திருமறை ஆயத்துகளை ஓதி!

நண்பர்காள்!

எமக்கு இதுபோது பிரசங்கமாற்ற சக்தியே இல்லை. ஆனல் மௌலானு ஜலாலுத்தீன்ரூமி அவர்கள் "சேய், அழாதவரை தாய்க்குப்பால் சுரப்பதில்லை; மழை, பெய்யாத வரை பயிர் செழிப்பதில்லை" என்று கூறிய கவிக்கொப்ப தங்களனைவோர்களின் அடங்காக் கூட்டமானது எமது மௌன நிலையைமாற்றி எழுச்சியூட்டித் தூண்டிவிடுகிறது. ஆகவே, நாயனின் கட்டளைகளை யான் உங்களிடம் எத்தி வைத்து விடுகிறேன்.

மழை, பெய்யாதவரை இலை தழைப்பதில்லை; வித்து விதையாதவரை விருக்ஷம் முளைப்பதில்லை; ரசாயன சாஸ்திரப்படி சத்து வஸ்த்துவானது அதன் வேலையைச் செய்யாதவரை அவை முளைக்கப் போவதில்லை என்பதே எமது பிடிகை.

இன்று கவலையற்றுத் தூங்குபவன் நாளை பரிதாபப்படுவான். இன்று நாம் செய்த ஊழியத்திற்கு நாளை ஊதியம் பெறுவோம். இன்று நமது நிலை ஒன்றும், பின்னர் மற்ருெரு நிலையுமாக ஆகிவிடுகிறது.

உங்கள் ஜீவியமானது "மூன்றுநிலை"களை ஏந்தி நிற்கின்றது.

(1) வது "இளமை" இந்நிலையில் விளையாட்டுகளிலே காலங்கழிக்க நேரிடுகிறதென்பதைக் கூறத் தேவையில்லை.

(2) வது "வாலிபம்" இந்நிலையில் தமது வாழ்க்கைக்கு மூலாதாரமான வஸ்துக்களில் கவனஞ் செலுத்தி கண்ணுங் கருத்துமாய்த் தேடவேண்டும். அவ்வாறு தேடாவிடில்,

(3) வது "வயோதிகம்" இந்நிலையில் வெகு கைசேதமடைய நேரிடுகிறதென்பதை ஸ்பரிஷ்டமாய்க் காண்கின்றீர்கள்.

ஆண்டவன் காட்டிய நிலை.

இதுபோல் (1) ஆன்ம நிலை, (2) ஆன்மா சரீரத்திலமைந்தபின் ஏற்படும் நிலை, (3) ஆன்மா ஜடலத்தை விட்டுப் பிரிந்தபின் அந்தரான்ம நிலை என மூன்று நிலைகளை ஆண்டவன் அமைத்திருக்கிருன்.

இவ்வுலகில் உங்கள் வாழ்நாளில் ஏற்படும் மூன்று நிலைகளில் நீங்கள் எக்கருமமும் செய்யாது போனுல் எவ்விதப் பிரயோஜனமுமடைய மாட்டீர்களோ அவ்வாறே ஆண்டவன் அருளிய நிலைகளிலும், தக்க கருமங்கள் செய்து போதிய ஜவாதாக்களை (கட்டுச்சாதங்களைத்) தேடிக்கொள்ளாது போனுல் மிக்க பரிதாபமடைய நேரிடுமென்பது கண்கூடு.

ஆண்டவன் அருளிய முதல் நிலை தனி ஆன்மாவாகும். இதை நாம் விட்டு விடுவோம்.

2-வது நிலை:—ஸ்தூல சரீரம். இவை மிக்க பொறுப்பான நிலையாகும். இதில்தான் மறு

வுலக வாழ்க்கைக்குரிய போதிய ஜவாதாக்களைத் தேடிக்கொள்ளல் மிக்க அவசியமாகும். இன்றேல் மறுவுலகில் சொல்லொணாத் துயரெய்து பரிதாபமுற நேரிடும். இதுபற்றியே இன்று யான் எனது பிரசங்கத்துக்கு இதைத் தலையங்கமாகக் கொண்டு பேச ஆரம்பிக்கிறேன்.

3-வது.—மரணத்திற்குப்பின் ஏற்படும் நிலை. இதையும் கவனிப்போம்.

உலகிலுள்ள யூத, கிறிஸ்துவ, சௌராஷ்ட புத்த, ஹிந்து முதலிய சகல மதங்களிலும் மரணத்திற்குப்பின் மற்றோர் ஜீவியமுண்டென ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை நாம் ஆராய விரும்புவோம்:—

தற்போது நிகழும் 2-வது நிலைக்கும், இனி நிகழப்போகும் மூன்றாவது நிலைக்கும் ஏதாகிலும் சம்பந்தமுண்டாவென ஆராய்ந்தால், அநேகர் வாலிபப்பிராயத்தில் மரணிப்பதைக் காண்கிறோம். "பிறப்பவர்களெல்லாம் மரிப்பவர்களே" என்ற திடப் பிரமாணங்கொண்டு மூன்றாம் நிலையொன்றிருப்பதாக ஊர்ஜிதமாகிறது. அம்மூன்றாம் நிலைக்கு ஜவாதாத் தேடாவிட்டால் அந்தோ! நீங்கள் பெரும் பரிதாபத்துக்குள்ளாக நேரிடும்.

மற்றோர் ஜீவியம் பின்னர் உண்டென சர்வ மதங்களும் ஏகமனதாக நிர்ணயித்திருப்பது போல், இம்மையில் செய்த நன்மை தீமை காரியங்களுக்கு மறுமையில் பலாபலன் கிடைக்குமென்பதிலும் சர்வ மதத்தாரும் ஒற்றுமை கொண்டிருக்கிறார்கள்.

யூத மதக் கோள்கை

யூத மதத்தை விசுவாசித்து அம்மதத்தைப் பிரசாரம் புரியும்போது "நாங்கள் அல்லாஹ்வின் புத்திரர்களும் அவனால் (அல்லாஹ்வால்) பிரீதி கொள்ளப்பட்டவர்களுமாகுமென யூதர்கள் சொல்லுகிறார்கள்" என்ற திருமறை வாக்கு போல் பிரகடனப்படுத்தி வருகிறார்கள். இவர்கள் அல்லாஹ்வின் புத்திரர்களென்று சொல்லும் இக்கூற்றால் நாம் பீதியடையமாட்டோம். இவர்கள் கூற்றில் யாம் புத்தியைச் செலுத்தி, இவர்கள் கொள்கையை அலசிப் பார்ப்போமானால், அஃது மிக்க ஆபாசக் கொள்கையாகத் தெரிகிறது. ஏனெனில், ஓர் அரசன் குற்றவாளியான தனது புத்திரர்களைத் திருட்டு விபசார முதலிய குற்றத்தின் நிமித்தம் தண்டிக்காது விட்டு இதரர்களை மட்டும் தண்டிக்கிறானென்றால் இதை எவரே ஒப்புவார்? இங்ஙனம் கூறுவதும் பொருத்தமாகுமோ!

கிறிஸ்துவ மதக் கோள்கை

கிறிஸ்துவ மதத்தை விசுவாசிக்கும் மக்கள் "யூதர்களால் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவின் தியாகத்தின் நிமித்தம் கிறிஸ்துவ மக்களெல்லாம் மன்னிக்கப்படுவார்கள்" என்று சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களின் அறியாமைதான் என்னே! 'ஜைது' என்பான்செய்த குற்றத்திற்காக 'உமர்' என்பான் தண்டிக்கப்படுவதென்றால், இஃது பொருத்தமான செயலாகுமா? இதை எவரும் ஒப்புவாரா? 'ராமன்' குற்றஞ் செய்ய, 'ராவணன்' தண்டிக்கப்படுவதும், 'தபசி' குற்றஞ்செய்ய 'பாபி' தண்டிக்கப்படுவதும் நியாயமாகுமோ!

நண்பர்காள்! தந்தை குற்றஞ்செய்து பிள்ளை தண்டிக்கப்படுவதை நீங்கள் பார்த்ததுண்டா? இங்ஙனமில்லாதபோது ஈஸா (அலை.) தூக்கிவிடப்படுவது கொண்டு ஈஸாயீ மக்கள் மன்னிக்கப்படுவார்களென்பதை இவ்விஞ்ஞான உலகிலுள்ள எந்த அறிவாளிகளும் ஒப்புவார்களா? ஒருபோதும் ஒப்பமாட்டார்கள்.

ஹிந்து மதக் கோள்கை

ஹிந்து மதக் கொள்கையை ஆராய்வோமானால், மேற்கூறப்பட்ட இரு மதக்கொள்கைகளுக்கொப்பவே காணப்படுகிறது. இம்மதத்தின் அந்தரங்கக் கொள்கைகளை நாம் கவனித்தால், முன் ஜன்மத்தில்செய்த குற்றத்திற்காக மறு ஜன்மத்தில் தண்டனை சிருஷ்டியாகப் படைக்கப்படுமெனத் தெரிகிறது. இதே கொள்கையை கௌதம புத்தரும் ஒப்புக்கொள்கிறார். இவ்வுலகில் முன் ஜன்மத்தில் செய்த குற்றத்திற்கு மறுஜன்மத்தில் இவ்வுலகிலேயே தண்டனை ஏற்படுமென்பதை யாரும் ஒப்பமாட்டார்கள்.

முதலில், உலகில் எல்லோரும் பிராமணர்களாகவே படைக்கப்பட்டு அவர்கள் அந்த ஜன்மத்தில் குற்றஞ் செய்தால் மறுஜன்மத்தில் அதற்குத் தண்டனையாக ஆடுமாடு போன்ற விலங்கினங்களாகவும், விலங்கினங்கள் குற்றஞ் செய்தால் மறு ஜன்மத்தில் காய்கறி போன்ற தாவரவர்க்கங்களாகவும் தண்டனைக்குரிய ஜன்மங்களாகப் படைக்கப்படுகின்றனவென்பது ஹிந்துமதக் கொள்கையின் சித்தாந்தமாகும்.

நாம் அவர்களிடம், "ஜீவனால் முதலில் பிராமணர்களாக ஏன் படைக்க வேண்டும்? அங்ஙனம் பிராமணர்களாகவே முதலில் படைக்கப்பட்டிருந்தபோது அவர்கள் குற்றஞ்செய்தால் தானே மறுஜன்மத்தில் விலங்கினங்களாக

படைக்கப்படுவது; அங்ஙனமில்லாது அதே காலத்தில் விலங்கினங்கள் எப்படிப் படைக்கப்பட்டிருந்தது? விலங்கினங்கள் குற்றஞ்செய்து தாவரவர்க்கங்கள் படைக்கப்படும்போது ஜீவனுல் முதலில் படைக்கப்பட்ட பிராமணர்கள் அக்காலத்தில் தாவரவர்க்கங்களை எங்ஙனம் புசித்தார்கள்? இஃதில்லாதிருந்தால் வேறு ஜீவராசிகளை வம்பித்து இவர்களுக்கு சாதன விலங்கினங்களாகவும், புசிக்கும் தாவரவர்க்கங்களாகவும் ஏன் செய்யப்பட்டிருந்தது? அவ்விதம் வம்பிக்கா மனுக்களுக்குமுன் எந்த ஜீவராசிகளைப் படைத்திருந்தான்?'' எனக் கேட்போமாகில் இக்கேள்விகட்கு அவர்களிடை பதில் கிடையாது.

இங்ஙனம் மூன்று மதங்களின் கொள்கைகளும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென ஏற்பட்டபின்,

இஸ்லாம் மதம்

ஆண்டவனுல் போதிக்கப்பட்ட இஸ்லாமிய உண்மை நெறிகளை உங்கள்முன் கூறுவதில், மானிடர்களின் ஹிருதயங்கள் ஒப்புக்கொள்ளத் தக்க உதாரணங்களைக் காண்பிக்கிறேன்.

எனவே, "ஏற்றத் தாழ்வு'' என்னும் பாகுபாட்டோடு ஏன் மாந்தர்களை உலகில் படைக்க வேண்டுமென நீங்கள் கேட்கலாம். அதற்கு பதில்:—நாம் வீடுகட்டும்போது, நமக்கு வசதியான முறையில் எப்படி வீடுகளை அமைத்துக் கொள்கிறேமோ அதுபோல அவ்வீட்டிற்குதளவாட சாமான்களையும் தராதரப்படி அமைத்து வைத்துக்கொள்கிறோம். சாய்மான நாற்காலி, சுழலும் நாற்காலி முதலியவைகளையும் வசதிப்படி அமைத்துக்கொள்கிறோம். அதுபோலவே உலக சராசர நிகழ்ச்சிக்காக மனுக்களை தராதரப்படி படைத்து, ஆண்டவன் அவைகளில் ஓரளவு ஆன்மாவை அமைத்திருக்கிறுன். '**அததற்குத் தக்கதாகவே ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அல்லாஹ் கஷ்டங்களைக் கொடுப்பான்**'' என்னும் வேதவாக்குப்படி ஆண்களுக்குத் தக்க வேலையும் பெண்களுக்குத் தக்க வேலையும் கொடுத்திருக்கிறுன். பணமில்லாதவனுக்கு ஹஜ்ஜுக்குப் போகாததற்கு தண்டனை கிடையாது. பித்தனுக்கு மதச்சட்டங்களை நீக்கி சகாயமளிக்கப்பட்டிருக்கிறது. அவனுக்கும் தக்கப்படி ஆன்மா அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கு ஓர் சம்பவம் என்ஞாபகத்துக்கு வருகிறது. நான் கொழும்பிற்குச் சென்றிருந்த போது, எனது நண்பரான "ஜஸ்டிஸ் அக்பர்'' உடன் அவரின் மோட்டாரில் மாலை யாத்திரை செய்து வருங்கால், காரின் டிரைவர் வரம்புமீறி "ராங்கு சைடில்'' காரை ஓட்டியதைக் கண்ட போலீஸ்காரன் அக்காரை நிறுத்தி, காரின் நெம்பர் முதலியவைகளைக் குறித்து எழுதி நிற்க, நண்பர் "அக்பர்'' இங்ஙனம் தவருன பாதையில் ஓட்டியதற்கு டிரைவரைக் கடிந்து கோபிக்கவே, நான் நண்பரைநோக்கி டிரைவர் தேறிய புத்தியுள்ளவராக இருந்தால் உங்களைப் போல் ஏன் அவரும் ஜட்ஜியாக இருந்திருக்க மாட்டார்'' எனக் கூறினேன்.

எனவே, தகுதிக்குத் தக்கபடி அவர்கள் ஸ்திதியைக் கருதி அதற்கொப்ப அல்லாஹ் தஆலா ஆன்மாவை அமைத்திருக்கிறுன். ஒரே நிலையாகஎல்லாவஸ்துக்களும் இருந்தால் உலகம் நடைபெறுவது பரம சங்கடமாகும்.

இரண்டாவது கொள்கை

அரசர், பிரஜை, பெரியார், சிறியார் யாராயிருப்பினும் "**நன்மை செய்த அளவே அதன் பலனைப் பெறுவான்**'' என்பது திருமறைக் கட்டளையாகும்.

நண்பீர்! அமல் செய்யும் விஷயத்தில் நமது நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் ஈரல் துண்டான அருமைப் புதல்வியார் ஸய்யிதத்துன்னிஸா பாத்திமத்துஸ்ஸுஹரா (ரலி.) அவர்களுக்கு எத்தகைய ஆக்ஞையிட்டார்களென்பதைக் கவனியுங்கள்.

"என் அருமை மகளாகிய பாத்திமா! நீ முஹம்மது (ஸல்) உடைய மகளாக இருக்கிருய்என்று மருண்டிடாதே! நீ அமல் செய்! நீ அமல் செய்!! நீ அமல் செய்!!! மறுமையில் நீ என்ன அமல் கொண்டுவந்தாய்? எனக் கேட்கப்படுவாயே யல்லாது நீ யாருடைய மகள்? எனக் கேட்கப்படமாட்டாய்''

எனக் கட்டளையிட்டார்கள். நபிகள் பெருமானுரவர்களே தங்கள் அருமை மகளாருக்கு அமல் விஷயத்தில் இத்தகைய கட்டளையிட்டார்களென்றுல், நாம் அமல் விஷயத்தில் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை யூகித்துணர வேண்டும்.

இதுபோல் ஸெய்யிதினு நூஹ் (அலை.) அவர்கள் ஜலப் பிரளயத்தின் போது தங்கள் மகனை விளித்து "மகனே! நீரும் எங்கள்கூட இக்கப்பலில் ஏறிக்கொள்ளுமென'' சொன்னதற்கு நான் மலைமீதேறி தப்பிப்பேன்; உம்முடன் கப்பலில் ஏறமாட்டேன்'' எனக்கூறி மறுத்து

விட்டபின், ஜலப் பிரளயம் வந்து நூஹ் நபியின் புதல்வரையும் அடித்துக்கொண்டு போய் மகன் மூழ்கும் சமாசாரத்தை அறிந்த நபிநூஹ் (அலை.) அவர்கள் மனம் நொந்து துக்கித்து ஆண்டவனை நோக்கி ரப்பே! "எனது புதல்வனையுமா மூழ்கச் செய்துவிட்டாய்" என சலுகையுடன் கேட்க, "அவன் உமது புதல்வனல்லன்" என அல் லாஹ்விடத்திலிருந்து தெய்வ வசனமிறங் கிற்று.

ஆதலால் வம்மிசத்திலும் பதவியிலும் உயர்ந்தவர்களின் புதல்வராக இருந்தாலும், மறு வுலகில் அமலைப்பற்றியே கேட்கப்படும்.

சகோதரர்காள்! நிச்சயமாய் மறுவுலக முண் டென்பதும் அதில் நாம்செய்த அமல்களுக்கு அங்கு பலாபலன்கள் கிடைக்குமென்பதும் உறுதியாக இருக்கும்போது, அவ்வுலகில் ஜெய மடைந்து பலன் பெறக்கூடிய அமல்களை இவ் வுலகிலேயே நாம் செய்துகொள்ளல் வேண் டும்.

அமலில் இருவகைகள்

ஒன்று உலகில் நம்மைப் படைத்த ஆண் டவனுக்கு நன்றி பாராட்டும் முறையில் அவ னின் கட்டளைகளை யுணர்ந் தொழுகல்.

2-வது மானிட வர்க்கத்தாரான நாம் ஒரே தந்தையின் புதல்வர்களாகவும், நமக்குள் சகோ தர பாத்தியதையுள்ளவர்களாகவும் இருப்ப தால், நாம் நம் சோதிரர்களுக்கு கை வாய் முத லியவைகள் மூலமாய் எவ்வித துன்பங்களும் இழைக்காமலிருப்பது.

இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளைப்படி அமல் செய்தால் அதற்கு என்ன பிரயோஜனம் கிடைக்குமென்பதையும் கூறுகிறேன்.

சுவர்க்கம்

மானிடர்களது இன்பத்தின் தீர்ச்சையான சுவர்க்கமானது ஸாலிஹான உத்தமர்களுக்குக் கிடைக்கும். நீங்கள் எந்த சுகத்தை விரும்பு கிறீர்களோ அது உங்களுக்குக் கிடைக்கும். அதற்கே சுவர்க்கமெனப்படும். எந்த சுகத் திற்குப் பின் மீண்டும் துக்கம் வராதது திண் ணமோ அதற்குத்தான் சுகம் அல்லது சுவர்க் கம் எனப்படும். அஹ்மதிய காதியானிகளைப் போல் நான் எனது சொந்த அபிப்பிராயத்தைக் கொண்டு வியாக்கியானஞ் செய்கிறதாகப் பாவிக்க வேண்டாம். நான் சொல்வதற்கு குர் ஆன் ஷரீபிலிருந்தே ஆதாரங்களைக் காண்பிப் பேன்.

சுவர்க்கத்திற்கு வழி

நண்பீர்! சுவர்க்கத்தில் புகுவதற்கு வழி என்னவென்றால், ஒரு நாள் "பத்வி" காபி ரொருவர் நாயகமவர்கள் சந்நிதியில் வந்து "தாங்கள் சுவனபதியின் வழியை காண்பிக் கின்றீர்களாமே! எனக்கும் அதன் இலகுவான வழியைத் தெரிவிக்கவேண்டும்" எனக் கோர, நாயகம் (ஸல்.) அவர்கள் "**வணங்குவதற்குரி யோன் அல்லாஹ்வாகும். முஹம்மது அவ னின் தூதர்**" என **கலிமாச் சொல்வதும், தொழுகுவதும், நோன்பு, ஜகாத்து, ஹஜ்ஜு செய்வதும் இவைகள் மட் டுமே இலகுவான வழி**" எனக் கூறி யதைக் கேட்ட ',**பதவியர்**" ஆச்சர்யமுற்று "இதுதானே?" வெனக்கூற, "ஆம்" என நாயகம் (ஸல்.) பகரவே "நாயகமே! ஆண்ட வன் மீது சத்தியமாக, நான் இதில் சிறிது கூட்டியோ குறைத்தோ செய்யமாட்டேன்" எனக்கூறிப் போர்ந்தார். உடனே நபிகள்நாதர் ஸஹாபாக்களை விளித்து "உலகில் சுவனவாதி யைப் பார்க்க நீங்கள் விரும்புவீர்களாயின், இதோ போகும் மனிதரைப் பார்த்துக்கொள் ளுங்கள்" எனச் சொன்னார்கள். ஆகவே, ஆண் டவனிடம் நெருங்கிய சம்பந்தமுண்டாகும் வழிகளைத் தேடி அமல் புரிந்துகொள்ளுங்கள்!

நீதி வழங்கல்

இரண்டாவதாக அடியார்களின் கடமையா வது: "நீதிவழங்கு; அநியாயம் செய்யாதே; நலவுசெய்" என்னும் வேதவாக்காகும்.

பதிலுக்கு பதில்

இவ்வுலகில் உம்மை யாரும் இம்சித்தால் இதே அளவில் பதில் செய்துவிடு; அதிகஞ் செய்யாதே! அவரை நீ மன்னித்து விடுவாயா கில், அதற்குப்பகரமாக ஆண்டவனிடத்தில் உமக்கு ஊதியமுண்டு. உலகில் நீதத்தையும், தயாளத்தையும் கடைப்பிடித்து ஒழுகுவோ ருக்கு அதற்குத் தகுந்தபடி இம்மை, மறுமை ஈருலகிலும் பலன் கிடைக்கும். (எல்லோரும் உரத்தொனியில் ஸலவாத்து ஓதல்.)

தொழுகாதவர்கள் கெதி.

"தொழுகையில் அசட்டையாயிருப்போருக்கு 'வைல்' என்னுங் கொடுநரகே கெதியாகும்" என வேதவாக்குக் கூறும்போது, அறவே தொழு காத தோஷிகளுக்கு 'ஜஹன்னம்' எரிநரகே கெதியாகு மென்பதில் சந்தேக முண்டோ?

துன்பத்தின் தீர்ச்சைக்கே எரி நரகெனப் படும். அதில் எழுபதினுயிரம் வருடங்கள்

வரை சிட்சிக்கப்பட்டபின் தாக சாந்திக்குத் தண்ணீர் கேட்கப்படுமாயின் ஓர் அருசையான குடிப்புக் கொடுக்கப்படும். அஃது தாகத்தை நீக்காது; மேலும் அபரிமிதமாகத் தாகத்தையுண்டுபண்ணும். இத்தகைய நரகம், ஆண்டவனின் கட்டளைக்கு வழிபட்டு நடவாப்பாபிகளுக்காகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

சோதரீர்! நன்மை, தீமை முதலிய கிரியைகளுக்குப்பகரமாய் ஏற்படும் ஸ்தலங்களைத் தெரிந்து கொண்ட பின், உங்கள் ஜீவிய காலத்தில் நல்ல அமல்களைச் செய்து மறுலோக ஜவாதாக்களைத் தேடி எரிநரகிற்கு பாத்திரர்களாகாமல் சுவன பதவிப் பெற்றுய்வீர்களாக! இன்றேல், பெரும் பரிதாபப்படுவீர்கள். இத்துடன் என் பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறேன். எனது உபதேசத்தின் சாரமும் இதுவேயாகும். சுவர்க்கமும், நரகமும் உங்கள் முன் இருக்கின்றன; எதை நீங்கள் விரும்புகிறீர்களோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்!

அல்லாஹுதஆலா உங்களையும் நம்மையும் நல்ல அமல் செய்யும் கூட்டத்தில் சேர்ப்பானாக! ஆமீன்.

உலகில் தீயச் செயல்கள் புரிவதற்கு "அறியாமை"யே (ஜஹாலத்தே) காரணமாகும். ஆதலால் திருக்குர் ஆனின் கட்டளைகளை நன்கு படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

குர்ஆன் தர்ஜுமா

வடநாட்டில், "மிர்ஸாயி"களால் தப்புந் தவறுமாக அவர்கள் அபிப்பிராயப்படி எழுதப்பட்டிருக்கும் குர்ஆன் தர்ஜுமாவை, உங்கள் நாட்டிலும் ஒருவர்பிறந்து ஆங்கிலங்கற்று அந்த தர்ஜுமாவை தமிழில் மொழிபெயர்த்து உங்கள் நாட்டு ஜனங்களை ஏமாற்றிவருவதுதெரிந்து பெரிதும் வருந்துகிறேன். ஆனால் உங்கள் நாட்டிலே மற்றொருசாரார் தோன்றி திருகுர்ஆனுக்கு "ஸுன்னத்து ஜமாஅத்" கொள்கைப்படி உரைசெய்யும் ஆற்றல் கொண்டு முக்கிய உலமாக்களுடன் ஒத்துழைத்து உரைசெய்யப்பட்டு வெளியாகப்போகும் சில பிரதிகளை நான் பார்த்தேன். எனக்குத் தமிழ்தெரியாவிட்டாலும், அதன் அமைப்பையும், அதில்உழைத்து வரும் உலமாக்களின் கொள்கைகளையும் யான் கண்டு, அஃது "ஸுன்னத்து ஜமாஅத்" கொள்கைப்படி அமையப்பெற்றிருக்கிறதென்றே அபிப்பிராயப்படுகிறேன்.

நீங்கள் உங்கள் பாஷையில் வெளியான இந்த தர்ஜுமாவையாவது படித்து குர்ஆன் ஷரீபின் கட்டளைகளை அறிந்து அமல்புரிந்து வாருங்கள்! இத் தப்ஸீரைஒவ்வொருவரும் ஆதரித்து, வாங்கி கவனமாகப் படித்துணருங்கள்!

"ஸைபுல் இஸ்லாம்"

"ஹிபாஜத்துல் இஸ்லாம"

உங்கள் தென்னாட்டில் இஸ்லாத்திற்கும், முஸ்லிம் சமூகத்தினருக்கும் ஒப்பற்ற அரிய சேவைகள் செய்து, பிறமதஸ்தர், மதப்புரட்டர், மாயக்காரர்களின் சூழ்ச்சிகள் உங்கள் நாட்டில் தலையெடுக்காவண்ணம் காப்பாற்றி அத்தீயர்களுக்குத் தக்கவாயாப்புகள் கொடுத்து அவர்களின் ஜம்பங்கள் பலிக்காவண்ணம் எதிர்த்துப் போராடி வருவதோடு நில்லாமல், முஸ்லிம்களின் நிலையை உன்னதப்படுத்திஅவர்களுக்கு மதக்கல்வி தேசீயக் கல்வி முதலியவைகளை விருத்திசெய்ய அவா ஊட்டி மக்களின் வீழ்ச்சியைப்போக்கி எழுச்சியடையஅல்லும்பகலும் அரும்பாடுபட்டு ஒப்பற்ற இஷாஅத்துல் இஸ்லாம் செய்து தொண்டாற்றிவரும் தென்னிந்திய பத்திரிகைகள் திலகம் **"சைபுல் இஸ்லாம்"** பத்திரிகையும், உலமாக்களின் லட்சியங்களைக் காப்பாற்றி இஸ்லாம் மதத்திற்கு ஹானியும் இடையூறும் செய்பவர்களைத் தக்கபடி கண்டித்து அவர்களுக்குப் புத்தி புகட்டி அவர்களை அடக்கி வருவதற்காக ஏற்படுத்தப்பட்ட சென்னை **"ஹிபாஜத்துல் இஸ்லாம்"** சங்கமும், அதஸ் பிரகடன மாசிகையான **"ஹிபாஜத்துல் இஸ்லாம்"** மலரும் உங்கள்தென்னாட்டில், குர்ஆன் ஷரீபின் உயரிய தத்துவங்களையும் அதன் சத்திய கட்டளைகளையும் வெளியிட்டு நமது நபிகள் நாதரின் உண்மைச் சரிதைகளையும் அன்னபி நாதரின் உயரிய லட்சியங்களையும் அவர்களின் மகத்துவங்களையும் பிரசுரித்து தென்னாட்டிலுள்ள முஸ்லிம்களை மௌட்டியர்கள் அல்லவென நிரூபிக்க அரியசேவைகள் செய்து வருவதைக் கண்டுயான் அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்தவனாகப் பெரிதும் சந்தோஷமடைகின்றேன்.

இவ்விதம் உயரிய முறையில் இஸ்லாத்தின் லட்சியங்களைக் காப்பாற்றிமுஸ்லிம்களைத் தட்டி எழுப்பி முன்னேற்றத்தின் பாதையில் அழைத்துச் செல்லும் உண்மையான ஸுன்னத்து ஜமாஅத்துக்கொள்கைகளையுடைய இவ்விரு பத்திரிகைகளையும்தென்னாடினரானநீங்களெல்லோரும் ஆதரித்து இவ்விரு பத்திரிகைகளையும் வாங்கிப்

படித்து இதன் உண்மை சித்தாந்தங்களையும், போதனைகளையும் ஆழ்ந்து சிந்தித்து அதன் படி நடந்து வருவீர்களென நம்புகிறேன். ஏனெனின், நான்செய்யும் இஸ்லாமியச் சேவைகள் போன்ற சேவைகளை இப்பத்திரிகைகள் செய்து வருகின்றனவெனக் கூறுவது மிகையாகாது.

வேறு சில வேஷதாரிப் பத்திரிகைகள் "நாங்களும் முஸ்லிம்களுக்கே சேவை செய்கிறோமென" பறைசாற்றி நூதனக் கொள்கைகளையும், நவீன அனுஷ்டான முறைகளையும் நவநாகரீக ஹிந்து குழாத்தினர் கட்டுரைகளுக் கொப்பாக எழுதி, உண்மை முஸ்லிம்களையும் உலமாக்களையும் தூஷணஞ் செய்வதே தமது பூஷணமாகக் கொண்டுவருவதால் அந்தப் பகல் வேஷப் பத்திரிகைகளை கையிலுந்தொடாதீர்கள். பரிசுத்த இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை ஆடம்பரமற்ற முறையில் எளிதாக இனிய நடையில் பிரசுரித்து வரும் "ஸைபுல் இஸ்லாம்", "ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆகிய பத்திரிகைகளே உங்களுக்குப் போதிய வழிகளைக் காட்டி வைதீக, லௌகீக இரு துறைகளிலும் நீங்கள் முன்னேற்றமடையப் போதுமானவை யாகும்.

எனவே, ஸுன்னத்து ஜமாஅத் முஸ்லிம்களான நீங்கள், உங்களுக்கு தற்காலம் இன்றியமையாததாகவும், வழிக்காட்டியாகவும் இருக்கும் "**ஸைபுல் இஸ்லாம்**" "**ஹிபாஜத்துல் இஸ்லாம்**" ஆகிய இவ்விரு பத்திரிகைகளையும் ஆதரித்துப் படித்து வருவதே நலமென யான் உங்களுக்கு யோசனை கூறுகிறேன்.

எனக் கூறி தங்கள் பிரசங்கத்தை முடித்தார்கள்.

சபையோரனைவரும் எழுந்து ஸலவாத்துகள் ஓதிய பின், துஆ ஓதப்பட்டு "வஅஜ்மஜ்லிஸ்" சிறப்பாக இனிது முடிந்தது.

14-வது பிரசங்கம்

திருச்சினப்பள்ளி
(முனிஸிபல் ஹால்)

மௌலானா அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய உபன்னியாசமாவது:—

சகோதரர்காள்! யான் திருச்சிக்கு வந்ததைப் பெரிய பாக்கியமென்றே கருதுகிறேன். இதற்கு மூலகாரணரான ஜனுப் மௌலானா செய்யிது முர்தஸா சாகிப் பஹாதூர் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். மேலும் எம்மை அன்பாய் வரவேற்று உபசரித்த இந்நகர்வாசிகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக!. நான் சென்ற ஆறு தினங்களாக விடாமல் தொடர்ந்து உபன்னியாசங்கள் நிகழ்த்த நேர்ந்ததால் மிகுந்த அலுப்புற்றுள்ளேன்.

சோதரீர்! நம்மிந்தியாவை தெய்வ பக்தி கொண்ட ஓர் நாடெனக் கூறப்படுகிறது. அங்ஙனமிருக்கின், அந்நியநாட்டு அந்நிய மதஸ்தர்களின் மிஷினரிகளுக்கு இங்கு ஜோலி என்னவென்பது தெரியவில்லை.

ஆனல் நாம் நமது மதத்தைச் சரிவரப் படித்துணராக் குறையே இதற்குக் காரணமாக நிற்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது.

முஸ்லிம்கள் தங்களை முஸ்லிம்களெனவும், ஹிந்துக்கள் தங்களை ஹிந்துக்களெனவும், கிறிஸ்துவர்கள் தங்களைக் கிறிஸ்துவர்களெனவும் கூறிக்கொள்வதன் காரணம், இவர்களின் தாய் தந்தைமார், இவர்கள் கூறும் மதங்களில் இருந்து வருவதேயாகும். ஆனல் மேற்கூறப்பட்ட வகுப்பாரில் ஒருவரேனும் தங்கள் மதம் எத்தகையது? அஃது உண்மைக் கொள்கைகளையுடையதா? வென கிஞ்சித்தும் கவனஞ் செலுத்தி ஆராய்வதில்லை.

உலகிலுள்ள மக்கள் மூவ்வகையினர்களாக இருக்கின்றனர்.

(1) தங்கள் மதத்தை லட்சியம் செய்யாது "**தான் தோன்றித் தம்பிரான்கள்**" போல் ஒரு கொள்கையிலும் நில்லாமல் தங்கள் மனம் போன போக்குப்படி திரிந்துவருகின்றனர் ஒரு கூட்டத்தினர்.

(2) இவ்வளவு பெரிய உலகை ஒரே கடவுளால் எங்ஙனம் சிருஷ்டித்து ஆள முடியுமெனக் கூறி, இறைவனின் சர்வசக்தி என்னும் மாண்புமிக்க வலையில் ஞான நேத்திரமற்ற குருடராய் மோதிக்கொள்கின்றனர் மற்றொரு கூட்டத்தினர்.

(3) உலகில் தாங்கள் பிணைக்கப்பட்டிருக்கும் சங்கிலிப் பிணைப்பை விட்டும் விடுதலைபெற விரும்புகின்றனர் பிறிதொரு சாரார். மேலும் இவர்கள் ஆண்டவனின் தியானத்தில் சதா காலங் கழித்து உலகப்பற்றை அறவே வெறுத்து ஒழிக்க விரும்புகின்றனர்.

இம்மூன்ருவது வகையினரின் கொள்கைப்படி சதா தெய்வ தியானத்தில் ஈடுபட்டு துறவரங்கொண்டு இகவாழ்க்கையை வெறுத்து உலகத்தொந்தரைகளை விட்டுவிடுவதென்பதை

யும் நாம் நியாயமென ஒப்பமாட்டோம். உலக மக்களெல்லாம் இதே கொள்கை பூண்டு இங்ஙனம்செய்ய ஆரம்பித்துவிடுவார்களாகில் உலகம் நடப்பது சாத்தியப்படமாட்டாது. இங்ஙனம் விரும்புவோரின் மனோசக்தியே மேற்கண்டவாறான உதிப்பை உற்பத்தி செய்கிறது.

யான் உண்மையைக் கூறுமிடத்து, ஹிந்து முஸ்லிம்கள் ஓர் பிரம்பின் இரு கணுக்களாக இருக்கின்றனர். அக்கணுக்களுக்கு நடுவிலுள்ள வழியை எவராவது ஒருவர் கண்டுபிடித்தே இருக்கவேண்டும். அதுவே நேர்வழி. அதுவே உண்மை மதமாகும்.

பட்சபாதமற்ற நடுநிலை வாதி ஒருவர், இஸ்லாம் மதத்தில் அவ்வுண்மை இருக்கிறதென்பதை எளிதில் காணலாம்.

"நம்மைப் படைத்த இறைவன் நமக்காக இவ்வுலகை சிருஷ்டித்திருக்கிறான்; நாம் அவனுடையதாகவே இருக்கிறோம்" என்னும் உண்மை சர்வமத வாதிகளும் உணர்ந்துகொள்ளும் பொது விஷயமாகும்.

சிருஷ்டிகர்த்தாவான இறைவனே நம்மை சிருஷ்டித்த உண்மையை அறிவான்.

நாஸ்திகக் கொள்கையில் மலிந்துகிடக்கும் புத்தமதத்தை நிறுவிய கர்த்தாவான கௌதம புத்தரும் இறைவன் ஒருவன் உண்டென்பதை மறுக்கவில்லை.

எனவே, உலகிலுள்ள எல்லா மதங்களும், எல்லா சீர்திருத்தக்காரர்களும் இறைவன் ஒருவன் உண்டென்னும் ஆஸ்திகத்தை ஒப்புக்கொள்கின்றனர். நண்பர் பிரசிடெண்டவர்கள் கூறியதுபோல், எதிர்காலத்தில் ஜெயம் பெறப்போகும் இஸ்லாமிய மதமானது நாஸ்திகத்தை மறுத்து ஆஸ்திகத்தை முற்ற முற்ற உறுதிப்படுத்தி தக்க மேற்கோள்களுடன் உலகமக்களுக்கு அதனை போதித்து வருகின்றது. எங்கள் நபிகள்முஹம்மது (ஸல்.) அவர்கள் மக்கமா நகரில் ஓர் திக்கற்ற அனாதையாகயிருந்தார்கள். அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயுமிருந்தார்கள். அவர்களை அந்நகரவாசிகள் ஓர் புல்லுக்குச் சமமாகவே மதித்துவந்தனர்.

ஆனால் தமது 40-வது பிராயத்தில், எவ்விதக் கலையுமற்ற ஒருவர், "நான் ஓர் உண்மையை உங்களுக்கு போதிக்கப் போகிறேன்; அஃது எனக்கு இறைவனால் அருளப்பட்டதென"க் கூற ஆரம்பித்தார்.

எனவே, உலகிலுள்ள புராதன மதங்களில் உண்மை இருப்பின் அவ்வுண்மைகளும், இறுதி நாள்வரை தேவைப்படும் திட்டங்களும், முறைகளும், விதிகளும் இஸ்லாத்திலமைந்திருப்பதைப் பார்த்தால், விவேகமாந்தர்கள் இஸ்லாத்தையே பின்பற்றுவரென்பது எமது துணிபு.

ஒருசமயம் அமெரிக்கப் பாதிரி ஒருவர், எம்மைச் சந்தித்து சம்பாஷித்தபோது, "உங்கள் வேதமான குர்ஆன் சம்பூர்ண வேதமென பறையறைகிறீர்களே, இதை முதலில் தோன்றிய ஆதி மனுடரான **ஆதம்** இடம் ஏன் கொடுத்தனுப்பவில்லை" என எம்மிடம் வினவினர். அதற்கு, "ஓர் மாணவனை ஆரம்பமாய் பள்ளிக்கூடத்தில் வைத்தவுடன் அவன் அநேக புத்தகங்களைக் கிழித்தெறியும் சுபாவமுடையவனாக இருக்கிறான்; அவனிடம் ஓர் புத்தகம் கொடுக்கப்பட்டால் அதை அவன் அறிய முற்றுஞ் சக்தி பெறமாட்டான்; அதைப்போன்று இவ்வுலகானது ஆரம்பத்தில் அறிவென்னும் உயர்ந்த நிலையில் வராத நிமித்தம் அன்று குர்ஆன் அளிக்கப்படவில்லை; அக்குறை நீங்கியபின் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் சம்பூர்ண வேதமாகிய குர்ஆனை உலகோருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது" என பதிலுரைத்தேன்.

சகோதரர்களே! உலக சராசரங்களில் அநேக ஆச்சர்யகரமான விஷயங்களை நடத்தி வைக்கும் ஏக நாயனொருவன் இருக்க வேண்டுமென்பது அவசியமல்லவா? நான் செய்த உபன்னியாசங்களில் இதுவே சிறிய பிரசங்கமாகும். இதற்கு, நேரங் குறுகியதாக இருந்ததே காரணமாகும் எனக்கூறி பிரசங்கத்தை முடித்தார்கள்.

15-வது பிரசங்கம்

(திருச்சி நவ்வாப் மஸ்ஜித்)

மௌலானா அவர்கள் ஹம்து, ஸலவாத்து ஓதியபின்,

"உங்களைநாம், வீணாகப்படைத்தோமெனவும், நீங்கள் நம்மிடம் மீண்டும் வரமாட்டீர்களெனவும் நினைக்கிறீர்களோ? எனவே, மெய்யான அரசனான அல்லாஹ் உன்னதமானவன். வணக்கத்திற் குரியோன் அவனே யாவன். அவன் வலுப்பமான அர்ஷின் எஜமானனுமாவான். எவன் அல்லாஹ் அல்லாத இதரவஸ்துவை நாய

ஞக வணங்குகிருனே அதற்காக அவன் றப்பினிடம் பதில் சொல்லநேரிடும். திடஞக குப்பார்கள் ஜெயமடைய மாட்டார்கள்.''

உலமாக்களே! இஸ்லாமிய சகோதரர்களே!! நான் திருச்சி நகர் வந்தது ஆண்டவனின் கிருபையேயாகும். யான் இப்பாக்கியத்தை யடைவதற்கு சில நபர்களே காரணமாவர். நான் இத்தென்னுட்டிற்கு வரவேண்டுமென விரும்பி எமக்குலெட்டர்எழுதியது என் சகோதரர் கே. எ. பகீர் முஹம்மது ரூவுத்தராவர். பின்னர் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாராலும் பல கடிதங்கள் வந்தும் மூன்ருவது தடவையே இத்தென்னுட்டிற்கு நான் வர நேர்ந்தது.

"நன்மையைத்தூண்டுபவன் அதைச் செய்தவன் போலாவான்" என்னும் ஹதீதுப்படி யான் செய்த வஅஸின்கூலி எனக்கும், அதைக் கேட்ட கூலி உங்களுக்கும் கிடைக்கும். அதன்படி நடந்தால் அதன் கூலிஉங்களுக்கும், எனக்கும் கிடைக்கும்.

நான் கிள்ளான் சென்று சகோதரர் கே. எ. பகீர் முஹம்மது ரூவுத்தரிடம் தங்கியிருந்த போது கிறிஸ்துவ ஸ்கூலில் படித்த, ஓர்ஆலிம் சாஹிபின் முஸ்லிம் பெண்ணெருத்தி கிறிஸ்துவ மதத்தைத் தழுவி ஓர் கிறிஸ்துவ டாக்டரிடம் "ஞானஸ்நானமும்" பெற்றுவிட்டாளெனக் கேள்வியுற்ற மாத்திரத்தில் எமக் கேற்பட்ட துக்கத்திற்கோரளவில்லை. உடனே நானும், சகோதரர் பகீர் முஹம்மது ரூவுத்தருமாக வெகு பிரயாசைப்பட்டு, அவ்வூரில் கிறிஸ்துவர்கள் 5 முஸ்லிம்களைக்கிறிஸ்துவர்களாகச் செய்திருந்ததற்குப் பதிலாய், நாங்கள் ஐம்பது கிறிஸ்துவர்களை இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டோம்.

எனக்கு உங்கள் நாடான இத்தென்னடு, சில நாட்களாகவேதான் தெரியும். உங்களில் உலமாக்களுமிருக்கிருர்கள். அவர்களும் இஸ்லாத்திற்காகவும், முஸ்லிம்களுக்காகவும் அரிய சேவைகள்செய்து வருகிருர்கள் என்பதை யான் அறிவேன். ஆரம்பத்தில் 5000 பேர்களே முஸ்லிம்களாயிருந்த "மடகாஷ்க்கர்" என்னுந்தீவில் இதுவரை எந்த உலமாக்களும் மிஷ்னரிகளும் சென்றிருக்கவே மாட்டார்கள். அத்தீவில் போய் யான் நாயனருளால் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்தேன். இன்று எங்களுக்கு இங்கு பிரியாணி கிடைத்ததுபோல் எமக்கு அங்கு கிடைக்கவில்லை. சாப்பிடுவதற்கு ரொட்டி கிடைப்பதுகூட கஷ்டமாக இருந்தது. இத்தென்னடு முழுதும் எம்மை இங்ஙனம் குதூகலப்படுத்தி விமரிசிக்க சகோதரர் பகீர் முஹம்மது சாஹிபே காரணமாவார்.

இதே பள்ளிக்குச் சுற்றிலுமுள்ள அறைகளைப் பாருங்கள்! இவைகள் இல்மு ஓதும் துலபாக்களுக்காக முன்காலத்தில் இஸ்லாமிய நவ்வாபால் கட்டிவிடப்பட்டிருந்தது. தற்போது இது பாழடைந்திருப்பதைக் கண்டு நீங்கள் உணர்ச்சி பெறலாகாதா?

நான் இப்பிரசங்கத்தை இந்தியாவில் முடிவாக வைத்துக்கொண்டு மேனடு செல்ல நாட்டங்கொண்டிருக்கிறேன்.

ஐந்தாறு தினங்களாக உர்து பாஷை அறவே தெரியாத ஊர்களில் சென்று இன்று தான் உர்து பாஷை தெரிந்த இடத்தில் பிரசங்கமாற்ற நேர்ந்தது.

உலகின்கண் தோன்றிய பெரிய பண்டிதர்களில் ஒருவரான "அரஸ்த்தா தாலீஸ்" என்பார் தமது இறுதி ஜீவிய காலத்தில், அவர் நடத்தி வந்த கல்லூரியில் போதனை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் மரணிக்குந் தறுவாயில் "ஓ மனிதனே! நீ உன்னை அறிந்துகொள்" என அக்கல்லூரியின் வாயிலில் எழுதி வைக்கும்படி ஆக்ஞாபித்து, யான் ஒரு பெரிய பலாஸபராக இருந்தும் இதன் விஞ்ஞான தத்துவத்தை என்னல் அறியமுடியவில்லை. எனவே எனக்குப் பின்வருவோராவது இதன் "பலாஸபி" தத்துவத்தை விளக்கிச் சொல்லட்டும்" எனக் கூறினராம்.

"ஓ! மனிதனே! நீ உன்னை அறிந்துகொள்" என்னும் "பலாஸபா" விஷய சம்மந்தமாக இன்றுமாலை உங்களூர் முனிசிபல் ஹாலில் பிரசங்கஞ்செய்தேன். மனிதர்களை ஊண், குடிப்பிற்காக மட்டும் படைக்கப்பட்டதென எண்ண வேண்டாம். உலகத்தில் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு வஸ்துவையும் பாருங்கள்! அது எதற்காக? என்ன கருத்தைக்கொண்டு படைக்கப்பட்டது? என்பனவற்றை இவ்வுலகைச் சிருஷ்டித்தவனே அறிவான். நாம் ஏன் படைக்கப்பட்டோமென்று சற்று மூளையைச் செலுத்திப் பார்ப்போமேயானல் நாம் அதைத் தெரிந்துகொள்ள அறவேமுடியாது. அதன் உண்மையை அதன் சிருஷ்டிக்கர்த்தா ஒருவனே அறிவான்.

சிறு குழந்தைகள் "மணல் வீடு" கட்டி விளையாடி வரும்போது மற்ருெரு குழந்தை

வந்து அம்மணல் வீட்டைக் கலைத்துவிட்டால் அவ் வீட்டைச் செய்த குழந்தை அழுவது போல சிருஷ்டியைச் செய்தவனே அதன் கருத்தை அறிவானல்லாது, நீங்களும் நாமும் அதை அறியமாட்டோம். ஒரு வஸ்துவைச் செய்தவன் அவ்வஸ்து தரிபட்டிருப்பதையே விரும்புவானல்லாது அதன் அழிவை விரும்ப மாட்டான். ஓர் பிள்ளை மரணமடைவதை சம்மதியாத தாயைவிட அதிகமாய் நமது நாயன் நம்மீது பிரியம் வைத்திருக்கிறான்.

கிறிஸ்தவப் பாதிரிமார் குர்ஆன் ஷரீபைத் திறந்து கூடப் பார்க்காத புல்லர்களாயிருந்து கொண்டு "இஸ்லாமிய "அல்லாஹ்" மிகக் கோபியும், இம்சிப்போனுமாவான்" எனகூறித் திரிகின்றனர். குர்ஆனிலுள்ள "ரஹ்மான், ரஹீம்" என்னும் பதங்களுக்கு இவ்விதப் பொருள்கள் செய்கின்றனரோ? என்ன?

எனவே, மனிதனை சிருஷ்டித்தவன் அவர்களின் அழிவை விரும்பமாட்டான்.

உனக்கு அறிய மூளையையும், அறிந்து கொள்ள "கலாம்" திருமறையையும் பலகையில் எழுதிய பின் லேர், ஸபரை விளங்கிக் கொள்ள (குர்ஆனை ஓதிக் காட்ட) நபியையும், அவைகளை அனுஷ்டித்து வழிகாட்ட **"நப்ஸே லவ்வாமா"** என்னும் ஓர் மெய்க் கருவியையும் உனக்கு அளித்து, தீதுகளை விட்டும் விலக்கி வைக்கச் செய்து **"நாம் உங்களை வீணுகப் படைத்தோமென நினைக்கிறீர்களோ?"** என்று எச்சரிக்கை கேள்வியும் கேட்டிருக்கிறான்.

சாதாரணமான ஒரு வஸ்துவையும், ஒருவன் வீணுக்காகச் செய்யாமலிருக்கும்போது, இவ் வழகிய தோற்றத்தையுடைய உருவமான மானிடனை வீணுகப் படைக்கவில்லை யென்பது புலனாகாதா? அவன் வேலைக்காகவே தான் படைக்கப்பட்டிருக்கிறான்.

"நீ என்னிடம் மீண்டும் வரமாட்டாயென நினைக்கிறாயோ? உன்னை வீணுகப் படைக்கப் படவில்லை. நீ மீண்டும் (என்பால்) வருவாய்" என்று, பெரிய "பலாஸபி" யான அரஸ்தா தாலீஸும் அறிவிக்காத ஓர் சமாசாரத்தை நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்கு அறிவித்து விட்டார்கள்.

"மனுஜின்களை வணங்குவதற்கே சிருஷ்டிக்கப்பட்டது" என்னும் விசகளத்தால், நம்மை **"கல்கு"** களுக்குள்ள கடமையுடன் படைக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருப்பதுடன் சகல வஸ்துவும் அவனுடையது தான் என அறிவூட்டுவதற்கு "திடனாக அல்லாஹ் மூமின்களின் நப்ஸுகளையும், அவர்களின் பொருள்களையும் வாங்கிக்கொண்டான்"

எனக்கூறி சகலனவும் தன்னிடம் விற்கப் பட்ட வஸ்துவெனவும், இது அமானிதமான வஸ்துவெனவும் சுட்டிக் காட்டுகிறான்.

இதன் கருத்தையே மீண்டும் நீங்கள் உணர, **"உங்களின் தந்தையான இப்றாஹீமின் மதமாகும்"** என்ற வாக்கியத்தைக் கொண்டு உமது தந்தையானவர் இன்ஸானின் தலையில் விதிக்கப்பட்ட அமானித விஷயமாய், **"எனது தொழுகையும், வணக்கமும், எனது ஜீவிப்பும் மரணமும் அல்லாஹ்வுக்கே"** எனக் கூறியதை அனுஷ்டான முறையில் நமது நாயகம் (ஸல்.) அவர்கள் செய்துகாட்டி நாமும், நமது சொத்துக்களும் அல்லாஹ்வுடையதென்பதை நிரூபித்துள்ளார்கள். ஓர் வியாபாரியிடம் நாம் சரக்குகள் வாங்கிய பின், அச்சரக்குகளை அவரிடமே வைத்துவிட்டுப் பின்னர் எடுத்துப் போகிறேனெனச் சொல்லிப் போய்விட்டால் அந்தச் சரக்கு, வியாபாரியின் சரக்காகிவிடுமா? அவை அமானிதமல்லவா?

"வணங்குவதற்குரியோன் அல்லாஹ்வே" என கலிமாச் சொல்லிவிட்ட மாத்திரத்தில் இவர்கள் விற்கப்பட்டு விடுகிறார்கள்.

எனவே இஸ்லாமியரின் ஜீவிய ஸ்திதி எப்படியுள்ளதென்பதை மீண்டும் அறியுங்கள்!

ஓர் சம்பள ஆள் தனது எஜமானின் வேலையைத் தவிர்த்து வேறு வேலையைச் செய்யக் கூடாததுபோல், ஷ சம்பள ஆள் தமது எஜமானின் சாமான்களை விற்பனைசெய்வது முதலாளிக்காகவே யல்லாது தனக்காக ஆகுமா? ஆகமாட்டாது. இதுபோல் மூமினானோர் செய்யும் சகல காரியங்களும் "**அல்லாஹ்**" விற்காகவேயிருக்கும்.

"வானங்கள், புவியைப் படைக்கப்பட்டதையும், இரவுபகலைப் படைத்த திருஷ்டாந்தத்தையும் பார்த்து (இவைகளைப் படைத்தவன் ஒருவன் உண்டென) விவேகிகள் உணர்வர்" என்று திருமறை வாக்கியங்கள் கூறுகின்றன.

எனவே இன்று உலகில் காணப்படும் "கமால், ஜமால்" அழகு பூர்ண வடிவாயுள்ள ஒரு வஸ்துவைக் கண்டு யாம் மெய்ம்மறந்து உயிர் துறக்கும் சமயமும் ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் கோடிக்கணக்கான "கமாலும் ஜமாலும்"

பொருந்திய உருவங்களைப் படைத்தவனின் தோற்றங்களைப்பார்த்து யாம் என்ன தத்தஞ் செய்கிறோம்?

"உலகு நின்றிலங்குவது உமது பேரொளியே! சந்திரனும், சூரியனும் உமது பேரொளியே!

"வஹ்தத்தின் ஜோதி ஆலத்தில்நிறைந்து விட்டது. "மஅரிபா" வென்னும் பூர்ணசக்தியும் வந்துவிட்டது."

என மௌலானா "ரூமீ" அவர்கள் கூறுயிருக்கிருர்கள்.

"லைலா"வின் ஓர் பாட்டைக் கேட்டு "மஜ்னூன்" உருகி, தனியே இருந்துகொண்டு ஆண்டவனை நோக்கி "லைலாவின் காதலையூட்டி என் என்னை மஜ்னூனுக்குகிருய்? நான் கானகத்தில் முள் குத்தவும், அழுதுகொண்டும் அலைகிறேனே?" என புலம்பியதற்கு, "இவ்வாறு உம்மை ஆக்கியது லைலா அல்ல; அழகுமல்ல; அதுநாமே" யாகும் என்னும் கவியொன்று கூறப்படுகிறது. "உலகத்தின் அழகைக்கண்டு மருளாதே; அழியாத ஒருவன் மீது, நீ பிரியம் வை" என மற்ருேர் கவிக் கூற்றும் உண்டு.

மானிடரில் அமைக்கப் பட்டிருக்கும் "இஷ்கு" பிரியமென்னும் சக்தியானதுபிறரைத் தன் பக்கலிழுக்கும் சக்தியுள்ளது. அவ்வாறு இழுத்துப் பிரியம் ஏற்பட்டுவிட்டபின் தமது காதலியின் சொத்து தன்னுடையதாகிவிடுகிறது. எனவே நீ செய்யும் ஒவ்வொரு செயல்களும் அவனுடையதே யாகும். இருக்கும் போதும், நடக்கும்போதும் அவனையே நினைக்கின்ருய்.

உமக்கு மூன்று பொறுப்புகளுண்டு

(1) நீ நிற்பது, இதை எஜமானன் விரும்புகிருனே? அவனுக்காகவே நாம் நிற்கிறோம் என நாடுவது.

(2) நீ உட்காரும் போதும் உனக்காகவே உட்காருவதாகவும், அது ஆண்டவனுக்காகவும் என நினைத்துக்கொள்.

(3) நீ படிப்பதும் உனக்காகவும், ஆண்டவனுக்காகவும் என்னும் கருத்துக்கொள்.

இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டு வருவது பேரின்ப வாதிகளுக்கே யன்றி சிற்றின்பமுடையவர்களுக்கன்றென்றுணர்க!

ஓர் பார்ஸீ கவியில், கானகத்தில் "மஜ்னூன்" விரலால் தரையில் எழுதியதைக் கண்டு, கடிதமா எழுதுகிரு?யென அவனிடம் வினவியபோது இல்லை. (ஆனல்) 'லைலா லைலா' வென எழுதிப் பழகி மனத்தைத் தேற்றுகிறேன்" என பதிலுரைத்தான்.

தியானமும் தியானியும்

மானிடனில் "பிரிய" மென்னும் சக்தி இயற்கையிலேயே அமைந் திருக்கிறது. தியானத்தின் அபார சக்தியானது செல்லச் செல்ல "தியானி" யையுமிகைத்து விடுகிறது. இவை முதல் நிலையாகும். அவ்வாறு தியானியை தியானம் மிகைத்தபின் அவனைக் கட்டிவைத்தாலும், அடித்தாலும், எரித்தாலும், (திக்ரு)தியானம் அதிகரித்துக் கொண்டு போகுமேயன்றி குறைவு படுவதில்லை.

உதாரணமாக, ஹஜ்ரத் பிலால் (ரலி.) அவர்களை வெப்பத்தில் சுடுமணலில் கட்டிப்போட்டும், காய்ச்சப்பட்ட கோலால் அடித்தும் "அஹதா" "முஹம்மதா" என்ற சப்தமே அவர்களிடமிருந்து மேலிட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறு (திக்ரை) "தியானத்தை" (தாகிர்) "தியானி" மிகைத்து விடுவதானது இரண்டாவது நிலையாகும்.

மூன்ருவது பதவியோவெனில், (திக்ர்) தியானம், (தாகிர்)தியானியுமே அழிந்து "நீ நான்" என்னும் விஷயமேயில்லாத "நீ" என்னும் மெய்ப்பொருளே எஞ்சி நிற்கின்றது.

எனவே, நீயிருந்தா யென்பதெல்லாம் வீண் மருட்சியென உணர்ந்து பார்க்கில், நீயே தோன்றுகிருய் என்கிற 'லாஇலாஹ இல்லல்லாஹு லா மவ்ஜூத இல்லல்லாஹ்" என்னும் சப்தம் உன்னில் எழும்புகிறது.

"திடனக உலகில் யாதோன்றுமில்லாத காலம் இருந்தது. (அப்போது) நான் மானிடனை ஓர் சொட்டு ஜலத்தால் படைத்து (அவனுக்கு) காது, பார்வைகளைக் கொடுத்து நேர்வழியையும் காட்டினேம்." (அல் குர் ஆன்.)

எனவே இவ்வுலகமென்னும் கிளாஸில் அல்லாஹ்வின் உருவத்தைக்கண்டு பேரின்பமென்னும் ஷர்பத்தைக் குடிக்கிருன்.

ஆண்டவன் படைத்த கருத்தெல்லாம் அவனை உகக்கவேதான்.

ஹஜ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் "ரப்பானியின்" லட்சணங்களின் அலங்காரத்தோற்றமே யாவர்.

உலகில் கவி பாடுவோர் தமது கவியை யாவரும்கேட்டு இன்பமடைய வேண்டுமென்ற கருத்துக்கொண்டே அதைப்பக்குவமாய்ப் பாடுகிருர்கள். சித்திரத் தொழில்காரரும், தமது

சித்திர வேலையைப்பார்க்க ஜனங்கள் வருவார்களென்னுங் கருத்துகொண்டே அவைகளை நேர்த்தியாகச் செய்கிறார்கள்.

இதுபோலவே, நாயன் ஹதீது குத்ஸியில், **"நான் மறைபட்ட புதையலாக இருந்தேன், என்னை பிரஸ்தாபிக்க விரும்பி நான் படைப்புக்களைப் படைத்தேன்"** எனக் கூறுகிறான்.

மேலும், **"நாம் உங்களை வீணாகப் படைத்தோமெனக் கருதுகிறீர்களா?"** என்று உணர்வூட்டுகிறான்.

ஓர் யாத்திரீகன் அந்நிய தேசஞ் சென்று அவ்விடத்தில் அனுபவிக்கும் இன்பானு போகங்களைக்கண்டு தமது ஊரையும் மறந்து, தாம் ஊர்செல்ல நாட்டமுங்கொள்ளாது ஆகிவிடுகிறான். இவ்வித நிலைமையோடு காலங்கழித்து வரும்போது அவனின் ஊரிலிருந்து அத்தியந்த நண்பரொருவன், "நீங்கள் ஊரையும் மறந்து என்னையும் மறந்துவிட்டீர்களே" என்று கடிதம் எழுத, தபாற்காரரால் அக்கடிதம் கிடைத்தவுடன், இவன் துளும்புகிறான், தத்தளிக்கிறான்; சகல சுகபோகங்களும் நீங்கி இவனின் நண்பரின்பாலே அன்பும் எழுந்து நிற்கின்றது. நண்பனின் நினைவும் அவனின் உருவமுமே இவன்முன் வந்துநிற்கின்றது.

இங்ஙனமே நண்பரென்போன் **"அல்லாஹ்"** வாகும். கடிதம் **"குர்ஆனாகும்."** கடிதம் கொண்டுவரும் தபாற்காரர், **"நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களாவர்.**

அக்கடிதத்தின் வியாசம் **"நாம் உங்களை வீணாகப் படைத்தோமென நினைக்கிறீர்களோ?"** என்பதாகும். இவ்வாறு உங்களின் மெய்யான நண்பனின் கடிதம் கிடைத்ததும் நீங்கள் துளும்பமாட்டீர்களா? தத்தளிக்க மாட்டீர்களா? உங்களின் மெய்யான நண்பனின் உருவம் உங்கள் முன் வந்து தோன்றுவதற்கு நீங்கள் முயற்சி செய்யமாட்டீர்களா?

நம்மை நோக்கி "உமது தந்தையரின்(ஜாகீர்) காணியாட்சி இன்ன இடத்தில் இருக்கிறது; அதை நீ, என் தெரிந்து கொள்ளாமலிருக்கிறாய்?" என ஒருவர் சொன்னால் நாம் நிம்மதியாக இருப்போமா? அதைப் பெறுவதற்கு பிதுரார்ஜிதமடைய நாம் எந்தப் பிரயத்தனத்தையும் கைவிடுவோமா? விடமாட்டோம். பின் என்ன செய்வோம். அதற்காகப் பெரிய முயற்சிகளை எடுத்து அதைப்பெற நாம் வழி தேடுவோம்.

அதுபோல் நமது தந்தை, ஆதம் (அலை) அவர்களாவர். நமது காணியாட்சி, சுவர்க்கமாகும். "நாம் உங்களை வீணாகப் படைத்தோமென நினைக்கிறீர்களா?" என்னும் வாக்கியமே உங்களுக்கு அறிவிப்பாகும்.

இணை வைத்தல்

ஆண்டவனே மிக மிகைப்புற்றவன். **"மெய்யாகவே அல்லாஹ் இணை வைக்குதலை** (பாபத்தை) **மன்னிக்கமாட்டான்."** என்னும் தேவ வாக்கிற்கொப்ப, மற்றொருவன் தமது காதலியை இச்சிப்பதற்கு நாம் எவ்விதம் சம்மதிப்பதில்லையோ அதுபோல் நமது காதலனை நாயனை விட்டும் வேறொருவரை வணங்கினால் அவன் சம்மதித்து நம் மீது பிரியமுற்றிருக்கமுடியுமா? ஒருபோதும் சம்மதித்திருக்க மாட்டான்.

ஆனதால், உங்களை எவ்விதப் பொருப்பன்றியும் படைக்கப்பட்டிருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டாம். தற்காலத்தில் உலகின் மாந்தர்களில், ஆண்டவன் மீதுள்ள முஹப்பத்தானது மிகவாகக் குறைந்து கொண்டு போவதை நாம் கண்கூடாய்க் காணுகிறோம். அநேகர் வாயினால் மட்டிலும் **"லா இலாஹ இல்லல்லாஹு"** எனச் சொல்லிவிட்டு தொழுகாமலிருந்துகொண்டு காசு, பணத்தையே தெய்வமெனக் கருதி அதைச் சேகரிக்கும் வழிகளிலேயேசதாதியானஞ் செலுத்தி வருகின்றனர்.

"லாஇலாஹ இல்லல்லாஹு" என்று உண்மையாக மனோவாக்கோடு ஒற்றுக் கூறுவோர்தொழுகையை அறவே விடமாட்டார்கள்.

ஓர் சம்பவத்தை இங்குஞாபகமூட்டுகிறேன். அதாவது: பெர்ஷியா தேசத்தில் இஸ்லாம் பரவாவண்ணம் தடுப்பதற்காக, பெர்ஷியாவாசிகள் யுத்த ஆயுத்தமாகி முஸ்லிம்களைத் தாக்கிப் போர்புரிந்த யுத்தத்தில், இருதரப்பின் சைனியங்களும் எதிர் எதிரே நிற்கும்போது எதிரிகளின் சேனைத் தலைவரான 'பைல்வான்' முன்வந்து என்கூட யுத்தம் புரிய வருபவர் யார்? என சபதங் கூறி நின்றான். ஹஜ்ரத் அலி (ரலி.) அவர்கள் முன்வந்து அவனோடு போர்புரிந்து அவனைக்கீழேபோட்டு அவனின் மேலே உட்கார்ந்துகொண்டு (1) கலிமாச்சொல், அல்லது (2) திறைப்பணங் கொடு, அல்லது (3) இவ்வாளுக்கு இரையாகு வென்று முக் கேள்விகளைக்கேட்ட மாத்திரத்தில், அவன் இவைகளெல்லாவற்றையும் மறுத்து அலி (ரலி) அவர்களின் முகத்தில் காரித் துப்பினான்.

உடனே ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் வாளை உறையில்போட்டுக்கொண்டு அவனை விட்டும் எழுந்துவிட்டார்கள். கீழே கிடந்த அப்பைல்வானும் எழுந்து நின்று, என் எம்மைக்கொல்லாது எழுந்து விட்டீர்களெனக் கேட்க, ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் 'நான் ஆண்டவனுக்காகவும், இஸ்லாத்தின் வளர்ச்சியை தடுப்பதை நிவர்த்திப்பதற்காகவுமே வாளேந்திவந்தேன்நீ என்மீது காரி உமிழ்ந்தபோது எனது "நப்ஸெ அம்மாரா"வானது இவனைவெட்டு எனத் தூண்டியது; ஆனால் நான் அப்படி உன்னை வெட்டி யிருப்பேனானால், "நப்ஸெ அம்மாரா"வின் கட்டளைப்படி வெட்டியவனாவேனே யன்றி ஆண்டவனுக்காக வெட்டியவனாகமாட்டேன்" என பதிலுரைத்தார்கள்.

இதைக்கேட்ட பயில்வானான அத்தளகர்த்தன், **"நீங்கள் திடனாக உண்மை ஞானாசிரியர் ஒருவரால் போதிக்கப்படுகிறீர்கள். அவ்வாசிரியரின் சிஷ்யர்களில் ஒருவராக என்னையும் ஆக்கிக்கொள்ளுங்களேன"க் கூறி 'கலிமா'** சொன்னதைக்கேட்ட அவரின் சைன்யங்களடங்கலும் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டது. (உலகில் இஸ்லாம் பரவிய காரணம் இஸ்லாத்தின் அரிய போதனா தத்துவத்தாலல்லாது வாளாலன்று என்பதற்கு இஃதோர் தக்க மேற்கோளாகும்.)

ஆகையால் சகோதரர்காள்! எல்லா ஆசாபாசங்களையும்விட்டு மெய்ப்பொருளான ஹக்கனின்மீது நம்பிக்கை வைத்து அவனின் கட்டளைகளை அனுஷ்டிக்க உதவிபுரியுமாறு அவனிடம் துஆக்கேட்டு இறைஞ்சுங்கள்!

நாயன் நம்மனைவர்களையும் அவனைப் பிரியம் வைத்தோர் கூட்டத்தில் சேர்ப்பானாக! ஆமீன் எனக்கூறி முடித்தார்கள்.

சித்தார்கோட்டை

(ராமநாட்)

எமதன்பிற்குரிய கண்ணியமிக்க சோதரர்களே! நீங்கள் இக்கொடூரமான வெய்யிலையும் பொருட்படுத்தாது அன்பாய் கூடி பெரும் ஆரவாரத்தோடு என்னை வரவேற்று உபசரித்ததற்காக உங்களுக்குப் பெரிதும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்கோடை காலத்திலே உச்சிப்பொழுதா யிருக்கும் இம்மத்தியான கொடூர வெய்யிலில் நீங்களெல்லோரும் பெருந்திரளாய்க் கூடி என்னை வரவேற்றதிலிருந்து, உங்களின் உண்மையானமத பக்தியும் மதாபிமானமும், அன்பும் நீங்கள்கொண்டிருக்கும் இவ்வன்பும் வெளியாவதை யறிந்து சந்தோஷிக்கிறேன். யான் இத்தனை சகோரர்களையும் இவ்விடத்தில கண்டு களிப்பேன் என்று நினைக்கவேயில்லை. மேலும் உங்கள்நாட்டில் இவ்வளவு மதபக்தியிருக்குமென்பதை எதிர்பார்க்கவுமில்லை. இவைகள் முன்பே எமக்குத்தெரிந்திருந்தால் பொதுவாய் உங்களுடைய தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யவும், குறிப்பாய் உங்களுடைய சித்தார்கோட்டையில் தங்கிப்போகவும் ஏற்பாடு செய்திருப்பேன். என் செய்வது? கோடை காலத்தில் மிகச்சொற்ப தினங்களே மீதியிருக்கின்றன. நான் ஸிலோன் போய்ப் பின்னால் ஜப்பான் ஆஸ்ட்ரியாவரை போய்த் திரும்பவேண்டியவனா யிருக்கின்றேன். குளிர்காலம் ஆரம்பித்துவிட்டால் அங்கு போய் வெகு சிரமப்பட வேண்டி நேரிடும் என்பதைக் கருதியே என் புரோகிராமை மாற்றக்கூடவில்லை. நேயர்காள்! ரயில் புறப்பட வேண்டிய நேரமும் நெருங்கிவிட்டது. அதிகமாய் உங்களிடத்தே பேசவேண்டுமென்ற அவா எனக்கிருந்தாலும் சந்தர்ப்பக் குறைவினால் ஒன்றுமே விஸ்தரித்துப் பேசமுடியாமைக்கு மிகவும் வருந்துகிறேன். என்றாலும், எனக்குப் பகரமாய் இரண்டு மௌலவிகளை இங்கு விட்டுப் போகின்றேன். அவர்கள் நான் பேச வேண்டியவைகளை உங்களுக்கெடுத்துரைப்பார்கள். அவ்விரண்டு மௌலவிகளிலொருவர் இதோ என் பிரசங்கத்தை உங்களுக்கு உங்களது தாய்ப் பாஷையில் மொழிபெயர்த்துக்கொண்டிருப்பவராவர். மற்றொருவர் பெரும்பாலும் இத்தென்னாடுகளில் என் பிரசங்கத்தை தமிழில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்த மௌலவி முஹம்மது இப்றாஹீம் சாஹிபவர்களாவர். அவர்கட்கு நான் என்ன சேவை செய்துகொண்டிருக்கிறேனென்பது நன்கு தெரியுமாதலால், அது சம்பந்தமான யாவற்றையும் தங்கள் பிரசங்கத்தில் உங்களுக்கெடுத்துக் கூறுவார்கள். நேரமோ நெருங்கி விட்டது. ரயிலும் புறப்படப்போகின்றது. நான் இறுதி உபதேசமாக ஒரு விஷயத்தை மட்டும் எடுத்துரைக்கின்றேன். அதாவது முஸ்லிம்களாகிய நீங்கள் யாவரும் உங்களின் எல்லாக் காரியங்களையும் வல்ல இறைவனை அல்லாவுக் கென்றே ஆக்கிவிடல் வேண்டும்." என்பதே.

மௌலானா அப்துல் அலீம் ஸித்தீகி

மௌலானா அவர்கள் மீரட்வாசியாவார்கள். அரபி. பார்ஸி, உர்தூ, ஆங்கிலம் இந் நான்கு பாஷைகளிலும் மாபெரும் பாண்டித்துவம் பெற்றவர்கள். மார்க்கக்கலைகளைச் சட்டப்படி கற்றுத் தேர்ந்தவர்களு மாவார்கள். அத்துடன் மேனாட்டுக் கலைகளையும் கற்றுத்தேர்ச்சிபெற்றுள்ளார்கள். ஸர்வமதங்களையும் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். இதர மதங்களின் ஊழல்களையும், சத்திய இஸ்லாத்தின் உன்னதத்தையும் மக்களுக்கு எடுத்துபோதிப்பதில் நிகரற்ற வன்மை பெற்றவர்களாயிருக்கிறார்கள். வழி கெட்ட காதியனிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்துக்காட்டி மக்கள் அதில் சேர்ந்துவிடாதிருக்கும் பொருட்டு அரும்பாடுபட்டுழைத்து வருகிறார்கள்.

மௌலானா அவர்கள், நபி பெருமானார் அவர்களின் திருத்தூதை தூரந்துலையான விடங்களுக்கெல்லாம் எத்திவைப்பான் வேண்டி அரும் பாடுபட்டு உழைத்துவருகிறார்கள். பிரதானமான நான்கு பாஷைகளிலும் பிரசங்கம் புரியும் வன்மை பெற்றவர்களாதலால் உலகத்திலுள்ள பல்கோடி மக்கள் அவர்களின் பிரசங்கத்தைக்கேட்டு நல்வழிபெற ஹேதுவுண்டாயிருக்கிறது. இவர்களின் ஹிதோபதேசத்தைக்கேட்டு அநேககாதியானிகள், வழிகெட்ட இதரகொள்கையுடையவர்கள் நேர்வழி பெற்றிருக்கிறார்கள்.

சென்ற ஜூன் மாச இறுதியில் கனம் மௌலானா அவர்கள் தமிழ் நாட்டில் மூன்று வாரங்கள்வரை பற்பல விடங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்து அங்காங்கு நிகழ்த்திய பிரசங்கங்கள் பொன்னேபோல் போற்றத்தக்கதாகும். அவைகளை புத்தகரூபமாகத் திரட்டி உங்கள் பார்வையில் வைக்கப்பட்டுளது. படித்து நற்பயனடைவீர்களாக.

தற்சமயம் மௌலானா கொழும்பில் பிரசாரம் செய்துவருகிறார்கள். சமீபத்தில் ஜப்பான்செல்ல முடிவு செய்துள்ளார்கள். அல்லாஹ்த ஆலா, மௌலானாவின் உபதேச ரத்தினங்களைக்கொண்டு அத்தேசத்தவருக்கு நற்பயனை யளிக்கச் செய்வதோடு மீண்டுமொருமுறை நம்மிடைவந்து தங்கி உபதேசமாலைகளைச் சொறியச் செய்வானாகவும்.

உலகம்போற்றும் இவ்வுத்தமரை காதியானி பத்திரிகை ஒன்று பலவாராய், சமிக்கையாய்த் தூற்றித்திரிகின்றது. அவர்களின் காதியானிக் கொள்கையை இவண் பரவச் செய்வதற்கு பலவகையிலும் முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டது. அதிலும் மௌலானா அவர்களின் பிரசங்கத்தால் காதியானிக் கொள்கைக்கு சாவுமணி அடிக்கப்பட்டிருக்கும் நிலமையில் இவ்வாறு தூற்றாமல் வேறென்னதான் செய்யும்?

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத் ஷாலிஹாத்

இந்நூல் வேலூர் மத்ரஸயெ பாக்கியாத் ஸாலிஹாத்தில் நீண்டகாலம் பிரதம ஆசிரியராக இருந்து காலஞ்சென்ற மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல்காதிர் பாதுஷா சாஹிப் மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்தூவில் இயற்றப்பெற்ற "அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்" என்னும் உருதூ நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

இவ்வரும் நூலில், நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலியன சம்பந்தமாக நம் சன்மார்க்கம் எந்தெந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறதென்பதையும், அவைகளிலெது சன்மார்க்கத்துக்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்நூல நம்மவருக்குத் தக்க பிரயோசனமளிக்கவல்லதென தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ்அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. அழகிய செந்தமிழின் எளியநடையில் எழுதப்பட்டிருப்பதால், இதனை ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்து பயனடைவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தபால் சார்ஜ் பிரத்தியேகம். கிரயம் ரூபா 1—8—0.

கிடைக்குமிடம் — நாஜிர், மத்ரஸாபாக்கியாத் ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்

ஹயாத்தெ மஸீஹ் (அலை.)

இரண்டாம் பாகம் வெளிவந்துவிட்டது!

சென்னை-600 008

[illegible]கோதரர்களே! காதியானி அஹ்மதிய வகுப்பார்களின் கொள்கை இஸ்லாத்துக்கு [illegible] முரணென்பது கண்கூடு. மத நிபுணர்களான உலமாக்களும், ஆங்கிலக்கலை மேதாவிகளும் இக்கொள்கையை உள்ளுணர்ந்து பார்த்தபின், வெறுத்துத்தள்ளி வருகிறார்களென்பது வெளிப்படை. ஹயாத்தெ மஸீஹ் (அலை.) முதற்பாகத்தில் திருமறை திருநபிஹதீது, ஸஹாபாக்கள், மதப்பெரியார்களென்னும் ஆராய்ச்சி மிக்க மேதாவிகளின் சான்றுகளால் இப்புதிய கொள்கை முற்றிலும் தவறென்பதை நிரூபித்துவிட்டோம். எனினும் அன்னாரின் குயுக்தி வாதங்களுக்குத் தக்க ஆராய்ச்சியுடன் இரண்டாம் பாகம் வெளியிடுவோமென்ற முன்னுரைப்பிரகாரம் ஆதிநாயனருளால் இதோ உங்கள்முன் வெளிவந்துலவும் சுபச்செய்தியைத் தெரிவிக்க மிகச் சந்தோஷமடைகின்றோம். அல்ஹம்துலில்லாஹ். இந்த இரண்டாம் பாகத்தின்கண் சிறந்து விளங்கும் அட்டவணையின் சுருக்கக் குறிப்பு வெளிவந்துளது. மற்றும் அழகிய அத்தாக்ஷிகளுடன்கூடிய விரிவுரைகளைப் பார்த்தபின்னரே அதன் மகிமையைத் தெரிந்து ஆனந்தமடையப் போகின்றீர்கள். காதியானி மத சூழல்களை எடுத்துக்காட்டி அவர்களை நேர்வழியில் கொண்டு வருவதற்கு இஃதோர் நிகரற்ற நூலென்பது மிகையாகா. அன்னார் இஸ்லாத்தின் கொள்கைப் பிரகாரம் ஈஸா நபியவர்களின் ஜீவிப்பை ஏற்றுக்கொண்டு மிர்ஸாயீ மதம் பொய்மார்க்கம் என்பதை அங்கீகரித்தல் வேண்டும். இஃதன்று வேறோர் வழி கிடைக்கப்பெறமாட்டார்களென்பதைத் தெளிவாகக் கண்ணுற்றின்புற விரும்புவீர்களேல், இன்றே ஆர்டர் செய்யுங்கள். ஸ்திரீகள்முதல் புருஷர்வரை யாவரும் பார்த்து உண்மையை விளங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 1—4—0 ரூபாய் கிரயமானதை 1—0—0 ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த டிம்மி 350 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—0—0 தான்.

இங்ஙனம்:
ஆசிரியர்,
முஸல்மான் ஆபீஸ், தென்காசி.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R Abdur Rahim Sahe
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.